# சங்ககால அரசர் - வரிசை

சேரர்

சோழர்

பாண்டியர்

பு. கா. கோவிந்தன்

கழக வெளியீடு: எருஎ

# சங்ககால அரசர் வரிசை

## தொகுதி - க

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. சென்னை - 1.

First Edition : Jan., 1955.

# SANGA KALA ARASAR VARISAI

## Vol. I.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1

*Head Office :*

24, EAST CAR STREET, THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 500.

# பதிப்புரை

பண்டைக் காலத்தே நம் தமிழகத்தை அரசியல்முறை பிறழாது ஆண்ட முடியுடை வேந்தர்கள் மூவரும், வள்ளல்களும், குறுநில மன்னர்களும் பற்பலராவர்.

பழந்தமிழக மாண்பை நம் தமிழ்மக்கள் அகக்கண் முன் நிறுவியுணர்த்த எண்ணி, எம்மால் **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை**யாக ௧ முதல் ௧௫ வரை தனித்தனி நூலாகவும், அவைகளைத் தொகுத்த தொகை நூலாகவும் ஆக்கி வெளியிட்டுள்ளோம்.

அம்முறையைப் பின்பற்றிச் சங்ககால அரசர்களின் வரலாற்றை உணர்த்த எண்ணிச் **சங்ககால அரசர் வரிசை** யென ௧ முதல் ௯ வரை தனித்தனி நூலாக ஆக்கி வெளிவந்துள்ளன.

அவற்றுள் **சேர, சோழ, பாண்டியர்** தம் வரலாறு கூறும் பகுதிகள் மூன்றையும் ஒரு தொகுதியாகவும், **வள்ளல்கள், அதுதை முதலிய நாற்பத்துநால்வர், திரையன் முதல் இருபத்தொன்பது பேர்** அடங்கிய மூன்று தனித்தனி நூல்களையும் ஒரு தொகுதிகளாகவும் தொகுத்து, **சங்ககால அரசர் வரிசை தொகுதி ௧, சங்ககால அரசர் வரிசை தொகுதி ௨** என்னும் பெயர் அமைத்து அழகிய கட்டடஞ் செய்து வெளியிட்டுள்ளோம். அவற்றுள் இது முதற்றொகுதியாகும்.

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை நூல்களை வாங்கிக் கற்று அருஞ்சுவை யுணர்ந்த நந்தமிழ் மக்கள், இவ்விரு தொகுதிகளையும் வாங்கிக் கற்று நற்பேறு பெறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| க. | சேரர் | 1—119 |
| உ. | சோழர் | 1—131 |
| ௩. | பாண்டியர் | 1—111 |

கழக வெளியீடு: எசகு

சங்ககால அரசர் வரிசை - க.

# சேரர்

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Nov., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office :*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1100.

# பதிப்புரை

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட எல்லையமைந்த நம் தமிழகத்தை ஆட்சிசெய்த முடியுடைவேந்தர் மூவராவர். அவர் சேர சோழ பாண்டியர் எனப் பெறுவர். இவருள் முதற்கண் வைத்துப் பண்டுதொட்டே வழங்குதற்குரியோர் சேர வேந்தர் ஆவர்.

இச் சேரர் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த வீரக்குடியினராவர். இவர் அறமும் மானமும் ஆட்சித்திறலும் கல்வி கேள்விகளும் ஒருங்கே அமைந்த ஒண்மையராவர்; இவர்தம் பெருமையை மிக்கெடுத்துக் கூறுவன சங்ககாலத் தமிழ் நூல்கள்.

செல்வப் பெருக்கம், வீரப்பெருக்கம், கல்விப் பெருக்கத்தில் முன்னணியில் விளங்கும் இப்பெருவேந்தர்கள், '**அந்துவஞ்சேரல் இரும்பொறை**' முதலாக, '**வஞ்சன்**' ஈறாக இருபத்தைவராவர். இவர்தம் அரிய வரலாற்றைப் பழந்தமிழ் நூல்களின் துணைகொண்டும், கல்வெட்டுக்கள், பேரறிஞர்கள் ஆய்வுநூல்களின் அகச்சான்றுகள் கொண்டும், தம் கூர்த்த மதிநலத்தால் **திரு. புலவர், கா. கோவிந்தன்** எம்.ஏ. அவர்கள் ஆக்கித் தந்துள்ளார்கள்.

ஏற்கெனவே, **சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை** க முதல் கஉ வரை அவர்கள் எழுதித்தந்து அவைகளைத் தனித்தனி நூல்களாகவும், இரண்டு மூன்று சேர்ந்த தொகுப்பு நூல்களாகவும் செப்பஞ்செய்து அழகியதாகக் கட்டடங்கட்டி நூலுருவாக்கி வெளிப்படுத்தியுள்ளோம்.

இதுகாலை அம்முறையில் '**சங்ககால அரசர் வரிசை**' என்று துவங்கி, முடியுடை வேந்தர்களான சேர சோழ பாண்டியர் வரலாறுகளையும், ஏனைய குறுநில மன்னர்கள் வரலாறுகளையும் தனித்தனி ஆறு நூல்களாக வெளியிட எண்ணிச், சங்ககால அரசர் வரிசையில் முதலாவதாகச் '**சேரர்**' என்னும் பெயரமைத்து இந்நூலை வெளியிட்டுள்ளோம். இதனை அடுத்து அடுத்துச் சோழர், பாண்டியர், குறுநில மன்னர் வரலாறுகளும் வெளியிடப்பெறும்.

அருங்கலைச் செல்வரும், ஆய்புல அறிஞரும், கவிஞரும், கணக்காயரும், மாணவரும், தமிழ்நலம் பேணும் தகைமையாளரும், பிறரும் வாங்கிக் கற்றுப் பழந்தமிழ் மன்னர்கள் மாண்பையும், அவர்தம் அரும்பெறல் ஆற்றல்களையும் அறிந்து இன்புற்று 'எவ்வழி நல்லர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என, நம் தமிழகத்தை வாழ்த்தி வளம்பெற்றோங்க வேண்டுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | அந்துவஞ்சேரல் இரும்பொறை | 6 |
| உ. | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | 8 |
| ங. | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | 14 |
| ச. | இளங்குட்டுவன் | 25 |
| ரு. | இளஞ்சேரல் இரும்பொறை | 26 |
| சு. | உதியன் சேரலாதன் | 33 |
| எ. | கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் | 39 |
| அ. | கணைக்கால் இரும்பொறை | 50 |
| கூ. | கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை | 54 |
| க0. | கருவூர்ச் சாத்தன் | 57 |
| கக. | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் | 59 |
| கஉ. | குட்டுவன் கோதை | 64 |
| கங. | கோக்கோதை மார்பன் | 65 |
| கச. | கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை | 67 |
| கரு. | செல்வக் கடுங்கோ வாழியாதன் | 69 |
| கசு. | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | 74 |
| கஎ. | நம்பி குட்டுவனர் | 86 |
| கஅ. | பல்யானைச் செல்கெழு குட்டுவன் | 88 |
| ககூ. | பாலைபாடிய பெருங்கடுங்கோ | 97 |
| உ0. | மருதம்பாடிய இளங்கடுங்கோ | 102 |
| உக. | மாந்தரம் பொறையன் கடுங்கோ | 105 |
| உஉ. | மாரிவெண்கோ | 107 |
| உங. | முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் | 110 |
| உச. | யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | 112 |
| உரு. | வஞ்சன் | 118 |

# சேரர்

## தோற்றுவாய்

உலக அரங்கில், தமிழ்நாடு உயர்ந்து விளங்கிய காலம் ஒன்று இருந்தது; உலகத்தார்க்கெல்லாம், அறுசுவை உணவளித்து அவர் உடலை ஓம்பியும், ஆன்ற அறிவளித்து, அவர் உயிரை ஓம்பியும் உயர்வுற்ற காலம் அது. உலக நாடுகள் அனைத்தினும் அறிவில், ஆற்றலில், செல்வத்தில், செழுமையில், பொன்னில், பொருளில், நாகரிக நற்பண்பில் நனி சிறந்தது எங்கள் நாடு என்று, இன்று பெருமைகொள்ளும் நாடுகள், உலகமக்கள், தங்கள் உணர்வாலும் உணரலாகா அத்துணை இருள்செறிந்து விளங்கிய அக்காலத்தில், நாகரிகத்தின் நடுநாயகமாய், நல்லாட்சிக்கோர் எடுத்துக்காட்டாய், அறிவொளிவீசும் பெருநாடாய்ப் பெருமையுற்றிருந்தது நம் தமிழ்நாடு.

தமிழகம், இமயம்முதல் குமரிவரையுள்ள பெருநிலப் பரப்பினைக் கொண்ட பெருநாடாய் விளங்கிய காலமும் உண்டு:

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை." (மதுரைக்காஞ்சி : ௭0-௧)

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்."
(புறம் : ௬)

என, மாங்குடி மருதனாரும், இளங்கோவடிகளும் கூறுவன அறிக. வடவெல்லை, விந்தியமாகக் குறைந்தது பின்னர்;

இறுதியாக, வேங்கடமும், குமரியும் வடதென் எல்லைகளாக விளங்கி வருகின்றன பலநூறு ஆண்டுகளாக. தொல்காப்பியர் காலத்திலேயே இந்நிலை உண்டாகி விட்டது என்ப:

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்." (தொல்: பாயிரம்)

தமிழ்நாடு, மிகப் பழைய காலமாகவே, சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது; இந்நாட்டை மூவேந்தர் நாடு எனப் பெயரிட்டு அழைப்பர், ஆசிரியர் தொல்காப்பியனார்; "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (பொருள்: செய்யுள்: எகூ.) என்பது தொல்காப்பியம். மூவேந்தர் ஆட்சி, மேற்கே நிலவிய உரோமானியப் பேரரசைப் போலவும், கிழக்கே நிலவிய சீனப் பேரரசைப் போலவும் பழமையும், பெருமையும் வாய்ந்த பேரரசாய்த் திகழ்ந்தது; இவ்வரசுகளை அமைத்த முதல்வர் இன்னார் என்பதை எண்ணத்தால் எண்ணிக்காணலும் ஒண்ணாதாய் உளது. இவர் தம் பழமைபற்றிப் பேசவந்த பெரியோரெல்லாம், "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய முதுகுடி" என்றும், "படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும்குடிகள்" என்றுமே கூறி அமைந்தனர். இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே, இந்தியப் பெருநிலப் பரப்பனைத்தையும் தன் ஒருகுடைக் கீழ்வைத்து உலகாண்ட மௌரியப் பேரரசனும் அசோகனே, சேர சோழ பாண்டியப் பேரரசுகள், என் ஆட்சிக்கடங்காப் பேரரசுகளாம் எனக் கூறுவனாயின், இந்நாடுகளின் பழமையும், பெருமையும் கூறத்தக்கன ஆமோ? வடமொழியின் முதற்பெருங் காவியமாகிய வான்மீக இராமாயணமும், பாரதமும், மூவேந்தர் நாட்டின் தனி சிறப்புக்களையும் அவ்வரசர்களின் ஆற்றற் பெருமையையும் பாராட்டிக் கூறுகின்றன; என்னே தமிழ் நாட்டின் தொன்மை! என்னே தமிழரசர் தம் பெருமை!

# தோற்றுவாய்

மூவேந்தர் நாடுகள் முறையே, குடபுலம், குண தென்புலம் என வழங்கப் பெறும் செந்தமிழ் ம..புன், வழங்கும் நாடுகளாகப் பண்டு விளங்கிய பன்னிரண்டு ந..ம் களுள், குட்டம், குடம், கற்கா, பூழி, மலாடு என்ற ஐந்து நாடுகளையும் உள்ளடக்கிய நிலமே, குடபுலம் என்ற பெய ரால் வழங்கிய சேரநாடாகும்; சேலம், கோவை மாவட் டங்களைக் கொண்ட கொங்குநாடும், அச்சேர நாட்டின் உள் நாடுகளுள் ஒன்று, அயிரை, கொல்லி, பாயல், நன்று, நேரி முதலாய மலைகள், சேர நாட்டிற்குச் சிறப்பளித்து நிற்கும் மலைகளாம்; அந்நாட்டின் வளம் பெருக ஓடும் ஆறுகள், ஆன்பொருநை, காஞ்சியாறு, குடவனாறு, காரி யாறு, பேரியாறு முதலாயினவும், கன்னிக்காவிரியின் தோற்றமும், இளமையும் ஈண்டே; பொன்கொழிக்கும் புறநாட்டு வாணிப நிலையங்களாகவும், வளங்கொழிக்கும் உள்நாட்டு ஊர்களாகவும், அரசியற்றலைமை நிலையங்களாக வும் சிறப்பளிக்கும் சேரநாட்டுச் செல்வப் பேரூர்கள், கருவூர், தொண்டி, நறவு, மரந்தை, மாந்தை, வஞ்சி முதலா யினவாம். சேரநாடு, பல்வேறு வளங்களையும் ஒருங்கு கொண்ட நாடே ஆயினும், அவ்வளங்களுள் குறிப்பிடத் தக்க பெருவளம், வேழம் முதலாம் மலைபடுபொருள்களே; "வேழம் உடைத்து மலைநாடு" எனக் கூறுவதும் அறிக; வேழங்கள் நிறைந்து விளங்கும் காடொன்றும் அதன்பால் உண்டு; அது, வேழக்காடு, அல்லது உம்பற்காடு என்ற பெயரான் வழங்கப்பெறும்.

செந்தமிழ் வேந்தர் மூவருள், சேரர் சிறந்தவராவர் என்ற கொள்கை, பழங்கால மக்களிடையேயும், அக்காலம் புலவர்களிடையேயும் நிலவியிருந்தது; சேரர், சோழர், பாண்டியர் என, அவர்கள் வழக்கின்கண் முதற்கண் வைத்து வழங்கப் பெறுதலேபோல், "போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந்தாணையர்" (தொல். பொருள், புறத்திணை : ரு) என அவர்கள் மாலை, முதற்கண்வைத்து செய்யுட்கண் வழங்கப் பெறுதல் அறிக. சேர வேந்தர், சேரர், சேரலர், ஆதன், கோதை, குட்டுவன், குடவர்,

றயன், இரும்பொறை என்ற பெயர்களான் அழைக்கப்பறுவர்.

சேரநாட்டை ஆண்ட சேரவேந்தர், இருகிளையினராகக் காணப்படுகின்றனர்; ஒருவர், உதியன் சேரலாதன் வழி வந்தவர்; மற்றொருவர், இரும்பொறை என்ற பெயரால் அழைக்கப்படுவோர். இவருள் முன்னவர், வஞ்சியைத் தலைநகராக்கொண்ட உள்நாட்டுப் பகுதியினையும், பின்னவர், தொண்டியைத் தலைநகராக் கொண்ட கடற்கரைப் பகுதியினையும் ஆண்டவராவர். இவ்வாறு ஆண்ட இருதிறச் சேரவேந்தருள் இருபத்தைவர் வரலாறு சங்க இலக்கியங்களால் உரைக்கப் பெறும்; அவ்வாறு அவர் வரலாறு உரைக்கும் நூல்களுள் பதிற்றுப்பத்தும், அவற்றின் பதிகங்களும் சிறப்புடையனவாம். இவ்வேந்தர்களின் வரலாறு உணரத் துணைபுரிந்தார் அரிசில்கிழார், இளங்கீரனார், இளங்கோவடிகள், உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், ஔவையார், கபிலர், கல்லாடனார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், காப்பியாற்றுக் காப்பியனார், குமட்டூர்க் கண்ணனார், குறுங்கோழியூர் கிழார், குன்றுகண்பாலியாதனார், கூடலூர் கிழார், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார், திருத்தாமனார், நக்கீரர், நரிவெரூஉத் தலையார், பரணர், பாலைக் கௌதமனார், பெருங்குன்றூர் கிழார், பேய்மகள் இளவெயினி, பொய்கையார், பொருந்தில் இளங்கீரனார், மாமூலனார், முரஞ்சியூர் முடிநாகனார், மோசிகீரனார் முதலாய இருபத்தேழு புலவர்கள் ஆவர்.

ஈண்டுக் கூறப்பெறும் சேர வேந்தர்களுள், அந்துவஞ் சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை, கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, செல்வக் கடுங்கோவாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, மாந்தரம் பொறையன் கடுங்கோ, யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஆகிய எண்மரும் இரும்பொறை மரபினர் ஆவர்; ஏனையோர் உதியஞ் சேரல் வழிவந்தவ

ராவர்; இவ்விரு திறத்து அரசருள்ளும், இளங்குட்டுவன், கணைக்கால் இரும்பொறை, கருவூர்ச் சாத்தன், கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை, நம்பிகுட்டுவனுர், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ, முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் முதலாய எண்மரும் நாடாண்டு நற்புகழ் பெற்றதோடு, புலமையுற்றுப் புகழ் பெற்றவரும் ஆவர்; இவர் பாடிய பாக்கள் பலவும், எட்டுத் தொகை பத்துப்பாட்டு முதலாம் பழந்தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவ்வேந்தருட் சிலர், இவன், இன்னுர் மகன்; இவன், இன்னுரைப் பெற்றவன்; இவன், இன்னுரோடு உடன்பிறந் தவன் என்ற வரலாறு உணரத்தக்க நிலையில் உள்ளனர் எனினும், அவருள் பலரைப் பற்றிய இவ்வுறவுமுறை விளங்கவில்லை ஆதலாலும், முறைவிளங்க நிற்பார் எவரும், இன்னுர்பின் இன்னுர் ஆண்டனர் எனத் துணிந்து கூறுதற் கில்லை ஆதலாலும், இவரை அவர்தம் பெயர்காட்டும் அகர வரிசைப்படி வகைப்படுத்தியுள்ளோம்.

## க. அந்துவஞ்சேரல் இரும்பொறை.

அந்துவஞ் சேரல் இரும்பொறை, சேரருள் ஒரு பிரிவினராய இரும்பொறை மரபில் வந்தவனாவன்; செல்வக் கடுங்கோ வாழியாதன் தந்தையாம் எனக் கருதப்படுவோன் இவனே; அந்துவன் என்பது இவன் இயற்பெயர்; அந்துவன் என்னும் இப்பெயர், அக்கால ஆண் பெண் மக்கள் இருவராலும் விரும்பி மேற்கொள்ளப்பட்ட பெயர்களுள் ஒன்றாம்: நல்லந்துவனார், அந்துவன்கீரன், அந்துவன் சாத்தன், அந்துவஞ்செள்ளை என்ற பெயர்களை நோக்குக.

அந்துவஞ் சேரலிரும்பொறை, கருவூரிலிருந்து ஆட்சி புரிந்தவனாவன்; உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்பால் பெருநட்புடையவன் ; முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழ அரசன் இவனோடு பகைபூண்டு, இவன் அரசிருக்கையாம் கருவூரை முற்றி யிருந்தான்; முற்றுகை நிகழ்ந்திருக்கும் காலத்தே ஒருநாள், அந்துவஞ் சேரலிரும் பொறையும், உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும், கருவூர் வேண்மாடத்து மேலிருந்தவாறே, சோர் படை வரிசையினைப் பார்த்துக்கொண்டிருந்தனர்: அக்காலை, களிறு ஒன்று, பாகர் அடக்கவும் அடங்காது தன் படையின் இடையே புகுந்து இடர்விளைப்பதைக் கண்ணுற்றான் அந்துவஞ் சேரல்; உடனே அக்களிறு யாருடையது? அக்களிற்று மேலோன் யாவன் எனத் தன் உடனிருக்கும் புலவரைச் சினம்மிக்கு வினவினான்; களிற்று மேலோன் முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளியாம் என்பதையும், அவன் களிறு மதம்பட்டுளது என்பதையும் அறிந்த புலவர், பகைவர் படை நடுவே, மதம்கொண்ட களிறு கொணரத் தனிவந்துள்ள அவனுக்கு ஊறு நேரின், தன்னிலை தளர்ந்து தனியே வந்தானைக் கொன்றான் எனும் பழி, அந்துவஞ்சேரற்கு வந்துறுமே என வருந்தினார்; உடனே, அந்துவஞ்சேரலை அணுகி, "அரசே! களிற்றுமேலோன் சோணாட்டினன்; நின் பகைவன்; ஆயி

னும், இவ்வருகை, நின்படை அழிவுகருதி வந்த வரவன்று; அவன் களிறு மதம்பட்டுளது; ஆகவே, அது பாகர் அடக்கவும் அடங்காது, தன் படையின் நீங்கி நம் படையுட் புகுந்துளது; இந்நிலையில் அவனுக்கு இடையூறு உண்டாதல், நமக்கே இழிவாம்; ஆகவே, அவன் ஊறின்றி ஊர் திரும்ப, உற்றது மேற்கோடல், உரன்மிகு நின்கடனும்" என உரைத்தார். "பேராண்மை என்பதறுகண், ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு" என்பதை உணர்ந்த தமிழர் வழிவந்த அவன், புலவர் வேண்டியவாறே விரைந்து செயலாற்றியிருப்பன் என்பது உறுதி; ஆனால் அதை அறியும் வாய்ப்பு நமக்கு இல்லாதுபோயிற்று!

'இவன் யார் என்குவை யாயின், இவனே,
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்று மிசை யோனே;
களிறே, முந்நீர் வழங்கும் நாவாய் போலவும்,
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே;
நோயில னாகிப் பெயர்கதில்! அம்ம!" (புறம்: கங)

# உ. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்

சேரர்குடியில் சிறக்கவாழ்ந்த அரசர்களுள், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பானும் ஒருவன். அவனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி, சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை; மற்றொருத்தி, வேளாவிக் கோமான் பதுமன் எனும் வேளிர் குலத்தலைவன் மகள்; வேளிர் குடியிலே வந்த இப்பதுமன் மகளுக்கும், நெடுஞ் சேரலாதனுக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவர்; ஒருவன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் எனும் பெயருடையான்; மற்றொருவன், நச்செள்ளையாரால் பாராட்டப்பெற்ற ஆடுகோட் பாட்டுச் சேரலாதனாவன்.

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், மாறாவிளையுளும் குன்றாவளமும் கொண்டதும், விற்போரஞ்சா வன்கணாளரையும் வருத்தி வாட்டும் குளிர்மிகு காற்றடிக்கப் பெறுவதுமாய நறவு எனும் கடற்கரை நகரைத் தலைநகராக் கொண்டு, சேரநாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டு வந்தான். மேலைக் கடற்கரை நகர்களுள் ஒன்றாக, மேனாட்டு நிலநூல் ஆசிரியர்களால் குறிப்பிடப்பெறும் நௌரா எனும் நகர், இந்நறவே.

'மறாஅ விளையுள், அறாஅ யாணர்த்,
தொடை மடிகளைந்த சிலையுடை மறவர்
பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி,
வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே." (பதிற்று: சு0)

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆற்றல்மிக்க பேரரசனாவன்; அவனை எதிர்த்தார் அழிந்தே போவர்; போர்க்களத்தே அவன் கண்வலைப்பட்டுப் பிழைத்தார் எவரும் இலர்; எமன் விரித்த வலையில் வீழ்ந்தார் எவ்வாறு பிழைத்தல் அரிதாமோ, அவ்வாறே, இவன் பார்வையிற் பட்டவரும் பிழையார். களத்தில், இவன் பார்வை ஒருவர்மீது வீழ்ந்தது என்றால், அவர்மீது எமன் வலைவீசிவிட்டான்

என்றே பொருள்; அத்துணைக் கொடியான் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்.

"மாற்றருஞ் சீற்றத்து மாயிரும் கூற்றம்
வலைவிரித் தன்ன நோக்கலை,
கடியையால் நெடுந்தகை! செருவத்தானே."
(பதிற்று : ௰௪)

சேரலாதன் ஆற்றல் அறியாது சினந்து வந்தாரும் சிலர் உளர்; தன்னைப் பகைத்தாரும் உளர் என அறிந்த அவன், முரசொலிக்க, வாளேந்திச் சென்று, வெகுண்டு வெம்போர் ஆற்றி, அவரை அழித்து, வெற்றி விழாக் கொண்டாடி மகிழ்ந்தான்; இவ்வாறு அவனால் அழிவுற்றாரில் மழவரும், ஏனைக் குறுநில மன்னர் சிலருமாவர். ஆடு கோட் பாட்டுச் சேரலாதனையன்றி அவன் படைவீரரும் பேராண்மை நிறைந்த பெருவீரராவர்; போர்வந்தது எனப் போர் முரசு கொட்டியவுடனே, தமக்குக் கவசம் வேண்டும் என்ற எண்ணமும் கொள்ளாமல், வேலேந்தி விரைந்து செல்லும் வேட்கை உடையவர் அவன்வீரர்; களம்பல கண்டவர் அவர்; வீரப்புண்களால் விழுச் சிறப்புற்றன அவர் உடல்கள்; களம் நோக்கிச் செல்லும் அவர், "இன்று, இனிது உண்டு மகிழ்ந்தனம்; நாளை, பகைவர் மதிலைப் பாழ்செய்து வென்றபின்னல்லது விருந்துண்ணல் செய்யேம்" என வஞ்சினம் உரைத்துச் சென்று, அவ்வாறே வென்று வீறுகொள்ளும் நல்லாண்மை உடையர்.

"மெய்புதை அரணம் எண்ணாது, எஃகுசுமந்து
முன்சமத்து எழுதரும் வன்கணுடைவர்." (பதிற் : ௰உ)

"இன்றுஇனிது நுகர்ந்தனம்; ஆயின், நாளை
மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது
உண்குவம் அல்லேம் புகா எனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" (பதிற் : ௰அ)

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆண்டிருந்த நாட்டின் வடவெல்லையில் தண்டாரணியம் என்ற பெயருடைய தொரு பெருங்காடு இருந்தது. கோதாவிரியாறு பாயப்

பெறுவதும், நாசிக் எனும் நகரைத் தன்னகத்தே கொண்டிருப்பதும், இன்று மகாராஷ்டிர மொழிவழங்கும் மக்கள் தம் வாழ்விடமாவதும் ஆய நாடே பண்டு தண்டாரணியம் எனும் பெயருடையதாம்; தண்டகன் ஆட்சிக்கு உட்பட்டதால், அஃது அப்பெயர் பெற்றது என்ப; விந்திய மலையைக் கடந்துவந்த ஆரியர் முதலில் தங்கிய இடம் இத்தண்டாரணியமேயாம்; அகத்திய முனிவர் வாழிடத்தை அடுத்து இருந்தது எனக் கூறப்படும் இராமன், தம்பியொடும், தன் மனைவியொடும் தங்கிய பஞ்சவடி எனும் இடமும், இத்தண்டாரணியத்ததே; ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆண்டுகொண்டிருந்த காலத்தில், அக்காட்டுள் வாழ்ந்திருந்தார் சிலர், இவன் நாட்டினுள் புகுந்து, ஆங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டுள் மறைந்து விட்டனர்; அஃதறிந்த சேரலாதன், உடனே பெரும் படையுடன் அக்காட்டுள் புகுந்து, அக்காட்டு நாட்டாரை வென்று, அவ் ஆட்டுமந்தைகளை மீட்டுக் கொணர்ந்து தொண்டி நகருள் கொண்டு உரியவர்பால் ஒப்படைத்தான். ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆற்றிய அரும் போர் பலவற்றுள்ளும் ஆட்டுமந்தைகளை மீட்டுத்தந்த இச் செயலே, அனைவரும் போற்றும் அருமை உடைத்தாகவே, அச் சிறப்பினை அவன் பெயரோடு அமைத்துப் போற்றுவாராயினர் அவன்வழி வந்தார்.

"குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளன்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்;
தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப், பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஓர்ஊர் ஈத்து,
வானவரம்பன் எனப் பேரினிது விளக்கி,
ஏனை மழவரைச் செருவிற் சுருக்கி,
மன்னரை ஓட்டிக்,
குழவி கொள்வாரிற் குடிபுறந் தந்து,
நாடல்சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்."

(பதிற்று, பதிகம் : சு)

போராண்மை கொண்டு, போர் வெறியுடையனுய்க் காட்சியளிக்கும் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், அன்பும், அருளும், அறனும் நிறைந்த அழகிய உள்ளமும் உடையனுவன்; மனைவியும், மக்களும்சூழ, மனம்விரும்பும் இடங்கட்குச் சென்று, ஆடல் பாடலைக் கண்டும் கேட்டும் களிக்கும் கவின்மிகு உள்ளம் அவன் உள்ளம்; தன்மனைவியை மனையரசியாகவே மதிக்கும் மாண்புடையான் அவன். ஆடவரும் மகளிரும் கைகோத்து ஆடும் துணங்கை என்ற ஆட்டத்தை ஆடிமகிழ்வர் அக்கால மக்கள்; அத்தகைய ஆட்டம் ஒன்றில், ஒரு பெண்ணிற்குக் கை கொடுத்தான் சேரலாதன்; இதையறிந்தாள் அரசமா தேவி; சினங்கொண்டாள்; கையிற் பிடித்திருந்த குவளைமலரை அவன் மீது எறிய ஓங்கினுள்; உடனே, சேரலாதன், அவளை அணுகி, "மலரைவீசி எறியாதே; வாடிவிடும்; என்கையிற் கொடுத்துவிடு" என்று இருகை விரித்துக்கேட்டான்; ஆனல், அவளோ, அதை அவனிடத்தே கொடுக்க மறுத்து, "நீ யாரோ; நான்யாரோ; என்மாட்டு அன்பற்ற நின்னிடத்தே என்மலரைத் தாரேன்" என்றுகூறி அப்பாற் சென்றுவிட்டாள்; சேரலாதன் செய்வதொன்றும் அறியாது அவள் சென்ற திக்கையே நோக்கித் திகைத்து நின்றுன்; அந்நிலையில், ஆண்டுவந்து அவனைக் கண்டார் சிலர், அவனை நையாண்டி செய்வாராயினர்:

"சேரலாத! உன்னுடைய கை, நின்னிடத்து வந்து. பொருள் வேண்டி இரந்து நிற்பார்க்கு, அவர் விரும்பும் பொருளைக் கொடுக்கக் குவிந்து கவிழுமேயல்லாது, பிறர்பாற் சென்று இரப்பதற்காக என்றும் மலர்ந்து விரியாது என்றெல்லாம் பிறர் கூறக் கேட்டிருக்கின்றேம்; அவர்கூறியன எல்லாம் பொய்யே என்பதை இன்று அறிந்தேம், இருகை விரித்துப் பிறர்பால் இரந்து நிற்பதை இதோ காண்கின்றேம்;" என்று எள்ளி நகையாடினர்; அம்மட்டோடு நின்றுரல்லர்; "சேரலாதன் சிறந்தவீரன்; பகைவர் கோட்டைகளைப் பாழ்செய்து பற்றிக்கொள்ளும் பேராற்றல் வாய்ந்தவன் என்று புகழ்கிருர்கள் நின்னை, அதையும்

யாம் நம்புதல் செய்யேம்; நின் மனைவிபால் இருகையேந்திக் கேட்கின்றனை அம்மலரை; அவள் மறுத்துவிட்டு, "யாரை யோநீ" என்று இகழ்ந்து கூறிவிட்டுச் செல்கிறாள்; நின் மனைவியின் கையில் உளது அக்குவளைமலர்; அதைநீ கேட்கின்றனை; அவள் மறுக்கிறாள்; அதைக் கைப்பற்ற உன்னால் முடியவில்லை; மனைவியின் கையில் உளதைக் கைப்பற்ற முடியாத நீ, பகைவர் தம் பெருங்கோட்டைகளை எவ்வாறு கைப்பற்ற வல்லாய்?" என்றும் கூறி எள்ளி நகைத்தனர். அவர் நகைமொழி, அவன் அன்புள்ளத்தை அறியத் துணை புரிந்து நிற்றல் காண்க.

"முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்புவல் லேற்றின் தலைக்கை தந்துநீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி,
.............................................
நின், எறியர் ஓக்கிய சிறுசெங்குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள், நீ எமக்கு
யாரையோ? எனப் பெயர்வோள் கையதை
கதுமென உருத்த நோக்க மோடு, அதுநீ
பாஅல் வல்லா யாயினை பாஅல்
யாங்கு வல்லுநையோ...வேந்தர்தம் எயிலே."
(பதிற்று: ருஉ)

ஈத்து உவக்கும் இன்பமே இன்பம்; ஈதல் இசைபட வாழ்தலே வாழ்வு எனும் வளமார் உளம் உடையவன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்; இரவலர் தம் வறுமை வாழ்வு, அவன் உள்ளத்தை வாட்டும்; தன் மனைவி, தன் பிரிவுத் துயர் பொறாது புலந்துவிடும் கண்ணீரினும், இரவலர் வறுமைத்துயரால் வருந்திவிடும் கண்ணீரே அவன் உள்ளத்தை உறுதுயர்க்கு உள்ளாக்கும்; மனைவியின் கண்ணீரைக் காணினும் காண்பன்; இரவலர் முதலாம் வறுமையால் வாடுவார் வருந்திவிடும் கண்ணீரைக் காணப்பொறாது அவன் உள்ளம். இரவலர்க்குப் பொருள் அளித்துப் போற்றுவதை நாள்தோறும் மேற்கொள்ள விரும்புவன் அவன். அவர் ஒருநாள் வாராராயின், அவர் இருக்கும் இடம்தேடிச்

சென்று, அவரைத் தேரேற்றிக் கொணர்ந்து, அவர் வேண்டும் அளவு பெரும்பொருள் தந்து போற்றி அனுப்பும் அத்துணை அருள் உள்ளம் உடையவன்.

"ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவெதிர் கொள்வனே." (பதிற்று: ௫௭)

"வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரிற் றந்து அவர்க்கு ஆர்பதன் நல்கும்
நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்."
(பதிற்று: ௫௫)

புலவரைப் பேணும் பேருள்ளமும், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்பால் அமைந்து கிடக்கக் காண்கிறோம். சேரலாதன்பால் நாம் காணும் இப் பண்புகள் எல்லாம், காக்கை பாடினியார் நச்செள்ளையார், அவன்பால் கண்டு பாராட்டிய பண்புகளாம்; தன் பெருமையெலாம் தோன்றப் பதிற்றுப்பத்தின்கண் வந்துள்ள, ஆறும்பத்துப் பாடல்கள் பத்தினாலும் பாடிப் பாராட்டிய நல்லிசைப் புலமை மெல்லியலாராகிய நச்செள்ளையார்க்கு நூறு ஆயிரங்காணப் பொருளும், அணிபல ஆக்கிப் புனைந்து கொள்க என, ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்துப் பெருமை செய்தான். புலவர்மாட்டு அவன் கொண்டிருந்த பெருமதிப்பைப் பாராட்டுவோமாக. இவ்வாறு பெருமைசால் வேந்தனாய் விளங்கிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மூப்பத்தெட்டு யாண்டு வீறுதோன்ற வீற்றிருந்தான்.

# ௩. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

சேர வேந்தருட் சிறந்தோனாகிய செங்குட்டுவனையும், சிறந்த பெரும் புலவராய, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கித் தந்தருளிய இளங்கோவடிகளையும் பெற்றெடுத்த பெருமைசால் பேரரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். நெடுஞ்சேரலாதன் எனவும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனவும், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் எனவும், குடக்கோ நெடுஞ்சேரலாதன் எனவும் அழைக்கப் பெறும் இவ்வேந்தன், பாரதப் பெரும் போர் வீரர்க்கு, அப்போர் முடியுங்காறும் சோறளித்துப் புரந்தான் எனப் போற்றப்படும் உதியஞ்சேரலாதன் மகனாவன்; இவன் தாய், வெளியன் வேண்மான் எனும் வேளிர் குலத்தலைவன் மகளாய நல்லினி என்பவளாவள்.

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்,
..........................................................
இமைய வரம்பன் நெடுஞ் சேரலாதன்."
(பதிற்றுப்பத்து: இரண்டாம்பத்து பதிகம்)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை, மற்றொருத்தி, வேளாவிக் கோமானை பதுமன் என்பான் மகள்; முன்னவள் வழியாகச் செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆகிய இருமக்களும், பின்னவள் வழியாகக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய இருமக்களும் பிறந்தனர். இமயவரம்பனுக்குத் தம்பியாம் தனிச் சிறப்புடையோன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் :

வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்

..........................................................
கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்."
(பதிற்றுப் பத்து, பதிகம்: ரு)

'ஆராத் திருவின் சேரலாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன்
..............................................
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."
(பதிற்றுப் பத்து, பதிகம்: ச)

"குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்
..........................................................
ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்."
(பதிற்றுப் பத்து, பதிகம்: சு)

இமைய வரம்பன் தம்பி......
..............................................
பல்யானைச் செல்கெழு குட்டுவன்."
(பதிற்றுப் பத்து, பதிகம்: ௩)

"குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்......செங்குட்டுவன்."

(சிலம்பு, வாழ்த்து: உரைப்பாட்டு மடை)

"குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள் இருவர்."

(சிலம்பு, பதிகம்: உரை)

நெடுஞ் சேரலாதன், இமயமும், குமரியும் இருபால் எல்லைகளாகப் பெருநிலம் முழுதாண்ட பேரரசனவன்; படையுடன் வடநாடு சென்று, ஆங்குத் தன்னை எதிர்த்துப் போரிட்ட ஆரிய அரசர்களை வென்று, வணங்கச்செய்து, அவ்வெற்றிக் கறிகுறியாக, அவ்வாரியர்க் குரிய இமயமலை

மீது தன் அரச இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்து மீண்டான். சேரலாதனின் இவ்வெற்றிச் சிறப்பு, அவன் பெயரோடு இணைத்தும் பாராட்டப் பெற்றுளது.

> 'அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து
> இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
> தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
> பேரிசை மரபின் ஆரியர் வணக்கி."
>
> (பதிற்றுப் பத்து, பதிகம்: உ)

> "இமயத்து
> முன்னோர் மருள வணங்குவில் பொறித்து."
>
> (அகம்: கஉஎ)

> "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
> தொன்று முதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
> வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்." (அகம்: நகசு)

"குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்"

(சிலம்பு, வாழ்த்து: உரைப் பாட்டு)

இமயத்தே விற்பொறித்த விறல் மிக்கோனாய் நெடுஞ் சேரலாதன், ஆண்டுத் தனக்குப் பணியாது நின்ற யவன அரசர்களைப் போரில் வென்று கைப்பற்றி, அக்கால வழக் கப்படி, அவர் தலையில் நெய்யைப் பெய்தும், அவர் கைக ளைப் பின்கட்டாகக் கட்டியும் இழிவுசெய்ததோடு, அவரி டத்தினின்றும், விலைமதிக்கொணு அணிகளையும், வயிரங் களையும் தண்டமாக வாரிக்கொணர்ந்து, அவற்றைத் தன் நாட்டுப் பேரூர்களில் வாழும் பாணர், கூத்தர் முதலாம் பரிசில் மாக்கட்கு வழங்கிச் சிறப்புற்றான்.

> "பேரிசை மரபின் ஆரியர் வணக்கி,
> நெய்தலைப் பெய்து, கைபிற் கொளீஇ,
> அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
> பெருவிறன் மூதூர்த் தந்து பிறர்க்குதவி."
>
> (பதிற்றுப் பத்து, பதிகம்: உ)

"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்று அவண்
நிலந்தினத் துறந்த நிதியம்." (அகம்: கஉஎ)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பெற்ற வெற்றிகளுள் புலவர் பலராலும் போற்றப்படும் பெருமை வாய்ந்தது, கடலிடையேயுள்ள தீவொன்றைத் தம் வாழிடமாக் கொண்டிருந்த பகைவர்மீது கப்பற் படையின் துணை கொண்டு சென்று, அவரையும் வென்று, அவர் காவல் மரமாம் கடம்பையும் வெட்டி வீழ்த்தி, அக்கடம்பால் முரசு செய்து முழக்கியதே யாம்; இப் பகைவர், கடம்பைத் தம் குலமரமாக்கொண்டு, மைசூர்நாட்டின் மேற்பகுதியினை ஆண்டிருந்த கதம்பவேந்தராவர் என ஆராய்ச்சியாளர் கருதுவர்.

"சால் பெருந்தானைச் சேரலாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு." (அகம்: நஎஎ)

"வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத்து." (அகம்: கஉஎ)

சேரலாதன் கடம்பெறிந்த வெற்றிச் சிறப்பினை விளங்கப் பாராட்ட முன்வந்த புலவர் குமட்டூர்க் கண்ணனார், அக்கடம்பினுக் குரியராய சேரலாதன் பகைவர், தம்முடன் போர்செய்வார் தோற்று மண்மிசை மடிந்து விழுமாறு வாளாற் பொருது, அவர் தம் நாட்டைக் கவர்ந்து கொள்ளும் பேராற்றல் வாய்ந்த பெருவீரராவர்; அத்தகைய வீரர் பலர் கூடிக் காக்கும் கடிய காவலையுடையது அக் கடம்பு என, அவன் பகைவர் தம் ஆற்றலையும், அவர்க்குரிய கடம்பின் அருமையினையும் எடுத்துக் கூறிப் பாராட்டி, அத்தகைய பெருவீரரை வென்று, அவர் காவன் மரத்தை அழித்து, அம்மரத்தால்ஆய முரசு முழங்க வாழ்ந்தான் என்றும், கடலிடைச் சென்று, ஆண்டுவாழ் பகைவரை

வென்று, அவர்க்குரிய கடம்பினைக் கொன்ற நெடுஞ்சேரலாதன், பிறர்க்குத் துயர் தருதலே தம் பிறவித் தொழிலாம் எனக் கொண்ட அவுணர்க்கு அரணாய் நின்று காத்த சூரபன்மா, இறுதிக் காலத்தே, கடலிடை யுள்ளதொரு தீவிடைச் சென்று மாமரமாகி மறைந்து நின்றானாக, ஆண்டும் விடாது சென்று, அம்மரத்தினை வேரோடும் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்ட நெடுவேட்கு நிகராவன் என்றும் பாராட்டிப் பரவியுள்ளார்:

"வயவர் வீழ வாள்அரில் மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசுதலை பனிப்பக்
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே."

"துளங்கு பிசிர்உடைய மாக்கடல் நீக்கிக்
கடம்பறுத்து இயற்றிய வலம்படு வியன்பணை."

"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி,
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு
..............................................
பலர் மொசிந்து ஓம்பிய அலர்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்,
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆரமார்பின்
போரடு தானைச் சேரலாத." (பதிற்று: கஉ, கஎ, கக)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வெற்றிச் சிறப்புக்களை விளங்கப் பாடிய புலவர்கள், பாணர், மாமூலனார், குமட்டூர்க்கண்ணனார் ஆய முப்பெரும் புலவராவர்; இவருள், குமட்டூர்க்கண்ணனார், அவன் பெற்ற வெற்றிகளை வரிசையாக எடுத்துக் கூறுவதோடு அமைதியுறாது, அவ்வெற்றிக்குக் காரணமாய அவன் பேராண்மைப் பெருஞ்சிறப்பைப் பொதுவகையாலும் பாராட்டியுள்ளார். அரசன் ஒருவன், தன் பேராண்மையால் பேரரசனாயவழி, அவனைச் சூழப் பகைபல வளருதல் உலகியல். அதைப்போன்றதே,

சேரலாதனுக்கும் பகைவர் பலராயினர்; ஆயினும், அப் பகைவர் பன்மை, அவன் ஆண்மைமுன் நிற்கவும் அஞ்சிற்று. ஆண்மையும், ஆற்றலும் அற்றார் எழுபது கோடியராயினும், ஆண்மையும் ஆற்றலும் உற்றான் ஒருவன்முன் நிற்றலும் ஆற்றார்; காக்கை பல கூடிக்கரையினும், ஒரு கல்லின்முன் நிற்கவல்லுமோ? "ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்" என்பர் வள்ளுவப் பெருந்தகையார். இக்கருத்தினை உளத்தினுட் கொண்டவராய புலவர், பிற விலங்குகள் தாம் பெரும்பெருங் கூட்டமாய வழியும், ஆண்சிங்கம் ஒன்றுவாழும் மலைச்சாரலில் நடக்கவும் நெஞ்சுநடுங்கும்; அதைப் போன்றே, நெடுஞ்சேரலாதன் பகைவர், முரசுமுழங்கும் அரண்மனை வாழ்வினராகவும், அவன் ஆற்றலை எண்ணி, உள்ளம் அஞ்ச, உறக்கம் ஒழிந்து, உறுதுயர்கொண்டு வாடுவர் என உவமை காட்டி, அவன் ஆண்மைச் சிறப்பை அணிபெறப் பாராட்டியுள்ளார்:

> "அரி[illegible]ான் வழங்கும் சாரல், பிறமான்
> தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந்தாங்கு
> முரசு முழங்கு நெடுநகர் அரசுதுயில் ஈயாது
> மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ்." (பதிற்று: கஉ)

பேராண்மையும், பேராற்றலும் உடையான் நெடுஞ்சேரலாதன் என்பதறியாது அவனோடு பகைத்துப் போரிட்டு, தம் நாடழிய நலிவுற்றார் பலராவர்; அவர் நாடுற்றகேடு அம்மம்ம! கொடிது! கொடிது! பகைவர் நாடு வளம் பல செறிந்தது; அவர் நாட்டு நீர்நிலைதோறும், அந்தணர் ஓம்பும் செந்தழல் போலும் செந்நிறத்தாமரை அல்லியொடு மலர்ந்து அணிபெறத் தோன்றும்; நெல்விளையும் நன்செய்களில் நெய்தல் மலரும்; விளைந்தநெல்லை, அரியுங்கால், அரிநர் அரிவாள் கூர்மழுங்கும், கரும்பினை ஆட்டிச் சாறுபிழியும் எந்திரம், சாறு வடிக்கும் தன் வாய்வளையும்; அந்நாடுகள் பெற்ற இத்தகுபெருவளம், இன்று நேற்று உற்றதன்று; தொன்றுதொட்டு வந்த வளம் அது; இத்தகு வளமிகு நாடு, சேரலாதன் சினத்துட் பட்டமையால்,

பாழுறலாயின; அவன் படையால் பாழுறற்கு அஞ்சிய அந் நாட்டு வாழ்மக்கள், நாட்டைவிட்டே அகன்று போயினர்; தம்மைப் புரப்பார் அகலவே, அந்நாட்டு ஆனினங்களும், கூட்டங் கூட்டமாய், வேறு வேறு திசைநோக்கி விரைந் தோடிவிட்டன; உழுவாரையும், உழும் எருதுகளையும் இழந்து விட்டமையால், நிலங்கள் விளைநலம் கெட்டு வீணு யின; இவ்வாறு, வாழ்தற்கு ஆகாது வளனற்று வாடின அந்நாடுகள், இன்று அழிந்து இவ்விழிநிலை உற்றனவே! என்னே கொடுமை!'' எனக் காண்பாரும் கலங்கும் கழி பெரும் துயர் உற்றன அந்நாடுகள்:

"இனந் தோடகல, ஊருடன் எழுந்து,
நிலங்கண்வாட, நாஞ்சில் கடிந்து நீ
வாழ்தல் ஈயா வளனறு பைதிரம்
அன்ன ஆயின, பழனந் தோறும்
அழன்மலி தாமரை ஆம்பலொடு மலர்ந்து,
நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப,
அரிநர் கொய்வாள் மடங்க, அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்றோர் காலை
நல்லமன் அளிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத்து இரங்க
மாணு மாட்சிய மாண்டன பலவே." (பதிற்று: கக)

பகைவர் நாட்டைப் பாழ்செய்து மகிழும் கொடி யோனாகிய நெடுஞ்சேரலாதன், தன்னாட்டு மக்கள், தன் னேரில்லாப் பெருவாழ்வு வாழ்தற்கு வகைசெய்யும் நல் லோனாவன். "இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளும் தொக்கு'' என்ப. சேரலா தன், நெறிநின்று காக்கும் நல்லாட்சியுடையனாதலின், மழை, கோள்களின் நிலையால் பொய்த்தல் அறியாது, அவன் நாட்டு மக்கள், எங்கு, எக்காலத்தில், எவ்வளவு வேண்டுகின்றனரோ, அங்கு, அக்காலத்தில், அவ்வளவே பெய்யும்; இதனால் வளம் செறிந்து விளங்குவதால், அவன் நாட்டுமக்கள், அவரவர்க்கு ஒதிய தொழிலில் பிறழ்வ

தின்றி அறிவழி நிற்பர்; அவன் நாட்டுக் காடுகள், கொடு விலங்குகளின் வாழ்விடமாகாது, அறம்புரியும் துறவிகளின் உறைவிடமாம்; முல்லை படர்ந்த அவன் நாட்டுக் கொல்லைகளில், மள்ளரும், மகளிருங்கூடி மகிழ்ந்தாடும் விழாக்கள் நீங்காது நிகழும்; அந்நாட்டு வழிகளும், ஆறலைகள்வரைப் பெறாமல் அன்பு உறையும் இடமாகி இன்பம் தரும். அவன் நாட்டில் எண்வகையாம் கூலங்களைப் பகரும் வணிகர், தளர்ந்த தம் குடிகளைத் தாங்கும் பண்பினராவர். தம் உழுதொழிலால் உலகைப் புரக்கும் உழவர்க்கு உறு துணையாய் நிற்கும் அவன் ஆட்சி; இதனால் அவன் நாட்டில் பசியும் பிணியும் பறந்தோடி மறைந்தன. அவன் நாட்டு மக்கள் அரசனாலோ, அவன் சுற்றத்தாராலோ, அவன் பகைவராலோ துயருறுவது இலர். அவர் வாழ்க்கை பல்லாற்றானும் நிறைந்த நிறைவுடை வாழ்க்கையாம்; அவர் என்றும் உண்மையே உரைப்பர்; ஐம்புலனும் அடக்கிய அறிவுடையாராவர்; நிரயம் எய்தா நீர்மையின தாம் நல்வினைபால் சென்ற நெஞ்சினராவர்; ஒரு குடும்பத்தில், தலைமையாயினார் கருதுவதே கருதுவர் பிறரும்; தாம் பிறந்து வாழ்ந்த பெருமைசால் அவ்வூரைவிட்டு வேற்றூர் செல்ல அவர் மறந்தும் எண்ணார்; நெடுஞ்சேரலாதன் நாட்டுச் சிறப்பும், அவன் நாட்டுமக்கள் நலமும் என்னே!

“காடே, கடவுள் மேன; புறவே,
ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன;
ஆறே, அவ்வனைத்து; அன்றியும், ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறம் தராஅக்,
குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி,
அழல்சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது,
மழைவேண்டு புலத்து மாரிநிற்ப,
நோயொடு பசிஇகந்து ஒரீஇப்
பூத்தன்று பெரும! நீ காத்த நாடே.”

“வெய்துறவு அறியாது, நந்திய வாழ்க்கைச்
செய்த மேவல் அமர்ந்த சுற்றமொடு

ஒன்றுமொழிந்து, அடங்கிய கொள்கை, என்றும்
பதிபிழைப்பு அறியாது, துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலின் நோயிகந்து ஒரீஇய
யாணர் நன்னாடு." (பதிற்று: கஅ, கரு)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இவ்வாறு எவ்வழி நோக்கினும், செவ்வியோனாதற்கு அவன்பால் காணலாம் ஆற்றற்சிறப்பும், ஆட்சிநலனுமே காரணங்களாகா. அவன் பால் அமைந்து கிடக்கும் அருங்குணங்களும் காரணமாம்; நெடுஞ்சேரலாதன் நல்ல பல பண்புகளின் நிலைக்களமாய் விளங்கினான்

அரசராவார், அறிவும் ஆற்றலும் உடையரேனும், தம்மினும் சிறந்த சான்றோர் சூழ வாழ்தலைத் தம் தலையாய கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்; நெடுஞ்சேரலாதன் பால் இப்பண்பு நின்று நிலைபெற்றிருந்தது. அறம் கூறும் ஆன்றோர்களை, அவன் என்றும் பிரியான். செல்வுழிச் செல்வுழிச் செல்லும் மெய்ந்நிழல்போல், அவர் தன்னை விட்டுப் பிரியாமையினைப் பெரிதும் விரும்புவன்;

"அமர்பு மெய்யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே."
(பதிற்று: கஉ)

பகைவரைப் பாழ்செய்து பணியவைக்கும் பேராற்றல் வாய்ந்தார்க்கு அப்பகைவர், தம் பகைமையொழிந்து பணிந்தக்கால், பாதுகாத்தல் புகழ்தரும் பெருஞ்செயலாம்; பணிந்தார் தம் பிழைபொறுத்துப் பேணாது, மேலும் பழி வாங்க எண்ணுதல் பழியொடு மிடைந்ததாம்; இதையும் உணர்வான் நெடுஞ்சேரலாதன். அவன் பகைவர் பொறுத்தலாகாப் பெரும்பிழை புரிந்தாரேயாயினும், அன்னார் பணிந்து திறை தந்தக்கால், அவர் பிழையினை மறந்து, அவர் கொடுத்தன கொண்டு அருள்புரியும் அறவுள்ளம் உடையனாவன்:

"வெரிய தப்புநராயினும், பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை." (பதிற்று : கள)

ஒருவர், அறிவு, ஆற்றல், ஒழுக்கம் உயர்குணம் இவை உடைமையால் எத்துணை தான் புகழுறினும், அவர் தம்பால் வந்து இரந்தார்க்குப் பொருள் கொடுத்துப் பெறும் கொடைக் குணத்தால் உண்டாம் புகழுடையார்போல் போற்றப்படுவதிலர். அறிவு முதலாயினவற்றான் வருவது உண்மைப் புகழாகாது; கொடுத்துப் பெறும் புகழே புகழாம். "ஈதல், இசைபட வாழ்தல்" என்றன்றோ வள்ளுவர் கூறுகின்றனர். சேரலாதன்பால், ஏனைய புகழ் களோடு இப்புகழும் இணைந்து இருந்தது. உலகைக் காக்கும் கடமைபூண்ட வானம், பெய்யாது பொய்ப்பினும், சேரலாதன் கொடுத்தலைக் கைவிடான்; கொடுப்பதையே கடமையாகக் கொண்டவன் அவன். அக் கொடைக் குணத்தினின்றும் அவன் உள்ளம் சிறிதும் கோடாது; கொடுக்கும்போதும் குறையக் கொடுப்பான் அல்லன். வருந்திவந்தோர் வயிற்றுப் பசித்தீத் தணியப் பெரும் பொருள் தந்து பேணுவான் :

"மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தண்ணியல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே."

"கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்,
மன்னுயிர் அழிய யாண்டுபல மாறித்
தண்ணியல் எழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர ஈயலன்." (பதிற்று : கஅ, உப)

வறியராய் வந்து, தன் வாயில்முன் நிற்பார்க்கு அவர் வறுமைபோக வழங்கும் வள்ளியோனாய இமயவரம்பன், தன் புகழெலாம் தோன்றப் பாடிய புலவர் பெருமக்கட்குப் பெரும்பொருள் வழங்கிப் பெருமை செய்துள்ளான். தன்னைப் பாடிய புலவர் குமட்டூர்க் கண்ணனார்க்குத் தன் ஆட்சிக்குட்பட்ட உம்பற்காடு எனும் வளம்நிறை பகுதியில்

உள்ள ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்த தோடு, தென்னாட்டினின்றும் வரும் வருவாயில் ஒரு பாகத்தை முப்பத்தெட்டு யாண்டுவரை பெற்றுக்கொள்ளும் உரிமையும் கொடுத்துச் சிறப்பித்தான். இவ்வாறு புலவர்ப் போற்றும் புகழ்நிறை வாழ்வினனாய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்து வாழ்ந்தான் என்ப.

இனி, திருப்போர்ப்புறம் எனும் இடத்தே, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு போரிட்டு, அவனோடு ஒருங்கே உயிரிழந்த சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்பானொரு சேரவேந்தன், புறநானூற்றில் கூறப்பட்டுள்ளான். அவர் இருவரும் இறந்து கிடந்த காட்சியைக் கண்டு, கண்ணீர்விட்டுக் கலங்கியுள்ளனர் பரணரும், கழாத்தலையாரும் (புறம்: சு௨, சுங, ௩சுசு). இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குறிக்க வழங்கும் பெயர்களுள், "குடக்கோ நெடுஞ்சேரலாதன்" எனபதும் ஒன்று எனப் பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்துப்பதிகம் கூறுகிறது. ஆதலாலும், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு பொருது வீழ்ந்தான் பெயரும் "குடக்கோ நெடுஞ்சேரலாதன்" என்றே கூறப்பட்டுள்ளது; ஆதலாலும், குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் இறந்து வீழ்ந்தது கண்டு இரங்கிப் பாடிய புலவர்களுள் ஒருவராய பரணர், "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத் தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம்: ௩சுசு) என இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் பாடியுள்ளார் ஆதலாலும், வேற் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு போரிட்டு உயிர் துறந்தான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனே எனக் கோடல் பொருந்தும்.

# இளங்குட்டுவன்

சேர அரசர்கள் குட்டநாட்டிற்கு உரிமை பூண்டிருந்த சிறப்பால், தம் பெயர்களுள் ஒன்றாகக் குட்டுவன் என்பதையும் மேற்கொண்டிருந்தனர். பல்யானைச் செல்கெழு குட்டுவன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், குட்டுவஞ் சேரல், நம்பிகுட்டுவன் என்ற பெயர்களை நோக்குக. அச் சேரர் மரபிலே வந்த இவன், நனி இளையனாய காலத்தில், அறிவு ஆற்றல்களில் சிறந்து விளங்கினமையால், இளங் குட்டுவன் என அழைக்கப் பெற்றுள்ளான்; இளங் குட்டுவன், இருந்து ஆண்ட நாடு எது? அவன் காலத்தே வாழ்ந்த பிற அரசர்கள் யாவர்? அவன் ஆட்சி நலன் எத்தகைத்து என்பன அறிந்து கோடற்கு இல்லை; இளங் குட்டுவனை அரசனாய் அறிந்துகொள்வதற்கில்லை; அக் காலப் பெரும் புலவருள் இவனும் ஒருவன் என்ற ஒன்று மட்டுமே உணரக் கிடக்கிறது; இவன் பாடிய பாட்டொன்று, நெடுந்தொகை என வழங்கப்பெறும் அகநானூற்றில் காணப்படுகிறது.

அன்பும் ஆர்வமும் காட்டித் தாய் வளர்க்க வளர்ந்த பெண் ஒருத்தி, மணப்பருவம் எய்திய உடனே, அத் தாயையும் மறந்து, தான் விரும்பும் ஆண்மகன் ஒருவன் பின் சென்றுவிடுவள்; அந் நிலையில் அவள் தன் தாய் வீட்டுச் செல்வ வாழ்வையும் மறந்து விடுவள்; தன் உடன் ஆடும் தோழியரையும் மறந்துவிடுவள்; தான் அன்பு காட்டும் அவன் வறுமை வாழ்வினன் என்பதையும் எண்ணாள் எனக் காதற் சிறப்பினைக் கவினுறக் காட்டியுள்ளார்.

“அந்தீங் கிளவி ஆயமொடு கெழீஇப்
பந்துவழிப் படர்குவ ளாயினும், நொந்துநனி
வெம்புமன்; அளியள் தானே; இனியே,
வன்கணாளன் மார்புற வளைஇ
இன்சொல் பிணிப்ப நம்பி, நங்கண்
உறுதரு விழுமம் உள்ளாள்.” (அகம்: கரு)

# ரு. இளஞ்சேரல் இரும்பொறை

பெருங்குன்றூர் கிழார் பாராட்டிய பேரரசர்களுள், இளஞ் சேரல் இரும்பொறை என்பானும் ஒருவன்; இவன் குடக்கோச் சேரல் இரும்பொறை எனவும் அழைக்கப் பெறுவன்; இவனைப் பாராட்டும் ஒன்பதாம் பத்துப் பதிகம், இவன் தந்தை பெயர் குட்டுவன் இரும்பொறை; இவன் தாய் பெயர், வேண்மாள் அந்துவஞ் செள்ளை என அறிவிக்கிறது; ஈண்டுக் கூறிய குட்டுவன் இரும்பொறை, தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையே என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இளஞ்சேரல் இரும்பொறை, கடம்பெறிந்த இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன், கடல் பிறக்கோட்டிய செங் குட்டுவன், அண்டர் தலைவன் கழுவுளை வென்ற தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, நன்னனைக் கொன்ற களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், கபிலர்க்கு நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல் லாம் காட்டிக்கொடுத்த செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆய இவர்க்குக் காலத்தாற் பிற்பட்டோனுவன்; இது. கடம்பின் முழுமுதல் தடிந்தும், கழுவுள் புறம் பெற்றும், அண்டர் ஓட்டியும், நன்னற் றேய்த்தும் கொற்றம் எய்திய வேந்தர் வழிவந்தவன் சேரல் இரும்பொறை என வும், இளஞ்சேரல் இரும்பொறைக்குத் தோற்ற சோழ வேந்தனின் வீரர் களத்திட்ட வேல்கள், கபிலன் பெற்ற ஊரினும் பலவாம் எனவும் பெருங்குன்றூர் கிழார் கூறுவ தால் விளங்கும்.

> "அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து,
> பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று,
> நாம மன்னர் துணிய நூறிக்
> கால்வல் புரவி அண்டர் ஓட்டிச்
> சுடர்வீ வாகை நன்னற் றேய்த்துக்
> ........................................
> கொற்றம் எய்திய பெரியோர் மருக!"

"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள் வேல்.........................
..................................................
கபிலன் பெற்ற ஊரினும் பலவே."
(பதிற்று : அஅ, அரு)

இளஞ்சேரல் இரும்பொறையின் புகழ் பாடவந்த செய்யுள்கள் பன்னிரண்டு உளவாகவும், அவற்றுள் ஒன்றும், அவன் வெற்றி முதலாம் வரலாறு உரைக்க முன்வருவார்க்குத் துணைபுரிவன அல்ல; இளஞ்சேரல் இரும்பொறையின், யானை முதலாம் நாற்படைகள், கொடி நுடங்கச் செல்லும் காட்சி, காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்கும் கவினுடையவெனினும், அவன் பகையரசர் பாசறை வாழ்வார்க்குப் பெரிதும் இன்னாதாம் என்றும். பகைவர் மதிலை வென்று கைக்கொளற்காம் காலம் வருந்துணையும், காட்டு விறகில் கைக்குளிர் போக்கிக் காத்திருக்கும் அவன் கூதிர்ப் பாசறை வாழ்வு. பன்னாள் நீண்ட பெருவாழ்வாம் எனவும் அவன் போர்நிகழ்ச்சிகளைப் பொதுநிலையிலேயே கூறிச் செல்லுகின்றன அப் பாக்கள்.

"கொல் களிறு மிடைந்த பல்தோல் தொழுதியொடு
நெடுந்தேர் நுடங்கு கொடி அவிர்வரப் பொலிந்து
செலவு பெரிதினிது நிற்காணு மோர்க்கே;
இன்னா தம்ம அது தானே..................
..................................................
மாறுகொள் வேந்தர் பாசறை யோர்க்கே."

"மறவர் மறல, மாப்படை யுறுப்பத்
தேர்கொடி நுடங்கத், தோல்புடை யார்ப்பக்
காடுகை காய்த்திய நீடுநாள் இருக்கை
இன்ன வைகல் பன்னா ளாக." (பதிற்று : அக, அஉ)

இளஞ்சேரல் இரும்பொறை, தன்னைப் பகைத்தான் சோழவேந்தன் ஒருவன் எனச் சினந்து, தன் படைத் தலைவரை விளித்து, "சோழன் நாட்டையும் கைப்பற்றி, அவனையும் என்முன் கொணர்ந்து நிறுத்துக" எனப் பணித்தானாக, அவன் படைத்தலைவரும், அவ் ஏவல்

ஏற்றுச் சோழனை நோக்கிப் படையொடு செல்ல, அது கண்ட சோழன், அஞ்சிப் பணிய, அவன் படைவீரரும், தம் வேல் முதலாம் படைக்கலங்களைக் களத்தில் கைந் நெகிழவிட்டுப் பணிந்து நின்றனர் என்ற செய்தியைத் தருகிறது ஒரு பாட்டு; அதுவும் இளஞ்சேரல் இரும்பொறையைப் பகைத்த சோழவேந்தன் இன்னான் என்பதை விளங்க உரைத்திலது.

"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள்வேல் முத்தைத் தம்மென
.......................................
கபிலன் பெற்ற ஊரினும் பலவே." (பதிற்று : அ௫)

கொங்குநாடு, குட்டநாடு, பூழிநாடு முதலாய நாடுகள் சேரநாட்டின் உள் நாடுகளேயாயினும், சிற்சில காலத்தே இவை வேற்று வேந்தரால் வெல்லப்பட்டு அவர் ஆட்சியின்கீழ் அடங்கிவிடுதலும் உண்டு; இளஞ்சேரல் இரும்பொறை இந் நாடுகள் அனைத்தினும், தன் ஆணையே நிலவ ஆண்ட பேரரசனாவன்; இது, பெருங்குன்றூர்கிழார் அவனைக் கொங்கு, குட்டம், பூழி முதலாம நாடுகளுக்கு உரிமை யுடையோனாகப் பாராட்டியிருத்தலால் புலனாம் :

"கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே!
மட்டப் புகாவின் குட்டுவர் ஏறே!
எழாஅத் துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை!"
(பதிற்று : ௯0)

சேர வேந்தர்தம் வரலாறுகளை உணரப் பெருந் துணையாய் நிற்கும் பதிற்றுப்பத்துப் பதிகங்களுள், இளஞ்சேரல் இரும்பொறைக்குரிய ஒன்பதாம் பத்துப் பதிகம், இவன், பெரும் படையொடு சென்று, சோழனும், பாண்டியனுமாய இருபெரு வேந்தரையும், விச்சிமலையையும், அதைச் சூழ உள்ள நாட்டையும் ஆண்ட குறுநில மன்னன் ஒருவனையும் வென்று, அவர்க்கு அரண் அளித்துநின்ற கல்லும் மலையும் காவற்காடும் சூழஇருந்த ஐந்து பெருங் கோட்டைகளையும் அழித்தான்; பொத்தியாண்ட சோழர் குலப் பேரரசன் ஒருவனையும், வித்தை யாண்ட இளம் பழையன்

மாறன் எனும் குறுநில மன்னன் ஒருவனையும் வஞ்சினம் கூறிப் பொருது வென்றான்; மையூர் கிழானைப் புரோசு மயக்கினான்; சதுக்கப் பூதரைத் தந்து நிறுவினான் எனத் தெளிவில்லா நிகழ்ச்சிகள் சில பலவற்றை நிரலே எடுத்து உரைத்துளது :

"குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழான்
வேண்மாள் அந்துவஞ்செள்ளை ஈன்ற மகன்,
வெருவரு தானையொடு வெய்துறச் செய்து சென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ,
அருமிளைக் கல்லகத்து ஐந்து எயில் எறிந்து,
பொத்தி யாண்ட பெருஞ்சோழனையும்
வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று,
வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்கு உதவி
மந்திர மரபிற் றெய்வம் பேணி
மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி
.................................................
ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை."

(பதிற்றுப்பத்து, பதிகம் : க)

ஈண்டு, பொத்தியாண்ட பெருஞ்சோழன் எனப்படுவான், பிசிராந்தையாரையும், பொத்தியாரையும் பிரிவரிய நண்பராக்கொண்ட கோப்பெருஞ்சோழனே என எண்ணற்கும் இடமுண்டாதல் அறிக.

இளஞ்சேரல் இரும்பொறை, தன்வாயில் வந்து வாழ்த்துரைத்து நிற்கும் புலவர் பெருமக்கட்குப் பொருள் அளித்துப் போற்றும் பெருஞ்செயல் வியந்து பாராட்டற்குரித்தாம்; இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய புலவர் பெருங்குன்றூர்கிழாராவர்; பெருங்குன்றூர்கிழார் பொருளற்ற வறியராவர்; அவர் வீட்டு எலிகள், உண்ணுதற்காம் பொருளைக் காணவேண்டி, அவ்வீட்டின் பல்வேறு

இடங்களையும் மாறி மாறி அகழ்ந்தும் ஒன்றும் கிடைக்காமையால் மடிந்து வீழ்ந்திருக்கும்; அவர் இளைய மகன், பாலுண்ணவேண்டி அவன் தாயிடத்தே பலகாலும் செல்லவும், உணவுண்டு பல நாளாகிய காரணத்தால் பால் சுரத்தல் நின்ற அவளிடத்தில், பால் இன்மையறிந்து, பாலுண் வேட்கையினையே மறந்துவிட்டான்; இவ்வாறு வறுமையில் வாடிப் பலநாள் வாழமுடியாது; யாண்டேனும் சென்று பொருள் பெற்று வருதல்வேண்டும் என்று முடிவு கொண்டார் பெருங்குன்றூர்கிழார்; உடனே தாம் வேண்டும் பெரும்பொருள் கொடுக்க வல்லோன் சேரநாடாள் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையே என உணர்ந்து, ஆண்டடைந்து இரும்பொறையைக் கண்டார்; "முரசெழுந் திரங்கும் தானையொடு தலைச்சென்று அரைசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்!" என்றெல்லாம் பாராட்டிப் பாடி நின்றார்; இரும்பொறையும் அவர் பாடற் பொருளுணர்ந்து வியந்து இன்புற்றான்; பெருங்குன்றூர் கிழார், அவன் சிறந்த பரிசில் அளித்து விடுப்பன் என எண்ணியிருந்தார்; அவனும், அதற்கேற்றாற்போல், பரிசில் நல்குவான் போலும் செயல்கள் சில மேற்கொண்டான்; நாள் பல கழிந்தன; ஆனால், அவன் பரிசில் ஒன்றும் அளித்தானல்லன்; புலவர், ஏமாற்றமும் வருத்தமும் கொண்டார்; வருந்திய அவர் உளத்தினின்றும் வெடித்தன சில சொற்கள்:

" அரசே! நீ தரும் பரிசில் பெறும் விருப்பால் வந்தோருள் யானும் ஒருவன்; வள்ளன்மைக் குணம் வாய்க்கப்பெற்றோன் நீ எனக் கருதியே, புலவர்க்குப் பரிசில் தர மறுக்கும் பழியுடையோர் செயலை நின்பால் உரைத்தேன்; கொடுப்போன் போல் காட்டிக் கொடாது ஏமாற்றிவிட்டனை! பாடிய புலவன் வறுமையால் வாடுகின்றனனே என்ற நாணம் நினக்கு உண்டாகவில்லை; யானோ, நீ நாணுமாறு பல முறை பாராட்டினேன் நின்னை; என் பாடல் கேட்டு மகிழும் நின்னை வணங்கி விடை பெறுமுன் ஒன்று கூறுகின்றேன் கேள், "வாயில் வந்து நிற்போர்க்கும்,

புகழ்பாடி* வருவார்க்கும் வாரி வழங்கும் வள்ளியோர் வாழ்வதினாலேயே, இரவலரும், புலவரும் இறவாது வாழ்கின்றனர் இவ்வுலகில்; அரசர்கள்பால், அவ்வருட் குணம் இல்லாதுபோயின், இரவலர் இல்லாது அழிவர்; ஆதலின், இரப்பார்க்கு ஒன்று ஈவதைக் கடப்பாடாக் கொள்வது காவலர்க்கழகு; ஆனால், அரசரெல்லாம் நின்னைப் போல்வராயின், என்னைப் போலும் புலவர்கள் இவண் பிறவாது ஒழிவாராக" என்று கூறிப் பழித்து வெளியேறினார்:

"உள்ளி வந்த ஓங்குநிலைப் பரிசிலென்;
வள்ளியை யாதலின் வணங்குவன் இவன் எனக்
கொள்ளா மாந்தர் கொடுமை கூற நின்
உள்ளியது முடித்தோய் மன்ற; முன்னாள்
கையுள்ளது போற் காட்டி, வழிநாள்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்
நாணா யாயினும் நாணக் கூறி என்
நுணங்கு செந்நா வணங்க ஏத்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டநின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வலத்தை யானே."

"அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு
நும்ம னோரும் மற்றினையராயின்,
எம்மனோர் இவண் பிறவலர் மாதோ!"

(புறம்: உகக, உகO)

உளம் வருந்த வெளியேறிய புலவர் பெருங்குன்றூர் கிழார் மனையில், மக்களும் மனைவியும் வறுமையால் வாடுவரே! அவர்க்கு வழியென்ன செய்வேன் என்ற எண்ணமுடையராய் வழி நடந்து சென்றார்; ஊருள் நுழைந்து, தம் இல் இருக்கும் இடம் சென்று நோக்கினார்; ஆங்கு முன்னிருந்த சிறு குடிசைக்குப் பதிலாகப் பெருமனை ஒன்றிருக்கக் கண்டார்; நம் வீடு இருப்பது ஈண்டன்று போலும் என எண்ணி, அப்பாற் செல்வாராயினர்; அந்நிலையில், அப்பெருமனையுள்ளிருந்த அவர் மனைவியார் அழைக்குங் குரல் கேட்டுத் திரும்பி அவ்வீட்டினுள்

சென்றார்; ஆங்குப் பொன்னும் பொருளும், நெல்லும் மணியும் மண்டிக்கிடப்பக் கண்டு ஒன்றும் புரியாராய் நின்றார்; அப்போது அவர் மனைவியார், "இவையெல்லாம் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் கொடைப் பொருள்களாம்; அவன் நினக்கு ஒன்றும் அறியான்போல் காட்டி, நீ அறியாவாறு முப்பத்தீராயிரம் காணமும் கொடுத்து, ஊரும் மனையும் வளமிகப் படைத்து, ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி, எண்ணற்காகா அருங்கல வெறுக்கையும் அளித்துள்ளான்" என்று அறிவித்தார்.

இளஞ்சேரலின் பெருஞ்செயல் அறிந்த புலவர் பெருங்குன்றூர்கிழார், அவனை நேரிற் கண்டு பாராட்ட விரும்பினார்; விரைந்து சேர நாடடைந்தார்; அவன் பீடும் பெருமையும், பாருளோர் எல்லாம் அறியும் வண்ணம் பாக்கள் பல பாடிப் பாராட்டினார்; வெற்றியும், கொடையும் விளங்கப் பாடினார்; அன்பும், அறிவும், ஆற்றலும் விளங்க வாழ்த்தி வணங்கினார்:

> "நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து
> இல்லோர் புன்கண் தீர நல்கும்
> நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
> பாடுநர் புரவலன்." (பதிற்று: அசு)

என, அவன் கொடைச் சிறப்பினையும்,

> "ஈரம் உடைமையின் நீரோர் அனையை;
> அளப்பருமையின், இருவிசும்பு அனையை;
> கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை;
> பன்மீன் நாப்பண் திங்கள் போலப்
> பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை."
> (பதிற்று: கூ0)

என, அவன் அன்பு, அறிவு, அருள், சுற்றம் போற்றலாம் பண்பு ஆகியவற்றையும் பாராட்டிப் பரவினார்; இவ்வாறு புலவர் போற்றும் புகழுடையோனாய இளஞ்சேரல் இரும்பொறை, டதினாறாண்டு பாருளோர் போற்ற வீற்றிருந்து விழுப்புகழ் பெற்றான்.

# ௩. உதியன் சேரலாதன்

சங்ககாலச் சேர வேந்தர்களுள், வரலாறு விளங்க வாழ்ந்த முதற் சேர வேந்தன் உதியஞ் சேரலாதனவன். உதியஞ்சேரலாதன் தலைச் சங்கப் புலவர்களுள் ஒருவராவர் என மதிக்கப்பெறும் முரஞ்சியூர் முடிநாகராயரால் பாராட்டப்பெறும் பழமை வாய்ந்தவனவன்; இவன், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன், உதியன் சேரலாதன், உதியஞ்சேரல், உதியன் சேரலாதன் என்றெல்லாம் அழைக்கப்பெறுவன். முரஞ்சியூர் முடிநாகராயரும், மாமூலனாரும், இளங்கீரனாரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும், இளங்கோவடிகளும் இவனைப் பாராட்டிய பெரும் புலவர்களாவர்; சேரர் குல வரலாற்று நூலாகிய பதிற்றுப்பத்தின், இரண்டாவது, மூன்றாவது பத்துப்பதிகங்களால், வெளியன் வேண்மான் எனும் வேளிர்குலத் தலைவன் மகளாய நல்லினி என்பார், உதியஞ் சேரலின் மனைவியாம் மாண்புடையராவர் என்பதும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல் கெழு குட்டுவனும் இவன் மக்களாவர் என்பதும் புலனும்:

> "மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
> இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
> வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
> ..............................................
> இமையவரம்பன் நெடுஞ் சேரலாதன்."

> "இமையவரம்பன் தம்பி அமைவர
> ..............................................
> பல்யானைச் செல்கெழு குட்டுவன்."

(பதிற்று, பதிகம்: ௨, ௩)

உதியன் சேரலாதன், தன் வாழ்நாளில் ஆற்றிய அரிய செயல்களுள், அவன் தன் நாட்டு எல்லையை விரி வாக்கியது, பாணர் முதலாம் இரவலர்தமக்குப் பெரும்

பொருள் அளித்துப் பேணியது, பெருஞ்சோறளித்தது ஆகிய நிகழ்ச்சிகள் புலவர் பாராட்டிற்குரியவாயின.

தலைவன், நின்னை உடன்கொண்டு சென்று மணக்கத் துணிந்தனன். ஆகவே, இனி, நீ வருந்துவதொழிந்து, பிறர் நாட்டினை வென்று தன் நாட்டினை விரிவாக்கிய உதியஞ் சேரலாதனைப் பாடிச் செல்லும் பரிசிலர் பொருள் பெற்று மகிழுமாறு மகிழ்வாயாக என, அவன் நாட்டை விரிவாக்கிய நிகழ்ச்சியையும், பரிசிலர்க்குப் பொருள் அளிக்கும் சிறப்பையும் பாராட்டியுள்ளமை உணர்க.

"நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி!" (அகம் : சுடு)

உதியன் பெருஞ்சோறு அளித்த நிகழ்ச்சியைப் பாராட்டிய புலவர்கள், முரஞ்சியூர் முடிநாகராயரும், இளங்கோவடிகளும், மாமூலனாரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானுமாவர். இவருள் முன்னையர் இருவரும் உதியன் சேரலாதன், பாண்டவர் ஐவரும் கௌரவர் நூற்றுவரும் மேற்கொண்ட பாரதப் போரில், அப் போர் முடியுங்காறும் இருதிறப் படையினர்க்கும் சோறளித்துப் புரந்தான் எனக் கூறுகின்றனர்; இறந்து துறக்கம்புக்க, பெரும்புகழ் நிறைந்த தன் முன்னோரை வழிபடல் கருதிய உதியஞ் சேரலாதன் அவர்க்குப் பெருஞ்சோறு படைத்த காலத்தே அவன் இடும் அப்பலிச் சோற்றை உண்ணவேண்டி ஆண்டுக்கூடிய பேய்கள் எண்ணற்றனவாம் என்று மாமூலனாரும், கொடுத்தல் தன் பிறவிக்கடன் என்ற நல் உள்ளம் வாய்க்கப்பெற்ற உதியன், வருவார்க்கு வழங்கல் குறித்து, பல்லான்குன்று எனும் மலையிடத்து நிழலைச் சேர்ந்து வாழும் ஆனிரை பல நிறைந்த குழுமூர் என்னுமிடத்தே, சோறு ஆக்க எடுத்த அட்டிற்சாலையில், மலையினின்றும் விழும் அருவியொலிபோலும் பேரொலி நிலவும் என்று கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும் கூறியுள்ளனர்:

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்."
(முரஞ்சியூர் முடிநாகராயர், புறம்: உ)

"ஓர் ஐவர், ஈரைம் பதின்மருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்."
(இளங்கோவடிகள், சிலம்பு: உகூ. ஊசல் வரி)

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு."
(மாமூலனார், அகம்: உங்ங)

"பல்லான் குன்றில் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பின் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி யார்க்கும் பெருவரை."
(கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், அகம்: கசுஅ)

சோறளித்த சேரலாதன் செயலை ஏற்றுக்கொள்வாரும், மறுப்பாருமாக இருதிறப்படுவர் ஆராய்ச்சியாளர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தந்தையாகிய உதியஞ்சேரல், கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல் வேண்டும்; அவன், பாரதப்போர் வீரர்க்குச் சோறு அளித்தான் எனல் பொருந்தாது; ஆகவே, பெருஞ்சோறளித்த உதியன் செயல், பாரதக் காலத்தே வாழ்ந்து, அப் பாரத வீரர்க்குச் சோறளித்துப் புரந்த அவன் முன்னோன் செயலை, அவனுக்கு ஏற்றிக்கூறியதாதல்வேண்டும் என்று கருதுவர் சிலர்; பாரத நிகழ்ச்சியை நாடகமாக்கி, ஆண்டுதோறும் நடித்துக் கொண்டாடுவதும், அவ்விழாவின் இறுதி நாளன்று, விழாக்காண வரு

வார்க்குச் சோறளித்துப் பேணுவதும் இந்நாட்டு வழக்க மாம்; உதியன் செயலும், இவ்வாறு நடைபெற்ற விழா நிகழ்ச்சியைக் குறிப்பதே என்பர் மற்றும் சிலர்; உதியன் சேரலாதனுக்கும், பாரதப்போர் நிகழ்ச்சிக்கும் யாதொரு தொடர்பும் இருந்ததில்லை; உதியன் பெருஞ்சோறளித்தல், இறந்த தன் முன்னோரைக் குறித்து ஆண்டுதோறும் நிகழ்த்தும் நினைவுவிழா நிகழ்ச்சியைக் குறிப்பதேயன்றிப் பிறிதில்லை எனக் கருதுவர் வேறு சிலர். செல்வக்கடுங்கோ வாழியாதன் எனும் மற்றொரு சேரவேந்தன், இறந்த தன் முன்னோர்க்கு அவர்தம் மக்களைக்கொண்டு, ஆற்றவேண்டிய கடனாற்றிப் பேணினான் எனக் கூறும் கபிலர் கூற்றுள், முதியாரைப் பேணும் சேரர் செயல், இறந்தார்க்குச் செய்யும் கடனேயன்றிப் பிறிதன்று என்பது உறுதியாதல். உணர்க:

> "இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்.
> தொல்கடன் இறுத்த வெல்போர் அண்ணல்!"
>
> (பதிற்று: எ0)

பேரரசர்பால் அமையலாம் பண்புகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்; அவன் பிழைபொறுக்கும் பண்புடையவன்; வினையொன்று ஆற்றத் தொடங்குவனாயின், எண்ண வேண்டுவன எல்லாம் எஞ்சாது எண்ணும் அஃகி அகன்ற அறிவுடையவன்; எதிர்த்தார் எவரையும் தாங்கி நிற்க வல்ல பேராற்றலும், பெருந்திறலும் உடையவன்; அழித் தற்குரியாரை அடியற அழிக்கும் ஆற்றல் உடையவன்; அடைந்தார்தம் துயர் போக்கி ஆட்கொள்ளும் அருட்குண முடையவன்; இப்பண்புகள் வேறு எவர்மாட்டும் அமைய லாகா அளவு அவன்பால் அமைந்திருக்கக் கண்ட புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர், பொறுமை, அகலம், ஆற்றல், அழித்தல், அருளல் ஆகிய பண்புகளின் நிலைக்களங்களாகிய நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் ஆகியவற்றோடு அவன் ஒத்தவனாவன் என்று கூறி, ஐம்பெரும் பூதத்தியற்கை யினையும், அவை ஒவ்வொன்றும் முறையே பெற்றுள்ள

அப்பண்புகள் அனைத்தினையும் ஒருவனே பெற்று விளங்கும் அவன் பெருமையினையும் ஒருங்கே பாராட்டிப் பாடி யுள்ளார்.

“மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்
வலியும், தெறலும், அளியும் உடையோய்!”
(புறம்: உ)

உதியன் சேரலாதன், தமிழகம் முழுமையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட பேரரசனாவன்; கிழக்கு, மேற்கு ஆகிய இருபெருங் கடல்களை எல்லையாகக் கொண்ட நாடு முழுதும் உதியன் அரசே நடைபெற்றது என்பதை அறிவிக்கும் புலவர் முரஞ்சியூரர், “அரசே! கீழ்க்கடலும் நினதே; மேலைக்கடலும் நினதே; ஆதலின், ஞாயிறு தோன்றுவதும் நின் கடலிலேயே; அவன் மறைவதும் நின் கடலிலேயே” எனக் கூறிப் பாராட்டியுள்ளார்.

“நின்கடல் பிறந்த ஞாயிறு, பெயர்த்தும்நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்” (புறம்: உ)

இனி, சோழன் கரிகாற் பெருவளத்தானுடன் போருடற்றிப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்ட சேரமான் பெருஞ்சேரலாதன் என்பானைப் பாராட்டிக், கழாத்தலையாரும், வெண்ணிக்குயத்தியாரும் பாடிய இரண்டு பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன (புறம்: சுரு, சுசு.). இதே நிகழ்ச்சியை மாமூலனாரும் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்; வெண்ணியில் நடந்த போரில், கரிகால் வளவனோடு போரிட்டுப் புறப்புண் பெற்றான் சேரலாதன்; அவன் தான் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்டானாக, அவன் பிரிவினைப்

பொருத சான்றோர் பலரும் அவனோடு உயிர் நீத்தனர் எனக் கூறுகிறார் அப்பாட்டில்:

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடுசெலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு." (அகம்: ருரு)

உதியஞ்சேரல், தன் நாடுகண் அகற்றியதையும், அவன் பரிசில் தரும் பெருமையினையும், அவன் அளிக்கும் பெருஞ்சோற்று விழாவினையும் எடுத்துக் கூறிப் பாராட்டிய மாமூலனாரே, வெண்ணியில் தோற்ற சேரலாதனையும் குறிப்பிட்டுள்ளார். ஆதலின், கரிகாலனொடு போரிட்டுத் தோற்று வடக்கிருந்த சேரவேந்தன், உதியஞ் சேரலாதனே எனக் கோடல் ஏற்புடைத்தாமா என்பதை அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து துணிவார்களாக. சங்க கால அரசர்களின் கால நிலையினைக் கணக்கிட்டு நோக்குவார், உதியஞ்சேரலாதனும் கரிகாற் பெருவளத்தானும் ஒருகாலத்தவரேயாவர் என்பதை அறிவர் என்பதையும் ஆராய்ச்சியாளர் நினைவிற் கொள்வார்களாக.

## ௭. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் மணக்கிள்ளி நல்கிய நற்சோணையை மணந்து பெற்ற மக்கள் இருவராவர். அவருள் மூத்தோன் தென் தமிழரைத் தீதுரைத்த வடவாரியரை வணக்குவித்த செங்குட்டுவனாவன். இளையோன், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கித்தந்த ஆசிரியப் பெருந்தகை இளங்கோவடிகளாவர். செங்குட்டுவனைப் பெற்றெடுக்கப் பெருந்தவம் கிடந்தான் இமயவரம்பன் என்றும், இறுதியில் ஆனேறூர்ந்தோன் அருளால் பிறந்தான் என்றும் கூறுகிறார். அண்ணன் வரலாறு உரைக்கும் அடிகளார்:

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ!"

"ஆனேறு ஊர்ந்தோன் அருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன்."

(சிலம்பு, ௨௧ : ௧௮-௧௯; ௩0 : ௧௪௧-௨)

பதிற்றுப்பத்துப் பதிகங்களைப் படித்துப் பார்ப்பார்க்கு, செங்குட்டுவன் தந்தையைப் பெற்ற பாட்டன், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்; பாட்டி, வெளியன் வேண்மாள் நல்லினி; தந்தை, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்; தாய், சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை; மனைவி, இளங்கோ வேண்மாள்; மகன், குட்டுவஞ்சேரல்; சிறிய தந்தை, பல்யானைச் செல்கெழுகுட்டுவன்; மாற்றாந்தாய், வேளாவிக்கோமான் பதுமன் மகள்; மாற்றாந்தாய் வயிற்றுவந்த மக்கள், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் என்ற இவ்வுறவுமுறை இனிது விளங்கும்.

செங்குட்டுவன் மனைவியாம் சிறப்புடையளாய, இளங்கோ வேண்மாள், அறிவு, திரு, அழகு, அமைதி முதலாம் அருங்குணங்கள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெண்ணரசியாவள். செங்குட்டுவன், கண்ணகி தேவி

யார்க்குக் கல்லெடுத்து விழாக்கொண்டாடக் காரண மாயது, "நம் அகனுடு அடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என, இவள் கூறிய கூற்றே எனின், அவள் மாண்பினை மதிப்பிடல் கூடுமோ! கணவன் கல் கொண்டுவருவான் வேண்டி வடநாடு சென்றிருந்த முப்பத்திரண்டு திங்களும், ஊணும் உறக்கமும் ஒழித்து, அழகிய ஆடையும் அணியும் அகற்றி வாழ்ந்த வனப்பினை வாயாரப் பாராட்டியுள்ளார் அடிகளார். இத்தாய் வயிற் றுதித்த தகுதியுடையோனுய குட்டுவஞ்சேரலைச் செங்குட் டுவன் தன் உள்ளம் விரும்பும் உயர்பெரும் புலவராய பரணர்பால் ஒப்படைத்து உயர்பேரறிவாளனுக்கினன்.

செங்குட்டுவன் அரியணை ஏறுதற்குக் காரணமாய நிகழ்ச்சி, அவன் தம்பியார் இளங்கோவடிகளின் இனிமைப் பண்பினை உலகறியக்காட்டும். மக்கள் இருவரும், மன்னர் பலரும் சூழப் பேரத்தாணிக்கண் இருந்த நெடுஞ்சேர லாதன் முன், ஒருநாள் நிமித்திகன் ஒருவன் தோன்றி, "மன்னர் மன்னவ! நினக்குப்பின் நின் அரியணை இருந்து ஆட்சிபுரியும் ஆகூழ் உடையோன் இவ்விளையோனே" என் றனன். அதைச் செவிமடுத்த மூத்தோன், உரைத்தானை உருத்து நோக்கினன்; இளையோன் அவன் அகத்துயர் அறிந்தான்; மூத்தோன் இருக்க இளையோன் அரசனுதல் அறமன்று; நிமித்திகன் உரைத்தது முறையன்று என்ப தையும் உணர்ந்தான். மூத்தோன் துயர்தீர, முறைவாழத் துறந்து குணவாயிற்கோட்டம் புகுந்து அறவாழ்வு மேற் கொண்டான்; என்னே அவன் தியாகம்!

செங்குட்டுவன் அரியணை ஏறிய பின்னர் மேற் கொண்ட போர்களும், பெற்ற வெற்றிகளும் பலவாம். வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியொடு போரிட்டு இறந்த தன் தந்தையைத் தொடர்ந்து உயிர்நீத்துப் புகழ் பெற்ற தன் தாய் நற்சோணையின் படிமத்தை கங்கையில் நீராட்டக் கருதி வடநாடு சென்றுன். கங்கைக் கரையில் ஆரிய அரசர் பலர் ஒன்றுகூடி எதிர்த்தனர். அப் போராற் றங்கரையில் எதிர்த்தார் அனைவரையும் செங்குட்டுவன்

தான் ஒருவனாகவே நின்று போராடி வெற்றிகொண்டான். இவ்வெற்றி விளங்கப் பாடியுள்ளார் இளங்கோவடிகளார்:

"கங்கைப் பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்,
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்."
(சிலம்பு, உரு: கசo-ச)

சேரநாட்டின் ஒரு பகுதியாகக் கொடுகூர் என்ற நாடொன்று இருந்தது; அஃது இன்றைய மைசூர் நாட்டின் தென் பகுதியாகிய புன்னாடு விஷயத்தின் ஒரு பிரிவாம். அந்நாட்டைக் கொங்கர் என்பார் ஆண்டுவந்தனர். அண்டை நாடுகளின் அமைதியைக் குலைப்பதே அவர்கள் தொழில். அத்தகையார், தன் அண்மையில் இருப்பதும் கூடாது எனக்கொண்டான் குட்டுவன்; கொங்குநாட்டுக் கொடு கூர்மீது படையுடன் சென்றான்; கொங்கர், சோழனையும் பாண்டியனையும் படைத்துணையாகப் பெற்றுச் செங்குட்டு வனை எதிர்த்தனர். ஆனால், இறுதியில் படையும் கொடியும் இழந்து தோற்றனர்; கொடுகூர் நாட்டுத் தலைநகராகிய கொடுகூரும் குட்டுவனால் அழிவுற்றது:

"நம்போல் வேந்தர் நம்மோடு இகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும், ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன."
(சிலம்பு, உரு: கருஉ-ரு)

கடல்நீரை அரணாகக்கொண்டு, அக் கடலிடையே வாழ்ந்துவந்த சிலர், சேரர்குலப் பகைவராய் விளங்குவது கண்ட செங்குட்டுவன், கப்பற் படையுடன் சென்று அவர் களை அறவே அழித்து வெற்றிபெற்றான். குலப்பகை ஒழித்துக் குடிவிளங்கச்செய்த செங்குட்டுவனை நாடு வாழ்த்திற்று. மக்கள், கடலோட்டிய வேல்கெழு குட்டு

வன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், கடலோட்டிய வெல்புகழ்க் குட்டுவன் என்றெல்லாம் பெயரிட்டுப் பாராட்டினர். செங்குட்டுவன் பெற்ற கடற்போர் வெற்றியை, அவனைப் பாடிய பெரும்புலவராய பரணர் விளங்கக் கூறிப் பாராட்டியுள்ளார்: "ஓயாது ஒலிக்கும் அலைகளையுடைய கடல்நீர், காற்றால் அலைப்புண்டு சிறுசிறு திவலைகளாக மாறியுடையுமாறு பெரும்போரிட்ட தாள்கள் அவன் தாள்கள்" எனவும், "ஓவென முழங்கும் அலைகளோடு கூடிய குளிர்ந்த கடலிடையே மணிபோல் ஒளிவிட்டு மின்னும் வேற்படை கொண்டுசென்று, எதிர்த்த பகைவரை ஆற்றல் தோன்ற அழித்து வென்ற அரசர், குட்டுவ! நின் முன்னோரிலும் ஒருவரும் இலர்; அவ்வாற்றல் உடையார் இனிப் பிறத்தலும் அரிதே" எனவும், "உயர எழுந்து ஓய்ந்து அடங்கும் அலைகளையுடைய நீர்ப் பரப்பாகிய ஒலிக்கும் கடலை அரணாகக்கொண்டு வாழ்ந்த பகைவரைச் சங்குகள் ஒலிக்கும் அக்கடலும் கலங்குமாறு வேற்படை கொண்டுசென்று, வென்று ஓட்டிய வெற்றியால் விளங்கு புகழ்பெற்ற குட்டுவன்" எனவும், "கடலிடையே சென்று, அக்கடலை அரணாகக்கொண்டு ஆங்கு வாழ்ந்திருந்த கடற் பகைவரோடு அரிய போர் ஆற்றிய, குளிர்ந்த கடற்கரைத் தலைவ" எனவும், "தன்னோடு எதிர்த்துப் போரிடத்தக்க பெரும்பகை எதையும், இந்நிலவுலகில் காணமாட்டாமையால் செங்குட்டுவன் தோள்கள் தினவு கொள்ளலாயின. ஆகவே, அவன் தன் தோள் பூரிக்கப் போர்புரியும் வேட்கையே காரணமாகக் கடலை வளைத்துப் போரிட்டான். உயர்ந்து எழுந்து விழும் அலைகளையுடைய அக் கடல்நீர், அவன் ஆற்றலுக்குத் தோற்றுப் பின்னிடுமாறு ஓட்டிப் பெருமையுற்றது அவன் கைவேல்" எனவும் பாராட்டும் பரணர் பாராட்டுரைகள் பதிற்றுப் பத்திலும் அகநானூற்றிலும் இடம் பெற்றுள்ளன.

"கால்உளைக் கடும்பிசிர் உடைய, வால்உளைக்
கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்
படுதிரைப் பனிக்கடல் உழந்த தாளே."

"இனி,யா ருளரோ? நின் முன்னும் இல்லை;
மழைகொளக் குறையாது, புனல்புக நிறையாது,
விலங்குவளி கடவும் துளங்கிரும் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே."

'கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரை பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்."

"கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ."
(பதிற்றுப்பத்து : சக, சரு, சசு, சஅ)

"குட்டுவன்.
பொரு முரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம்." (அகம்: உகஉ)

மோகூரில் பழையன் என்பானொருவன் பெருவீரனாய் விளங்கி யிருந்தான்; இப் பழையன், மோகூர் என ஊர்ப் பெயரானும் அழைக்கப் பெறுவான்; அவன் மோகூர் அரிய வளம் பல வாய்ந்தது; இப் பழையனோடு பகை கொண்டாருள் அறுகை என்பானும் ஒருவன்; சேரநாட்டிற்குச் சேய்மைக்கண் சிறக்க வாழ்ந்திருந்தவன் அவன்; வெல்லும் போர் பல கண்டவன்; அச் செருக்கால், மோகூர்ப் பழையனையும் பகைத்துப் போரிட்டான்; ஆனால் தோற்றான்; தோற்ற பழியஞ்சி எங்கோ ஓடி ஒளிந்து வாழலாயினன்; இச் செய்தி யறிந்தான் செங்குட்டுவன்; அறுகை செங்குட்டுவனின் அரிய நண்பருள் ஒருவனவன்; சேய் நாட்டில் வாழ்ந்தமையால், சேர்ந்து வாழும் வாய்ப் பிழந்திருந்தான்; செங்குட்டுவனோ, "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாம் கிழமை தரும்" என்ற உண்மையறிந்து ஒழுகும் உணர்வுடையனவன்; அதனால், "அறுகை சேய் நாட்டினனாயினும், என் சிறந்த நண்பனவன்; அவனுக்கு நேர்ந்த இவ் இழிவு, எனக்கு நேர்ந்த

இழிவாம்; ஆகவே, அது களைதல் என் கடன்" எனக் கொண்டான்; மோகூர்மீது படையொடு சென்றான்: கொங்கர் செங்களத்தே, சேரர் படைக்குத் தோற்றுப் பின்னிட்ட சோழனும், பாண்டியனும் பழையன் படைத் துணைவராயினர்; பேரரசர்கள் இவர்களேயல்லாமல் குறுநில மன்னர்களான வேளிர் பலரும், அவனுக்குத் துணை நின்றனர்; வேந்தரும், வேளிரும் ஒன்று கூடித் துணை புரியவே, பழையன் பெருஞ் செருக்குற்றான்; பேராற்றல் கொண்டு போரிட்டான்; ஆயினும், அவன் ஆற்றல் செங்குட்டுவன் முன் அழிந்தது; குட்டுவன், துணை வந்தோரைத் துரத்திவிட்டுப் பழையனைப் பணிய வைத்தான்; பட்டொழிந்த பழையன் படைவீரர் தம் உடலினின்றும் ஒழுகிய செந்நீர், மழை நாட் புனல்போல், பள்ளம் நோக்கிப் பாயுமாறு பாழ் பல செய்தும் செங்குட்டுவன் அமைதி கொண்டானல்லன்; போர் முரசு ஒலிப்ப, களத்தின் நடுவே வாளேந்தி நின்று, அவன் நாட்டு வளத்தையும் அழித்து, வாழவேண்டியவர் பலரையும் வாழாவகை வீழ்த்தினான்; பழையன் காவல் மரமாம் வேம்பை வெட்டி, அதை முரசு செய்தற்காம் சிறுசிறு துண்டுகளாக்கி, அவற்றைப் பழையன் மனைவியர் தம் மயிரைத் திரித்துப்பெற்ற கயிற்றால் கட்டி, அவன் யானைகளைக் கொண்டே இழுத்துச் சென்று, நண்பன் இழிவு துடைத்துத் தானும் புகழ் பெற்றான். செங்குட்டுவன் செய்த போர்களுள், மோகூர்ப் பழையனோடு அவன் ஆற்றிய இப்போரே, புலவர் பலரானும் பெரிதும் பாராட்டிப் பாடப்பெற்றுளது.

"வெல்போர் அறுகை
சேண னாயினும் கேள்என மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுறீஇ, அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்து,அவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்."

" வெல்போர் வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி, மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலின் அவல்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவண் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ் சினக் குட்டுவன்." (பதிற்று: சச, சரு)

" பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியாற்
குஞ்சர ஒழுகை பூட்டி." (பதிற்று, பதிகம்: ரு)

" பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய."
(சிலம்பு, உஎ: கஉச-ரு)

இவ் வெற்றிகளே அல்லாமல், கடற்கரைக்கண் அமைந்து, "வயலை வேலி வியலூர்," "விரிநீர் வியலூர்" என்றெல்லாம் புகழப்பெறும் வியலூரிலும் செங்குட்டுவன் ஒரு வெற்றி பெற்றான்; வியலூர் அவனால் அழிவுற்றது; கொல்லும் புலியொத்த போர் வீரர் பலர் ஆங்கே, அவனால் அழிந்தனர்.

" கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்."
(சிலம்பு, உஅ: ககச-ரு)

" உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி."
(பதிற்று, பதிகம்: ரு)

வியலூரில் வெற்றி கண்ட செங்குட்டுவனுக்கு வேறு பணிகள் காத்துக் கிடந்தன; சோழ நாட்டில், தன் அம்மான் இறந்த பின்னர், அவன் இளைய மகன் ஆட்சித் தலைமை ஏற்பதைப் பொறாது, சோழர் குலத்து வந்த அரசர் ஒன்பதின்மர், நாட்டில் அமைதி குலைத்துப் பெருங் கலகம் விளைவிப்பாராயினர்: செங்குட்டுவன், அவ்வொன்பதின்மரையும், உறையூர்க்குத் தென்பால் உள்ள நேரி வாயில் என்னுமிடத்தே எதிர்த்துப் போரிட்டு ஒரு நாட்பொழுதிலேயே, அவர் அனைவரையும் அழித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டி, தம் அம்மான் சேயையும் அரியணை ஏற்றிவைத்து அகமகிழ்ந்தான்:

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று."
(சிலம்பு, உஅ: கககூ-எ)

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பின ராதலின்,
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்து, அவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்."
(சிலம்பு, உஎ: ககஅ-உங)

"ஆராச் செருவிற் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து."
(பதிற்று, பதிகம்: ரு)

நேரிவாயிலிற் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, சோழ நாட்டில் தேவாரம் பெற்ற திருநகராகிய இடும்பாவனம் எனப்படும் இருப்பாதவனத்திலும், செங்குட்டுவன் ஒரு வெற்றிக்கு உரியனாயினான்; பெரும்படையோடு சென்று, கடும்போர் ஆற்ற வேண்டிய அப்போரில், செங்குட்டுவன் பகைவராயினார் இன்னார் என்பது இனிது புலப்படவில்லை:

"நெடுந்தேர்த் தானையொடு இடும்பிற் புறத்திறுத்துக்
கொடும்போர் கடந்து." (சிலம்பு, உஅ: ககஅ-க)

இவை யெல்லாவற்றினும், செங்குட்டுவனை உலகறியச் செய்த நிகழ்ச்சி, அவனைச் சேரருட் சிறந்தோனாக்கிய நிகழ்ச்சி. கண்ணகி தேவியார்க்குக் கல்லெடுக்க வடநாடு சென்று, தென் தமிழர் திறம் அறியாது, ஆணவத்தால் அறிவிழந்து இழித்துப் பேசிய வடவாரிய அரசர் கனக விசயரைக் கங்கைக்கரைக்கண் வென்று, அவர் தலைமீதே அக் கல்லையும் ஏற்றிக் கொணர்ந்து, கோயில் கட்டிக், கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும், நூற்றுவர் கன்னரும் வந்து வழிபட விழாவெடுத்த சிறப்பேயாம்; இச் சிறப்பெல்லாம், சிலப்பதிகாரத்தே, குன்றக்குரவை முதலாக, வரந்தரு காதை ஈறாக உள்ள ஏழு காதைகளினும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன; அவற்றின் விரிவையெல்லாம் ஆண்டு உணர்க.

செங்குட்டுவன், செருப் பலகடந்த சிறப்புடையனாதலேயன்றி, கொடுத்து மகிழும் குணச்சிறப்பும் உடையவனுவன்; மழை பெய்யாது போதலினால், நாட்டில் மூங்கில் கருகவும், வளங்குன்றாப் பெருங்குன்றுகள் வாடவும், அருவிகள் நீர் அற்று அழகிழப்பவும் பெரும்பஞ்சம் தோன்றிய காலத்தில், சேரநாட்டுப் பேராறு, கரைகளை அழித்து ஓடி, பொன்னேர் பூட்டும் உழவர் உள்ளமெல்லாம் பூரிக்கச்செய்யுமாறு பெருமழை பெய்து பெருவெள்ளம் பெருகச்செய்யும் வானத்தைப் போன்ற கொடைக்குணம் உடையான் குட்டுவன்.

செங்குட்டுவன், பேரத்தாணிக்கண் அமர்ந்து, பொருள்பெறு நசையால் தன்னைப் பாடியடையும் புலவர் பெருமக்களை விரும்பி ஏற்று, அவர் ஆர உண்ணுமாறு அருகிருந்து ஊட்டுவன்; ஆடல் பாடல்களால் தன் அகம் மகிழச்செய்யும் பாணர், கூத்தர் முதலியோர்க்குப் பொற்கலன் அளித்துப் போற்றுவன்; கையிற்றூங்கிய யாழினின்றும் எழும் இசையொடு இயைய இன்குரல் எழுப்பிப் பாடும் விறலியர்க்குப் பிடியானை பல தந்து பேணி மகிழ்வன்; வெற்றிமேல் வெற்றியே வேட்கையாகக் கொண்டு, பகைவேந்தர் உள்ளம் பதைபதைக்குமாறு, அவர் நாட்டிற்

புகுந்து போரிட்டுப் பொருள்பல கவர்ந்துவரும், ஆண்மை நிறைந்த ஆற்றல் மறவர்க்குக் கொல்லும் யானைகளைக் கொடுத்துக் கொற்றம் போற்றுவன்; கையில் கோலேந்தி, மன்றினும், மறுகினும் மன்னன் புகழை மகிழ்ந்து பாடும் பாணர்தமக்குப் பரிசாகப் பரிபல அளித்துப் பாராட்டுவன்; இவற்றாலெல்லாம் செங்குட்டுவன் புகழ், குன்றிலிட்ட விளக்கென, உலகெலாம் பரவி ஒளிவிடல் கண்டு, அவன் பகைவர் பொறாமை கொள்வர் எனினும், அவன் புகழ் அவன் உள்ளத்தே அடங்கி மறைந்துபோக மாண்புடைய தாகவே, அப்பகைவரும் தம்மை மறந்து, அவர் புகழ் பாராட்டுவர்:

"இரும்பனை திரங்கப், பெரும்பெயல் ஒளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினம் திகழ
அருவியற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேராற்று இருங்கரை உடைத்துக்
கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய
வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்து
ஆர்கலி வானம் தளிசொரிந் தாஅங்கு,
உறுவர் ஆர, ஒம்பாது உண்டு,
நகைவர் ஆர நன்கலம் சிதறி,
ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக;
துய்வீ வாகை நுண்கொடி உழிஞை
வென்றி மேவல் உருகெழு சிறப்பின்,
கொண்டி மள்ளர், கொல்களிறு பெறுக;
மன்றம் படர்ந்து, மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல்வினை மேவலை யாகலின், பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்குகொளை முழவின்
தொலையாக் கற்ப." (பதிற்று: சஙு)

ஆற்றல்மிக்க அரசனாகவும், ஏற்றோர் இன்முகம் கண்டு உவக்கும் உயர் கொடையாளனாகவும் விளங்கிய

செங்குட்டுவன், கடவுள் அன்புகொண்ட காவலனாகவும் விளங்கினன். கண்ணகிக்குக் கற்கொணர்வான் வேண்டி, வடநாடு நோக்கிச் செல்வோன்முன், ஆடகமாடம் என்னும் கோயிலில் அறிதுயில் அமர்ந்தருளும் திருமாலின் பிரசாதத்துடன் வந்து சிலர் அரசன்முன் நிற்க, சிவபிரான் திருவடிகளைச் சென்னியிற் றாங்கி யிருக்கும் செங்குட்டுவன் திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் மணிப்புயத்துத் தாங்கினன் என இளங்கோவடிகள் கூறுவர் :

> "ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
> சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்தத்
> தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்,
> ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
> தாங்கினன்." (சிலம்பு, உசு : சுஉ-எ)

இவ்வாறு பல்லாற்றானும் பாருளோர் போற்றவாழ்ந்த செங்குட்டுவன், முதுபெரும் புலவராய பரணர் தம் பாடல் கேட்டு, அவர்தம் அருமையும் பெருமையும் அறிந்து, அவர்க்குத் தன் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய உம்பற்காட்டின் வருவாயினை வழங்கியதோடு, அவர்பால் தன் அருமை மகன் குட்டுவன் சேரலையும் ஒப்படைத்து, அவனை அறிவுத்துறை போய பெரியோனாக்குமாறு வேண்டினன். புலவர்பால் அவன் காட்டும் பெருமதிப்பினைப் பாராட்டி மகிழ்வோமாக.

## ௬. கணைக்கால் இரும்பொறை

மேலைக் கடற்கரைப் பட்டினங்களாகிய தொண்டி, மாந்தை, நறவு என்ற பேரூர்களைத் தலைநகர்களாகக் கொண்டு நாடாண்டிருந்த இரும்பொறை மரபில் வந்த அரசர்களுள், கணைக்கால் இரும்பொறையும் ஒருவனாவன்; கணைக்காலிரும்பொறை வெற்றியன்றித் தோற்றலையறியாத வேற்படை மிக்க பெரிய படைக்கு உரியவன்; படைவலியோடு சிறந்த உடல்வலியும் உடையவன். ஒருகால், பாசறைக்கண் இருந்தபோது, தன் படையைச் சேர்ந்த யானையொன்று, மதம்மிக்கு, அழிவுபல செய்து திரியலாயிற்று; அதனை அடக்கலாற்றாது, அவன் படை மறவர் அனைவரும் அஞ்சி நடுங்கினர்; அந்நிலையில், அவ்யானையை அடக்கி, அவ்வூராரெல்லாம் அச்சம் நீங்கி இனிது கண்ணுறங்குமாறு செய்த பேராண்மையுடையவன் நம் கணைக்காலிரும்பொறையே. கணைக்காலிரும்பொறை காலத்தே சிறந்த கொடைப்புகழ் கொண்ட, மூவன் எனும் பெருவீரன் ஒருவன் இருந்தான்; அவனுக்கும், கணைக்காலிரும்பொறைக்கும் இடையில், ஏனோ பகை வளர்ந்துவிட்டது; இரும்பொறை அவனைப் போரில் வென்று அகப்படுத்தியதோடு, அவன் பற்களையும் பிடுங்கி, தன் வெற்றிச் சிறப்பினை ஏனைப் பகை வேந்தரெல்லாம் அறிந்து அஞ்சுமாறு, அவற்றைத் தொண்டி நகர்க்கண் உள்ள தன் கோட்டை வாயிற் கதவில் அழுத்தி வைத்தான்; இரும்பொறையின், இப் பேராண்மைகளையெல்லாம், அவன் அரிய நண்பரும், அவன் அவைக்களப் புலவருமாய பொய்கையார், தாம் பாடிய நற்றிணைச் செய்யுளொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார்:

"மூவன்
முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலந் தொண்டிப் பொருநன்; வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன்; பாசறை
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிதுகண் படுப்பக்
கடாஅம் கழீஇய கதனடங்கு யானை." (நற்: கஅ)

கணைக்காலிரும்பொறை காலத்தே, சோணாட்டில் செங்கணான் எனும் பேரரசன் ஒருவன் அரியணையேறி யிருந்தான்; சேரமான் கணைக்காலிரும்பொறையும், சோழன் செங்கணானும் பகைகொண்டனர்; கழுமலம் என்ற நகரை அடுத்துள்ள திருப்போர்ப்புறம் எனுமிடத்தே கடும்போர் நிகழ்ந்தது. 'யானைக்கும் அடிசறுக்கும்' என்ப. பெரும் படையும் பேராண்மையும் உடையானாகிய கணைக்காலிரும் பொறை, செங்கணானின் பெரிய யானைப்படையினை வெல்லமாட்டாது தோற்றான்; தோற்ற சேரனைக் கைப் பற்றிக்கொண்டுபோய்ச் சோழன் குடவாயிற் கோட்டத் தின்கண்ணேயுள்ள சிறையில் காவல்வைத்தான்.

பகைவன் பின் சென்று, பணிந்து, பல்லைக் காட்டி வாழ்வதினும், அந்நிலையுற்ற அக்கணமே, உலக வாழ்வை மறந்து உயிரைத் துறந்துவிடுதல், உயர்ந்தோர் போற்றும் உரனுடையார் செயலாம்; தம் நிலை தளரும் காலம் வந்துற்றக்கால், மானத்தை இழந்து, உயிர்வாழ எண்ணாது, உயிரை இழந்து மானத்தைக் காக்கும் மாண்புடையாரை, மாநிலம் அனைத்தும் மண்டியிட்டு வணங்கும்; இவ்வுர னுடை யுள்ளம் உடையவன் கணைக்கா லிரும்பொறை ஆதலின், பகைவன், சிறையக வாழ்வே பழிதரு செயலாம் என எண்ணி வருந்தினான்; அவன் உள்ளத் துயரை உயர்நிலைக்குக் கொண்டுசெல்லும் நிகழ்ச்சி யொன்று நிகழ்ந்துவிட்டது.

ஆங்கே, சிறையில் இருந்த சேரன், ஒருநாள் சிறைக் காவலரை, உண்ணீர் தர வேண்டினான். அவர்கள் அவனும் ஒரு சிறைக் கைதியே என்ற எண்ணமுடையராய், ஏனைக் கைதிகள்பால் நடந்துகொள்வதேபோல், அவன் கேட்ட போதே நீர் தாராது காலம் தாழ்த்தித் தந்தனர்; தரும் போதும், அரசன் என்ற மதிப்பின்றித் தந்தும் இழிவு செய்தனர்; காவலர்தம் இவ் விழிசெயல் கண்டு, காவலன் உள்ளம் பொறாதாயிற்று; அவர் தந்த அந்நீரை உண்ணாது ஒருபால் வைத்துவிட்டான்; ஆழ்ந்த சிந்தனையுள் ஆழ்ந்து விட்டான் அரசன்.

"போர்க்களம் புக்குப் போரிட்டு, வாள்வடுப் பெற்ற வர்க்கே துறக்கத்தில் இடமுண்டு என்ப; இறந்து பிறந்த குழந்தையும், உருவின்றிப் பிறந்த ஊன் தடியும், அத்தகு வாள் வடுப்பெறும் வாய்ப்பினைப் பெறுவதில; ஆதலின் அவை துறக்கம் புகா; ஆனால், அவற்றையும் துறக்கம் புகுத்தும் நல் உள்ளத்தவராய் நாடாள்வார், அவற்றைத் தருப்பைப் புல்மீது கிடத்தி, 'வெற்றிவீரர் சென்றவழியே இவையும் செல்க,' என, வாழ்த்தி வாளால் வெட்டிப் புதைப்பர்; இஃது அரசர்கள் பண்பு. அத்தகைய அரசர் கள் மரபிலே வந்த யான், சங்கிலியால் பிணிக்கப்பெற்று, இழுத்துச் செல்லப்படும் நாய்களேபோல், பகைவரான் தளைசெய்யப் பெற்று, அவர் அடைத்த சிறையகத்தே வாழ்கின்றனனே! அந்தோ! என்னே என்நிலை! அவர்கள் அளிக்கும் உணவினை உண்ணேன் என்ற உறுதிப்பாடு அற்று வயிற்றுப் பசித்தீயை அடக்குவதற்காக, அவரே தாராத நிலையில், நானே இரந்து வேண்டி, அவர் இகழ்ந்து அளித்த நீரை உண்ணும் இழிநிலையுடைய கீழ் மகனோ யான்? என்னைப்போலும் கீழ்மகன் எவனும், இவ்வுலகின் என்றும் பிறவான்," என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிற்று அவன் உள்ளம்; எண்ணிய தன் எண்ணத்தை ஓர் ஏட்டில் எழுத்துருவாக்கி அண்மையில் இருத்தி உறங்கி விட்டான்:

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆளன்று' என்று வாளின் தப்பார்:
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ? இவ்வுலகத் தானே." (புறம்: எசு)

சேரமான் கணைக்கா லிரும்பொறையின் அவைக் களத்தே இருந்து அவன் வெற்றிச் சிறப்பினையும், மற னிழுக்கா மானம் நிறைந்த அவன் பண்பாட்டுப் பெருமை யினையும் பாடி மகிழும் புலவராய பொய்கையார், தம் அரச

னுக்கு நேர்ந்த கதியினைக் கண்டார்; கண்ணீர் விட்டுக் கலங்கினார்; சேரனைச் சிறைவீடுசெய்து சிறப்பித்தல், அவன் ஆருயிர் நண்பராய தம் கடனே என உணர்ந்தார்; சோழன் செங்கணான், சேரனைச் சிறைசெய்த கொடியோன் எனினும், புலவர்பாலும், அவர்தம் பாக்கள்பாலும் பெரு மதிப்புடையான் என்பதை அவர் அறிவாராதலின், உடனே அவன் அரசவையினை விரைந்து அடைந்தார்; நாற்பது வெண்பாக்களைக் கொண்ட, "களவழி நாற்பது" என்ற கவின்மிகு நூலைப் பாடிப் பாராட்டினார்; அதில், சோழன் செங்கணான், சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு கழுமலத்திடத்தே நடத்திய போரின் சிறப்பினையும், அப் போரில் செங்கணான் பெற்ற வெற்றிச் சிறப்பினையும் விளங்க உரைத்துப் பாராட்டினார்; அந் நூலின் பாடற் பொருளையும், அதன் பெருமையையும் உணர்ந்தான் செங் கணான்; புலவர் உளம் உவக்கும்வண்ணம், அவர் அன்பு காட்டும் அரசனாய சேரமானைச் சிறையினின்றும் விடுத்து அவர்பால் ஒப்படைத்து மகிழ்ந்தான்.

> "களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய, உதியன்
> கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட பரிசும்."
>
> (கலிங்கத்துப் பரணி)

> "இன்னருளின்,
> மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
> பாதத் தளைவிட்ட பார்த்திபனும்."
>
> (விக்கிரம சோழனுலா)

இனி, சேரமான் கணைக்கால் இரும்பொறை, பொய் கையார் கவி பாடிச் சிறைவீடுசெய்யும்வரை, உயிர் காத்து நின்றானல்லன், தன் உள்ள எண்ணத்தை உருவாக்கும் எழுத்தோவியத்தை ஏட்டில் தீட்டியதும் இறந்து இறவா நெறி பெற்றுவிட்டான் என்றே அறிஞர் பலரும் கருதுவர். 'மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற மறைப்பொருட்கு வழிகாட்டிய மன்னவன் வாழ்க!

## ௬௯. கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, சேரருள் இரும்பொறை என்ற மரபில் வந்தோனவன்; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பானும் ஒருவன் இருத்தலின், அவனின் வேறு அறிதற்கு, இவன், கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனப்பட்டான்; இரும்பொறை மரபினர், தொண்டி, மாந்தைபோன்ற ஊர்களால் சிறப்புற்ற கடற்கரை நாட்டினை ஆண்டிருந்தவராவர்; அவர் வழிவந்த இவன், தனக்குரிய நாட்டோடு அமையானுய்க் கொங்குநாட்டில் உள்ளதும், சேரருள் மற்ருெரு கிளையினர்க்கு உரியதுமாய கருவூரையும் கைப்பற்றி, அந் நகர்க்கண்ணே அரசுகட்டில் ஏறி, முடி சூடிக்கொண்ட சிறப்புடையோனவன்; வாட்போரில் வல்லவன்; பெருஞ்சேரல் எனப் பெருமை செய்யப்பெற்ருேன்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ப; தம்மைக் காண்பார்தம் தீமை போக்கி நன்மை பெருகச்செய்யும் ஆற்றல் நல்லார்க்கு உண்டு; கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறைபால் அத்தகைய நற்பண்பு அமைந்து கிடந்தது; தன்னைக் காண்பார்பால் அமைந்துகிடக்கும் வெறுக்கத்தக்க பண்புகளையே யல்லாமல், அவர்தம் வெறுக்கத்தக்க உடலமைப்புக்களையும் மாற்றவல்ல தோற்றப் பொலிவுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை; அவன் காலத்தே நரிவெரூஉத் தலையார் என்ற புலவர் பெருந்தகையார் ஒருவர் இருந்தார்; அவர் உடல் நலமும், தோற்றமும் யாது காரணத்தாலோ வேறுபட்டுத் தோன்றின; அவ்வாறு வேறுபட்ட அவர் தோற்றம், எவ்வுருவைக் கண்டும் அச்சம்கொள்ளா இயல்பினதாய நரிக்கும் அச்சம் தரும் அத்துணைக் கொடிதாய் அமைந்திருந்தது; பெருஞ்சேரல் இரும்பொறையின் காட்சி நலச் சிறப்பினையும், நரிவெரூஉத் தலையாரின் உடல்

நலக் குறைவினையும் உணர்ந்தார் சிலர், நரிவெரூஉத் தலையார்பால், "பெருஞ்சேரல் இரும்பொறையைக் காணின், நின் உடற்குறை தீரும்." எனக் கூறி, அவன் யாண்டுளன்? அவன் இயல்பு யாது? என்பனவற்றையும் அறிவிக்கத் தொடங்கி, "எருமைகளுக்கு இடையிடையே கலந்து மேயும் ஆனிரைகளேபோல், கரிய பாறைகளுக்கு இடையிடையே உலாவும் யானைகள் நிறைந்த காட்டுநாட்டில் வாழ்கின்றான் அவன்" என்றும் கூறினர்; நரிவெரூஉத் தலையாரும், அவர்கள் கூறியவாறே சென்று, பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டார்; கண்டவுடனே, அவர் நோய் நீங்கிற்று; கண்டவர் மகிழும் கவின்மிகு வடிவுற்றார்.

நரிவெரூஉத் தலையார், நல்ல அறவுணர்வுடைய ஆன்றோராவர்; நன்றி மறவா நன்மாண்புடையராவர்; தாம் பெற்றிருந்த பழியுடல் நீங்கிப் புகழுடல் பெறுதற்குக் காரணமாகிய சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை நல்வாழ்வு வாழ விரும்பினார்; பிறர்பால் உள்ள பெருந்துயர் போக்கும் பெருமையுடையோனாகிய பெருஞ்சேரல் இரும்பொறை, பல்லாண்டு வாழ்ந்து பல்லோர் பிணிபோக்கித் துணைபுரிதல் வேண்டும் எனவும், அதற்காம் அரசாள் பண்பு அவனிடத்தே அமைதல் வேண்டும் எனவும் விரும்பினார்.

ஆளும் அரசனிடத்தில், அன்பும் அருளும் நீங்காது நிறைவுற்றிருத்தல் வேண்டும்; அவை, அவன்மாட்டு இல்லாயின், அவன் ஆட்சி நெடுநாள் நிலைபெற்றிராது; அன்பையும், அருளையும் அடிப்படையாகக் கொண்ட ஆட்சியினையே எவரும் விரும்புவர்; அவை இரண்டும் இல்லார், அறநெறி நில்லார்; ஆதலின், அவர் ஆட்சி அழிவதோடு, அவரும் பழி பாவங்கள் உடையராய் மீளாத்துயர் உறுவர் என்ற உண்மைகளை உணர்ந்த நரிவெரூஉத் தலையார், தாம் நல்லுடல் பெற்று உயர்வதற்கு உறுதுணை புரிந்த ஓர் அரசன், அவ்வாறு அன்பும், அருளும் இலனாய்ப், பழிபாவங்கள் நிறைந்த பாழ்பட்ட வாழ்வுடையனாதலை விரும்பினாரல்லர்; ஒரு நாட்டு மக்கள், தங்கள்

அரசன் தீயனல்லன் என்ற ஒன்றினாலேயே, 'உயர்நிலை பெறுவதோ, பெருமை கொள்வதோ இலர்; அவன் தீய னல்லன் என்பதோடு, நல்லனுமாவன் என்பதையே விரும் புவர்; அரசன் குடிகளின் குறையறிந்து ஆளுதல்வேண்டும்; குடிகள் தம் குறையினைத் தன் முன் வந்து நின்று கூறக் கேட்ட பின்னர், அவர்க்குக் குறையுண்டு என உணர்ந்து தீர்ப்போன் நல்லரசனாகான்; அவர் குறைகளைக் குறிப்பா லறிந்து போக்குதல் வேண்டும்; குழந்தை பால் உண்ணும் நேரம் இது என்பதை நினைந்திருந்து ஊட்டி வளர்ப்பவளே உண்மைத் தாய்; தாய் எனக் கூறத்தக்காள் அவளே; அரசனும், குடிகளிடத்தில் அத்தகைய தாயன்பு காட்டி ஆளுதல் வேண்டும்; நல்லாட்சியின் இப்பண்பையும் உணர்ந்த நரிவெரூஉத் தலையார், பெருஞ்சேரல் இரும் பொறையும், அத்தகைய உத்தம அரசனாதலை விரும்பினார்; அவ்வேட்கையுடையராய அவர், பெருஞ்சேரலை நோக்கி, "பெரும! நின்பால் பெருஞ்செல்வம் உளது; அச்செல் வத்தோடு, இப்பண்புகளையும் உடையையாயின், நின்நிலை மேலும் சிறக்கும்; அச்சிறந்த நிலையினை எவரும் எளிதில் எய்துதல் இயலாது; அதை நீ, போற்றிக் காப்பாயாக!" என்று கூறி வாழ்த்தினார்; நரிவெரூஉத் தலையார்க்கு நல்லுடல் அளித்த பெருஞ்சேரல் இரும்பொறை, அவர் பால் நல்லுரை பெற்று நன்னிலை உற்றான்.

"எருமை யன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய, முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோ ராகலின், நின்னொன்று மொழிவல்;
அருளும், அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி!
அளிதோ தானே; அது பெறலருங் குரைத்தே."

(புறம்: 5)

# ௬௦. கருவூர்ச் சாத்தன்

ஐயனார்க்குரிய சாத்தனார் எனும் பெயரைத் தன் இயற்பெயராகக் கொண்ட இவர், கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர அரசர்களுள் ஒருவராவர். இவர் வரலாறாக நாம் அறியத்தக்கன இத்துணையவே; இவர் ஒரு புலவர்; நாடாளும் அரசராய் அமர்ந்து, அறிவு சான்ற புலவர் பெருமக்கட்குப் பரிசு அளித்துப் பெருமை செய்வதால் தமிழ் வளரத் துணைபுரிதலோடு, அத்தமிழைத் தாமும் அறிந்து பாக்கள் பல பாடித் தமிழ் வளர்த்தாருள் கருவூர்ச் சாத்தனும் ஒருவர்.

தலைமகள் ஒருத்தியைக் கண்டு காதல் கொண்டான் ஒரு தலைமகன்; தம் காதல் ஒழுக்கத்தைச் சின்னாள்வரை எவரும் அறியாவாறு மறைத்து மேற்கொள்ள விரும்பினான்; அத்தகைய களவொழுக்கத்தில் பேரின்பம் இருப்பதுணர்ந்த தலைவியும் அதற்குத் தடை செய்திலள்; இதனால், அவன் இரவில், கடத்தற்கரிய கொடிய வழி பல கடந்து வரவேண்டியதாயிற்று; இவ்வொழுக்கத்தைத் தலைமகள் விரும்புகிறாள் எனினும், அவன் வரும் காலக் கொடுமையும், வழியின் ஏதமும் அவளுக்கு அச்சத்தை அளித்தன. தலைமகள் அன்பையும், அச்சத்தையும் ஒருங்குணர்ந்த அவள் தோழி, அதற்கொரு மருந்தினைத் தேடலாயினள்; தலைவனை இன்றி வாழ்வதோ தலைவிக்கு இயலாது; அவன் வரும் வழியோ கொடுமை நிறைந்தது; இதற்கு வழி, அவன் அத்தகைய கொடிய வழியில் வரவேண்டுவதின்றி அவளோடு பிரியாதிருத்தலே ஆகும். அவள் அவனை மணந்து கொள்வதே எனத் துணிந்தாள்; இதை, அவனுக்கு நேரிற் கூறாது, இவ்வெண்ணம் அவன் உளத்தே தோன்றுமாறு கூற எண்ணினாள்; ஒருநாள், தலைவன் நள்ளிரவில் வந்து வீட்டின்புறத்தே நின்றுகொண்டிருந்தான்; இதை அறிந்துகொண்ட தோழி, அவன் வருகையினை அறியாதாள் போன்று, அவன் கேட்குமாறு, தலைவியை நோக்கி, "தோழி! தலைவனும்,

நீயும் கொண்டுள்ள அன்பின் உண்மைநிலையினை உணர்ந்த வளாதலின், வந்த தலைவரைக், 'காலம் மிகுதியும் கழிந்து விட்டது; வழியில் ஏதம் மிகும் முன்னரே செல்வது நன்று; செல்கின்றீர்களா?' எனக் கூறி விரைந்து அனுப்பவும் வாய் வந்திலது; வழியில் ஏதம் பல உண்டு என அறிவேன் ஆதலின், அவ்வழியே அவனை வரக் கூறுதல் நன்றன்று; எனவே, நாளையும் வருகின்றீர்களா?' எனக் கேட்டு வரவேற்கவும் வாய் வந்திலது; இவ்வாறு, அவனையின்றி வருந்தும் நின் அன்பு கண்டு அஞ்சுவதா? படமெடுத்தாடும் பாம்பையும் அழிக்கும் இடியேறு முழங்கும் நள்ளிரவில் வருகின்றனரே என அவர் வரும் வழி ஏதமும், காலக் கொடுமையும் கண்டு அஞ்சுவதா? என்றே அறிந்திலேன்; என் செய்வேன்?" என்று கூறினாள். தோழி கூறும் இச்சொற்கள், தலைவியின் நிலையினைத் தலைமகனுக்குத் தெளிய உணர்த்தி, இக்களவொழுக்கத்தினைத் தொடர்ந்து மேற்கோடல் நன்றன்று; விரைந்து வரைந்து கோடலே நன்றாம் என்ற முடிவினை, அவனைக் கொள்ளுமாறு செய்யத் துணைபுரியும் தோழியின் கூற்றமைய வந்த இப்பாட்டு ஒன்றே, தலைமகள், தலைவன், தோழி இவர்கள் தம் அன்பு உள்ளங்களைத் தெள்ளத் தெளிய உணர்த்தி நிற்கிறது; இத்துணைக் கருத்துக்களும் புலப் படப் பாடத்தக்க பெரும் புலவராய்க் காட்சி அளிக்கிறார், கருவூர்ச் சாத்தனார்.

"சேறிரோ? எனச் செப்பலும் ஆற்றாம்;
வருவிரோ? என வினவலும் வினவாம்;
யாங்குச் செய்வாம்கொல்? தோழி! பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே."

(குறுந்: உகஅ)

## ௧௧. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மக்கள் நால்வருள், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் ஒருவன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இளைய மனைவி, வேளாவிக்கோமான் பதுமன் மகள் வயிற்றிற் பிறந்தோனாவன். இவன் ஒருதாய் வயிற்றுதித்த உடன்பிறந்தோன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனாவன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் எனும் இப்பெயர், இவன் களங்காயாற் கண்ணியும், நாரால் முடியும் செய்து அணிந்து கொண்டிருந்தமைபற்றி வந்த காரணப் பெயராம். பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர் "தான் முடி சூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும், முடியும் உதவாமையின், களங்காயாற் கண்ணியும், நாரால் முடியும் செய்துகொள்ளப்பட்டன" எனக் காரணம் கூறுவர். இவன் இளையனாய் அரசு எய்துகின்ற காலத்தே, ஒருசிலர், நன்னன் என்பான் துணைபெற்று, சேரநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்தாராக, "அந்நாட்டையும் வென்று, சேர அரசிற்குரிய அனைத்து நாட்டையும் ஆளும் அந்நாள் வரை, அச்சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்" எனச் சூளுரைத்து, அவற்றிற்கு ஈடாகக் களங்காய்க் கண்ணியும், நார்முடியும் புனைந்து நின்றமையால் இவனுக்கு இப்பெயர் வந்தது எனக் கூறல் பொருந்தும் என்பாரும் உளர். இவனைப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார், இவன் அணிந்திருந்த அந் நார்முடியினை அணி பெறப் புனைந்து பாராட்டியுள்ளார்:

விளிம்பிலே மணிகள் கோக்கப்பெற்ற ஒரு பொற்கூடு; நார்கொண்டு பின்னப்பட்டது அதன் மேற்புறம்; இழைத்து வைத்தாற்போலும் புள்ளிகள் நிறைந்த கழுத்தினையும், சிறிய முதுகினையும் உடைய அழகிய புறாக்கள், தங்களைப் பிடிக்கக் கருதும் வேடர் விரித்த வலையோ என அஞ்சுமாறு, உலர்ந்து இலைகள் உதிர்ந்து நிற்கும் வேல மரத்தின் கிளைகளில், சிலந்தி தன் வாய் நீரால் பின்னிய

வலையை நினைப்பூட்டும், அப்பொற் கூட்டின் மேற்புறம் மறையுமாறு பின்னிக்கிடக்கும் அந்நாரின் தோற்றம். நாரின் செம்மையற்ற காட்சி மறையுமாறு, விளங்கிய நூலால் கோக்கப்பெற்று ஒளிகாலும் முத்துவடங்கள் கிடந்து அணிதந்து நிற்கும் அம்முடிக்கு 'நார்முடி அளிக்கும் நற்காட்சி இது :

"வாலிதின், நூலின் இழையா, நுண்மயிர் இழைய
பொறித்த போலும் புள்ளி எருத்தின்
புன்புறப் புறவின் கணநிரை அலற
அலந்தலை வேலத்து உலவை அஞ்சினைச்
சிலம்பி கோலிய அலங்கல் போர்வையின்
இலங்குமணி மிடைந்த பசும்பொன் படலத்து
அவிர்இழை தைஇ, மின்உமிழ்பு இலங்கச்
சீர்மிகு முத்தம் தைஇய
நார் முடி." (பதிற்று: ௩௯)

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலோடு பகைத்து நின்றோர் நன்னனும், நெடுமிடலஞ்சியுமாவர் ; நன்னன், நார்முடிச்சேரல் நனி இளையனாய் இருந்த காலத்தே, அவனுக்குரிய பூழிநாட்டைக் கவர்ந்துகொண்டான்; நார்முடிச் சேரல், சேரர் அரியணை ஏறியதும், நன்னன் ஆண்டிருந்த பூழிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை என்னும் இடங்களில் கடும்போர் ஆற்றி, அந்நன்னனுக்குரிய காவல் மரமாகிய வாகைமரத்தை வெட்டி வீழ்த்தி, அவனையும் வென்று, பண்டுதான் இழந்த நாட்டைப் பெற்று மீண்டான்; சேரல் பெற்ற இச்சிறப்புடை வெற்றியைக் கல்லாடனாரும், காப்பியாற்றுக் காப்பியனாரும் கவினுறப் பாடியுள்ளனர் :

"இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்துஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்தநாடு தந்தன்ன வளம்."

(கல்லாடனார், அகம் : ௧௯௯)

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்."
(காப்பியாற்றுக் காப்பியனார்: பதிற்று : ௪0)

அதியமான் நெடுமான் அஞ்சியின் குலத்தவந் தோனுய நெடுமிடல் என்பான், வளம் செறிந்த மருத நிலத்தூர்களை ஆண்டிருந்தான்; நாரைகள், தமக்கு வேண்டும் உணவுகளைத் தேர்ந்து உண்ணற்காம் மீன்களால் நிறைந்தது அவன் நாட்டு நன்செய்; அந்நன்செய்களில், மூங்கில்போல் வளர்ந்து விளங்கும் நெற்பயிர்களில், கதிர்கள் கனத்தால் தலைசாய்ந்து கிடக்கும்; இவ்வாறு வளங் கொழிக்கும் நாடுடைமையால், நெடுமிடல் செருக்குற்றிருந்தான்; நார்முடிச் சேரல், அவன்மிடல் கெடுமாறு, படையொடு அவன் நாட்டுட் புகுந்து, தன் யானைப்படையால், அவன் நாட்டுவளத்தையும் அழித்து, அவனையும் அழித்தான்:

"நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்து இரைகவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து." (பதிற்று: ௩௨)

நார்முடிச் சேரல், சேரர்க்கு உரியதாய்ப் பயன்மிகத் தந்து விளங்கும் நேரிமலைக்குச் சென்று, ஆங்குள நீர்வீழ் காட்சிகளைக் கண்டு களித்து வாழும் வாழ்க்கையிலும் கருத்துடையனுவன்:

"நீரிமிழ் சிலம்பின் நேரி யோனே." (பதிற்று: ௪0)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் நலமெலாம் தோன்றப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார், நார்முடிச் சேரல், வண்டன் என்னும் வள்ளல்போல் வற்றாத செல்வமும், விளங்கிய புகழும் பெருகப்பெற்றவன்; தளர்ந்த தம் குடியினர் தம் தளர்ச்சி போக்கும் தாளாளன்; கல்வி கேள்விகளால் நிறைந்தவன்; பணி

வுடைமையைப் பண்பாகப் பெற்றவன்; ஐம்புலனும் அடக்கிய ஆற்றல் உடையான்; இவை உண்டற்கு இனியன என உரைத்தவழியும், அவற்றைத் தனித்திருந்து தானே உண்ணும் உள்ளம் அற்று, அவற்றைப் பலர்க்கும் பகுத்து ஊட்டி உண்ணும் பண்புடையன்; போர்மேற் கொண்டு பகைவர் நாட்டகத்தே வாழும் நாட்களிலும், பெருஞ் சினம் கொள்ளாது பொறையேபூணும் பொற்புடையவன்; பகைவர் தம் பெருவலிகெடப் பொரும் அக்காலையும், தோற்று ஓடும் அப்பகைவர் புறத்தே அம்பேவ எண்ணு ஆற்றல்நிறை படைமறவரையே பெற்றவன்; இவ்வாறு எவ்வழி நோக்கினும், அவன் இறப்ப உயர்ந்து விளங்குவதால், அவன் புகழின் அளவை இத்துணைத்தென எண்ணிக் காண எண்ணுவார், எண்ணிக் காணமாட்டாது இடையே தடையுற்றுப் போவர் என அவன் புகழைப் போற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார்:

"வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்டன் அனையைமன் நீயே." (பதிற்று: ௩க)

"ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்!
வான்தோய் நல்லிசை உலகமொ டுயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்."
(பதிற்று: ௩எ)

"இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்;
தருக எனவிழையாத் தாவில் நெஞ்சத்துப்
பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்
பிறர்க்கென வாழ்தி நீ ஆகன்மாறே." (பதிற்று: ௩அ)

"பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுதல் இறும்பூதாற் பெரிதே." (பதிற்று: ௩உ)

"ஒடுங்காத் தெவ்வர் ஊக்கறக் கடைஇப்
புறக்கொடை எறியார் நின்மறப்படை கொள்ளுநர்."
(பதிற்று: ௩க)

"எல்லாம் எண்ணின் இடுகழங்கு தபுந!
கொன்னொன் றுமருண் டெனன் அடுபோர்க்கொற்றவ."
(பதிற்று: ௩உ)

இவ்வாறு, புலவர் காப்பியாற்றுக் காப்பியனார் தன் புகழுரைம் பாடக்கேட்டு, இருபத்தைந்து யாண்டுகள் அரசோச்சிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், புலவர்க்கு நாற்பது நூறாயிரம் பொன் கொடுத்ததோடு அமையாளுய்த் தன் அரசியல் வருவாயில் பாகமும் கொடுத்துப் பெருமையுற்றான்:

"ஆராத் திருவின் சேரலாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன்தேவி ஈன்ற மகன்முனை
பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்து
ஊழி ளுகிய உயர்பெருஞ் சிறப்பின்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவி ளுற்றலை யறுத்து அவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."

(பதிற்றுப்பத்து, பதிகம்: ச)

# கஉ. குட்டுவன் கோதை

சேரவேந்தர், குட்டுவர், குடவர், பொறையர் எனக் குடிவகையாற் பலராவர். சேரநாட்டின் ஒரு பகுதியாகிய குட்டநாட்டை ஆண்டவர், குட்டுவர் என அழைக்கப் பெறுவர். அக்குட்டுவர் குடியில் கோதை என்பான் ஒரு கோ, கோலோச்சியிருந்தான். கோதை எனும் பெயர், ஆதன் என்பதைப் போன்றே சேரரைக் குறிக்க வழங்கும் பெயர்களுள் ஒன்றும். புலவர்களை விரும்பி வரவேற்று வாரி வழங்கும் வள்ளியோனாய குட்டுவன் கோதை, பகைவர்க்குப் புலிபோலும் பேராற்றல் உடையனுவன். ஒரு நாட்டிற்குரிய அரசன், அந்நாட்டுள், தன்னை எதிர்நின்று தடுப்பார் எவரும் இல்லாமையால், எவரையும் கேளாதே மாறாக எல்லோரும் எதிர்வந்து போற்ற, இறுமாந்து தன் தலை தூக்கிச் சென்று அரசவை புகுவதேபோல், குட்டுவன் கோதையின் அரசவையுள் சென்று இருத்தல் புலவர்களுக்கு மிகமிக எளிது ஆனல், அவனோடு பகைகொண்டு வாழ்வார், புலிவாழும் காட்டினுள் ஆட்டிடையர் புகவும் அஞ்சுவதேபோல், அவன் நாட்டுள் புகவும் அஞ்சுவர்; அத்துணை ஆற்றல் உடையவன். இவ்வாறு கொடை, கொற்றம் ஆகிய இரண்டானும் சிறந்த அவன் புகழ் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் போலும் புலவர்களாலும் பாராட்டப்பெற்றுள்ளது.

"எங்கோன் இருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல இடையின்று குறுகிச்
செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மையல்லாது, புரவெதிர்ந்து
வானம் நாண வரையாது சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி
மாசுண் உடுக்கை மடிவாய் இடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை அவனுடை நாடே." (புறம்: ருச)

## கரு. கோக்கோதை மார்பன்

கோக்கோதை மார்பன், தொண்டி எனும் கடற்கரை நகரைத் தலைநகராக்கொண்டு ஆண்ட ஒரு சேர வேந்தனுவன். கோதை மார்பன், பாண்டியரோடு பகைகொண்டு வாழ்ந்தான்; கிள்ளிவளவன் எனும் சோழ அரசன் வெள்ளம்போலும் பெரும்படையுடன் பாண்டியர்க்குரிய கூடல் நகரை அடைந்து, ஆங்கு வாழ்ந்திருந்த பாண்டியர் படைத் தலைவனாய பழையனை வென்று, களிறும் புரவியும் கணக்கில கைப்பற்றிக்கொண்டான் எனக்கேட்டு மகிழ்ந்தான், கோக்கோதை மார்பன்.

"நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே." (அகம் : கூசுசு)

கோக்கோதை மார்பன் ஆட்சிக்குரிய நாடு, மலையும் மலைசார்ந்த இடங்களும் பெற்றுக் குறிஞ்சி வளமும், வயலும் வயல் சார்ந்த இடங்களும் பெற்று மருத வளமும், கடலும் கடல் சார்ந்த இடங்களும் பெற்று நெய்தல் வளமும் விளங்கும் பெருநாடாம். கோதை மார்பனைப் பாராட்டிய புலவர்களுள் ஒருவராய பொய்கையார், அவன் நாடு, பல்வேறு வளமும் பெற்று விளங்கும் பெருநாடாதல் அறிந்து, "கோதையைக் குறிஞ்சிநிலத் தலைவனுக்குரிய பெயராகிய நாடன் என்ற பெயரிட்டு அழைப்பனோ? மருதநிலத் தலைவனை அழைக்க ஆளும் ஊரன் என்ற பெயரிட்டு அழைப்பனோ? நெய்தல்நிலத் தலைவனுக்கு உரிய சேர்ப்பன் என்ற பெயரிட்டு அழைப்பனோ?" என்ற ஐய வாய்பாடு தோன்றப் பாராட்டியதோடு, "அவன் நாட்டில்

குறிஞ்சிநிலத்துக் குறமகளிர், தம் புனத்துத் தினையினை உண்ணவரும் பறவைகளைத் துரத்தத் தம் கையில் உள்ள தட்டை என்ற கிளிகடி கருவியைத் தட்டி ஒலி எழுப்பினாராக, அவ்வொலி கேட்டுக் கதிர்கள் முற்றித் தலைசாய்ந்துகிடக்கும் கழனிகளில் வாழும் பறவைகளும், கடலைச் சார்ந்த கழிகளில் வாழும் பறவைகளும் அஞ்சிப் பறந்து அப்பாற் செல்லும்" என்றும் கூறியுள்ளார். இத் துணை வளம் விளங்க ஆண்ட அவன் ஆட்சியின் நலனை நாவார வாழ்த்துவோமாக!

"நாடன் என்கோ? ஊரன் என்கோ?
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ?
யாங்கனம் மொழிகோ? ஓங்குவாள் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்குகதிர் அலமரும் கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ஒருங் கெழுமே."

(புறம்: ௪௯)

## கச. கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

சேரநாட்டில் கோட்டம்பலம் என்றோர் ஊர் உண்டு. அஃது இப்போது அம்பலப்புழை என அழைக்கப்பெறு கிறது. அந்த அம்பலப்புழை இன்றும் பழங்காலச் சிறப்பு வாய்ந்துளது. இதையடுத்து மாக்கோதை மங்கலம் என்ற பெயருடைய ஓர் ஊரும் காணப்படுகிறது. மாக்கோதை எனும் இயற்பெயருடைய இச் சேரவேந்தன், தன் வாழ் நாளின் இறுதிக்காலத்தே இக்கோட்டம்பலத்தே வாழ்ந்து உயிர்விட்டானாதலின், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக் கோதை என அழைக்கப்பெற்றுளான். இவன் பெயர் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையன்று; கூத் தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையாம் என்பர் சிலர். சேரநாடு கூத்துக்களுக்குப் பெயர்போனது; கூத்து நடை பெறும் கூத்தம்பலங்கள் பல, அந்நாட்டின் பல பகுதி யிலும் காணப்படும். மாக்கோதை மன்னன், இத்தகைய கூத்தம்பலத்தேயிருந்து, ஆங்கு நடைபெற்ற கூத்தொன் றைக் கண்டு களித்திருந்தவழி உயிர் துறந்தானாதலின், கூத்தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என அழைக்கப் பெற்றான்; இவ்வாறு கூறுவாரும் உளர்.

மாக்கோதை தான் பிறந்த சேரர்குடியிடத்தும், அக் குடிவந்த தம் முன்னோர் இடத்தும் பெரும்பற்று உடையவ னவன். மலைச்சாரலில் யானைக்கன்றை உறங்கவைக்கும் அருவியொலியைக் குறிப்பிடுங்கால், அது தன் குடி முன்னோனாய பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என் பான் அளிக்கும் சோற்றுப் பரிசிலை, அவன் அறச்சாலை அடைந்து பெற்று உண்ணவருவார் ஆண்டுச் செய்யும் பேரொலிபோலும் என உவமை கூறித் தன் குடிப்பற்று குன்றிலிட்ட விளக்கென விளங்கவைத்துள்ளார்.

"கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி யார்க்கும் பெருவரைச் சிலம்பு." (அகம்: கசுஅ)

தன் முன்னோர்பால் அன்புகாட்டும் மாக்கோதை, தன் மனைவிபாலும் பேரன்புடையனுவன். அரசமாதேவியார் இறந்துவிட்டார்; இறந்தார் உடலை ஈமத்தீயிடை இட்டுவிட்டனர்; எரிகின்றது அவர் உடல்; அதைக்கண்டு நிற்கும் மாக்கோதையார் உள்ளம் கழிந்தகாலக் காதல் வாழ்வை எண்ணித் துயர் உற்றது. "பிரியேன்; பிரியின் உயிர்தரியேன்; காதல்; காதல் இன்றேல் சாதல்" என்று அன்று வழங்கிய அன்பொடுகலந்த வன்புரைகளை எண்ணினார்; ஒருவரைப் பிரிந்து ஒருவர் வாழல் இயலாது என எண்ணி வாழ்ந்ததை எண்ணினார்; நாணிற்று அவர் உள்ளம்; "இன்று அவள் இறந்துவிட்டாள்; அவள் உடல் இதோ என் கண்முன்னரேயே பற்றி எரிகிறது; பார்த்துக் கொண்டிருக்கிறேன் யானும்; என் உயிர் போய்விடவில்லை; அவளை இழந்தும் வாழ்கிறது அவ்வுயிர்; பிரிவுத்துயர் பெரிதாயின், அஃது என் உயிரை இவ்வளவில் கொண்டு சென்றிருத்தல் வேண்டும்; ஆனால் அது அதைச் செய்யவில்லை. உயிரைக் கொண்டுபோகும் ஆற்றல், அவள் பிரிவுத்துயர்க்கு இல்லை என்றால், இஃது உண்மைத் துயர் அன்று; இறந்த மனைவியை எண்ணி உண்மைத் துயர்உறாதயான், அவள்பால் கொண்ட காதலும், உண்மைக் காதலன்று போலும்!" என்றெல்லாம் கூறி அரற்றி அழுதார்; என்னே அவர்தம் மனையற மாண்பு!

"யாங்குப் பெரிதாயினும் நோயளவு எனைத்தே?
உயிர்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்,
கள்ளி போகிய களரியம் பறந்தலை,
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை;
இன்னும் வாழ்வல்; என்இதன் பண்பே!" (புறம்: உ௪௫)

# ௬௫. செல்வக் கடுங்கோ வாழியாதன்

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனும் தவமகனைப் பெற்ற பெறற்கரும் பேறுடையான் செல்வக் கடுங்கோ வாழியாதன்; செல்வக் கடுங்கோ வாழியாதனைத் தந்த தந்தை யார்? தாய் யார்? என்பதை அறிதல் அருமையுடைத்தாம்; அவன் தந்தை இன்னன், தாய் இன்னள் என்பதை அறிவிக்கும் பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் பதிகம் தெளிவின்றியுளது; செல்வக் கடுங்கோ வாழியாதன், இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் இளைய மனைவியோடு உடன்பிறந்தாளும், வேளாவிக் கோமான் பதுமன் என்பான் மகளும் ஆய ஒருத்தியை மனைவியாகப் பெற்று மாண்புற்றான்; செல்வக் கடுங்கோவைப் பாடிய புலவர்கள் கபிலரும், குன்றுகண்பாலி யாதனுருமாவர்; இவர்கள் இருவரும், செல்வக் கடுங்கோபால் தாம் கண்ட அருங் குணங்கள் பலவற்றோடு, அவன் வெற்றிச் செயல்களையும் பொது வகையாற் கூறியுள்ளனரேயல்லால், அவற்றை விளங்க உரைத்தாரல்லர்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் அரியணை ஏறிய காலத்தே, அவன் ஆட்சிக்குட்பட்ட நாடு, அளவில் சுருங்கியிருந்தது; சுருங்கிய அந்நாட்டை ஆள, அவன் உள்ளம் நாணிற்று; "இந்நாடு அனைவர்க்கும் பொது" என்ற சொல் எட்டியெனக் கசந்தது அவனுக்கு; உலக அரசர் எல்லாம் தன் ஏவல் வழி நிற்கவேண்டும்; உலகனைத்தும் தன் ஒரு குடைக்கீழ் வரல்வேண்டும் என விரும்பினான்; விரும்பியதோடு நின்றானல்லன்; "உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து, வள்ளியம் என்னும் செருக்கு" எனும் உண்மையை அறிவான் அவன்; இடம் சிறிது, இடம் சிறிது என்ற எண்ணம் அவன் உள்ளிருந்து ஊக்கிக் கொண்டேயிருந்தது; அதனால், எண்ணியது எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியனாயினன் கடுங்கோ வாழியாதன். கடுங்கோபால் தாம் கண்ட இப் பண்புகளைப் புலவர் கபிலர், கவினுறப் பாடிக் காட்டியுள்ளார்:

"வையங் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதன்." (புறம் : அ)

செல்வக் கடுங்கோ வாழியாதனைப் போன்றே, அவன் படை மறவரும் வீரமும், மானமும் ஒருங்கே உடையவ ராவர்; "போர்க்குறிக்காயமே புகழின் காயம்; அது புண் எனப் பழித்தற்குரியதன்று; புகழின்கண் எனப் போற் றற்குரியது" என்ற எண்ணம் உடையவர்; "பகைவர் கோட்டையைப் பாழ் செய்யாமுன் உண்ணேம்" என வஞ் சினம் உரைத்து, நாள்பல ஆயினும், உண்ணாதிருந்தே உள்ளியது முடிக்கும் உரனுடையார்; பகையரசர் ஊர்ந்து செல்லும் உரன்மிகு களிறுகளைக் கொன்று, கொண்ட கொம்புகளை விலையாகக் கொடுத்துப்பெற்ற கள்ளையே உண்ணும் உறுதியுடையவர். இத்தகைய வீரம் மிக்க பெரும் படையினைப் பெற்றிருந்த காரணத்தால், ஒரே களத்தில், சோழனும், பாண்டியனுமாகிய இரு பெரு வேந்தரை வென்று சிறந்தான் செல்வக் கடுங்கோ. பிற அரசர்களை வென்று வீறுபெற்ற பெருவீரரெல்லாம், இவ னுடன் போரிட்டுத் தோற்று, "இனி, நின் படையிற் சேர்ந்து நின் ஆணைவழி நிற்போம் யாங்களும்" என உறுதியுரைத்துப் பணிந்து வாழ்ந்தனர்.

"வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்."
(பதிற்று: சு௭)

"வெவ்வரி நிலைஇய எயில்எறிந் தல்லது
உண்ணாது அடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சபுகல் ஊக்கத்தர், மெய்தயங் குயக்கத்து,
இன்னார் உறையுள் தாம்பெறி னல்லது
வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கும் ஆவணம் புக்குடன்
அருங்கள் நொடைமை தீர்த்து."
(பதிற்று: சுஅ)

"ஒருமுற்று இருவர் ஒட்டிய ஒள்வாள்
செருமிகு தானை வெல்போ ரோயே!
ஆடு பெற்றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையேம் என்றனர்." (பதிற்று: சுடு)

கடுங்கோ வாழியாதன் ஒரு குணக்குன்று: பாராட்டற்குரிய பண்புபல நிறைந்தவன் அவன்; விளையாட்டே வினையாம்; ஆகவே, குற்றம் எதையும் விளையாட்டாகவும் செய்தல் கூடாது; "நகையுள்ளும் இன்னாது"; "நகையேயும் வேண்டற்பாற்றன்று" என்பர் வள்ளுவர்; வாழியாதன் விளையாட்டாகவும் பொய்கூறியறியான். புறங்கூறுவோன், பூமிக்குப் பாரமாவன்; அவனை உலகில் வாழவிடல் கூடாது; ஆனால், பொறுமையிற் சிறந்தது பூமி; பொறுப்பது பூமிக்கு அறம்; ஆகவே, அவ்வறம் கருதியே பூமி அவனைப் பொறுக்கிறது எனப் புறங்கூறுவான் கொடுமையை விளக்குவர் வள்ளுவர். ஆகவே, புறங்கூறப் பார்த்திருத்தல் பண்புடையார்க்கு அழகன்று; அதிலும் பகைவன் புறங்கூறுகிறான் என்றால், அவனை வாழவிடுதல் கூடவே கூடாது; ஆனால், செல்வக் கடுங்கோ, பகைவர் புறங்கூறக் கண்டும் பொறுத்திருப்பன்; "அவர் என்னைப் பற்றிக் கூறுவதெதையும் என் எதிரில் கூறல் வேண்டும்; என் புறத்தே கூறுகின்றனர்; அதற்கு, அவர்க்கு என்பால் உள்ள அச்சமே காரணம்; என்னைக் கண்டு அஞ்சும் அவர் ஆண்மையற்றவராவர்; ஆண்மையற்ற அறிவிலிகள் கூறுவன எதையும் மனத்துட் கொள்ளேன்" என, அமைதி காணும் ஆன்றவிந்த அறிவுடையான் அவன்.

"நகையினும் பொய்யா வாய்மைப், பகைவர்
புறஞ்சொல் கேளாப் புரைதீர் ஒண்மை." (பதிற்று: எ0)

பகைவரைப் பணிந்தறியாப் பேராற்றல் உடையனாய செல்வக் கடுங்கோ, பார்ப்பார் போலும் பெரியாரைப் பணிந்தொழுகும் பண்புடையனாவன்; அஞ்சாமை நிறைந்தது அவன் உள்ளம் ஆயினும், 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்பதை அறிந்தவனாதலின், நண்பர் அறிவுரை கண்டு அஞ்சும் அறநெறியுடையனாவன்; உலகமே

நிலைமாறி அழிவதுபோலும் அழிவுவந்துற்ற காலத்தும், அவ்வழிவினை அகற்றுதற் பொருட்டு, முன்னர்க் கூறிய தொன்றைப் பின்னர் மறுத்து, அவ்வாறு கூறினேனல் லேன் எனப் பொய்கூறி மறுக்கும் மாண்பிலான் அல்லன் செல்வக் கடுங்கோ.

> "பார்ப்பார்க் கல்லது பணிபு அறியலையே;
> பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ
> நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே:
> ..........................................
> நிலம்திறம் பெயருங் காலை யாயினும்
> கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே."
>
> (பதிற்று: கூ௩)

செல்வக் கடுங்கோ சிறந்த கொடையாளனுவன்; "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" எனச் சுந்தரரால், கொடையிற் சிறந்தோனுகப் பாராட்டப்பெறும் பாரியின் பெரு நண்பராய கபிலரே, செல்வக் கடுங்கோ, அந்தணர்க்கு அருங்கலங்களை அளிக்குங்கால், அப் பொருளோடு வார்த்த நீர் ஓடியே அவன் அரண்மனை முற்றம் சேறுபடும்; தன்னைப் பாடிவரும் பாணர் முதலியோர்க்குப் பகையரசர் திறையாகத்தந்த யானைகளை அளிப்பதோடு, அளக்கும் மரக்காலின் வாயும் தேய்ந்துபோகுமாறு நிறைய அளந்த நெற்குவியல் பல வற்றையும் அளிப்பன்; வந்தோர்க்கு எல்லாம் வழங்கும் வள்ளலாய செல்வக் கடுங்கோ, வாரி வாரி வழங்கிவிட்டோமே என வருந்தான்; பொருள் கொடுக்கக் கொடுக்கப் புகழ் பெருகுவது கண்டு, மகிழ்ந்து மனச்செருக்கு அடையா மாண்பினன்; வழங்கவழங்க அவன் வள்ளன்மை வளர்ந்தே தோன்றும்; தன் புகழ் பாடிவரும் கூத்தர் முதலியோர்க்கு, தன் ஏவலரை விளித்து, 'அவர்க்குக் குதிரைகளையும், தேர்களையும், அணி பல அணிவித்து அளித்து அனுப்புக' என ஆணையிடும் அருள் உள்ளம் உடையவன் எனப் பலப்பல கூறிப் பாராட்டுவாராயின், அவன் கொடைப்பெருமையினைக் கூறவும் ஒண்ணுமோ!

"அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு
இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றம்." (பதிற்று : ௬௪)

"தொன்று திறைதந்த களிற்றொடு, நெல்லின்
அம்பண அளவை விரிந்து உறைபோகிய
ஆர்பூதம் நல்கும்." (பதிற்று : ௬௬)

"ஈத்தது இரங்கான் ; ஈத்தொறும் மகிழான் ;
ஈத்தொறும் மாவள்ளியன் என நுவலும் நின்
நல்லிசை." (பதிற்று : ௬௧)

"புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே,
எஃகுபடை அறுத்த கொய்சுவற் புரவி,
அலங்கும் பாண்டில் இழையணிந்து ஈமென
ஆனாக் கொள்கையை ஆதலின்." (பதிற்று : ௬௪)

இவ்வாறு, தன் கொற்றம், குணம், கொடை ஆகிய பண்பெலாம் தோன்றப் பாராட்டிய புலவர் பாக்களைக் கேட்டு மகிழ்ந்தான் செல்வக் கடுங்கோ. புலவர்க்குப் பெரியதொரு பரிசில் அளிக்க விரும்பினான் ; சிறு பரிசாக நூறாயிரம் காணம் அளித்தான் ; அம்மட்டோடு நின்றானல்லன் ; கபிலரையும் உடன்கொண்டு நன்றா எனும் குன்றின்மீது ஏறிநின்றான் ; ஆண்டிருந்து காண்பார் கண்ணிற்குப் புலப்படும் நாடுகள் எவ்வளவுண்டோ, அவ்வளவையும் அவர்க்கே அளித்தான். என்னே அவன் கொடைக்குணம் !

## ௧௬. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, சேரருள் ஒரு பிரிவினராய இரும்பொறை மரபினருள், கபிலர் பாடும் பெருமைமிக்க செல்வக்கடுங்கோவாழியா தன் பெற்றெடுத்த பெருமைசால் மகனவன்; இவன் தாய், இமயவரம்பனின் இளைய மனைவியின் உடன்பிறந்தவளாவள்; வேளாவிக்கோமான் பதுமன் எனும் வேளிர் குலத்தலைவன் மகளாவள். பெருஞ்சேரல் இரும்பொறை போர்பல வென்ற பேராண்மை உடையவன்; அவ்வெற்றிகளுள், அவன் தகடூர்க்கண் பெற்ற வெற்றியே பெருவெற்றியாம்.

இக்காலத்தில், தர்மபுரி என வழங்கும் தகடூரைத் தலைநகராகக்கொண்டு அதியர் எனும் இனத்தார் ஆண்டு வந்தனர்; தகடூர் நாடு, சேரநாட்டின் ஒரு பகுதியாகவே விளங்கிற்று; சேரர்க்குரிய கண்ணியும், தாருமே அதியர்க்கும் உரியவாகும். இதனால், அதியர் யாதோ ஒரு வகையான் சேரரோடு உறவுடையராவர் என்பது புலனும்; பெருஞ்சேரலிரும்பொறை, சேரநாட்டிற் சிறந்து விளங்கிய காலத்தே, அதியர்க்குரிய தகடூரில் அரசோச்சியிருந்தோன், அஞ்சி என்போனவன்; அஞ்சி, அதியர் குலத்து வந்தாருள் சிறந்தவனவன்; ஔவைக்கு, அரிய நெல்லிக்கனி நல்கிய நல்லோன் இவ்அஞ்சியே; மக்கள் வாழ்க்கைக்கு வேண்டும் வளங்கள் முற்றும் பொருந்திய ஊர்களால் நிறைந்தது அவன் தகடூர் நாடு; நினைத்த பகைவர் நெஞ்சமும் நடுங்கும் அரிய அரண்பல கொண்டது அவன் தகடூர்; வெற்றியல்லது தோல்விகண்டறியா ஆண்மை நிறைந்த வீரர், கைம்மாறாகக் கொள்ளும் கூலியைக் கருதாராய், வெற்றிப்புகழ் ஒன்றையே விரும்பிக் காத்து நிற்கும் காவற்காடுகளால் சூழப்பெற்றது அத்தகடூர்க் கோட்டை. இவை அனைத்திற்கும் மேலாகப் பெரும்பாக்கன் எனும் படை மறவன் தலைமை, அக்கோட்டைக்கு மேலும் அரணளித்து நின்றது.

அதியமான் நெடுமானஞ்சிமீது, பெருஞ்சேரலாதனுக்கு ஏனோ பகை வளர்ந்துவிட்டது; பெருஞ்சேரல் இரும்பொறை படையுடன் தகடூர் சென்று, அவ்வூர்க் கோட்டையை முற்றி நின்று அழிக்கலாயினன்; அதியமானுக்குத் துணையாகச் சோழ, பாண்டியராகிய இருபெரு வேந்தரும், சில வேளிர்களும் வந்திருந்தனர்; தகடூர்ப் போர் பலநாள் நடைபெற்ற பெரும் போராம்; தகடூர்க் கோட்டை எளிதில் வீழ்ந்துவிடவில்லை; அக்கோட்டையைச் சூழஉள்ள காவற்காடுகளை அழித்துக் கைப்பற்றுவதற்கே, பெருஞ்சேரல், தன் படையின் பெரும்பகுதியை இழக்கவேண்டியாகிவிட்டது; தன் படையின் அழிவு அவனுக்கு உள்ளத் தளர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது; அந்நிலையில், ஆங்கு அவனோடு உடன் இருந்த அரிசில் கிழாரும், பொன்முடியாரும், "மிளைபோயின்று; நாளை நாமே, உரும் இசைகொண்ட மயிர்க்கண் திருமுரசு இரங்க ஊர்கொள்குவம்" (தகடூர் யாத்திரை) எனக் கூறி அவனை ஊக்கினர். இறுதியில், பெருஞ்சேரல் இரும்பொறையின் பெரிய படையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அற்று அழிவுற்றது அக்கோட்டை; அதியமானும் இறந்துவிட்டான். தகடூரில், பெருஞ்சேரல் இரும்பொறை பெற்ற வெற்றியை, அரிசில் கிழார், பொன்முடியார் போலும் புலவர் பெருமக்கள் பலரும், பாராட்டிப் பாக்கள் பல புனைந்தனர்; பெருஞ்சேரலும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனச் சிறப்பிக்கப்பெற்றான்.

"வேந்தரும், வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ ராயின்......................
..................................................
நாடுஉடன் ஆடல் யாவணது அவர்க்கே." (பதிற்று: எ௧)

"பல்பயன் நிலைஇய கடலுடை வைப்பின்
வெல்போர் ஆடவர், மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறி." (பதிற்று: எ௮)

"பல்வேல் தானை அதிகமா னோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று

முரசும், குடையும், கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சி தந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை."
(பதிற்றுப்பத்து, பதிகம்: அ)

பெருஞ்சேரல் பெற்ற வெற்றிகளுள், புலவர் பாராட்டும் பெருமைவாய்ந்த மற்றொரு வெற்றி, அவன், கழுவுள் என்பானைப் பணியவைத்ததே; கழுவுள் என்பான் ஓர் ஆயர்குலத் தலைவன்; அரிய அரண் ஒன்றும் உடையான்; பேரரசரோடு பகைகொண்டு போருடற்றும் இயல்பினன்; அவன் ஆணவம் அறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன் படைவீரரைக்கொண்டு அவனைப் பணியவைக்க விரும்பினான்; இவன் படைவீரரும், அவ்வாறே அவன் அரணைத் தாக்கி, அவன் நாட்டு ஆயர்பலர்க்கும் உரிய ஆனிரைகள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர்; கழுவுள், பெருஞ்சேரலிரும்பொறையின் படைவீரரை எதிர்த்து நிற்கலாற்றானாய், அஞ்சி ஓடி, அரணுட் புக்கு அடங்கி வாழலாயினன்; தம் தலைவன், தம் ஆனிரைகளை மீட்டுத்தாரான் என அறிந்த ஆயர், கன்றோடுகூடிய பசுக்கள் பலவற்றைப் பெருஞ்சேரல் படைத்தலைவர்க்கு அளித்துப் பணிந்து நின்றனர். படைத்தலைவரும் அவர் அளித்தன ஏற்று, அவர்தம் ஆனிரைகளை அவர்பால் ஒப்படைத்தனர்; தன்னாட்டு ஆயர்செய்தன அறிந்த கழுவுள், "இனி வேறு செய்வதற்கில்லை; தானும் பணிந்துபோதலே தக்கதாம்" என உணர்ந்தான்; ஆயினும், பலர் அறியச் சென்று பணிந்து நிற்றலை நாணிற்று அவன் உள்ளம்; ஆகவே, எவரும் அறியாவண்ணம், விடியற்காலத்தே பால் கடையுங்கால் தோன்றும் ஒலி, ஊரில் எழுதற்கு முன்பே, மறைந்துசென்று பணிந்து நின்றான்.

"குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வௌவினை; ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல்சிறந்து

புலவுவில் இளையர் அங்கை விடுப்ப,
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க." (பதிற்று: எக)

"பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று."
(பதிற்று : அஅ)

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சி, சேரநாட்டுப் பகுதிகளாய பூழி, கொல்லி முதலாய நாடுகளோடு நின்றுவிடாது, காவிரி பாய்ந்து கவின் மிகும் சோணாடுவரையிலும் பரவி இருந்தது; புகார்நகரும் அவன் ஆட்சிக்கு அடங்கிய நகராம் எனக் கூறுகின்றார் புலவர் அரிசில் கிழார் :

"காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை!
கழைவிரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய!"
(பதிற்று : எங)

பெருஞ்சேரல் இரும்பொறை, இவ்வாறு வெற்றிமேல் வெற்றி எய்துதற்கு, அவன் பெற்றிருந்த படைப்பெருமையே காரணமாம்; அவன் படை, எத்துணைப் பெருமையுடையது என்பதை அவனைப் பாராட்டிய புலவர் அரிசில் கிழார் அணிபெறக் கூறியுள்ளார். "சேரலாதன் படையில் உள்ள தேர் எத்தனை? குதிரை எத்தனை? வீரர் எத்தனை? எனக் கேட்பீராயின், அவற்றை எண்ணிக் கணக்கிட்டுக் கூறல் எவர்க்கும் இயலாது; ஆதலின், அவற்றை யானும் எண்ணிப் பார்த்தேனல்லேன்; ஆயினும் ஒன்றைக் கூறுகின்றேன்; அதைக்கொண்டு அவன் படையின் பெருமையினை ஒருவாறு உணர்ந்து கொள்ளுதல் கூடும்; அவன் நாட்டில், மாடுமேய்த்தல் தொழில்மேற் கொண்ட கொங்கர் என்பார் ஓர் இனத்தார் உளர்; அவர்களிடத்தில் பெருந்திரளான ஆனிரைகள் பல உள; அக்கொங்கர் பலரும் தங்கள் ஆனிரைகளை ஒன்றுசேர்த்து மேயவிடுதல் வழக்கம்; அக்காலை அம்மாடுகளின் எண்ணிக்கையினை

எண்ணிக்காண எவர்க்கும் இயலாது; பெருஞ்சேரல் இரும்பொறையின் படைகள் நான்கும் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லுங்கால், அவற்றின் இடையே செல்லும் யானைப்படையினை நோக்கினார்க்கு அக்காட்சி, அவன் நாட்டுக் கொங்கர்களின் ஆனிரைக் காட்சியினையே நினைப்பூட்டும்; அவ்வளவு பெருந்திரளாகச் செல்லும் அவன் படையைச் சேர்ந்த யானைகள்; யானைப்படையே இத்துணைப் பெரிதாயின், அவன் தேர் குதிரை வீரர் படைகளின் பெருமை, எத்துணைப் பெரிதாம் என்பதை நீங்களே உய்த்துணர்ந்து கொள்வீர்களாக!'' என அவர் கூறுவன அறிக.

"எனைப்பெரும் படையனோ சினப்போர்ப் பொறையன்?
என்றனி ராயின், ஆறுசெல் வம்பலீர்!
...............................................
பண்ணமை தேரும், மாவும், மாக்களும்
எண்ணற் கருமையின், எண்ணின் றோவிலனே;
கந்துகோள் ஈயாது, காழ்பல முருக்கி
உகக்கும் பருந்தின் நிலத்துநிழல் சாடிச்
சேண்பரன் முரம்பின், ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்னபல் செலவின்,.
யானை காண்பல அவன் தானை யானே." (பதிற்று: எஎ)

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, கொடை, கொற்றம், குணம் ஆகிய எல்லாத் துறையானும் சிறந்த நல்லோனாவன்; அவன் உயரிய பண்புகளைப் பலர் உரைக்க உணர்ந்த புலவர் அரிசில் கிழார், அவன் அவையடைந்து, அவன் புகழெலாம் தோன்றப் பாக்கள் பல பாடிப் பாராட்டி வாழ்த்தியுள்ளார்.

கல்வி கரையில; கற்பவர் நாள்சில; மெல்ல நினைக்கின் பிணிபல; ஆதலின், கற்கத் தொடங்குவார் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது; ஆராய்ந்து அமைவுடையனவற்றையே கற்றல்வேண்டும்; இதனால், ஒவ்வொருவர், ஒவ்வொருதுறையிலேயே வல்லராதல் இயலும். ஆகவே, ஒருவர் இயன்ற அளவு கற்பதோடு, ஒவ்வொரு துறையில்

வல்லார், அவ்வத்துறையில் தாம் அறிந்த அரிய உண்மைகளை உரைக்க, அவற்றைக் கேட்பதைக் கடமையாக மேற்கோடல்வேண்டும்; "கற்றிலனாயினும் கேட்க," "கற்றலிற் கேட்டலே நன்று," "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்," எனப் பெரியோர்கள் கூறுவன உணர்க. ஒருவர், இவ்வாறு கற்பதாலும், கேட்பதாலுமே அவர் கடமை தீர்ந்துவிடாது; கற்றவழியினும், கேட்டவழியினும் ஒழுகுதல்வேண்டும்; அவை கூறிய கடமைகளை மேற்கொண்டு செயலாற்றுதல் வேண்டும்; இதுவே, உயர்ந்தோர் பண்பு என உரைக்கப் பெறும்; "கற்றபின் நிற்க அதற்குத்தக," என்றன்றோ வள்ளுவரும் கூறிச் சென்றுளார்; பெருஞ்சேரல் இரும்பொறைபால் இப்பண்பு பொருந்தி யிருக்கக் கண்டு பாராட்டியுள்ளார் புலவர்:

> "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
> வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப." (பதிற்று: எச)

"சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்" என்ப. நற்குடிப் பிறப்பும், நாடாள் அறிவும் நன்கு வாய்க்கப்பெற்று, அரசர்க்கு என்றும் நல்லனவே எண்ணும் பண்பும் கொண்டு விளங்கும் அமைச்சர்களைப் பெற்றிருத்தல் நல்லாட்சிக்கு நற்றுணையாம். அந்நாடாட்சி நன்கு நீளும்; அரசன் நல்ல அமைச்சர்களைப் பெற்றிருக்கவே நலமெலாம் பெருகும் எனின், அவ்வமைச்சர்பால் அமைந்திருக்கும் அருங்குணங்கள் அனைத்தும், அவ்வரசனிடத்திலேயே அமைந்துவிடின், அவ்வரசின் பெருமை அளவிடற்கரிதாம்; பெருஞ்சேரல் இரும்பொறை, அரசர்க்கு என்றும் நல்லனவே எண்ணும் நல்உள்ளம் கொண்ட உயர்ந்த அமைச்சர்பால் அமைந்த பண்புகளைத் தானும் பெற்றுப் பேரரசாய்த் திகழ்ந்தான்:

> "நின், மூன்றினை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து
> மன்பதை காப்ப அறிவு வலியுறுத்து
> நன்றறி உள்ளத்துச் சான்றோர் அன்னநின் பண்பு."
> (பதிற்று: எஉ)

வந்தார்க்கு இலையும், வருவார்க்கு உலையும் வைத்து வழங்கும் வண்மை நிறைந்த தமிழகத்தே பிறந்த பெருஞ்சேரல் இரும்பொறைபால், கொடைக்குணம் குடிகொண்டிருந்தது எனல் கூறவேண்டாவன்றே; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன்பால் வந்து பொருள் வேண்டி இரந்து நிற்பார்க்குப் போரில் கைப்பற்றிய யானைகளை, அவை போரிற் பெற்ற புண்களுக்கு மருந்திட்டுப் போக்கிப் பரிசாக அளிப்பன்; மேலும் வந்து இரப்பாரை எதிர்நோக்கி, அவர் வேண்டுமளவு கொடுப்பதற்காகக் குதிரைகள் எண்ணற்றனவற்றை ஈட்டி வைத்திருப்பன்:

"புண் ஒரீஇப்
பெருங்கைத் தொழுதியின் வன்துயர் கழிப்பி
இரந்தோர் வாழ நல்கி, இரப்போர்க்கு
ஈதல் தண்டா மாசித் திருக்கை
கண்டனென் செல்கு வந்தனென்." (பதிற்று: எசு)

மக்கட்பேறு பெறாதாரும், சிறப்பிலா மக்களைப் பெற்றாரும், பிறபேறுகளை எத்துணைச் சிறக்கப் பெற்றிருப்பினும், அப்பேறுகளால் பயன் இன்றாம்; ஆதலின், மக்கட் பேற்றினையும், அம்மக்கள் மாண்புடையராதலையும், பெறற்கரிய பேறுகள் அனைத்தினும் சிறந்த பேறுகளாக மதிப்பர்; "பெறுமவற்றுள் யாமறிவதில்லை, அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற"; "எழு பிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" என மக்கட் பேற்றின் மாண்பினைப் பாராட்டுவர் பெரியோர். பெருஞ்சேரல் இரும்பொறை இதிலும் குறையுடையானல்லன்; இயற்கையறிவோடு கூடிய செயற்கை அறிவும், சால்பு, செம்மை எனச் சான்றோர்பால் இருக்கவேண்டிய நற்பண்பும் நிறைந்து, நாடாளும் நல்லறிவும் நன்கு வாய்க்கப் பெற்ற நன்மகனைப் பெற்ற நற்பேறுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை:

"ஈரறிவு புரிந்து
சால்பும், செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை." (பதிற்று: எச)

ஒருவர் திருந்திய வாழ்வுடையராதல் சிறந்தது; அத்தகு வாழ்க்கையினைத் தாம் மேற்கொண்டு வாழ்வ தோடு, பிறரையும் அவ்வாழ்வு மேற்கொள்ளச் செய்தல் அதனினும் சிறந்தது; பெருஞ்சேரல் இரும்பொறை, இத் தகைய சிறந்த வாழ்வுடையான் என்பது மட்டுமன்று; இவற்றினும் மேலாயதொரு சிறப்பு அவன்பால் பொருந்தி யிருந்தது; அவன் அரசவையில், அறமுரைக்கும் நல்லோன் ஒருவன் இருந்தான்; அரசற்கு அறமுரைத்தோனும் அவனே; நரை, திரை தோன்றுமளவு ஆண்டாலும் நிறைந் தவன்; இவ்வாறு அறிவாலும், ஆண்டாலும் நிறைந் திருந்தும், உலக வாழ்வில் ஒருசிறிதும் பற்றுக் குறையா னாய், உலகின்பமே உயர்ந்த இன்பம் எனக் கொண்டு வாழ்ந்திருந்தான். ஆசிரியன் செயல், தகாது என உணர்ந் தான் தகடூர் எறிந்தான்; அறவோன் உலகில், கொடை, புகழ், செல்வம், மகப்பேறு இவற்றால் உண்டாம் இன்பத் தில் திளைத்து, இவற்றினின்றும் செல்லமாட்டா உள்ளத் தனாய் விளங்குகிறான் ஆசிரியன்; ஆதலினாலேயே, துறந்து செல்லும் துணிவு தோன்றவில்லை அவனுக்கு என உணர்ந்து, ஆசிரியனை அணுகி, "ஆசிரியப் பெருந்தகையீர்! கொடை, புகழ் இவற்றால் உண்டாம் இன்பம் நிறைந்த வாழ்வே சிறப்புடைத்து என எண்ணி மயங்கும் நும் அறியாமையினை என்னென்பேன்! உலகிற்குச் சிறப்பளிக் கும், கொடை, புகழ் எல்லாம், தவம் வல்லார்க்கு எளிதில் வந்தெய்தும்; அஃதுடையார்க்கே இவையெல்லாம் உண்டாம் என்ற இவ்வுண்மையினை, எல்லாம் அறிந்த நீவிர் அறிய மறந்தது ஏனோ?" எனத் தவத்தின் அருமையினை எடுத்துக்கூறி அறிவூட்டி, அவன் துறவறம் மேற் கொள்ளத் துணைபுரிந்தான். இவ்வாறு தனக்கு அறிவூட் டிய தன் ஆசிரியன் அறியாமையைப் போக்கவல்ல அறிவுத் தெளிவுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை எனப் பாராட்டும் பெருமையுடைத்தாமன்றோ!

"முழுதுணர்ந் தொழுக்கும் நரைமூ தாளனை
'வண்மையும், மாண்பும், வளனும், எச்சமும்

தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு' என
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெரும! நின் படிமை யானே." (பதிற்று: எச)

பெருஞ்சேரல் இரும்பொறை, இவ்வாறு அறிவாலும், கொடையாலும் சிறந்து விளங்குவதைக் கண்ட புலவர் அரிசில்கிழார், உலகில், அறிவுடையாரையும், கொடைத் தொழிலில், இவர்க்கு இது கொடுக்கலாம், இவர்க்கு இது கொடுத்தலாகாது என எண்ணிப்பார்க்கும் அறிவின்றி, எவர்க்கும், எதையும் கொடுக்கும் அறிவுமடம்பட்ட கொடைத்தொழில் உடையாரையும் நோக்கிய வழி, அத் தகையார்க்கு உவமையாகப் பெருஞ்சேரல் இரும் பொறையை எடுத்துக்காட்டிக் கூறலாமேயன்றி, இவனுக்கு நிகராகக் கூறவல்லார் உலகில் ஒருவரும் இலர் எனக் கூறி, அவன் அறிவும், கொடையும் ஒருங்கே தோன்றப் பாடிப் புகழ்ந்துள்ளார் :

"உரவோர் எண்ணினும், மடவோர் எண்ணினும்
பிறர்க்கு நீவாயி னல்லது, நினக்குப்
பிறர்உவமம் ஆகா ஒருபெரு வேந்தே!" (பதிற்று: எங)

பெருஞ்சேரல் இரும்பொறைபால் யாம் கண்ட பண்புகள் அனைத்தினும், அவன் புலவர்மாட்டுக் கொண் டுள்ள பேரன்பும், பெருமதிப்பும் பல்லாற்றானும் பாராட் டற்குரியனவாம். யாக்கள் பல புனைந்து தன் புகழ் பாடிய புலவர் அரிசில்கிழாரின் அறிவுநலம் கண்டு வியந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அவர்க்கு ஒன்பது நூறாயிரம் காணம் நல்கியதோடு அமையாது, அரசமாதேவியா ரோடும், அரண்மனை விட்டு வெளியேறி நின்று, புலவரை அழைத்து, "இவ்வரண்மனையும், ஆட்சிப் பொறுப்பும் இனி, நின்னுடைமையாம் ஏற்றருளுக" என வேண்டி நின்றான்; அரசன் அன்புள்ளத்தை அறிந்த புலவர் பெருந் தகையாரும் அவன் விரும்பியாங்கே, அவற்றை ஏற்றுக் கொண்டு அடுத்த கணமே, "அரசே! என் உடைமை யாகிய இவ்வாட்சியினை நினக்கு யான் அளிக்கின்றேன்; ஏற்றருள்க" என வேண்டியளித்து அமைச்சுப்பூண்டு

அகமகிழ்ந்தார்; அரசனும், புலவனும் வளர்த்த அன்புத் தொடர்பின் சிறப்பே சிறப்பு!

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தே, மோசிகீரனார் எனும் பெயருடைப் புலவர் ஒருவர் இருந்தார்; பெருஞ்சேரல் இரும்பொறை அரிசில்கிழாராலும் பாராட்டப்பெறும் பெரும் பேறுடையான் என்பதறிந்த புலவர், அவன் அரசவை நோக்கிச் சென்றார்; அவர் சென்றபோது, அரசன் ஆண்டு இலன்; அவனைக் காணாத புலவர், அவ்வரண் மனையினைச் சுற்றி வருவாராயினர்; ஆங்கு, அழகிய கட்டில் ஒன்று, ஒருபால் இருக்கக் கண்டார்; அது, அரச னின் வெற்றிமுரசு வைத்தற்குரிய கட்டிலாம்; முரசு நீராடி வருவதற்குக் கொண்டுசெல்லப் பட்டுள்ளமையால், அக்கட்டில் வறிதே கிடந்தது; அவ்வழகிய கட்டிலையும், அதன்மீது விரிக்கப்பெற்றிருக்கும் மெல்லிய மலர்களால் ஆகிய படுக்கையினையும் கண்டார் புலவர். அவர்க்கு, அது முரசுகட்டில் என்பது தெரியாது; மேலும், வழிநடை வருத்தமும் உடையராவர்; அதனால், அதன்மீது கிடந்து நன்கு உறங்கிவிட்டார்; சிறிது நேரத்தில் ஆண்டு வந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன் முரசுகட்டில்மீது யாரோ ஒருவர் படுத்துறங்கக் கண்டான்; முரசு, அரசனின் வேறன்று; முரசிற்குச் செய்யும் சிறப்பு, அரசர்க்குச் செய்யும் சிறப்பு; அதற்கு உண்டாம்பழி, அரசற்கு உண்டாம்பழி என்பது பழங்காலப் பண்பு; ஆதலின், முரசுகட்டிலில் படுத்து உறங்குவது, அரசுகட்டிலில் படுத்து உறங்குவதுபோலும் பெருங்குற்றமாம்; அக் குற்றம் புரிந்தார்க்குக் கொலையே தண்டமாம்; ஆயினும், தன் முரசுகட்டிலில் படுத்து உறங்குவார், ஒரு பெரும் புலவராவர் என்பதை அரசன் அறிவான்; புலவர், நாடா ளும் தன்னினும் உயர்ந்தவராவர் என்பதை உணர்வான் அவன்; ஆதலின், அவர் ஆண்டு உறங்குவதால் குற்றம் இன்று என எண்ணினான்; ஆகவே, பிறர் யாரேனும் படுத்து உறங்கக் காணின், வாளெடுத்துத் தலை வாங்க

வேண்டிய அவன், வெண்சாமரையினை எடுத்து, அவர், வழிநடை வருத்தத்தால் உண்டாம் வெப்பம் ஒழிந்து இனிது உறங்குமாறு, அவர் எழும்வரை தானே வீசி நின்றான்; உறங்கி எழுந்த புலவர், தாம் செய்த பெரும் பிழையினையும், அதுகண்டு ஒறுக்க வேண்டிய அரசன், அன்புகொண்டு கவரி வீசி நிற்பதையும் கண்டார்; அரசன் பால் அவர்க்குப் பெருமதிப்பு உண்டாயிற்று; அரசனின் தமிழ்ப்பற்று அவர்க்குப் புலனாயிற்று; உடனே "அரசே! நின் முரசுகட்டில் ஏறிய என்னை இருதுண்டங்களாக வெட்டி வீழ்த்தாதுவிட்ட அச்செயல் ஒன்றே சாலும் நின் தமிழ்ப்பற்றினை விளக்க; நீ அம்மட்டோடு நின்றாயல்லை; யான் உறங்கி எழுங்காறும் கவரிகொண்டன்றோ வீசி நின்றனை; நின் பெருமையினை என்னெனப் புகழ்வேன்! என்னே நின் தமிழ்ப்பற்று! இவ்வுலகத்தே, புகழ் தரும் செயல் புரிந்தார்க்கல்லது, உயர்நிலை உலகமாம் உம்பர் உலகத்தே இடம் கிடைத்தல் இல்லை எனச் சான்றோர் கூறுவன கேட்டதன் பயனே, செயற்கரும் இச்செயற்குக் காரணம்!" என வியந்து பாராட்டி மகிழ்ந்தார்.

ஒரு புலவர்க்கு அரசுகட்டிலும், மற்றொரு புலவர்க்கு முரசுகட்டிலும் உரிமையாக்கி உயர்ந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் பெருமைதான் என்னே!

"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டி
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நல்தமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது, அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென

வீசியோயே! வியலிடங் கமழ,
இவண்இசை உடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில்! நீ ஈங்கிது செயலே." (புறம்: ௫0)

இவ்வாறு பண்பு பலபெற்று, பாடசால் புகழொடு விளங்கிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பதினேழேயாண்டு, பெருவாழ்வு வாழ்ந்து வீறெய்தி விளங்கினான்.

## கஎ. நம்பிகுட்டுவனூர்

குடம், குட்டம், கொங்கு, பூழி முதலிய நாடுகள், சேரநாட்டின் உள்நாடுகளாம்; செந்தமிழ் நிலத்தைச் சார்ந்து நின்ற பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளுள் குட்டநாடும் ஒன்று; அது மேலைக் கடற்கரையினைச் சேர்ந்து நிலவிய நாடு; "குட்டநாட்டார், தாயைத் தள்ளை என அழைப்பர்" எனவும், அந்நாடு, தமிழ்நாட்டின் சிறிது வேறுபாடுடையது எனவும் கூறுவர் உரையாசிரியர்கள். இக் குட்டநாட்டினை ஆளும் உரிமையுள்ள காரணத்தால், சேர வேந்தர்கள் குட்டுவர் என அழைக்கப்பெறுவர்; பெண் பாலாரிற் சிறந்தாளை நங்கை எனலும், ஆடவரிற் சிறந் தானை நம்பி எனலும் புலவர்வழக்கு; இவர் சேரர் குடியிற் பிறந்தாருள் சிறந்தவராவர் என்பது புலனும்; வேந்தர் பண்பு விளங்காவகையில் வாழ்ந்தாருள், நம்பிகுட்டுவ னூரும் ஒருவர்; அவர் கூறும் ஓர் அறிவுரையின் அருமை, அவர் அரசியல் வாழ்வை உணரலாகாமையால் உண்டாம் குறையினைக் குன்றச் செய்துவிட்டது.

தங்கள் மணத்திற்காம் பொருளைத் தானே தேடிப் பெறல்வேண்டும் என்ற பேருள்ளம்கொண்டு பொருள் வயிற் பிரியக்கருதும் தலைமகன், தலைவிபால் சென்று, "மணத்திற்கு வேண்டும் மாநிதிபெற்று விரைந்துவந்து வரைந்து கொள்வேன்; சற்றே ஆற்றியிரு" எனக் கூறிய வழி, "தலைவ! உள நம்பிக்கை என்ற ஒன்று அடிப்படை யாக இருப்பதனாலேயே, உலகம் அழியாது இயங்குகிறது; அந்நம்பிக்கை அற்றுப்போமாயின், உலகம் இயங்குவது இல்லையாம்; ஆகவே, அந்நம்பிக்கை நீங்காது நிற்க ஆவன மேற்கோடல் ஆன்றோர் கடமையாம்; 'பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்; அறனல்லன செய்தேனும் ஆவேன்' என்று அன்று நீ கூறிய தெளிவுரைகளை நம்பியே நின் பால் அன்புகொண்டேன்; ஆனால் இன்று பிரிக்கின்றேன் என்றாலும் விரைந்து வந்துவிடுவேன் என்கின்றனை; பிரியேன் என்று அன்று சொன்ன சொல்லை அழித்து

பிட்டனை; இதனால் நின் உறுதிமொழியின்பால் யான் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச்செய்து விட்டனை; இன்று மீண்டும் ஓர் உறுதிமொழி கூறுகின்றனை; இதை யான் எவ்வாறு நம்புவது? நீயோ அருள் உள்ளத்தவன்; பெரிய நட்புக் குணமுடையவன்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற குணங்களால் நிறைந்த சான்றோன்; நீதியில் வழுவா நடுநிலைநெறியாளன் என்றெல்லாம் கூறத்தக்க பெரியோனாவை; இத்துணைப் பெரியோனாகிய நின்னையே நம்புதற்கில்லை எனின், இனி இவ்வுலகில் நம்பிக்கை நிலவுவதே அரிதாகிவிடும்; மக்கள் இனி, நம்பிக்கை இழந்து நலிவார்களாக" எனக் கூறினாள்.

இத்தலைவியின் உரைகளை, ஒரு பாட்டில் உருவாக்கிய புலவர் நம்பிகுட்டுவனார், நம்பிக்கை, நாட்டிற்கு எத்துணை இன்றியமையாது வேண்டப்படுகிறது என்பதை விளக்கியுள்ளார்:

"................................என்றும்
அளிய பெரிய கேண்மை நும்போல்
சால்பெதிர் கொண்ட செம்மை யோரும்
தேரா நெஞ்சம் கையறுபு வாட
நீடின்று விரும்பா ராயின்
வாழ்தல் மற்றெவனோ? தேய்கமா தெளிவே."

(நற்: நஎ௫)

## கூஅ. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், பாரதப் போரில் இருதிறப் பெரும்படைக்கும், அப்போர் முடியுங்காறும் உணவளித்துப் புகழ்பெற்றான் எனப் போற்றப்படும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் மகனாவன்; வெளியன் வேண்மாள் எனும் வேளிர்குலத் தலைவன் மகளாய நல்லினி என்பாள் இவன் தாய். இமயத்தே விற்பொறித்து, இமய வரம்பன் எனப் புகழ்மிகு பெயர்பெற்ற நெடுஞ்சேரலாதன் இவன் உடன்பிறந்தான்; இச் செய்திகள் பதிற்றுப்பத்து, இரண்டு, மூன்று பத்துக்களின் பதிகங்களான் தெளிவாம். போர்க்களத்தே அஞ்சாது முன்சென்று, அரும்போர் ஆற்றி, பகைவர்தம் பற்றற்கரிய அரண்களை அழித்து வெற்றிதரும் விறல்மிக்க யானைகள்பல கொண்ட பெரும் படை உடைமையால், இச் சேரன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனப்பட்டான் :

> "அமர்கோள் நேர் இகந்து ஆர்எயில் கடக்கும்
> பெரும்பல் யானைக் குட்டுவன்." (பதிற்று: உக)

பல்யானைச் செல்கெழு குட்டுவன், போர்க்களம் பல வென்றவனாவன்; கடன் மலைநாட்டில் உம்பற்காடு என்றொரு சிறு நாடு இருந்தது; அதனை வேழக்காடு எனவும் வழங்குவர்; யானைகளை மிகுதியாகக்கொண்டது. சூல் கொண்டு உணவு ஒழித்துக்கிடந்த பெண்புலி விரும்பி உண்ணும் உணவினைத் தருவான் விரும்பி, நீண்ட பெருங் கோடுகளையுடைய யானையொன்றைக் கொன்று வீழ்த்தி, அகன்ற பாறைகள் எல்லாம் அதன் இரத்தக்கறை படியுமாறு ஈர்த்துச் சென்றளித்து, அவ்வெற்றிக் களிப்பால், புற்றரையில் வீழ்ந்து புரண்டெழும் ஆண்புலி வழங்கும் கொடுமையுடையது எனக்கண்ட யானைகள், அக்காட்டு வாழ்வை வெறுத்து, வழியில் கிடக்கும் பலாக்கனிகளைத் தின்றுகொண்டே வெளியேறும் காடு, அவ்வும்பற்காடு என எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் கூறுவதும் அறிக.

(அகம்: ௩௯௬.) உம்பற்காடு ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறுநாடு; தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் பிரமதாயமாக வழங்கப்பெற்ற வளம் நிறைந்தது; செங்குட்டுவனிடம், இவ்வும்பற்காட்டின் வருவாயினைப் பரணர் பரிசிலாகப் பின்னொரு காலத்தே பெற்றார்; உம்பற்காடு, இவ்வாறு யாவரும் விரும்பும் வளங்கொழிக்கும் நாடாதல் அறிந்து, அங்கே தன் அரசு நிலவச்செய்தான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன்.

தன் பகைவர்க்கு அரண் அளிக்கும் அகப்பா என்றோர் அரண் இருப்பதை அறிந்தான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். அகப்பா, அரிய அரண்பல அமையப்பெற்றது; இருதிறப் படைகளும் எதிர்த்துப் போரிடுதற்கு வேண்டிய பரந்தகன்ற செண்டுவெளியினைக் கொண்டது; கணையமரம் செறிக்கப்பெற்ற வாயில்களையுடையது; ஐயவித்துலாம்போலும் அரிய இயந்திரப் படைகளைக் கொண்டது; காவற்காட்டினையும், ஆழ்ந்தகன்ற கிடங்கினையும், நெடிய மதில்களையும் உடையது; பகைவர் அணுகுவதற்கியலா அருமையுடையது; அகப்பா அரணின் அருமையினையும், அது பகைவர்க்குப் பாதுகாப்பளித்து நிற்பதையும் அறிந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், நாற்படையுடன் சென்று அழித்துக் கைக்கொண்டான்; இவ்வெற்றிச் சிறப்பினை இவனைப் பாராட்டிய பாலைக் கௌதமனாரும் இவன்வழிவந்த ஆசிரியர் இளங்கோவடிகளும் எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளனர்:

"துஞ்சுமரம் துவன்றிய மலரகன் பறந்தலை,
ஓங்கு நிலைவாயில், தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்
கடிமிளைக், குண்டு கிடங்கின்
நெடுமதில், நிரைப் பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ!"

(பதிற்: ௨௨)

"மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல்."

(சிலம்பு, உஅ: கசாங-ச)

தம்முள் ஒற்றுமைகொண்டு ஊராண்டு வாழ்வதற்கு மாருக ஒருவரோடொருவர் பகைகொண்டு வாழும் இயல்பினராய தமிழ்வேந்தர் மூவரும், தம்மினும் ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் ஒருகுடியில் தோன்றிவிட்டால், அவனை அழிக்கச் செய்யும் போரில் மட்டும் ஏனைய இரு அரசர்களும் ஒன்று கூடுவதையும், தமக்குத் துணையாகப் பிற குறுநில மன்னர்களையும் இணைத்துக் கொள்வதையும் வழக்கமாகக் கொண்டு விளங்கினர். பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆற்றலும் ஆண்மையும் அறிந்து, அக்காலத்தே சோழநாட்டையும் பாண்டி நாட்டையும் ஆண்டிருந்த இருபெருவேந்தர்களும், சில வேளிர்களைத் துணையாகக்கொண்டு குட்டுவனை எதிர்த்தனர்; குட்டுவன் அவர்களையும் அழித்து, அவர்களுக்கு அரணாக அமைந்திருந்த கடலரணையும், காட்டரணையும் அழித்தான். அழிக்கலாகா அவன் ஆற்றல் அறிந்த அரசர்கள், அவனுக்கு அஞ்சி வாழலாயினர்:

"பணைகெழு வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவும், காட்டவும் அரண்வலியார் நடுங்க."

(பதிற்: ௩௦)

பழைய தமிழகத்தில், பூழியர், மழவர், கொங்கர் என்ற மறவர்மரபினர் பலர் வாழ்ந்திருந்தனர்; பகைவர் நாடுகளைவென்று கைக்கொள்வதே தொழிலாகக்கொண்டு விளங்கிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன்படையின் வன்மையை மிகுத்தற்பொருட்டு, அவ்வீரர்களை வென்று தன்படையில் தொழிலாற்றுமாறு செய்தான்; அவருள் பூழியர் என்பார், பூழிநாட்டில் வாழ்ந்திருந்த ஆயர் ஆவர்; இவர்கள் மிகப் பெரிய ஆனிரைகளையும், பலப்பல யானைகளையும் கொண்டிருந்தனர்; செருப்பு என்ற பெயருடையதொரு மலையினையும் உரிமையுடையதாகப் பெற்றிருந்தனர்; இவர்கள், முல்லைப் பூவாலாய கண்ணி

யணிந்து, ஆனிரைகளைப் புல் நிறைந்த பரந்த வெளிகளில் மேயவிட்டுவிட்டு, காட்டில் வீழ்ந்துகிடக்கும் மணிகளைப் பொறுக்கிக் கொண்டு வருவர் :

"முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியற் செருப்பின் பூழியர் கோவே." (பதிற்று: உக)

பூழியர், மழவர், கொங்கர் ஆகிய மூவருள்ளும், மிகப் பேராற்றல் வாய்ந்தவர் மழவராவர் ; மழவர் சிறந்த குதிரைப் படை உடையவர் ; விற்போரில் வல்லவர் ; எத்துணை நெடிய நாடுகளுக்கும் விரைவிற் சென்று வென்று மீளும் இயல்பினர் ; அருள் உள்ளம் சிறிதும் இன்றி, ஆறலைத்துத் துயர் விளைப்பர்; இம்மழவர்களால் அழிவுற்ற நாடுகள் பல; இதனால், இவர்களை வென்று, இவர்கள் ஆற்றலை அடக்கிய அரசரும் பலராவர் ; மழவர் இன்னராதல் அறிந்த பல்யானைச் செல்கெழு குட்டுவன், அவர்களைத் தன் துணைவராய்க் கொண்டான் ; அவர்களும், உடலைக்காக்கத் துணை புரியும் கவசம் போலிருந்து, அவனுக்குத் துணைபுரிந்தனர் எனக் கூறுகிறார் புலவர் பாலைக் கௌதமனார் :

"குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை." (பதிற்று: உக)

கொங்கர் என்பார், கொங்குநாட்டில் வாழ்ந்தவர் ; கொங்கர், படை வன்மைவாய்ந்தவர்; இவரும், பூழிநாட்டாரைப் போன்றே ஆனிரை வளர்ப்பவராவர் ; கொங்குநாடு, சேரநாட்டைச் சேர்ந்து விளங்கிய நாடாதலின், சேர வேந்தர் பலரும் அந்நாட்டில் தம் அரசுநிலவுவதைப் பெரிதும் விரும்பியுள்ளனர்; கொங்குநாடு, மேட்டுநிலமாதலின், ஆங்கு ஆனிரைகளுக்கு வேண்டும் நீர் கிடைத்தல் அரிது ; கொங்கர்கள் கூரிய இரும்புக் கோடரிகளைக் கொண்டு நிலத்தை உடைத்து மிக ஆழமாய கிணறுகளைத் தோண்டி அவற்றுள் நீண்ட கயிறுகளில் சிறிய நீர்முகவைகளைக் கட்டிவிட்டுக் கொண்ட நீரைத் தம் ஆனிரைகளுக்கு அளிப்பர் ; ஆக்கள் மிக்கு ஆப்பயனால் சிறந்த கொங்குநாட்டைப்

பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் கைக்கொண்டு ஆண்டிருந்தான் :

> "பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
> சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
> கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
> ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
> வேல்கெழு தானை வெருவரு தோன்றல்." (பதிற்று : உஉ)

உள்நாட்டுப் போர்கொண்ட நாடு, உலகில் உயர்ந்து தோன்றுவது இல்லை; தம் நாடு, உலக நாடுகளுள் உயர்ந்து தோன்றுவதை விரும்புவார், முதற்கண் தம் நாடு, உள் நாட்டுக் குழப்பத்திற்குள்ளாவதினின்றும் தடுத்தல் வேண்டும் ; பல்யானைச் செல்கெழுகுட்டுவன் இவ்வுண்மையை உணர்வான்; ஆகவே, அவன் பிற அரசர்களை வெல்லத் தொடங்குவதற்குமுன், தன் சேரர் குடியில் தன்னோடு பிறந்தாரிடையே பகையெழாமையினை எண்ணி மேற்கொண்டான் ; சேரநாட்டில், தன்குடிவந்த பிறர்க்கு உரிய பகுதியை அவர்பால் ஒப்படைத்து உள்நாட்டில் அமைதி நிலவ வழிசெய்தான் ; பல்யானைச் செல்கெழு குட்டுவன், பின்னர்ப் பேரரசனாய்ப் பலப்பல வெற்றிகளை எய்துதற்கு, அவன் தன் ஆட்சித்தொடக்கக் காலத்தே அறிவோடு செய்த இச்செயலே காரணமாயது.

வெற்றிபல பெற்று விளங்கிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன் வெற்றிச்சிறப்பினை உலகம் வியக்கும் வகை விளக்கிக் காட்ட விரும்பினான் ; அதற்கு ஏற்ற வழி யாது என எண்ணிப்பார்த்து, இறுதியில், தன் யானைகளை, மேற்குக் கடலுக்கும், கிழக்குக் கடலுக்கும் ஒரே காலத்தில் கூட்டமாக அனுப்பி, அவ்விருகடல்நீரும் ஒருபகலிலேயே வருமாறு செய்து, அவ்வாறு அவை கொணர்ந்த அந்நீரிற் படிந்தாடிப் பெருமையுற்றான் ; இருகடல்நீரும் ஒருபகல் ஆடிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன் நாட்டுக் கொற்றவையாகிய அயிரைக்கடவுளை வணங்கினான்; சேரநாட்டில் அயிரை என்றோர் அழகிய மலையுண்டு;

அம்மலைமீது கொற்றவை என்ற பெயருடைய வெற்றிக் கடவுள் உண்டு; சேரநாட்டுச் சிறந்த வீரர்கள், தம் விழுப் புண்ணிற் சொரியும் குருதிகலந்த சோற்றைப் படைத்து இக்கொற்றவையை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்; பல்யானைச் செல்கெழு குட்டுவன் தானும் ஒரு பெருவீரனாதலின், அயிரைமலை சென்று, ஆண்டுறை கொற்றவையைப் பணிந்து மகிழ்ந்தான். கடல்நீராடிக் கடவுளைப் பேணிய குட்டுவன்செயலை இளங்கோவடிகளும் பாராட்டியுள்ளார்,

"உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன்." (சிலம்பு, உஅ : கசூ௫-கூ)

பல்யானைச் செல்கெழு குட்டுவன் வெற்றியும், விழுச் சிறப்பும் விளங்கப் பாடிய புலவர் பாலைக் கௌதமனார், அவன் நல்லோர் போற்றும் நற்பண்புடையனாய் வாழ வேண்டும் என்னும் நல்லெண்ணம் உடையராயினார்; உடனே அவன் அருகிருந்து, அவன் முன்னோர் நாடாண்ட முறையினை நன்கு எடுத்துக் காட்டினார்; அவர் உயர்ந்தோர் போற்றும் உயர்வினரானமைக்கு அவர்பால் அமைந்திருந்த அருங்குணங்கள் இன்ன இன்ன என எடுத்துக் கூறினார்; நல்லரசைப் பல்லோர் பழிக்கும் வல்லரசாக ஆக்குதல், அவ்அரசுடையான் கொள்ளும் சினமும், காமமும், கையிகந்த கண்ணோட்டமும், அச்சமும், பொய்யும், அளவிற்கு மீறிய அன்புடைமையும், கையிகந்த தண்டமுமாம். இந்த உண்மையை முதற்கண் எடுத்துரைத்தார்; தீச்செயலை நின் மனத்தானும் நினையற்க! நல்லறவினைகளை நாடோறும் செய்க! நாட்டுமக்கள், ஒருவரையொருவர் துன்புறுத்தாமலும், பிறர்பொருளைக் கவரவிரும்பாமலும் வாழுமாறு, கடலும், கானலும் பயன்பல ஈனுமாறு நல்லாட்சி நடாத்துக! குற்றமறக் கற்றுத் துறைபோய அறிவுடையார் அறநெறி நிற்பாயாக! நின்னால் அன்பு செய்யப்பட்ட நின் மனைவியரோடு மகிழ்ந்து பிரிவின்றி இயன்ற பெருவாழ்வுடையனாகுக! உள்ள பொருளை ஊராரோடு இருந்து உண்டு மகிழ்க! எனப் பல அறவுரைகள் கூறினார்:

"சினனே, காமம், கழிகண் ணோட்டம்,
அச்சம், பொய்ச்சொல், அன்புமிக வுடைமை,
தெறல் கடுமையொடு பிறவும், இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்;
தீதுசேண் இகந்து, நன்றுமிகப் புரிந்து,
கடலும், கானமும் பலபயம் உதவப்,
பிறர்பிறர் நலியாது, வேற்றுப் பொருள் வெஃகாது,
மையில் அறிவினர் செவ்வி தின் நடந்து, தம்
அமர்துணைப் பிரியாது, பாத்துண்டு, மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய,
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!" (பதிற்று: உஉ)

இவ்வாறு அறவுரைபல வழங்கியும், குட்டுவன் மறக்குணம் மாறுமையினைக் கண்டார் புலவர். ஒருவர் எவ்வளவு நூல்கற்று எத்துணை அறிவுபெற்றாராயினும், அவர், இவ்வுலகம் நிலையற்றது, வாழ்வு நிலையற்றது, இவ்வுலக இன்பம் அழியும் இயல்பினது என்ற இந்த அறிவினைப் பெறாராயின், அவர் நல்வழிப்படுதல் இல்லை; இந்த உண்மையுணர்ந்த புலவர், சேரமான் உளத்தே நிலையாமை எண்ணம் நின்று நிலவத் துணைபுரிதல், தம் கடன் எனக் கொண்டார்; உடனே, அரசனை அணுகி, "அறவோன்மகனே" என அவன் உள்ளத்தே அறவுணர்வு தோன்ற விளித்து, "நின் ஆற்றற் பெருமையைப் பகைவர் அறியின், அதனால் அவர் ஆக்கம் மிகுமாதலின், அதை அவர் அறியாவண்ணம் மறைத்தும் குறைவேண்டியும் முறைவேண்டியும் நின்பால் வந்து கூறுவார் கூற்றுகளின் உண்மைகளை உள்ளவாறுணர்ந்தும், பகற்காலத்தே பகைப்புலம் சென்று போரிடும் நின்படையாளர்க்குத் துணைபுரிந்தும், இரவுக் காலத்தே அமைச்சர், சான்றோர் உள்ளிட்டாரோடிருந்து மேல் செய்யக்கடவனவற்றை ஆராய்ந்து நோக்கியும் வாழும் அரசியல் மேற்கொண்டிருக்கும் நினக்கு, ஒன்று கூறவிரும்புகின்றேன்; அருள்கூர்ந்து கேட்பாயாக! தம்மையொத்த அரசர் உலகில் யாண்டும் இலர் என்று பெருமைதோன்றப் பேரரசு மேற்கொண்டு வாழ்ந்த அரசர்களும், இவ்வுலகில்

அவர் புகழ் ஒன்றுமட்டுமே நிற்க, இறந்து மறைந்தே போயினர்; நின்நாட்டில் உள்ள சோலைகள்தோறும் நிகழும் வெறியாட்டயர் களத்தில், இனி இடமில்லை எனக் கூறுமாறு நெருங்க நிற்கும் ஆடுகள் அனைத்தும் அழிந்து போவது உறுதியாதலைப் போன்றே, உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் ஒருநாள் அழிந்துபோவது உறுதியாம்; ஆதலின், அரசே! உலகவாழ்வு நிலையற்றது என்பதை நினைவில் இருத்தி, நல்லது ஆற்றி நெடிது வாழ்வாயாக!" என்று கூறி வாழ்த்தினர்:

"ஒருதா மாகிய பெருமை யோரும்,
தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே;
அதனால், அறவோர் மகனே! மறவோர் செம்மால்!
நின்னொன்று உரைப்பக் கேண்மதி!
.............................................
காவு தோறிழைத்த வெறியயர் களத்தின்
இடங்கெடத் தொகுத்த விடையின்
மடங்கல் உண்மை மாயமோ அன்றே." (புறம்: ௩௬௬)

பாடிப் பரிசில் பெறுவதே தம் தொழிலாம் எனக் கொள்ளாது, தன் புகழைப் பாடியதோடு, தான் நல்வாழ்வு வாழ்தற்காம் நல்லுரை பல நல்கிய புலவர்பால் பேரன்பு கொண்ட பல்யானைச் செல்கெழு குட்டுவன், அவரை அன்புடன் நோக்கி, "ஆன்றீர்! நீவிர் என்பால் வேண்டுவன யாவை?" என விரும்பிக் கேட்டான்; புலவர், "யானும், என் மனைவியும் சுவர்க்கம் புகல் வேண்டும்; அஃதே எம் விருப்பம்" எனக் கூறினர்; உடனே குட்டுவன், அந்தணர் கூறிய அறவழி நின்று, பத்துப் பெரு வேள்வி செய்து, அவ்விருவரையும், பிறவாப் பெரு நெறியில் இருத்தினான்.[1]

---

1. பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்குப் பெருமையளித்து நிற்கும் இச்செயலை, அவன் வழிவந்த ஆசிரியர் இளங்கோவடிகளும் எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார்:

"நான்மறை யாளன் செய்யுள் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன்."
(சிலம்பு, உ௮: ௧௩௭-௮)

இவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து, புலவர்தம் பாராட்டுரையும் பெற்றுச் சிறப்புற்ற சேர வேந்தன், இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்து, இறுதியில், நிறைந்த புகழும், உயர்ந்த கேள்வியும் உடைய நெடும் பாரதாயனார் என்னும் பெயருடைய தன் பேராசிரியர் அறிவுறுத்தத் துறவுள்ளம் உடையனாய் அவரைப் பின் தொடர்ந்து, நாடு விட்டுக் காடு சென்று நோற்று வீடு பேறடைந்தான் :

இமைய வரம்பன் தம்பி, அமைவர
உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ,
அகப்பா எறிந்து பகல்தீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்துக்
கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி,
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை, உயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனார் முந்துறக் காடு போந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன் ”

(பதிற்றுப்பத்து, பதிகம் : ௩)

## கக. பாலை பாடிய பெருங்கடுங்கோ

பாலை பாடிய பெருங்கடுங்கோ, ஆன் பொருநையாறு சூழ அமைந்த அரணுடைய வஞ்சி நகர்க்கண் இருந்து அரசோச்சிய சேர வேந்தனவன். பெருங்கடுங்கோ, வெல்லற்கு அரியன எனப் பெருமை பாராட்டும் பகைவர்தம் அரண்கள் பலவற்றை அழித்து, ஆற்றல் மிக்க அவ்வரசுகளைப் பணிகொண்ட பேராண்மை வாய்ந்தவனவன். தன் வெற்றிப்புகழை விளங்கப் பாடும் பாண்மகட்குப் பல கழஞ்சு நிறையுள்ள பொன்னரி மாலையையும், அப்பாண்மகள் பின்னின்று இசை பாடும் பாண்மகற்கு வெள்ளி யாலாய நாரிற்றொடுத்த பொற்றாமரை மலரையும் பரிசளித்துப் போற்றும் பெருங்கொடையாளனுமாவான்; இச் சிறப்புக்கள் எல்லாம் பெருங்கடுங்கோவின்பால் பொருந்தியிருக்கக் கண்ட பேய்மகள் இளவெயினி எனும் நல்லிசைப் புலமை மெல்லியலார், அவன் புலவர் பாராட்டும் பெருமையுடையோனவன் எனப் பாராட்டிப் பாடியுள்ளார்:

" தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே!
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே:
புறம்பெற்ற வயவேந்தன்
மறம் பாடிய பாடினியும்மே,
ஏருடைய விழுக்கழஞ்சின்
சீருடைய இழைபெற்றிசினே;
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே
எனவாங்கு,
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே." (புறம்: கக)

பாலை பாடிய பெருங்கடுங்கோ, பேராற்றலும், பேராண்மையும் கொண்டு பகைவரைப் பணியவைக்கும்

பெரு வீரனவன் என்பதைப் பேய்மகள் இளவெயினியார் பாட்டேயன்றி, பெருங்கடுங்கோ பாடிய பாட்டொன்றும் விளங்க உணர்த்துகிறது. பாய்ந்து வரும் பகைவர் படையினை எதிர்த்துப் போரிட்டுத் துரத்தி வெற்றி பெற்றான் ஒரு வீரன்; ஆனால் மேற்கொண்ட அப் போரில், பகைவர் எறிந்த வேல்களும் வாள்களும் பாய்ந்தமையால், அவன் உடல், கண்ணிற்கும் புலனாகாவாறு சிதைந்து அழிந்து விட்டது; அவனும் இறந்துவிட்டான்; இத்தகைய பெரு வீரனைக் "கடன் முடித்த காளை" எனப் பாராட்டிய தோடு, பெரும்புகழ் பாரிலே நிற்க, அவன், புலவர் வாய்ப் பாவிலே சென்று மறைந்துவிட்டான் என்றும் பாடிய பெருங்கடுங்கோ பாடல், அவரும் ஒரு பெருவீரராவர் என்பதை உணர்த்திநிற்றல் உணர்க:

> "எஃகு உளம்கழிய, இருநில மருங்கின்
> அருங்கடன் இறுத்த பெருஞ்செ யாளனை
> யாண்டுளனோவென வினவுதி யாயின்,
> ...............................................
> சேண் விளங்கு நல்லிசை நிறீஇ
> நாநவில் புலவர் வாயு ளானே." (புறம்: உ௮உ)

பெருங்கடுங்கோ, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளுள் பாலைத்திணைக்குரிய, முதல், கரு, உரிப்பொருள்களை ஊன்றி யுணர்ந்து, உயர்ந்தோர் போற்றப் பாடியுள்ள சிறப்பால், பாலை பாடிய பெருங் கடுங்கோ எனப் பாராட்டப் பெற்றுளார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ, ஒரு பேரரசர் மரபிலே வந்தவர்; தாமும் ஓர் அரசராய் நாடாண்டு நலம்பல கண்டவர்; அதனால், அக்கால அரசர் இயல்புகளை நன்கு அறிந்தவராவர்; அவ்வாறு தாம் அறிந்த அரசியல் நுட்பங் களைத் தாம் பாடிய பாக்கள் இடையிடையே, ஏற்ற இடந் தேடிக் கூறிச் சென்றுளார்.

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி யுறும்" என்ப. ஒரு நாட்டு ஆட்சியின்

தன்மை, அந் நாட்டு அரசனினும், அந்நாட்டு அமைச்சனைப் பொறுத்தே அமையும்; அமைச்சன் நல்லனாயின், அரசனும் நல்லனாம்; ஆட்சியும் நன்றாம்; அவன் தீயனாயின், நல்லரசும் தீதாம்; அந் நாட்டுக் குடிகள் அழ அழப் பொருள் பறிக்கப்படுவர்; அதனால், "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில், கடும்புலி வழங்கும் காடு நன்றே" என்ற எண்ணமுடையராகி, நல்லிடம் தேடிச் சென்று விடுவர்; அத்தகைய நாட்டினுள், பகையரசர் படை எளிதிற் புகுந்து வென்றிகொண்டு வெறியாட்டம் ஆடும். இந்த உண்மைகளை உணர்ந்து கூறிய பாலை பாடிய பெருங் கடுங்கோ, பாரோர் போற்றும் பேரரசு மேற்கொண்டோராவர் என்பதில் சிறிதும் ஐயம் இராதன்றோ!

"நடுவிகந்து ஒரீஇ நயனிலான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்." (கலி: அ)

"அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்." (கலி: க0)

"ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவளோ."
(கலி: ரு)

"பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன் நாட்டு
ஏதிலான் படைபோல இறுத்தந்தது." (கலி: உஎ)

ஆட்சிநெறி உண்டாதற்கே காரணமாவதும், அவ் ஆட்சிநிலை அவ்வப்போது மாறுதற்குக் காரணமாவதும், உலக வாழ்விற்கே உயிர் அளிப்பதும் பொருள். ஆகவே, அரசராவார், அப்பொருளின் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்தவராதல் வேண்டும். பேரரசராய பாலைபாடிய பெருங்கடுங்கோவும், பொருளின் உண்மை இயல்புகளை உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

ஒருவர், தீநெறியிற் செல்லாது, நன்னெறியில் நின்று வாழும் நல்வாழ்வையும், பிறர் மனைமுன் நின்று பிச்சை

யேற்று வாழாப் பெருவாழ்வையும் வேண்டுவராயின், அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது பொருளே எனப் பொருட்சிறப்பினையும், பொருட்பயனை நுகர விரும்புவார் ஒவ்வொருவரும், அப்பொருளைத் தாமே ஈட்டுதல் வேண்டும்; அவரே ஆள்வினையுடையவராவர். இதற்கு மாறாகத் தாம் ஒரு தொழிலும் செய்யாது, தம் முன்னோர் ஈட்டிவைத்துள்ள செல்வத்தை அழித்து அதன் பயனை உண்டு வாழ்வார், உண்மையில் உயிருடையார் எனக் கருதவும்படார்; அவர் வாழ்வு, இரந்துண்போன் வாழ்வினும் இழிவுடைத்தாம் எனப் பொருளீட்டற் சிறப்பினையும், பொருள் தேடுவார் எவ்வகையாலும் பொருள் சேர்த்தலே எம் குறிக்கோள் என்று எண்ணிவிடுதல் கூடாது. பொருள் ஈட்டத் தாம் மேற்கொள்ளும் செயல் தீமையுடைத்து, அறநெறியற்றது என்ற எண்ணமின்றிப் பொருளை ஈட்டின், அவர்கள் அப்பொருளால் ஆன்ற இன்பம் அடையார்; மாறாக, இம்மை மறுமை ஆகிய இரு நிலையினும் அவர்க்கு அப்பொருளே தாங்கலாகத் துன்பங்களைத் தேடித்தரும் என அறநெறி நின்று பொருள் தேட வேண்டியதன் இன்றியமையாமையினையும், ஈத்து உவக்கப் பயன்படும் செல்வமே செல்வம்; இரந்தார்க்கு ஈயாது ஈட்டிய செல்வம் இழிவுடைச் செல்வமாம் எனப் பொருட்பயன் இஃது என்பதையும், இவர் உயர்ந்த பண்புடையார், ஆகவே இவர்பாற் செல்லுதல் வேண்டும்; இவர் அப்பண்பிலார், ஆகவே இவரை அகன்று வாழல் வேண்டும் என எண்ணுவதின்றிச் செல்வம், செய்தவப் பயனுக்கேற்ப எவரிடத்தும் சென்று சேரும் என, அதன் இயல்பினையும், செல்வம் சேருங்கால் சிறப்பளித்துப் பிரியுங்கால் தம்மைப் பெற்றிருந்தார், தம்மைப் பெறுதற்கு முன் தாம் பெற்றிருந்த சிறப்பையும் அழித்துவிட்டு, பிறர் பெரிதும் எள்ள இழிவு செய்தே பிரியும் என, அதன் நிலையாமையினையும் நன்கு உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

“அறன்கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும், இரண்டும்
பொருளின் ஆகும்.” (அகம்: கரு)

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படார்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு" (குறுந்: உ அ ந)

"செம்மையின் இகந்துஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ."
(கலி: க ச)

"ஈதலிற் குறைகாட்டாது, அறன்அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்த."

"சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி."
(கலி: உ எ, க0)

"கிழவர் இன்னோர் என்னாது, பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்பு பெயர்பு உறையும்."
(கலி: உக)

"மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறர் எள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினும் நிலையிலாப் பொருள்." (கலி: அ)

நாடாளும் தமக்கு, நாட்டார்க்கு நல்லறிவு கொளுத்தும் பணி வேண்டுவதின்று என அடங்கிவிடாது அரிய உண்மைகளை அள்ளித்தரும் அழகிய பாக்களைப் பாடிய பாலைபாடிய பெருங்கடுங்கோ போலும் பேரரசரை இந்நாடு பெற்று எடுப்பது என்நாளோ?

## ௨௦. மருதம் பாடிய இளங்கடுங்கோ

பெருங்கடுங்கோ எனும் சேர வேந்தர் ஒருவர், பாலைத் திணையைப் பாடிப், பாலைபாடிய பெருங்கடுங்கோ எனப் பெயர் பூண்டதேபோல், இளங்கடுங்கோ என அழைக்கப் பெறும் இவரும், மருதத் திணையைப் பாடிய சிறப்பால் மருதம் பாடிய இளங்கடுங்கோ என அழைக்கப்பெற்று ளார். பெருங்கடுங்கோ எனவும், இளங்கடுங்கோ எனவும் அழைக்கப்பெறுவது ஒன்றையே கொண்டு இவர்கள் இரு வரும் அண்ணனும் தம்பியுமாவர் என முறை கற்பித்துக் கூறல் அத்துணைப் பொருத்தமுடைத்தன்று. இளங் கடுங்கோ ஒரு சிறந்த புலவராவர் என்பதல்லது வேறு உணர்தற்கில்லை. அவர்பால் அமைந்துள்ள அரசப் பண்பு கள் யாவை என்பது அறியக்கூடவில்லை.

இளங்கடுங்கோ தம் காலத்தே நிகழ்ந்த பருவூர்ப் பறந்தலைப்போர் ஒன்றையும், அப்போரில் தன்னை எதிர்த்த சேர பாண்டியர் இருவரையும், சோழன் தான் ஒருவ னாகவே நின்று வென்றிகொண்ட சிறப்பையும் கூறி, வரலாற்றிற்கு ஒரு சிறிது துணைபுரிந்துள்ளார் :

"அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் பறந்தலை
இருபெரு வேந்தரும் பொருதுகளத்து ஒழிய
ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை." (அகம் : ௯௬)

வரலாறு உணர ஓரளவு துணைபுரிந்த இளங்கடுங்கோ, மக்களைப் பெற்று மனையறங்காக்கும் மனைவியர்தம் மாண்பு எத்தகைத்து என்பதை உணரவும் துணைபுரிந்துள்ளார்.

தன் மனைவி புதல்வனைப் பெற்றுப் பேணி வளர்த்துக் கொண்டு பெருமனைக் கிழத்தியாய் நெல்வளம் நிறைந்த நெடிய தன் மனையில் வாழ்ந்திருக்க, பரத்தை வீடு சென்று வாழ்தலை விரும்பினான் ஓர் ஆண்மகன். பரத்தையொடு

வாழ்ந்திருந்த அவன், ஒருநாள் அவளைச் சிறிதே பிரிந்து எங்கோ சென்றிருந்தான். உடனே அப் பரத்தைக்கு அவன்பால் சினம் பிறந்துவிட்டது; கண்ணில் தீட்டிய மையும் கரைந்துபோமாறு கண்ணீர்விட்டுக் கலங்கினாள்; கைகளை முறித்துக்கொண்டாள்; பற்களை நெறுநெறெனக் கடித்துக்கொண்டாள்; அம்மட்டோ! ஊரெல்லாம் உணருமாறு அவனைத் தேடிப் புறப்பட்டுவிட்டாள். இச் செய்தியைத் தலைமகளின் தோழி அறிந்தாள்; சின்னாள் கழித்துத் தலைவன், தன் மனைவந்து சேர்ந்தான். வந்தானை வரவேற்காது, வாயிற்கண்ணே நிறுத்திவைத்தே, "தலைவ! தாங்கள் எங்களைப் பிரிந்து பலநாள் ஆகவும், மக்களைப்பெற்று மனையறம் காக்கும் கடமையுணர்ச்சி யுண்மையால், நின் பிரிவைப் பொருட்படுத்தாமல் பொறுத்து வாழ்கிறோம். ஆனால், நின் காதற் பரத்தையோ நீ சிறிதுபொழுது பிரிந்தாய் என்பதற்கே ஊரெல்லாம் உணர அலர்தூற்றிவிட்டாள். இல்லத்தே இருந்துவாழக் கடமை பூண்டுள்ளோம் நாங்கள்; ஆகவே பன்னாள் பிரிந்து வாழினும், அதுகுறித்து எவரிடமும் எவ்விதக் குறையும் கூறி வருந்தாமல், மக்களைப் பேணலும், மனையறங் காத்தலுமாகிய கடமையைக் கருதி அமைந்துவிடுகிறோம். தாங்கள் விரும்பும் அப் பரத்தைக்கும் அத்தகைய கடமையுண்டு என எண்ணிவிட்டனை போலும்! அவளுக்கு அத்தகைய கடமையில்லை; அதனாலன்றோ சிறிது பிரிந்ததையே பொறாது அலர்தூற்றிவிட்டாள். பெருமனைக் கிழத்தியர்க்கும், பரத்தையர்க்கும் உள்ள இவ்வேறுபாட்டினை உணர்ந்தனையாயின், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொள்ளாய்" என்றெல்லாம் இடித்துக்கூறினாள் தோழி.

தோழியின் இவ் அறிவுரை அமைந்த பாடல் ஒன்றைப் பாடியுள்ளார் புலவர். "தாய்போல் கழறித் தழீஇக்கோடல் ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து" எனக் கூறுவர் தொல்காப்பியனார். மனைவியோடிருந்து இல்லறம் ஆற்றிப் பெருமை பெறவேண்டிய கணவன், தகாவொழுக்கம் மேற்கொண்டவழி, அவன் பகைவரும் போற்றும் பண்

புடையாளன்; செறுநரும் விழையும் செம்மலோன் என்றெல்லாம் பாராமல், அவன் மனைவியே அல்லாமல், அவள் தோழியாய்த் துணைபுரியும் பிறபெண்களும் அவனை நடுத்தெருவில் நிறுத்தி வைத்தே, "தகா ஒழுக்கம் மேற்கொள்ளும் நின்னைக் கேட்பார் எவரும் இலர்கொல்?" என்றும், "நாணமும், நற்பண்பும் இழந்த நாடன் நீ" என்றும் கூறிப் பழித்துரைப்பர் எனக் கூறிக் கணவர்பால் தவறுகண்டவழி, ஒறுத்துத் திருத்தும் உயர்தமிழ் ஒழுக்க நெறியினை உணரத் துணைபுரிந்துள்ளார் புலவர். அரசராய் இருந்து தம் ஆட்சிப் பெருமையால், அறநெறி நிற்கச் செய்வதிலும், அறிவுசான்ற புலவனுய் அமர்ந்து, அன்பு நிறை உரையால், அவ் அறநெறி வாழச்செய்தலே ஆன்ற பயன்தரும் என்பதை உணர்ந்தவர்போலும் நம் இளங் கடுங்கோ!

"மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலும் நின்காதலி, எம்போல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய
என்ன கடத்தளோ மற்றே; தன்முகத்து
எழுதுஎழில் சிதைய அழுதனள் ஏங்கி
வடித்தென உருத்த தித்திப் பல்காழ்
தொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு
கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுதும் நுவலும் நிற்காணிய சென்மே."

(அகம்: கஎசு)

# உக. மாந்தரம் பொறையன் கடுங்கோ

மாந்தரன், மாந்தரன் பொறையன் கடுங்கோ என்றெல்லாம் அழைக்கப்பெறும் இவன், சேரருள், இரும்பொறை மரபில் வந்தவனாதல் வேண்டும்; மாந்தரம் பொறையன் கடுங்கோவே, இரும்பொறை மரபினரின் முதல்வனாதல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதுவர். இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய பெருங்குன்றூர் கிழார், அவனை, மாந்தரன் வழிவந்தவன் எனக் கூறிய தொன்றன்றி வேறு சான்று அவர்க்கு இல்லை. இளஞ்சேரல் இரும்பொறைக்கு முன் அரசாண்ட இரும்பொறை மரபினர் பலராதலின், அத்தொடர், அவ்வாறு ஆண்டாருள், மாந்தரனும் ஒருவனாவன் எனப் பொருள்படத் துணை புரியுமேயன்றி, அவனே, அவ்வின முதல்வனாவன் எனப் பொருள்கொள்ளத் துணைபுரியாது; மாந்தரனை, இளஞ்சேரல் இரும்பொறைக்கு முற்பட்டோன் எனக் கோடல் கூடுமேயன்றி, இரும்பொறை மரபில் வந்தார் அனைவர்க்குமே முற்பட்டவனாவன் எனக்கோடல் பொருந்தாது.

மாந்தரன் ஆண்ட நாடு, அவன் காலத்தே வாழ்ந்த பிற அரசர், அவன் பெற்ற வெற்றிகள், இன்ன பிற வரலாறுகள் எதையும் அறியும் சான்றுகள் கிடைத்தில.

மாந்தரன், வையகம் போற்ற வாழ்வாங்கு வாழ்ந்த வேந்தனாவன்; அவன் ஆட்சி, அறனொடு பட்ட நல்லாட்சியாம்; அதனால், அவன் ஆட்சிக்காலத்தே, கோள்களும், அவ்வவற்றிற்குரிய இடத்திலேயே இயங்கின; மழையும் தப்பாது பெய்தது; அவன் நாட்டுமக்களும் அச்சம் அற்று வாழ்ந்தனர்; துன்பவாழ்வில் துயர் உறாது, இன்ப வாழ்வினை இடையறாது பெற்றனர்! மாந்தரன், அரசர்க்கு ஓதிய கல்வியை ஒன்றுவிடாது கற்றுச் சிறந்தான்; ஆற்றல் மறவர்தம் அரும்போர் கண்டு அஞ்சா வாட்போர் வல்ல வேந்தர்கள், பணிந்து தந்த பல்லணியும், பலகளிறும் பெற்று மகிழும் பேராண்மையுடையவனாயினான்; உலகில், உள்ளமும், உரையும், உடல்புரி செயலும், ஒரு நாளும்

நடுவுநிலை திரியா நன்னெறியுடையான்; இவற்றாலெல்லாம் அவன் அழியாப் புகழ், உலகெலாம் சென்று பரவிற்று; வாளின் வன்மையும், கோலின் செம்மையும் விளங்க ஆண்ட அவனை, அறனறிந்து மூத்த அறிவுடையார் அனைவரும் மகிழ்ந்து வாழ்த்தினர் எனக் கூறுவர் பெருங்குன்றூர் கிழார் எனும் புலவர் பெருந்தகையார்:

" மீன்வயின் நிற்ப, வானம் வாய்ப்ப,
அச்சற்று ஏமமாகி, இருள் தீர்ந்து,
இன்பம் பெருகத் தோன்றித், தம்மானைத்
துறையின் எஞ்சாமை நிறையக் கற்றுக்,
கழிந்தோர் உடற்றுங் கடுந்தூ வஞ்சா
ஒளிறு வாள் வயவேந்தர்,
களிறொடு கலம் தந்து,
தொன்று மொழிந்து தொழில் கேட்ப,
அகல் வையத்துப் பகலாற்றி,
மாயாப் பல்புகழ் வியல்விசும்பு ஊர்தர
வாள்வலி அறுத்துச், செம்மை பூஉண்டு,
அறன் வாழ்த்த நற்காண்ட
விறல் மாந்தரன்." (பதிற்று: ௯0)

மாந்தரன் பொறையன் கடுங்கோ, கொடுத்துப் பழகிய கையுடையான்; அவனைப் பாடிச்செல்லும், பாணர், கூத்தர், பொருநர் முதலாம் இரவலர், தம் வறுமை தீரப் பெரும்பொருள் பெற்றன்றி மீளார்; அவன், பகைவரான் தடுத்து நிறுத்தப்படாப் பெரும்படையும், போர் வெல்லும் பேராண்மையும் பெற்றவன் என்றெல்லாம் பாராட்டி மகிழ்வர், முதுபெரும் புலவராய பரணர்:

" இலமலர் அன்ன அஞ்செந் நாவின்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்;
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய நெஞ்சே." (அகம்: கசஉ)

## உ௨. மாரிவெண்கோ

பாண்டிய நாட்டில், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழநாட்டில், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் அரசோச்சிய காலத்தே, சேரநாட்டு அரியணையில் அமர்ந்து ஆட்சி மேற்கொண்டிருந்தோன், இம் மாரிவெண்கோ. இவன் மாவெண்கோ எனவும் அழைக்கப்பெறுவன்; மாரிவெண்கோவின் வீரம், வெற்றி, வண்மை முதலாம் பண்புகளை அறிந்து கோடற்கு வழியில்லை எனினும், இவன், குமரி முதல் இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட வேந்தர்கள் மாட்டும் அமையலாகா அருங்குணம் ஒன்று உடையான் என்பது மட்டும் உணரக்கிடக்கிறது; மாரிவெண்கோ, மாவீரராய் மாநிலம் ஆண்ட மன்னர்கள் அனைவரினும் சிறந்த மாண்புடையனவன்; இவன்பால் அமைந்து கிடந்த அம்மாண்பினை, ஆர்வம் வழியப் பாடிப் பாராட்டியுள்ளார் ஔவையார்.

தமிழகம், தன்னேரில்லா அரசுபெற்றுத் தழைத்திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம் என்ற பாராட்டுரைகளுக்கிடையே, தன்னேரில்லா அரசோச்சிய அத்தமிழகம், தாழ்ந்தமைக்கும், அம்மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ் நாட்டின் சிறுசிறு பகுதிகளை ஆங்காங்கே ஆண்டுகொண்டிருந்த குறுநில மன்னர்களுமே காரணமாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையிலேயே அன்றைய தமிழ்நாட்டு அரசியல்நிலை அமைந்திருந்தது.

தமிழரசர் மூவரும் ஒற்றுமைகொண்டு ஊராண்டவரல்லர்; அவர் ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணமுடையராவர்; ஒரு குடியில், ஒருகாலத்தே ஆற்றல் மிக்க அரசனொருவன் தோன்றி விட்டால், அவன் பிற அரசுகளையெல்லாம் பணியவைத்துப் பேரரசனாய் வாழவேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும் செல்வமும் கண்டு மனம் பொறாத ஏனைய

அரசர்கள் அனைவரும் ஒன்றுகூடி, அவனை அழிக்க வழி கோலுவதும் அக்கால வழக்கமாம். ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒருகுடியிற் பிறந்தவர்களே, ஒருவரோடொருவர் பகைத்துப் போர் மேற்கொள்வர்; அம்மட்டோ! தந்தை மகனை எதிர்ப்பன்; மகன், தந்தை மேல் போருக்கு எழுவன்; இதுதான் பழைய தமிழகத்தின் அரசியல் நெறி.

இவ்வரசியல் முறையால், தமிழகம் முழுதும் அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துபோகாமல், தமிழகம் என்ற பெயரால் இன்னும் ஒரு நாடு உளது என்ற இந்நிலைக்குப், பாடிப் பிழைப்பதே தம் தொழில் என அடங்கியிருந்துவிடாமல், அவ்வரசர்கள் நெறி தவறுந்தோறும், அஞ்சாது முன்வந்து, ஏற்ற வகையான் இடித்துக் கூறித் திருத்தி வாழ்ந்த புலவர்களே அல்லாமல், மாரிவெண்கோ போலும் மன்னர்களும் காரணமாம்.

மாரிவெண்கோ, அக்காலத் தமிழ்வேந்தரைப்போலல்லாமல், தன் காலத்தே வாழ்ந்த, ஏனைய தமிழ்வேந்தரோடு தலையாய நட்புப்பூண்டு நல்லோர்போற்ற வாழ்ந்தான்; பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதியோடும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடும் பிரியாப் பெருநட்புடையனாய் விளங்கினான்; அந்நிலையைக் கண்டார் ஔவையார்; மூவேந்தர் முரண்கொண்டு நிற்கும்போதெல்லாம், அவர்தம் பகைபோக்கி ஒற்றுமை காண உளமார உழைக்கும் ஔவையார்க்கு, இவர்களிடையே நிலவும் ஒற்றுமையுணர்வு, உண்மை மகிழ்ச்சியை அளித்தது; அந்நிலைகண்டு மகிழும் அவர்க்கு அந்நிலை அழியாது வாழவேண்டும்; இந்நிலையினைக் காணும் பிறரும், கருத்தொருமித்து வாழவேண்டும் என்ற வேட்கை எழுந்தது; அவர் வேட்கை அழகிய ஒரு பாட்டாகவும் அமைந்துவிட்டது:

“ தம் ஆட்சிக்குரியநாடு, நாகலோகமோ என எண்ணுமாறு நால்வேறு வளங்களையும் நனிமிகப் பெற்ற நாடேயா

யினும், அந்நாடுடையார் இறந்துபோங்கால், அஃது அவ ரோடு செல்லுவதில்லை ; அந் நாட்டோடு, அதுகாறும் ஒரு சிறிதும் தொடர்பிலாதார்க்கு உரிமையாகிவிடுகிறது ; ஆகவே, இவ்வாட்சி அழிவுடையது, நிலையற்றது என்பதை அறிந்து நினைவில் இருத்துவீராக. இறந்துபோவார்க்கு நற்றுணையாய் அவரோடு உடன்செல்வது, அவர் செய்த நல்வினை ஒன்றே ; ஆகவே, வருவார்க்கு வளம்பலவும் வழங்கி வாழும் நல்வாழ்வு உடையீராகுக ! உங்கட்குக் கூறத்தக்க உண்மை இஃது ஒன்றே ; நீவிர் மூவரும் ஒருங்கு கூடியிருக்கும் இச் காட்சி, அந்தணர் ஓம்பும் செந்தழற் காட்சியையே என் கண்முன் கொணர்ந்து காட்டுகிறது ; அந்தணர் ஓம்பும் செந்தழல், ஆகவனீயம், காருகபத்தியம், தென்திசையங்கி என மூன்றும் ; அவற்றுள் ஒன்று குறை யினும் வேள்வி நிகழாது, சிறக்காது என்ப. அதைப் போன்றே, நீவிர் மூவரும் ஒன்றுகூடி உலகாளின், உலகில் இன்பம் உண்டாம் ; நும்முள் ஒருவர் பகைகொண்டு பிரி யினும், அது பாழுறும் ; ஆதலின், இன்றேபோல் என்றும் ஒருமனப்பட்டு உலகாள்வீராக ! உங்கள் வாழ்நாளும் வற்றாது வளர்ந்து தோன்றுமாக !" இஃது ஔவையார் உள்ளம்.

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா ;
வேற்றோ ராயினும் நோற்றோர்க்கு ஒழியும் ;
..................................................
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல் ;
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை ;
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர் !
யானறி அளவையோ இதுவே." (புறம் : ௩௬௭.

## ௨௩. முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் வழிவந்த சேர வேந்தருள், முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதனும் ஒருவன். இயற்பெயர்க்கு முன்னர், அப் பெயருடையார்க்குப் பெருமையளித்தற்பொருட்டு உயர்வுப் பொருள்தரும் நெடு என்ற அடைகொடுத்து வழங்குவது வழக்கமாம்; நெடியோன், நெடுங்கிள்ளி, நெடுஞ்செழியன், நெடுமாவளவன், நெடுமானஞ்சி, நெடுவேள் என்ற பெயர்களைக்காண்க. இவ்வாறு வந்த பெயர்களுள், நெடுஞ்சேரலாதன் என்பதும் ஒன்று. சேரவேந்தருள், அப்பெயர் உடையார் பலராவர்; குடக்கோ நெடுஞ்சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பதை நோக்குக. அவரின் வேறு அறிதற்கு, இவன் முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்பெற்றுளான். இவன் பெயர்க்கு முன்வரும் முடங்கிக்கிடந்த என்ற அடை வருதற்காம் காரணம் இஃது என்பது புலப்படவில்லை. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன், பழந்தமிழ்ப் புலவருள் ஒருவனுவன் என்பதே அறியக்கிடக்கிறது; அவன் அரசியல் வாழ்வுகுறித்து எதையும் கூறுதற்கில்லை.

நெடுஞ்சேரலாதன் பாடிய நெய்தற்றிணை தழுவிய பாட்டொன்று மிகவும் நயம்செறிந்து காணப்படுகிறது; சிறுசிறு கண்களைக் கொண்ட பெரிய வலையினைப் பருத்து நீண்ட கயிற்றோடு பிணைத்துக்கொண்டு, கடலிடையே சென்று கடல் வளமெல்லாம் சுருங்கிற்றே என எண்ணுமாறு, அக்கடல் மீன்கள் எல்லாம் ஒருங்ககப்படுமாறு வீசிவிட்டு, மாலையில் கரைசேர்ந்த வலைஞர், தம் வரவினைக் கவலையோடு எதிர்நோக்கிக் காத்துநிற்கும் தம் மனைவியரைக் கண்டு மகிழ்ந்து, ஊக்கம் மிக்கு, இளையரும் முதியருமாகிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அவ்வலையினைப் பேராரவாரத்திற்கிடையே வருந்திஇழுத்துக் கரைசேர்த்து வலையில் அகப்பட்டுக்கிடக்கும் மீன்களைப் பிரித்தெடுத்துக் கரையில் குவித்து, ஆங்குவந்து குழுமிநிற்கும் இரவலர்க்கு

அவர் கல்மிறைய வழங்கி, எஞ்சியவற்றைச் சிறியதும் பெரியதுமாய பலகூறுகளாக்கி விலைகூறி விற்றுத் தொழில் முடித்த மகிழ்ச்சியாலும், பகலெல்லாம் உழைத்த உடற்றளர்ச்சியாலும், கரைக்கண் குவிந்த மணல்மீது கிடந்து உறங்குவர் என வலைஞர்தம் அன்றாட வாழ்க்கையினை விளங்க உரைத்துள்ளார்.

இந்த ஒரு பாட்டிலேயே, பெரிய வலியினை வருந்தி வலிக்கும் வலைஞர் தொழிலுக்கு, உப்புப் பொதியினை ஏற்றிய வண்டி, கடத்தற்கரிய மணல்செறிந்த நிலத்துட் புக்க வழி, அவ்வண்டியினை மண்டியிட்டு இழுத்துச்செல்லும் எருதுகளின் தொழிலையும், பெற்ற மீன்களை இரவலர்க்கு வழங்கும் வலைஞர் கொடைத்தொழிற்குக் களத்தில் அடித்துக் குவித்த நெற்குவியலைக் களம்பாடிவரும் இரவலர்க்குப் பரிசிலாக அளிக்கும் உழவர் செயலையும் உவமை கூறி, நாட்டுத் தொழில்கலைகளை நன்குணர்ந்த நல்லரசன் தான் என்பதை நன்கு உணர்த்தியுள்ளார்.

“நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல் பாடழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்போய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ,
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் துஞ்சும் துறை.”

(அகம்: ௩0)

# உச. யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

மாந்தரன் எனும் இயற்பெயர் பூண்டு, சேரருள் இரும்பொறை மரபினருள் வந்தோனாய இவன், யானையின் கண் போலும் கண் பெற்றிருந்தமையான், யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என அழைக்கப் பெற்றுளான், "வேழ நோக்கின் விறல் வெஞ்சேஎய்" எனவும், "மாந்தரஞ்சேரல் இரும்பொறை" எனவும் இவன் இயற்பெயர், காரணப் பெயர் ஆகிய இரு பெயராலும் அழைப்பர் குறுங்கோழியூர் கிழார். தொண்டி நகர்க்கண் அமர்ந்து நாடாண்ட யானைக்கண்சேய், பேராற்றலும், பேராண்மையும் வாய்ந்தவனுவன்; தன் நாட்டு மக்கள், பகைவர் படையெடுப்பால் பாழுறுவண்ணம் பாராண்ட பேரரசனுவன்; அவன் நாட்டுமக்கள், சோறாக்க மூட்டிய தீயாலும், ஞாயிற்றின் ஒளியாலும் உண்டாம் வெப்பத்தை அறிவரேயன்றி, பகைவர், தம் நாட்டைப் பற்றியக்கால் வைத்த தீயாலாம் வெப்பத்தை அறியார்; அவர்கள் வான வில்லைக்கண்டு களிப்பரே அல்லாமல், தம்மை அழிக்க எடுத்த பகைவர் கைவில்லைக் கண்டறியார்; தம் நிலங்களை உழுதற்கு உறுதுணையாம் நாஞ்சிற் படையினையல்லாது, தம் நாட்டின்மீது பகைத்து வருவார் ஏந்திய படையினைப் பார்த்தறியார் எனக், குறுங்கோழியூர்கிழார் அவன் பேராற்றலைப் பாராட்டியுள்ளார்:

"சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது,
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே;
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்." (புறம்: உ0)

ஒரு காலத்தே, கடலன் என்பானுக்கு உரிமை பூண்டிருந்ததும், முற்றி முதிர்ந்த சிப்பிகளும், முத்துக்களும் மண்டிக் கிடக்கும் மணல் வெளியில், மணி மாளிகை வாழ்

வினராய மாண்பு நிறை மகளிர் கூடிக் கை கோத்துக் குரவை ஆடி மகிழும் மாண்புடையதுமாய விளங்கில் என்ற விழுப்புகழ் நிறைந்த நகர்க்குப் பகைவரான் வந்த கேட்டினைப் போக்கிக் காத்த பெருமையுடையான் நம் மாந்தரஞ்சேரல்இரும்பொறை :

" முதிர்வார் இப்பி முத்த வார்மணல்
கதிர்விடு மணியின் கண்பொரு மாடத்து
இலங்கு வளைமகளிர் தெற்றி ஆடும்
விளங்குசீர் விளங்கில் விழுமம் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய."

(புறம்: ருங)

பாண்டிய மன்னர்களுள், தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன் பேராற்றல் வாய்ந்தவனுவன்; அவனைப் பகைத்தார் எவரும் அழியாது உயிர்பிழைத் தாரல்லர்; அத்துணை ஆற்றல் உடையான் அவன்; தலை யாலங்கானப் போரில், அவனால் வெற்றிகொள்ளப்பட்டோ ருள், சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையும் ஒருவனுவன்; எனினும், அவனின் ஏனைப் பகைவர்களைப் போல் இவன், அவனால் அழிவுற்றானல்லன்; அழிவுறாது உயிர் பிழைத்தது மட்டுமன்று; தன்னைப் பிடிப்பார் அகழ்ந்த குழியிலே வீழ்ந்த களிறு, தன் கோட் டால் அக் குழியைக் குத்தித் தூர்த்துக் கரையேறித் தன் இனத்தோடு சேர்ந்து இன்புற்றாற்போல், இரும்பொறையும், அவன் தன்னை அடைத்து வைத்திருந்த சிறையினின்றும் தன் ஆற்றலால் தப்பி வெளிப்போந்து தன் அரசு கட்டில் ஏறினான் எனின், இவன் பேராற்றல் வாய்ந்தவன் என் பதில் பிழையுண்டோ?

" மாப்பயம்பின் பொறை போற்றாது,
நீடுகுழி அகப்பட்ட
பீடுடைய எறுழ்முன்பின்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு

நீபட்ட அருமுன்பின்
பெருந்தளர்ச்சி பலர்உவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர் நாப்பண் மீக்கூறலின்.'' (புறம்: கஎ)

யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மற்றொருகால், இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியோடு போரிட்டான்; இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியும், பேரரசர் பலரை வெற்றிகொண்ட பேராற்றல் வாய்ந்தவனே எனினும், அவனைப் பெருஞ்சேரல் இரும்பொறை எளிதில் வெற்றிகொண்டிருப்பன்; ஆனல், பெருநற்கிள்ளி தன் படைத் துணையாகப் பெருவீரன் ஒருவனைப் பெற்றுவிட்டான்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டதுமான நாட்டை, மலையர் அல்லது மலையமான்கள் என்பார் ஆண்டு வந்தனர்; அவருள் திருமுடிக்காரி என்பவன் சிறந்தவனாவன்; தேர்வண் மலையன் எனவும் அழைக்கப் பெறும் இவன் பேராற்றல் வாய்ந்தவனாவன்; தனக்குரிய முள்ளூர் மலையினைக் கைப்பற்றக் கருதி வந்த ஆரியப்படையை அலறத் தாக்கி அழித்துத் துரத்திய ஆண்மையாளன்; கொல்லி மலைக்குரிய வல்வில் ஓரியை வென்ற வீரம் செறிந்தவன்; பகைவர் நாட்டுப் பசுநிரைகளைக் கவர்ந்து வருவதில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லா உரனுடையவன்; பேரரசர் மூவர்க்கும் படைத்துணைபோகும் பெரும்படை வலியுடையான்; இத்தகைய யானைப்படைத் துணையாக் கொள்வதில், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முந்திக்கொண்டான்; அவன் பகைவர் பக்கம் படைத்துணையாகிவிடவே, மாந்தரஞ்சேரல் இரும்பொறையால், சோழனை வெற்றிகோடல் இயலாது போயிற்று; தோற்றுவிட்டான்; காலில் கழல் ஒலிக்கக் களம் புகுந்து கடும்போர் ஆற்றி வெற்றிகொண்ட தேர்வண்மலையன், சோழனுக்குத் துணை வராதிருந்தால், அச் சோழனை வெற்றிகோடல் எளிதில் முடிந்திருக்கும்; வென்றோன் சோழன் அல்லன்; "தேர்வண்மலையனே" என மாந்தரஞ்

சேரல் இரும்பொறை கூறுவதைப் போன்றே, "வென்றேன் யான் அல்லன்; தேர்வண்மலையனே" என வெற்றி கொண்ட பெருநற்கிள்ளியும் கூறுகின்றான் எனின், இப்போரில், இரும்பொறை பெற்ற தோல்வி, உண்மைத் தோல்வியாகாதன்றோ!

"குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்து அட்டு வென்றோனும், நிற்கூறும்மே,
'வெலிஇயோன் இவன்' எனக்;
'கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமர்தாங்கிய
வல்வேல் மலையன் அல்லனாயின்,
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கு' எனத்
தோற்றோன் தானும் நிற்கூறும்மே,
'தொலைஇயோன் இவன்' என." (புறம்: கஉரு)

மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மாவீரர் மரபில் வந்தோனாதலின், இத் தோல்வியாலாயதுயர் அவன் உளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது; விரைந்து வினையாற்றியிருந்தால், அதற்கேற்ற சூழ்நிலையும் வாய்த்திருக்குமாயின், வெற்றி வேந்தனாக வாழ்ந்திருக்கலாம்; தேர்வண்மலையன் நம்பால் நின்று போர் உடற்றியிருப்பின், நமக்கேயன்றோ வெற்றி! அவன் துணை நமக்குக் கிடைக்காமற் போயிற்றே! இவ்வேளை, கபிலர் ஈண்டு இருந்திருப்பின், அவன் துணை நமக்கேயன்றோ கிடைத்திருக்கும்! கபிலர்பால் பெருமதிப்புடையான் தேர்வண்மலையன்; அவர் சொற்கு மறுசொல் கூறியிரான்; அவர் நம்பாலும் அன்புடையவராவர்; ஆதலின், அவன் துணை நமக்கே எய்துமாறு கூறியிருப்பர்; அவனும், அவன் உரையேற்று நமக்கே துணை வந்திருப்பான்; வெற்றி நமக்கே உண்டாகியிருக்கும்; ஆனால், அந்தோ! அவர் இவ்வேளை இல்லாமற் போயினரே; அவர் இருந்திருப்பின் எத்துணை நன்றாம்!" என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்தினான்; என்னே அவன் உள்ளம்!

"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்று உளனாயின் நன்றுமன்." (புறம். ருஅ)

இவ்வாறு, ஆண்மையும், அறிவுடைப் பெருமக்கள் பால் கொள்ளும் பெருமதிப்பும் அவன்பால் பொருந்தி யிருப்பதால், அவன்புகழ் பெரிதாயிற்று; கடலாழமும், ஞாலத்தகலமும், திசைகளும், வானமும் அளந்து காணற்கு அரிய என்ப; அவற்றை அளந்தறிதலும் ஒரு காற்கூடும். மாந்தரஞ்சேர லிரும்பொறைபால் அமைந்து கிடக்கும் அன்பு, அருள், அறிவு ஆகிய இப்பண்புகளையும், இப்பண்புகளால் அவனுக்கு உண்டாம் புகழையும் அளந்து காணல் இயலாது, அவன்புகழ் பாடற்கும் அடங்காது விரிவதாயிற்று; விரித்து உரைக்கப் புகின், உரைக்க உரைக்க விரிந்து கொண்டே போவதாயிற்று; தொகுத்து உரைக்கப்புகின், அத்தொகுப்பினுள் அடங்குவதும் அரிதாயிற்று; இதனால், அவன்புகழ் பாடமாட்டாது வருந்தினர் புலவரெல்லாம், என்னே அவன் புகழ்!

"இருமுந்நீர்க் குட்டமும்,
வியன் ஞாலத்து அகலமும்,
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்தறியினும், அளத்தற் கரியை
அறிவும், ஈரமும், பெருங்க ணோட்டமும்."
(புறம்: உ0)

"விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்;
மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கு ஒருதலை
கைம்முற் றலநின் புகழே." (புறம்: ருஅ)

இவ்வாறு பெருவாழ்வு வாழ்ந்த மாந்தரஞ்சேரல் இரும்பொறைபால் மாறா அன்புகொண்டு வாழ்ந்த புலவர் பலராவர்; அவருள், குறுங்கோழியூர்கிழார், கூடலூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார் முதலிய மூவரும் குறிப் பிடத்தக்கவராவர்; இவருள், கூடலூர் கிழார், ஐங்குறு

நூறு தொகுக்கத் தன்னோடு துணைநின்றான் மாந்தரன் என்பதால், அவர் அனைவரினும், அவன்பால் பேரன்பு கொண்டு வாழ்ந்தார்; ஒருநாள், விண்மீன் ஒன்று, வானின் நீங்கி வீழ்வதைக் கண்டார்; கூடலூர் கிழார் வான நூல் வல்லவர்; அன்றைய வீழ்ச்சியால், நாடாளும் நல்லரசன் ஒருவன் அன்றைக்கு ஏழாம்நாள் இறந்து விடுவன் என் பதை அறிந்தார்; மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு என்ன தீங்குநேருமோ என அஞ்சினார்; அவன் நோயின்றி வாழ விரும்பினார்; ஆனால், அந்தோ! ஏழாம்நாள் அன்று, அரசன் இறந்தே போனான்; பிரிவுத்துயர் பொறாது, புலவர் கள் புலம்பி அழுதனர்:

"ஒருமீன் வீழ்ந்தன்றால் விசும்பினானே,
அதுகண்டு, யாமும், பிறரும் பல்வேறு இரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்,
நோயிலனாயின் நன்றுமன் தில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
அஞ்சினம்; எழுநாள் வந்தன்று; இன்றே,
..............................................
மேலோர் உலகம் எய்தினன்." (புறம்: உ௨௯)

## உரு. வஞ்சன்

சேரவேந்தர் வழிவந்தாருள் வஞ்சனும் ஒருவன்; இவன் பெயர் அஞ்சன் எனவும் அழைக்கப் பெறும்; வஞ்சன், பாயல் நாடு ஆண்ட பேரரசனுவன்; பண்டு பாயல் நாடு எனப் பெயர்பூண்டிருந்த நாடு, பின்னர் வயநாடு என்று ஆகி, இப்போது வைநாடு என வழங்குகிறது; வைநாடு தாலுக்காவில், அஞ்சுகுன்னு என்ற பெயருடைய தொரு மலையுளது; பாயல் மலைப்பகுதியில், வஞ்சனுக்கு உரியதாய், அஞ்சன்குன்று எனப் பெயர்பூண்டிருந்ததே, இக்காலை அஞ்சுகுன்னு எனத் திரிந்து வழங்குகிறது என்ப. இதனுல், வஞ்சனுக்கு உரிய பாயல்நாடு, வடக்கே வயனுடு வட்டத்திலிருந்து, தெற்கே அஞ்சனுடு முடியப் பரவியிருந்தது என்பது புலனும். இனி, குடகுநாட்டுக் கல்வெட்டொன்று "அஞ்சனகிரி மாளிகை" என்ற ஒரு பெயரைக் குறிப்பிடுகிறது பாயல் நாடாகிய வயனுடு, சென்ற நூற்ருண்டின் இறுதிவரை, குடகுநாட்டோடே சேர்ந்திருந்தது எனக் கூறுவர் வரலாற்றுநூல் வல்லார். இப்போதுள்ள நீலகிரி மாவட்டமும், வயனுட்டோடு சேர்ந்திருந்து கி. பி. 1887-ல் தான் பிரிந்தது; இதனுல், இன்று நீலகிரி என வழங்கும் மலை, பண்டைய அஞ்சனமலையே எனல் பெறப்படும்; இதை ஏற்றுக்கொள்வதாயின், வஞ்சன் ஆட்சி நடந்த இடம், இன்றைய நீலகிரி மாவட்டத்தையும் உள்ளடக்கிய பகுதியாம் என்பது துணியப்படும். (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை: புறநானூறு: பகுதி: 2: பக்கம்: 458, 461.)

வஞ்சன், கொடையும் கொற்றமும் ஒருங்கே உடையவன்; வஞ்சன், தன் மூதூர் மன்றத்தே, பரிசிலரை வரவேற்க அமைத்த, அழகிய மணநாறும் பந்தர்க்கீழ் இருந்து, வருவார் தம் வரிசையறிந்து வழங்கும் வள்ளியோனுவன்; அவனுடைய மூதூர், அரிய அரண்பல அமையப்பெற்றது; அவ்வரண், அவன் பகைவர்க்குப் புலிகள் கிடந்து உறங்கும் கன்முழைஞ்சுகளே போல், பேரச்சம்

விளைவிக்கும் போராற்றல் உடையது; பகைவர் புக அஞ்சும் அவ்வரணுள், ஆடியும், பாடியும், நகையூட்டும் நல்லியல்புடையராய பாணர் முதலாம் இரவலர் எளிதிற் புகுவர். வஞ்சன்பால் காணலாம் இப்பண்புகளைத் திருத்தாமனார் என்ற புலவர் எடுத்துக்கூறிப் பாராட்டி மகிழ்ந்துள்ளார்; அவரே, வஞ்சனுக்குரிய பாயல், பறைபோல் முழங்கும் பல அருவிகளையுடையது எனவும் கூறிப் பாராட்டியுள்ளார்:

"இரவுப் புறம்பெற்ற ஏம வைகறைப்
பரிசிலர் வரையா விரைசெய் பந்தர்
வரிசையின் நிறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகி னல்லது, பகைவர்க்குப்
புலியினம் மடிந்த கல்லளை போலத்,
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
................................................
பறையிசை அருவிப் பாயற் கோவே." (புறம்: ௩௯௮)

கழக வெளியீடு : எசஎ

சங்ககால அரசர் வரிசை - உ.

# சோழர்

ஆசிரியர் :

**புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.**

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Nov., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office* :

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1100.

# பதிப்புரை

நம் செந்தமிழ் மாநிலத்தை ஆண்ட முடியுடை வேந்தர் மூவருள், இரண்டாமவராக ஆன்றோரால் எண்ணப்பட்டோர் சோழ மன்னராவர்.

இச் சோழ வேந்தர் குடியும் கூழின் பெருக்கமும் கொண்டோர்; அஃதோடு, தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும் சேர்ந்த திருவினராவர்.

இவர்தம் வரலாறு கற்றற்கும், கேட்டற்கும், அறிதற்கும் விழுப்பமிக்க மேன்மைத்தாகும். '**சங்ககால அரசர் வரிசை**'யில் முதலாவதாகச் '**சேரர்**' என்னும் பெயரால் சீரிய நூல் ஒன்று அண்மையில் வெளிப்போந்தது; இஃது அதில் இரண்டாவதாகச், '**சோழர்**' என்னும் பெயரால் வெளியிடப்பெறுகின்றது.

இவர் '**இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி**' முதலாக, '**வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி**' இறுதியாக இருபத்தொருவராவர். இச் சோழர் வரலாற்றைப், **புலவர், திரு. கா. கோவிந்தன் எம்.ஏ.** அவர்கள் வரைந்துதவியுள்ளார்கள். இதனையடுத்து இவ்வரிசையில் பாண்டியர் குறுநிலமன்னர் முதலியோர்களின் வரலாறுகளும் விரைந்து வெளிவரும்.

தமிழ் மேன்மக்கள், இவைகளை வாங்கிக் கற்று வரலாற்றுண்மை தெரிந்து, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனக் கொண்டு, உலகம் யாங்கணும் இதனைப் பரப்பி இன்புறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி | 11 |
| உ. | இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி | 16 |
| ௩. | உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி | 19 |
| ௪. | எறுதி திருக்கிள்ளி | 24 |
| ரு. | கரிகாற் பெருவளத்தான் | 26 |
| சு. | குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் | 54 |
| எ. | குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் | 58 |
| அ. | கோப்பெருஞ்சோழன் | 74 |
| கூ. | செங்கணான் | 84 |
| க0. | செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி | 88 |
| கக. | தித்தன் | 92 |
| கஉ. | தூலைபுக்க பெரியோன் | 95 |
| க௩. | தூங்கெயில் எறிந்தோன் | 97 |
| க௪. | நலங்கிள்ளி | 99 |
| கரு. | நல்லுருத்திரன் | 107 |
| கசு. | நெடுங்கிள்ளி | 110 |
| கஎ. | நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி | 116 |
| கஅ. | போரவைக் கோப் பெருநற்கிள்ளி | 119 |
| ககூ. | மாவளத்தான் | 122 |
| உ0. | முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி | 126 |
| உக. | வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி | 128 |

# சோழர்

## தோற்றுவாய்

சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் மூன்றும், மேற்கே உரோமானியப் பேரரசும், கிழக்கே சீனப் பேரரசும் சிறந்து விளங்கிய அக்காலத்திலேயே, அவற்றோடொப்பச் சிறந்து விளங்கிய பழமையும் பெருமையும் பெற்றுத் திகழ்ந்தன. இவ்வரசுகள் இன்ன காலத்தே தோன்றின என்றோ, இன்னரால் தோற்றுவிக்கப்பட்டன என்றோ அறுதியிட்டுக் கூறமாட்டா அத்துணைப் பழைமையுடையனவாம். இவ்வரசுகளின் பழமைபற்றிக் கூறவந்த ஆசிரியர் பலரும், "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி," "படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வரும்குடிகள்" என்றே கூறிச் செல்வாராயினர்.

சேர, சோழ, பாண்டியர் மூவரும், ஒருதாய் வயிற்றில் பிறந்தார் எனவும், அவர்கள் தென்னாட்டில் நாகரிக வளர்ச்சிக்குத் தோன்றுமிடமாகிய தாமிரபரணி ஆற்றின் கரையில், கொற்கையைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்து வந்தனர் எனவும், பின்னர் யாது காரணத்தாலோ, அவர்கள் தம்முள் பிரிந்தனர் எனவும், அவருள் பாண்டியர் ஆங்கேயே தங்கி விட்டனர் எனவும், ஏனை இருவரும் முறையே மேற்கினும், வடக்கினும் சென்று, தங்கள் தங்கள் பெயரால் தனியரசு அமைத்துக் கொண்டனர் எனவும் பழைய வரலாறுகள் கூறுகின்றன.

பழமையும், பெருமையும் பெற்று விளங்கிய மூவேந்தருள் நடுவண் வைத்துச் சிறப்பிக்கப் பெறும் சோழர், கிள்ளிவளவன், செம்பியன், சென்னி என்ற பிற சொற்க

ளாலும் அழைக்கப்பெறுவர். இப்பெயர்களுள், கிள்ளி என்பது தோண்டுதல் எனப் பொருள்தரும் கிள் என்ற சொல்லடியாகப் பிறந்ததாம்; வளவன் என்பது, "காடு கொன்று நாடாக்கிக் குளம்தொட்டு வளம்பெருக்கியோர்", அல்லது வளம்மிக்க நாட்டை ஆள்வோர் என்ற பொருளில் வழங்குவதாம். செம்பியன் என்பது, தன்பால் அடைக்கலம் புகுந்த புறாவின் பொருட்டுத் தலைபுக்க சிபி மன்னன் மரபினர் என்ற பொருளுடையதாம்.

சோழ அரசின் தோற்றமும், தொன்மையும் அறிய இயலாதனவாதலைப் போன்றே, அவர் பெயரின் தோற்றக் காரணமும் அறிய இயலாததாம்; ஆரியர்க்குமுன் தென்னாட்டில் வாழ்ந்த கருப்பு மனிதர் என்ற பொருளில் வழங்கும் கால அல்லது கோல என்ற வடமொழிச் சொல்லினின்றும் வந்தது என்பர் சிலர்; சோளம் விளையும் நாடு "சோள நாடு"; அது சோழநாடு என ஆயிற்று என்பர் மற்றும் சிலர்; திருடன் என்ற பொருளில் வழங்கும் "சோரன்" என்ற சொல்லிலிருந்து, சோழன் என்ற சொல் வந்தது என்பர் வேறு சிலர்.

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர் என்ற சிறப்பு, பாண்டியர்க்கு உரியது என்ற பழைய வழக்குள தெனினும், பாடினோர், பாடப்பட்டோர் வரிசையில் சோழமன்னர் பலர் இடம்பெற்றுள்ளனர் ஆதலாலும், சோழர் தலைநகருள் மிகப் பழையதாகிய உறையூர், புலவர் பலர் தோன்றித் தொழிலாற்றிய இடமாக இருத்தலாலும், தமிழ் வளர்த்த பெருமை, சோழர்க்கும் உரித்து என அறிக.

தமிழகம், தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடகுநாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, சீதநாடு, மலைநாடு, புனல்நாடு எனச் செந்தமிழ் நிலம்சேர் பன்னிருநிலமாகப் பிரிக்கப்பட்டிருப்பவும், "தென்பாண்டி நாட்டார், ஆவினைப் பெற்றமென்றும், சோற்றைச் சொன்றி என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர்

என்றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும், அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும், அருவா வடதலையார் புளியை எகின் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர்'' என நன்னூல் விருத்தியுரைகாரர், அந்நாடுகளில் வழங்கும் தமிழ்ச் சொற்களைத் தமிழின் திசைச்சொற்கள் எனக் கொள்வதையும், சேனாவரையர் போன்ற உரையாசிரியர் பலரும், செந்தமிழ் நிலமாவன வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம் எனக் கூறுவதையும்,

> "முன்னூறுந் தென்பாண்டி முதற்புனல் நாடீறான
> பன்னிரண்டு நாடும் அப்பால் நாடே;—அந்நாட்டின்
> வையை, கருவை, மருதாறு, மருவூர் நடுவே
> ஐயநீ வாழும் அரண்மனையோ?"

எனத் தமிழ்விடுதூது கூறுவதையும் ஒருங்கு நோக்கின், தமிழ்ச் சங்கம் தழைத்து வாழ்ந்த பாண்டிநாடே செந்தமிழ் நாடாகும் என்ற பொதுக்கொள்கைக் கிடையில், செந்தமிழ் நாடாம் சிறப்பு, சோணாட்டிற்கும் உண்டு என்ற கொள்கையும் நிலவியிருந்தது என்பது புலனாம்.

சோழரும், அவர்க்குரிய சோணாடும், பண்டைத் தமிழ்நூல்களில் பாராட்டப் பெற்றிருத்தலோடு, பிற நாட்டுப் பேரறிஞர் பலராலும் பெருமைப் படுத்தப் பெற்றுள்ளன. கி. பி. 81-96-ல் எழுதப்பெற்ற "பெரிபுளூஸ் மாரிஸ் எரித்ரியா'' என்ற நூலில், கொற்கையை அடுத்து, கடலைச் சார்ந்து, "கடற்கரைநாடு'' என ஒன்றும், "அர்கரு'' என்ற உள்நாடு ஒன்றும் இருப்பதாகக் கூறப்பட்டுளது. இவையிரண்டும் முறையே, கடலைச் சார்ந்து விளங்கிய புகாரையும், உள்நாட்டு ஊராகிய உறையூரையும் தலைநகர்களாகக் கொண்டு அமைக்கப் பெற்ற இரு சோழ அரசுகளையே குறிக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும், அரை நூற்றாண்டு கழித்து வாழ்ந்த மற்றொரு நில நூல் பேராசிரியராகிய தாலமி என்பார், காவிரிகடலோடு

கலக்குமிடத்தில் இருக்கும் காவிரிப்பூம் பட்டினத்தைக் "கபெரீஸ்" எனவும், நாகப்பட்டனத்தை "நிகாமா" என வும், சோழநாட்டுநகர் உறையூரை "ஓர்துரா ரெகியா சோரநடி" எனவும் அறிந்து தம்நூலில் குறித்துள்ளார். கி. பி. முதல்நூற்றுண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட, "மிலிந்தா அரசனுடைய கேள்விகள்" என்ற புத்தநூல் ஒன்று, அக்காலக் கடற்கரைப் பட்டினங்களுள் சிறந்தன வாகக் "கோளபட்டினம்" என்ற ஒன்றைக் குறிப்பிடு கிறது. ஈண்டுக் கூறிய கோளபட்டினம், காவேரிப்பட் டினமே யாம்.

சோணுடு, செந்தமிழ் நாட்டினைச் சேர்ந்த பன்னிரு நிலங்களாகப் பண்டைக் காலத்துக் கருதப்பட்ட பன்னிரு நிலங்களில், புனல்நாடு, பன்றிநாடு, அருவாநாடு என்பவற் றைக் கொண்ட ஒரு பெருநாடாம். அஃது, இக்காலை, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களையும், வட, தென்னுர்க்காடு மாவட்டங்களின் பகுதிகளையும் உள் ளடக்கிய நிலப்பகுதியாகும். சோணுட்டெல்லை இஃது என அறிவிக்கும் பழைய வெண்பா ஒன்றும் உண்டு.

"கடல் கிழக்குத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையும்—வடதிசையில்
ஏணுட்டு வெள்ளாற் றிருபத்து நாற்காதம்
சோணுட்டிற் கெல்லை யெனச் சொல்."

"சோழ வளநாடு சோறுடைத்து"

என்ற சிறப்பினை உடையது சோணுடு; அச்சிறப் பிற்குக் காரணமாய் இருப்பது, தன் போக்கின் பெரும் பகுதியைச் சோழநாட்டில் பெற்றிருக்கும் காவிரிப் பேராறே; இதனால், சோணுடு, "காவிரிநாடு", "காவிரிசூழ் நாடு", "காவிரி புரக்கும்நாடு" என்றெல்லாம் அழைக்கப் பெறுதலும் உண்டு. காவிரி வான்பொய்ப்பினும் தான் பொய்யாப் பெருமலையைத் தன் பிறப்பிடமாக உடையது; அதனால், பெருவறன் ஆகிய பண்பில் காலையும், நுரைத்த தலையுடன் எங்கும் பரந்து பாய்ந்து பொன்னைக் கொழிக்

கும் காவிரி வற்றாது பாய்வதால், அந்நாட்டு உழவர், ஏற்றம் முதலாயின கொண்டு நீர் இறைக்கவேண்டிய இன்றியமை யாமையும் இலராவர். காவிரியோடு, மற்றும் பல பேராறு கள் கலந்து பாய்ந்து, அந்நாட்டை வளமாக்குவதால், நீர் வளம் நிரம்பியது சோணுடு என்ற கருத்தில், அந்நாட்டை "நீர்நாடு" எனவும், "புனல்நாடு" எனவும் பெயரிட்டு அழைப்பர்.

"தென்னுட்டு நெற்களஞ்சியம் சோணுடு," என்ற சிறப்பினை இன்று பெற்றிருப்பதேபோல், அன்றும் பெற் றிருந்தது அந்நாடு என்ற உண்மையை,

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு" (பொருநர் : உசசு-உசஅ)

"ஒரு பிடி படியும் சீறிடம்
எழு களிறு புரக்கும் நாடு" (புறம் : ௪0)

என்ற பத்துப்பாட்டு, புறநானூற்று அடிகளான் உணர்க.

நீர்வளம் மிக்கமையால், சோணுட்டுக் கழனிகள் என்றும் விளைவறா; விளைவு அறாமையானும், வேலி ஆயிர மாக விளைவதானும், விளைந்த நெற்கூடுகள், மலைக்குன்று களைப்போல் அந் நாடெங்கும் காட்சி தரும்; செந்நெற் கதிர்களைத் தின்ற எருமைக் கன்றுகள், உண்ட இளைப்புத் தீர, அந்நெற் கூடுகளின் நிழலிலே துயில் கொள்ளும்; சேற்றில் புரண்டும், உடற்றினவு நீங்கப்பெறா எருமைகள், அந் நெற்கூடுகளில் தம் உடலை உராய்வதால், கூடுகளின் புரிநெகிழ, உட்கிடக்கும் உணவுப் பொருள்கள் புறத்தே சொரியும்; ஆலையிலிட்டுப் பிழிந்தெடுத்த கருப்பஞ் சாற் றைப் பாகுஆக்கிக் கொள்வான்வேண்டி கொளுத்திய தீயால், அண்மையில் உள்ள கழனிகளில் மலர்ந்திருக்கும் நெய்தற் பூக்கள் வாடிக் கருகும். கடலைச் சார்ந்த சிற்றூர் களைச் சூழஉள்ள கழிகளில் கடற்பொருளாய உப்பை உள்நாட்டிற்குக் கொண்டுசென்று விற்று, அதற்கு விலை

யாகப்பெற்ற நெல்லொடு வந்த படகுகள் பல, வரிசை யாகப் பிணிக்கப்பெற்றிருக்கும்.

வீட்டின் முன்னிடந்தோறும் உணவுப் பொருள்களை உலர்த்திவிட்டுக் காவல்புரியும் மகளிர், அப் பொருள்களை உண்ணவரும் கோழி முதலாம் பறவைகளை ஓட்டுவான் வேண்டித் தம் காதணிகளையே கழற்றி அவற்றின்மீது எறிவர்; அவர்கள் அவ்வாறு எறிந்த குழைகள், நடை பயில் சிறுவர், அவ் வழியாக ஓட்டிவரும் மூக்கால் சிறு தேரைப் போகவொட்டாமல் தடை செய்யும்; அத்துணைச் சிறந்த செல்வமுடையது சோணுடு; சிற்றூர் வாழ் ஆடவர், தம் தொழில் முடிந்த ஓய்வுக் காலங்களில், இருவின் கூட் டையும், ஆமைப் புழுக்கலையும் உண்டு, ஊர் மன்றங்களில் ஒன்றுகூடித் தம் தம் ஆற்றல் தோன்ற ஒருவர் மெய், ஒருவர் மெய்யொடு பொருந்த மற்போர் புரிந்தும், ஆட்டுக் கிடாய்ப் போர், கோழிப் போர் முதலாயின கண்டும் களித்து வாழ்வர். இவ்வாறு வளம்மிக்க சிற்றூர் பல நிறைந்தது சோணுடு.

சோணுட்டு ஆடவரும், மகளிரும் தம் உடற்பிணி போகக் கடல்நீரில் குளித்துப், பின்னர்க் கடல்நீர் பட்ட தால் உண்டாகிய உப்புப்போன்ற மாசு போகுமாறு கடலைச் சார்ந்துள்ள நல்ல நீர்நிலைகளில் படிந்து ஆடியும் வருவர்; அவர்கள், மாலைவேளையில் பாடல் ஓர்ந்தும், நாடகம் நயந் தும், வெண்ணிலவின் பயன் துய்ப்பதற்காக மாகாவிரி மணலினும், கடற்கரைச் சோலைகளினும் தங்கித் துயில் கொள்வர். சோணுட்டார், பகலில் உடுத்த பட்டாடையை நீக்கிவிட்டு, இரவிற்கான மெல்லிய துகில் உடுத்துமளவு உயர்ந்த நாகரிகம் உடையவராவர்.

சோணுட்டு நகரங்களாகப் புகார், உறையூர், அழுந் தூர், ஆவூர், வெண்ணில், இடையாறு, குடந்தை முதலா யின பண்டை இலக்கியங்களுள் கூறப்படினும், அவற்றுள் சோணுட்டுத் தலைநகரங்களாகச் சிறப்புப் பெற்றன புகாரும், உறையூருமேயாம்.

"சோழன் மூதூர்ப் பேராச்சிறப்பின் புகார்," என்ற சிலப்பதிகார அடிகளான், புகார் நகரின் பழமையும், பெருமையும் புலப்படும்; இந்நகர், "பதியெழு வறியாப் பழங்குடிகளேயும், பொதுவறு சிறப்பினையும்," உடையது எனப் பாராட்டுவர். இது, காவிரிப்பூம் பட்டினம், எனவும் அழைக்கப்பெறும். காவிரியாறு கடலொடு கலக்குமிடத்தில் அமைந்திருப்பதால், கடல் வாணிபம் வளரப் பெருந்துணையாம் எனக்கண்ட கரிகாற்பெருவளத்தான் காலத்தே, சோணாட்டுத் தலைநகராக ஆக்கப்பெற்றது. ககந்தன் என்ற மன்னன் இருந்து ஆண்டதால், இந்நகர் "காகந்தி," என்றும் அழைக்கப்பெறும்; இந்நகர்க்குச், "சம்பாபதி," என்ற பெயரும் உண்டு. "கமாரம்," எனப் பெரிப்புளூஸ் ஆவர்களாலும், "கபேரிஸ்," எனத் தாலமி அவர்களாலும் அழைக்கப்பெற்றது புகாரே. புகார் புறநகர், அகநகர் என்ற இரு கூறுடையதாகும். புறநகர், மருவூர்ப்பாக்கம் எனவும், அகநகர், பட்டினப்பாக்கம் எனவும் வழங்கப்பெறும். இவ்விரு பகுதிகளுக்கு மிடையில், மரங்கள் செறிந்த சோலையில், அம் மரங்களையே தூண்களாகக்கொண்டு கட்டப்பெற்ற கடைகளையுடைய நாளங்காடி விளங்கும். ஆங்குப் பொருளைக் கொடுப்போர் ஓதையும், அவற்றைக் கொள்வோர் ஓதையும் எப்போதும் ஓயாது ஒலிக்கும்.

மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் இரண்டனுள், கடலைச் சாரவுள்ளது மருவூர்ப்பாக்கமாம்; ஆங்கே கடலிற் செல்லும் கலங்களுக்கு இரவில் வழிகாட்டியாக விளங்கும் கலங்கரை விளக்கமும், கலங்களில் வந்த பொருள்களுக்கும், கடலிற்செல்ல வந்து குவிந்துகிடக்கும் பொருள்களுக்கும் உரிய தீர்வையை வரையறுத்துக் கடமை கொள்ளும் ஆயத்துறைகளும், சுங்கம் இறுத்தபின்னர், சோழமன்னரின் இலச்சினையாகிய புலி பொறிக்கப்பெற்ற பண்டப்பொதிகளைச் சேர்த்துவைக்கும் பண்டசாலைகளும், கிடங்குகளும், உயர்ந்த மேடைகளும் அமைந்துள்ளன. இவற்றை யடுத்து, பொருளீட்டும் முயற்சியுடையாராய்க் கடல் கடந்துவந்த யவனர் முதலாம் பிற

நாட்டு மக்கள் தம்முள் பகையின்றிக் கலந்து உறவாடி வாழும் இடங்கள் அமைந்துள்ளன. வண்ணம், சுண்ணம் முதலாய வாசனைப் பொருள்களை விற்போரும், பட்டானும், மயிரானும், பருத்தி நூலானும் ஆடை முதலாயின நெய்யும் சாலியரும், முதிரை முதலாம் கூலங்களைக் குவித்து விற்கும் கூலவணிகரும், பிட்டு, அப்பம், கள், மீன், கடல் உப்பு, வெற்றிலை, இறைச்சி ஆக இப்பொருள்களை விற்போரும், கருங்கைக் கொல்லர், செம்பு செய்குநர், வெண்கலக் கன்னார், பொன்செய் கொல்லர், மண்பாவை செய்வோர், ஓவியக்காரர், தையல் தொழிலாளர் முதலாய தொழிலாளரும், பாணர், குழலர் முதலாய இசையாளரும், பிறர் ஏவியன ஏற்றுச் செய்யும் பணி செய்வோரும், தனித் தனியே வாழும் தெருக்கள் பல நிறைந்து விளங்கும்; பொதுவாக நோக்கின், வாணிபம் முதலாயின செய்து பொருள் ஈட்டும் மத்திய வகுப்பு மக்களும், உடல் வருத்தித் தொழிலாற்றி வயிறு வளர்க்கும் பிற்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் வாழும் இடம் மருவூர்ப்பாக்கமாம் எனின் பொருந்தும்.

அணுகுதற்கரிய காவல் அமையப்பெற்று, கடற்கரையைச் சார்ந்து விளங்கும் பெரிய பண்டசாலையின்கண், நிலத்திலே இருந்து கலங்களில் ஏற்றுவதற்காகக் கொணர்ந்த உள்நாட்டுப் பொருள்களும், கலத்திலிருந்து நிலத்தில் இறக்கப்பட்ட வெளிநாட்டுப் பொருள்களும் வரம்பறியாவண்ணம் வந்து குவிந்துகிடக்கும்; அவ்வாறு வந்து குவிந்துள்ள அப் பொருள்கள், அரசனுக்குரிய பொருளைப் பிறர் கொள்ளாவண்ணம், ஒருபொழுதும் மடிந்திராது, நாடோறும் இளைப்பின்றி நின்று காக்கும், புகழ் நிறைந்த சுங்கம் கொள்வோரான், உரிய சுங்கத்தில் குறைவு நேராமை குறித்து மதிப்பிடப்பெற்று, அரச இலாஞ்சனையாகிய புலி பொறிக்கப்பெற்று மலைபோல் அடுக்கப்பெறும்.

காற்றின் இயக்கத்தால், கடல்வழியாக வந்த கலங்கள் கொணர்ந்த, விரைந்த செலவினையுடைய குதிரைகளும்,

கரிய மிளகுப்பொதிகளும், மேருமலையில் தோன்றிய மணியும், பொன்னும், பொதியமலையில் தோன்றிய அகிலும், ஆரமும், தென்கடல் முத்தும், கீழ்க்கடல் பவளமும், கங்கை பாயும் வடநாட்டினின்றும் வந்த யானை முதலாயினவும், காவிரி யாற்றால் விளைந்த பல்வேறு பொருள்களும், கடாரமாகிய பர்மாவினின்றும் வந்த கணக்கற்ற பொருள்களும் ஆகிய அரிய, பெரிய பொருள்கள் எல்லாம் அளவு அறியமாட்டாமல் நிறைந்து வளம் மிகுந்த கடைவீதிகளில், அப் பொருள்களை விற்போர், பழியஞ்சும் பண்பினர் ஆகவே, பொருள்களை வாங்குவோர்பால், அப் பொருள்களின் தன்மை, விலை, தமக்கு வரும் ஆக்கம் இவற்றை உண்மையாகக் கூறியும், பொருள்களைக் கொள்ளும்போது தாம் கொடுக்கும் அப்பொருளுக்குரிய விலைக்கு மேற்பட்ட பொருள்களைக் கொள்ளாமலும், பொருளைப் பிறர்க்கு விற்கும்போது, அப் பொருட்கு விலையாகப் பெற்றதற்குக் குறைவாகக் கொடுக்காமலும், தம் பொருளையும் பிறர்பொருளையும் ஒன்றெண மதித்து விற்பர்.

மகதச் சிற்பரும், மராட்டக் கொல்லரும், யவனத்தச்சரும் கூடிக் கண்ணைக் கவரும் வனப்புடன் அமைத்த அரசன் கோயில் பட்டினப்பாக்கத்தே விளங்கும்; அரண்மனையைச் சூழ, கடும்பரி கடவுநர், களிற்றின்பாகர், நெடுந்தேர் ஊருநர், கடுங்கண் மறவர் முதலாய நால்வகைப் படையாளர் வாழும் தெருக்கள் அமைந்துள்ளன; தேரோடும் தெருவும், பெரிய கடைத் தெருவும் இருப்பதும் ஈண்டே. மறையோர், வீழ்குடி உழவர், மருத்துவர், காலக் கணிதர் முதலியோர் தனித்தனியே வாழும் தெருக்களும் உண்டு. முத்துக் கோப்போர், வளையல் அறுப்போர், நாழிகைக் கணக்கர், காவற்கணிகையர், ஆடல் கூத்தியர், நகைவேழம்பர் முதலியோர் வாழும் இடங்களும் இங்கேதான். ஆக, பட்டினப் பாக்கம், அரசனும், அவன் குழுவும், அரசனால் மதிக்கத் தக்க மாநிதி உடையாரும், அவர்க்கு இன்பம் ஊட்ட ஆவன புரிவோரும் ஆகிய உயர் வகுப்பு மக்கள் வாழிடமாம் எனல் பொருந்தும் என்க. கீழே வீழ்ந்து

கிடக்கும் வெண்சிறு கடுகும் விளக்கமாகத் தெரியுமளவு பேரொளி வீசும் விளக்குகள் பல, அந் நகர்த் தெருக்கள் எங்கும் நின்று சுடர் விடும்.

உறையூர், சோழர் தலைநகர்களுள் மிக மிகப் பழமை யானதாம்; இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் காலத்தில் சோழர்க்குத் தலைநகராய் விளங்கியது உறையூர் ஒன்றே; மூவேந்தர் தலைநகரைக் குறிப்பிடுங்கால், "வஞ்சியும் வறிதே"; "மதுரையும் வறிதே", "உறந்தையும் வறிதே" எனச் சோழர் தலைநகராகிய உறந்தை ஒன்றையே குறிப்பிடுதல் காண்க. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் காலத்தே, சோழர் தலைநகர் இரண்டாக விளங்கிற்று; இதை, "மாடமதுரையும், பீடார் உறந்தையும், கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல் புகாரும்" எனச் சோழர் தலைநகராகப் புகாரையும், உறந்தையையும் குறிப்பிடல் காண்க. கரிகாலன் காலத்தே, உறந்தை புதுப்பிக்கப் பெற்றது எனப் பட்டினப்பாலை கூறுகிறது. உறந்தைக்குக் கோழி என்றொரு பெயரும் உண்டு; உறந்தையின்கண் ஓர் அறங்கூர் அவை உண்டு; அதில் அறம் நின்று நிலைபெறும். உறையூர் புலவர் பலரைப் பெற்ற பெருமை சால் புகழ் உடையது.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய சோணாட்டினைப் படைப்புக் காலந் தொடங்கி ஆண்ட அரசர் பலராவர்; அவருள் கடைச் சங்ககாலப் புலவர்கள் காலத்தே வாழ்ந்து, அவர்க்கு வாழ்வளித்துப் புகழ்பெற்ற அரசர்களையும், அப்புலவர் தமக்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்து, அவர் தம் பாராட்டைப் பெற்றுப் பெருமைகொண்ட அரசர்களையும், தமிழ் மக்கட்கு அறிமுகம் செய்யும் பணியினை மேற்கொண்டு வருவதே இந்நூல்.

# க. இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளி

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சங்ககாலச் சோழ வேந்தர்களுள், காலத்தால் பிற்பட்டோனுவன்; இவன் சோனுட்டு அரியணையில் அமர்ந்திருந்த காலத்தே, பாண்டி நாட்டில் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதியும், சேர நாட்டில் மாரிவெண்கோவும் மன்னர்க ளாய் மணிமுடி பூண்டிருந்தனர்; பேரரசு பலவற்றை அழித்துப் பெருமை கொண்டோரே இராசசூய வேள்வி இயற்றுதல் கூடும் என்ப; அத்தகு வேள்வி இயற்றிய பெரு வேந்தனுவன் இப் பெருநற்கிள்ளியும். அஃது இவன் பெயரால் புலப்படுகிறது. ஆகவே, இவன், அக்கால அரசுகள் பலவற்றை அழித்த ஆண்மையாளன் என்பது புலனும். வேந்தர் பலரை வென்று, இவ்வாறு வீறுகொள்ளுதற் கேற்ற நாற்பெரும் படைகளை நனிமிகப் பெற்றிருந்தான் இப்பெருநற்கிள்ளி.

உலோச்சனுர் எனும் உயர்தனிப் புலவர், "புள்ளி கள் நிறைந்த நெற்றியும், பூண்செறிந்த கோடும் கொண்ட யானைப் படையும், காற்றெனக்கடுகும் குதிரைப் படையும், ஒலிக்கும் மணியும் ஓடும் உருளையும் ஆடும் கொடியும் கொண்ட தேர்ப்படையும், விரைவும் வன்கண்மையும் வசை யில் புகழும் பொருந்திய பெரு வீரர்களும் நிறைந்த அவன் நாற்படை, அவன் நண்ணுரை நிலைகுலைக்கும் நீர்மையவாம்" எனக் கூறுவர்.

> "புகர்நுதல், அவிர் பொற்கோட்டு யானையர்;
> கவர் பரிக்கச்சை நன்மாவினர்;
> வடிமணி, வாங்குருள
> கொடிமிசைநல் தேர்க்குழுவினர்;
> கதழ், இசை, வன்கணினர்;
> வாளின் வாழ்நர் ஆர்வமொடு ஈண்டிக்
> கடல்ஒலி கொண்ட தானை..' (புறம்: ௬௭௭)

போரில் பிறர்துணை வேண்டாப் பீடுடையனுய பெரு நற்கிள்ளி, இவ்வாறு படை வலியாலும் பாடுற்று விளங்கி

னன்; இப்படைத் துணைக்கொண்டு அவன் அழித்த பகைவர் நாடுகள் பலப்பல; பகைவர் நாட்டு வயல் விளைபொருள்களைக் கொள்ளையிட்டும், அவர் மனையிடத்து மரங்களை அழித்து விறகாக எரித்தும், காவல் அமைந்த அவர் நாட்டுக் குடிநீர்க் குளங்களில் தன் களிறுகளைக் குளிப்பாட்டியும், ஊரும் சேரியும் ஒருங்கு அழிய எரியூட்டியும், அப்படை ஆங்கு விளைத்த அழிவுகள் அம்மம்ம! கொடிது! கொடிது!! செஞ்சுடர் ஞாயிற்றுச் செந்நிறம் போலும் செந்தீச் சூழ்ந்து எழ, எரிந்து அழிவுற்ற அந் நாடுகளின், காணக் கண் கூசும் காட்சியைக் காட்டி, அவன் பேராற்றலைப் பாராட்டியுள்ளார் பாண்டரங்கண்ணனார் எனும் புலவர்ப் பெருந்தகையார்.

"முனைமுருங்கத் தலைச்சென்று, அவர்
விளைவயல் கவர்பு ஊட்டி,
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறு படீஇ
எல்லுப் படவிட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட இறுக்கும் வரம்பில்தானை." (புறம்: கசு)

ஆற்றல்சால் அரசனாய் விளங்கிய இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியொடு நட்புபூண்டு வாழ்தலே நலன் நல்குவதாகும்; பகைத்துக்கோடல் பாழுறு செயலாம் எனும் பேரறிவு இழந்து, பெருநற்கிள்ளியொடு பகைகோடலை மேற்கொண்டிருந்தான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எனும் சேர வேந்தன்; அவ்வாறு பகைத்தானைப் போரிட்டு வெற்றிகொண்ட நம் வேந்தன், வழி வழியாகச் சோழர்க்குத் துணைபுரியும் தேர்வண்மலையன் எனும் முள்ளூர் மன்னன், இப் போரினும் தனக்குப் படைத்துணையளித்த அருஞ் செயலை அகம் மிக மகிழ்ந்து பாராட்டியுள்ளான்; போராற்றலும் பெரும் படையும் உடைய பெருவிறற்கிள்ளி, தேர்வண்மலையன் செய்த துணையைச் சிறிது எனக் கருதாது, பெரிதெனை மதித்துப் பாராட்டும் பேருள்ளம் நம்மனோரால் பாராட்டற்குரியதாமன்றோ? மாந்தரஞ் சேரல்

இரும்பொறையைவெற்றிகொண்டோன் தானாகவும், 'அவனை வென்ற சிறப்பு எனக்குரித்தன்று; அது தேர்வண்மலையற்கே உரித்து; உண்மையில் சேரலைச் செருவென்றோன் அவனே' எனக் கூறும் பெருநற்கிள்ளியின் பேருள்ளம், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனாராலும் பாராட்டப் பெற்றுள்ளது!

> "குன்றத் தன்ன களிறு பெயரக்
> கடந்தட்டு வென்றேனும் நிற்கூறும்மே,
> 'வெலிஇயோன் இவன்' என." (புறம்: கஉ௫)

ஆண்மையும், ஆற்றலும் அமைவரப்பெற்ற பெருநற்கிள்ளி, தன்னைப் பாடிவரும் பாணர், பொருநர் முதலாம் இரவலர் தமக்குப் பொன்னும் பொருளும் எண்ணற்றன ஈயும் ஈடிலாக் கொடைக் குணமும் உடையனாவன்; தன்னைப் பாடி வருவார்க்கு, மலையகத்தே பெற்ற மணிகளையும், காட்டகத்தே கண்டெடுத்த பொற்கட்டிகளையும், கடலில் குளித்துக்கொண்ட முத்துக்களையும், பல்வேறு வகையான ஆடைகளையும், அமிழ்தம் போலும் தேன் வகைகளையும், கனவிற் கண்டாங்குக் கணக்கின்றி நனவில் நல்கும் நற்புகழ் உடையான் இந் நற்கிள்ளி என அவன் புகழ் பாடும் புலவர் உலோச்சனார் உரையால், அவன் உயர்கொடைச் சிறப்பு உணர நிற்றல் காண்க!

> "மலைபயந்த மணியும், கடறுபயந்த பொன்னும்,
> கடல்பயந்த கதிர் முத்தமும்,
> வேறுபட்ட உடையும், சேறுபட்ட தசும்பும்
> கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப,
> நனவின் நல்கியோன் நசைசால் தோன்றல்."
> (புறம்: ௩எஎ)

பகைவர் நாடுகளைப் பாழாக்கிப் பெரு மகிழ்வு கொள்ளும் போர்வெறியுடையனாய இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, அப்பகைவர் நாட்டில் வாழ்வார் சிலரோடு பகைநீங்கி, நட்புப்பூண்டு வாழும் நல் உள்ளமும் உடையனாவன்; அரசரெல்லாம் தம் ஆட்சிக்கீழ் வாழும் மக்கள் தம் நல்வாழ்வில் நாட்டம் கொள்ளாது, தம் வீறும் வெற்றி

யுமே விழுமியவாகக்கருதி வாழ்ந்தமையினாலேயே தமிழகம் தன் பெருமை குன்றுகிறது என்ற அறிவு வரப்பெற்ற வுடனே, பெருநற்கிள்ளி தன்னையொத்த தமிழரசர்களாய சேர, பாண்டியரோடு பகைகோடல் ஒழித்துப் பழகிய நண்பனாய் வாழத் தொடங்கினான். நாட்டு மக்கள் நல் வாழ்வே நாடாள் அரசர்தம் நல்வாழ்வாம் என்ற அறிவு வரப்பெற்ற இராசசூயம் வேட்டோன், அக்காலை அந்நாடு களை ஆண்டிருந்த சேரமான் மாரிவெண்கோவொடும், பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி யொடும் நட்புறவு பூண்டு நல்லோர் போற்ற வாழ்வானா யினான். மூவேந்தரிடையே நிலவிய இவ்வொற்றுமை, நல்லி சைப்புலமை மெல்லியலாராய ஔவையார் உள்ளத்தை உவகைப் பெருங்கடலுள் ஆழச்செய்தது. மூவேந்தர் உறவு, தமிழகத்தின் உயர்விற்கு உறுதுணைபுரியும் என்பதை உணர்ந்தவர் ஔவையார்; ஆகவே, அவ்வுறவு நீடித்துவாழ நினைந்தார்; புகழும் பொருளுமே பகைவளர்தற்குக் காரண மாம் என அறிந்த ஔவையார், வேந்தர்தம் உள்ளத்தே, நிலையாமை எண்ணம் நிலைபெறவழிசெய்து, அதன்வழியே புகழ்மாட்டும், பொருள்மாட்டும் தோன்றும் ஆசையையும் அவ்வாசை காரணமாக எழும் பற்றுமை உணர்வையும், அப்பற்றுமை காரணமாகத் தோன்றும் பகையுணர்ச்சி யையும், அப்பகை காரணமாக விளையும் நாடழிவினையும் தடுத்துநிறுத்த நினைந்து, அவ்வேந்தரை அணுகி, "தமிழ்ப் பெருவேந்திர்! நீங்கள் மூவிரும், நுங்கள் பகைமறந்து உறவுடையராய் ஒன்றுகலந்திருக்கும் இக்காட்சி, அந்தணர் வளர்க்கும் ஆகவனீயம், காருகபத்தியம், தென்திசை யங்கி என்ற முத்தீயை நினைப்பூட்டுவதாய் உளது. முத் தீயில் ஒன்று குறையினும், அந்தணர் கடனாற்றல் இய லாது. அஃதேபோல், மூவருள் ஒருவர் பகைத்து நீங்கி னும் தமிழக வாழ்வு தழைக்காது; ஆகவே, நீவிர் மூவிரும் இன்றேபோல் ஒன்றுகலந்து வாழ்வீராக! ஆளும் உலகம் உயர்ந்தோர்வாழ் தேவருலகொப்ப உயர்ந்ததே ஆயினும், இறந்துபோவுழி உடன்வருதல் இல்லை; அன்றியும் வாழ் நாள் உள்ளவரையிலாவது, அந்நாடு தம் ஆட்சியின்கீழ்

மாறுதிருக்கும் என்று கூறுவதற்கும் இல்லை. ஆதலின், ஈண்டு வாழும்வரையில் தம்பால் வந்து ஏற்போர்க்குப் பூவும் பொன்னும் புனல் வார்த்துத்தந்து புகழ்பெற வாழ்தல்வேண்டும். இறந்து மறைந்து போவுழி, இவ்வுலகில் இயற்றிய இவைபோலும் நல்வினையல்லது, இந்நாடோ, இந்நாட்டுச் செல்வமோ துணையாகா; நல்வினையே நற்றுணையாம்; ஆகவே அன்பொடு கலந்த இன்புடை வாழ்வினராகுக!" என்று அறிவுரைகூறி அகம் மிக மகிழ்ந்தார்.

"நாகத்தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும், தம்மொடு செல்லா:
வேற்றோராயினும் நோற்றோர்க்கு ஒழியும்;
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும், பொன்னும் புனல்படச் சொரிந்து,
பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நாரரி தேறல் மாந்தி, மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி,
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங்காலைப் புணைபிறிது இல்லை;
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்டக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்!
யானறி அளவையோ இதுவே." (புறம்: ௩௬௭)

இவ்வாறு பீடும் பெருமையும் விளங்கப் பாராண்ட பெருநற்கிள்ளியைப் பெற்றெடுத்த பெரும்பேறுடையார் யாவர்? அவன் மக்களாய்ப் பிறந்து மாண்புற்றோர் யாவர்? என்பனவற்றை ஐயமற அறிந்து கூறுதற்கியலவில்லை; பெருநற்கிள்ளி, காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளியின் மகனாய்ப் பிறந்து, சேரன் செங்குட்டுவனின் மைத்துனனாய் மாண்புற்றோனவன் எனக் கூறுவர் அறிஞர் சிலர். அவர் தம் கொள்கை எத்துணைப் பொருத்தம் உடைத்து என்பது கரிகாற் பெருவளத்தான் என்ற தலைப்பின்கீழ் விளங்க உரைக்கப்பட்டுள்ளது, ஆண்டுக் காண்க.

# உ. இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி

வேனிற் காலத்தில் வேண்டுமளவு தென்றல் நுழைதற்காம் சாலேகங்கள் அமைந்த வேனிற் பள்ளிகளில் வாழ்ந்தும், குளிர்காலத்தில் வாடை நுழையாவாறு அமைந்த வாயில்களைக்கொண்ட கூதிர்ப்பள்ளிகளில் குடியிருந்தும், தட்ப வெப்பக் காலநிலைகளுக்கேற்ப தங்கள் வாழ்விடங்களை மாற்றி அமைத்து வாழும் வகையறிந்தவராய தமிழர், தாங்கள் முதுமையுற்ற காலத்தே இருந்து ஓய்வுபெற்று வாழ்தற்காம் இனிய இடங்களைத் தேர்ந்து வாழும் வகையினையும் அறிந்திருந்தனர். அவ்வாறு வாழ்ந்த இடங்களுள் இலவந்திகைப்பள்ளி என்பதும் ஒன்று; இலவந்திகைப்பள்ளியாவது வேண்டுமளவு நீரை நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறிகள் அமைந்த வாவியை நடுவிடத்தே பெற்று நறுமணம் நாறும் பல்வேறு மலர்நிறை மரங்களால் நிறைந்து மாண்புற்ற மலர்ச் சோலையாம். அஃது அரசர் தம் மனைவியரொடிருந்து மகிழ்ந்துறையும் இடமாதலின், ஏனையோர் அணுகற்கு இயலா அரிய காவலையும் உடையது; அரசர்கள் இத்தகைய இலவந்திகைப் பள்ளிகளில் இருந்து வாழுங்காலம், ஆண்டு நிறைந்த முதுமைக்காலமே யாதலின், அவர் தம் வாழ்நாள் பெரும்பாலும் ஆண்டே முடிந்துபோதலும் உண்டு. நலங்கிள்ளி சேட்சென்னியும் அத்தகைய இலவந்திகைப்பள்ளி யொன்றில் இறந்துபோனமையால், இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி என அழைக்கப்பெற்றுளான்.

இவன், "நலங்கிள்ளி சேட்சென்னி" என அழைக்கப் பெறுதலாலும், நலங்கிள்ளி என்பான், "சேட்சென்னி நலங்கிள்ளி" என அழைக்கப்பெறுதலாலும், இவன் சேட்சென்னி என்பானின் பெயரனும், நலங்கிள்ளி என்பானின் மகனும் ஆவன் எனக்கொள்க. சேட்சென்னி நலங்கிள்ளியை இவன் மகனாகக்கொள்வதும் பொருந்தும்.

நலங்கிள்ளி சேட்சென்னி, நீர்வளமும் நிலவளமும் நிறையக்கொண்ட நாடாண்ட நல்லரசுடையனுவன்; அவன் நாட்டு வயல்கள் வளம்மிகக் கொண்டமையான், ஆண்டு வளரும் களைபோக்குவார், களையாக ஆம்பற்கொடிகளையே களையவேண்டிய நிலையினராவர். அத்தகைய வயல்களில் வளர்ந்த வாளைமீன் துண்டங்களை வெண்ணெற்சோற்றொடு விலாப்புடைக்க உண்ட உழவர்கள், உணவு மிகுதியால் உணர்வு இழந்து, தாம் தலையிற் சுமந்து கொணர்ந்த கூட்டை இடும் இடம் அறியாது தடுமாறுவர்; அவ்வுழவர் தம் சிறுவர்க்குத் தேங்காய்ப்பால் வெறுப்புண்டாயின், உடனே அவர்கள் தம் தந்தையர் போட்டுவைத்துள மலை போலும் வைக்கோற் போர்மீது விரைந்து ஏறி அப்போர் அருகேநிற்கும் பனையின் பழத்தினைப் பறிப்பர்; இத்தகு வளம்பல நிறைந்தது நலங்கிள்ளி சேட்சென்னியின் நாடு எனக் கூறுகிறார், கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார்.

நலங்கிள்ளி சேட்சென்னி, அன்பும், ஆண்மையும் அருளும், ஆற்றலும் ஒருங்கே உடைய உரவோனுவன்; தன்னைப் பணிந்து, தன் தாள் சேர்ந்து வாழ்வார்பால் வற்றாப் பேரன்புடையனுய அவன், அவர்க்குச் சிறு துயரும் உண்டாகாவண்ணம் பேணிக்காப்பான்; இத் தகு அன்பும், அருளும் உடையனுய சேட்சென்னி, தன்னை எதிர்த்து நிற்பார் இவ்வுலகில் வாழ்தலும் கூடாது எனக் கருதும் கொடுமையும் உடையனுவன்; அவனை எதிர்ப்பார், அவ்வாறு எதிர்ப்பதால் தமக்கு உண்டாம் கேடு எவ்வளவு என்பதை அவர் தாமே அறிய வேண்டியவராவர்; அதை அளவிட்டுக் கூறல் பிறரால் இயலாது; அத்துணைப் பெருங் கேடு விளைவிப்பன் சேட்சென்னி. நலங்கிள்ளி சேட்சென்னியின் நாட்டுவளம் இத்தகைத்து எனக் கூறிய புலவர் மதுரைக் குமரனுரே, அவன்பால் காணலாம் அன்பு, ஆற்றற் சிறப்புக்களையும் எடுத்துக் கூறியுள்ளார் :

"கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்
சிறுமாண் செய்தல் ஆம்பலொடு கட்கும்

மலங்குமிளிர் செறுவில் தளம்பு தடிந்திட்ட
பழனவாளைப் பரூஉக்கண் துணியல்,
புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக
விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடு கதிர்க் கழனி சூடு தடுமாறும்
வன்கை வினைஞர் புன்தலைச் சிறாஅர்
தெங்குபடு வியன் பழம் முனையின் தந்தையர்
குறைக்கண் நெடும்போர் ஏறி விசைத்தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்,
எஃகு விளங்கு தடக்கை இயல் தேர்ச் சென்னி,
சிலைத்தார் அகலம் மலைக்குநர் உளர் எனில்
தாமறிகுவர் தமக்கு உறுதி யாமவன்
எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்
வாழக் கண்டன்று மிலமே; தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்டல் அதனினும் இலமே.” (புறம்: கூக)

# ௩. உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி

சங்க நூல்களால் அறியப் பெற்றசோழ அரசர்களுள் காலத்தால் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப் பெறுவோன், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியே என்று கூறின், அது பொருந்தும்; உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாற் பெருவளத்தானைப் பெற்றுப் புகழ்கொண்டோனவன்; இது, ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், பொருநராற்றுப் படைக்கண், கரிகாலனை, "உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்" எனப் பெயரிட்டு அழைப்பதால் தெளிவாகும்; இளஞ்சேட் சென்னியின் மனைவி, அழுந்தூரில் வாழ்ந்த வேளிர்குடியில் பிறந்த பெருமாட்டியாராவர்; இது, "மன்னர் பாங்கிற் பின்னை ராகுப" என்ற தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திர உரையில் (சூ : ௩௦.) "உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேளிடை மகட் கோடலும், அவன் மகன் கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட் கோடலும்" என்று நச்சினார்க்கினியர் கூறுவதால் உறுதியாகும்; கரிகாற் பெருவளத்தான் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பதை, அவ்வுரையின் பிற்பகுதியும் உறுதிசெய்தல் காண்க. இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலன், வெண்ணிப் பறந்தலையில் பெற்ற கன்னிப்போர் வெற்றி குறித்து, அழுந்தூரில் விழாக் கொண்டாடப் பெற்றது என்று கூறும் பரணர் பாட்டால், அழுந்தூர் வேள் மகளே, இளஞ்சேட் சென்னியின் மனைவியாவள் என்ற உண்மை மேலும் உறுதி செய்யப் பெறும்; கரிகாலன் பிறப்பதற்கு முன்னரே அரச உரிமையைப் பெற்றுவிட்டான் எனக்கூறும், "தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி" என்ற பொருநராற்றுப்படைத் தொடரால், கரிகாலன் பிறப்பதற்கு முன்னரே, இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான் என்ற செய்தி புலனாதல் காண்க.

இளஞ்சேட் சென்னி, அழகிய பல தேர்களைக்கொண்டிருந்தான் என்பதை அவன் பெயரைக் கொண்டே அறிய

லாம்; இஃது உண்மையாம் என்பதை, "உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்" என்ற பொருநராற்றுப் படைத் தொடரும், இவனைப் பாராட்டும் பரணர், "கடலிடைத் தோன்றும் ஞாயிறேபோல், பொற்றேர்மீது பொலிவுறத் தோன்றுகின்றனை" எனப் பாராட்டினார் எனக் கூறும் புறநானூற்றுத் தொடரும் உறுதி செய்தல் காண்க.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, நலமெலாம் பெற்ற நால்வகைப் படையுடையனவன்; அவன் படைப் பெருமை கண்டு பாராட்டும் பரணர் பாட்டு, அவன் ஆற்றற் சிறப்பை உள்ளவாறு உணர்த்துவதாம்.

"அவன் வீரர் ஏந்திய வாள்கள், பகைவர் உடலைப் பிளந்து, குருதிக்கறை பெற்றுச், செவ்வானம்போல் சிவந்து தோன்றும்; வீரர்கள், களம் முழுதும் ஓடிப் போரிடுவதால், அவர் காலிற் கட்டிய வீரக் கழல்கள், சித்திர வேலைப்பாடு சிதைந்து, கொல்லும் ஆனேற்றின் கூரிய கொம்புகள்போல் தோன்றும்; கையிற் பிடித்த கேடயங் களில், பகைவர்விட்ட அம்புகள் பட்டுத் தோன்றிய துளை கள், இடம் பெயராது எழுதிவைத்த இலக்குகள்போல் இலங்கித் தோன்றும்; குதிரை வீரர்கள், பகைவரைப் பாய்ந்து பாய்ந்து தாக்க, வலமும், இடமும் மாறிமாறித் திருப்புவதால், கடிவாளத்தால் தாக்குண்டு இரத்தம் கசியும் வாயுடையவாய் நிற்கும் குதிரைகள், மான் முதலியவற்றைக் கடித்து உண்டு, இரத்தக்கறை படிய நிற்கும் புலி போலத் தோன்றும்; யானைகள், பகைவர்தம் கோட்டை வாயிற் கதவுகளை முறித்து அழித்து, நுனி சிதைந்த கோடுடைய வாய் வெகுண்டு திரிந்து, உயிர் உண்ணும் எமனைப்போல் தோன்றும்; இளஞ்சேட் சென்னி, கருங்கடல்மீது எழும் செஞ்ஞாயிறே போல், பொற்றேர்மீது பொலிவுறத் தோன்றுவன்; இளஞ்சேட் சென்னியும், அவன் படையும் இத் தகையன் ஆதலைக்கண்டு, அவன் பகைவர், தாயற்ற குழந்தை, தான் உண்ணும் உணவைப் பெறமாட்டாமை யால், ஓயாது அழுவதைப்போல், அரற்றலும், அழுகையும் உடையராவர்." பரணர் பாட்டின் பொருளுரை இது.

"வாள், வலந்தர மறுப்பட்டன,
செவ்வானத்து வனப்புப் போன்றன ;
தாள், களம் கொளக் கழல் பறைந்தன,
கொல்லேற்றின் மருப்புப் போன்றன ;
தோல், துவைத் தம்பின் துளை தோன்றுவ,
நிலைக் கொராஅ இலக்கம் போன்றன ;
மாவே, எறிபதத்தான் இடங் காட்டக்
கறுழ் பொருத செவ்வாயான்
எருத்து வவ்விய புலி போன்றன ;
களிறே, கத வெறியாச் சிவந்துராய்
நுதி மழுங்கிய வெண்கோட்டான்
உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன ;
நீயே, அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல்நிவந் தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ !
அனையை ஆகன் மாறே;
தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே." (புறம் : ௪)

ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் பாராட்டியோராகச் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி என்பவனும், (புறம்: ௧௦,௨௦௩) செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்பவனும் (புறம் : ௩௭௦,-௭௮) ஆக இருவர் உளர் ; இரண்டாவதாக் குறிக்கப்பெற்ற இளஞ்சேட் சென்னிக்கு அடைமொழியாகக் கூறப்பட்ட "செருப்பாழி எறிந்த" என்ற தொடர்க்குப் "போர்க்களமாகிய பாழி என்ற ஊரை அழித்த என்றே பொருள்கொள்ளுதல் வேண்டும். பாழி என்பது சேர நாட்டகத்ததோர் ஊராக விளங்குவதாலும், சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னியும், சேர நாட்டைச் சேர்ந்த பாமுளூர் என்ற ஊரை வென்றதாகத் தெரிவதாலும், இருவர்க்கும் இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஒற்றுமை உண்மையாலும், இருவரையும் பாராட்டிய புலவர் ஒருவராகவே இருப்பதாலும், சேரமான்

பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியும், செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியும், வேறு வேறு அல்லர்; ஒருவரே எனக்கொள்ளுதல் பொருந்தும்.

இனி, வம்ப வடுகரை ஓட்டிப் பாழியை அழித்த இளம் பெருஞ் சென்னி என்பவன் ஒருவன் வரலாறு அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுளது (அகம் : ௩௭௫); செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியும் வடுகரை வென்றான் எனப் புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுளான் (புறம் : ௩௭௮); பாழியை அழித்தலும், வடுகரை வேறலும் இருவர்க்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி, இளம் பெருஞ்சென்னி என்ற பெயர்கள் ஒற்றுமை கொண்டிருப்பதாலும், அகத்தில் கூறப்பெற்ற இளம்பெருஞ் சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியே ஆவன் என்பது துணிவாம்.

இனி, சேரமான் பாமுளூர் எறிந்த இலஞ்சேட் சென்னியைப் பாடும்பொழுது, "இயல்தேர் அண்ணல்!" (புறம் : ௨௦௩) என, அவன் தேர் உடைமை பாராட்டப் பெற்றுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஒற்றுமையாலும், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும் போர்பல செய்தவன் எனத் தெரிவதாலும், அவன் மகன் கரிகாலன் பகைவர்களாகப் பாழியில் பெரும் பொருள் சேர்த்துவைத்த வேளிர்களும், அவர்கள் தலைவன் இருங்கோவேளும் கூறப்பட்டுள்ளமையாலும், அவ்வேளிர்கள், கரிகாலன்மீது, அவன் இளமைக் காலத்திலேயே போர் தொடுத்தது, அவன் தந்தை தங்கள் பாழியை அழித்தமைக்குப் பழிவாங்கும் எண்ணத்தால் இருக்கலாம் ஆதலாலும், பாழிக்குரியோன் எனப்பட்ட நன்னன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலொடு வாகைப் பறந்தலையில் பொருது களத்தொழிந்தான்; இப்போரில் பெற்ற வெற்றியின் பயனாய் நார்முடிச் சேரல், இழந்த தன் பூழிநாட்டைப் பெற்றான் என்ற செய்திகளால் பாழியொடு தொடர்புடையதாகத் தோன்றும் வாகைப் பறந்தலைக்கண், கரிகாலன் தன்னை வந்தெதிர்த்த ஒன்பது மன்னரை வெற்றி

கொண்டான் என்று கூறப்படுவதால், கரிகாலனும், அப் பாழியோடு, யாதேனும் தொடர்புடையனுதல் வேண்டும் என்று கருத இடமுண்டு ஆதலாலும், அவன் தந்தை யெனக் கூறப்பெறும் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னி, செருப் பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, இளம்பெருஞ் சென்னி என்ற நால்வரும் வேறு வேறு அல்லர்; ஒருவரே எனக் கொள்ளுதல் நேரிதாம்.

பெருவீரனுய் விளங்கிய உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, தன்பால் வரும் இரவலரைப் பேணிப் புரத்தலி லும் வல்லவனுவன் எனக் கூறுவர் புலவர் பெருங்குன்றூர் கிழார்.

# ௬௪. ஏனாதி திருக்கிள்ளி

சோழர் குடிவந்த குறுநில மன்னருள் ஒருவனாய திருக்கிள்ளி, தனியரசு செலுத்தும் தகுதியுடையா னல்லன்; அக்குடிவந்த பெருவேந்தன் ஒருவன்கீழ்ப் போர்ப் பணி மேற்கொண்டிருந்தவனாவன்; அவ்வேந்தன் படைத் தலைவனாய் அமர்ந்து, அவன் அளித்த ஏனாதி எனும் பெயருடையதொரு பட்டத்தையும், மோதிரத்தையும் பெற்றுப் பெருமை கொண்டவனாவன்; ஏனாதி திருக்கிள்ளி, களம்பல வென்ற வெற்றிச் சிறப்புடையான்; போர் என்றவுடனே களம்புகுந்து, பாய்ந்துவரும் பகைவர் படை அனைத்தையும், தான் ஒருவனாகவே தடுத்துப் போர்புரிந்து துரத்துவன்; அதனால், அப்பகைவர் ஏவிய அம்பேறுண்டும், அவர்தம் வாளால் வெட்டுண்டும் பெற்ற வடு, அவன் உடலெலாம் அமைந்து, அவன் உடலழகை உருக்குலைத்து விடும்; இவ்வாறு பகைவர் படையால் பாழான உடலுடைய திருக்கிள்ளி, தன்னோடு போரிட்டுத் தோற்றோடும் அப்பகைவர்மீது அம்பேவும் அழிபோர் விரும்பா ஆண்மையாளனாவன்; இவற்றாலாய அவன் வெற்றிப் புகழ், தமிழகம் முழுதும் சென்று பரவியது.

கிள்ளியின் புகழ் கேட்டார், கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவர்; ஓடோடிச் சென்று அவனைக் கண்டார். "கிள்ளி! நீ, வாள்வடுப் பொருந்திய யாக்கை உடையையாதலின், காண்டற்கு இனியையல்லை; ஆயினும், வெற்றிச் செல்வம் நின்பால் விளங்கித் தோன்றுகிறதாதலின், கேட்டற்கு இனிய புகழ் உடையை; நின்பகைவர், நின்னை எதிர்நின்று போரிடுதற்கு அஞ்சிப் புறங்கொடுத்து ஓடிவிடுவாராதலின், பழி நிறைந்து கேட்டற்கு இன்னாராயினும், வாள்வடுப்பெரு வனப்புடை உடலினராய்க் காண்டற்கினியராவர்; ஒரு வகையான், நீ இனியனாதலைப் போன்றே, அவரும் ஒரு வகையான், இனியராவர்; இவ்வாறு இனிமைப் பண்பு இருவர்பாலும் அமைந்திருப்பவும், உலகத்தார், நின்னை

மட்டும் புகழ்வது ஏன்?'' எனக் கிள்ளியைப் பழிப்பார் போல் புகழ்ந்தும், அவன் பகைவரைப் புகழ்வார்போல் பழித்தும் பாராட்டி மகிழ்ந்தார்; இவ்வாறு புலவரும் பாராட்டும் பெருமையும், பேராண்மையும் நிறைந்த படைத் தலைவனுவான், திருக்கிள்ளி,

"நீயே. அமர்காணின், அமர்கடந்து, அவர்
படைவிலக்கி எதிர் நிற்றலின்,
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக்கினியை கட்கின்னுயே;
அவரே, நிற்காணின் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கினியர்; செவிக்கு இன்னுரே;
அதனல், நீயும் ஒன்று இனியை; அவரும் ஒன்று இனியர்
ஒவ்வா யாவுள? மற்றே; வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடிமான் கிள்ளி!
நின்னைவியக்கும் இவ்வுலகம்! அஃது
என்னே? பெரும! உரைத்திசின் எமக்கே.

(புறம்: கூகஎ)

## ரு. கரிகாற் பெருவளத்தான்

கரிகாற் பெருவளத்தான் இளமைக் காலத்தே, அவனை அழிக்கக் கருதிய அவன் தாயத்தார், அவனைச் சிறைக்கோட்டத்து இட்டதொடு அமையாது, சிறைச் சாலையைச் சூழத் தீயையும் வைத்தனர்; கரிகாலன், சிறைக் கோட்ட மதிலைத்தாண்டி வெளிவர முயன்ற காலையில், அவன் கால்கள், அத்தீயால் கரிந்து போயின; கால் கரிந்து போயினமையின், அவன், கரிகால் என்றே அழைக்கப் பெறுவானாயினன்; இதனால், அவன் இயற்பெயர் அறிய இயலாமற் போயிற்று.

"முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே அளந்ததால்;—செய்ச்செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப் புற்று."

(பொருநராற்றுப்படை: ஈற்று வெண்பா)

"சுடப்பட்டு உயிர் உய்ந்த சோழன் மகன்."

(பழமொழி: ௧0௫)

பழந்தமிழ் இலக்கியங்களுள், இவன் பெயர், "ஆன்" விகுதி பெறாமல், "கரிகால்" என்றே வழங்கப்பெற்றுளது: "காய்சின மொய்ம்பிற் பெரும் பெயர்க் கரிகால்", "பெருவளக் கரிகால்", "கலிகொள் சுற்றமொடு கரிகால் காணா" (அகம்: ௨௪௬, ௧௨௫, ௩௭௬.) சிற்சில இடங்களில், அவன், தன் நாட்டை வளம்படுத்திய சிறப்பால் அவனுக்கு அளிக்கப்பெற்ற "வளவன்" என்ற பெயர் தொடர, "கரிகால் வளவன்" என்றும் வந்துளது: "களியியல் யானைக் கரிகால் வளவ!" (புறம்: ௬௬.), "கரிகால் வளவன்" (பொருநராற்றுப்படை: ௧௪௮.) அவன் கால் கரிந்து போன நிகழ்ச்சியினும், அவன் சோணாட்டை வளமாக்கிய செயலே பெரிதும் பாராட்டப் பெற்றமையான், அவன் பெயர், "கரிகால்" என்பது தொடரப் பெறாமல், "வளவன்" எனத் தனித்தே வழங்கப்பெறலாயிற்று: "இயல்

தேர் வளவ!" (புறம் : எ.) நாட்டை, நிலத்தானும், நீரானும் வளமாக்கியதோடு, வாணிபத்தை வளர்த்துத் தன் நாட்டுச் செல்வத்தையும் செழிக்கச் செய்தான். ஆகவே, அவன் "திருமாவளவன்" என்றும் அழைக்கப்பெற்றுளான்: "அரிமா அன்ன அணங்குடைத் துப்பின் திருமாவளவன்" (பட்டினப்பாலை : உ௯அ - ௯.)

கரிகாலன் என்ற பெயர், கால் நெருப்புற்றமையால் உண்டான காரணப்பெயர் என்பதை அறிவிக்கும் சான்று பல இருப்பதையும் நோக்காது, அவன் பெயர், அன் விகுதி பெறுமல், "கரிகால்" என்றே பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்குவதையும் மதியாது, அவன் பெயரைக் "கரிகாலன்" என்றே கொண்டு, அதை வடமொழித் தொடர்புடையதாக ஆக்கி, கரி—காலன் என்று பிரித்து, அவன் யானைகளுக்குக் காலன் என்றும், கரிகாலன் என்பதைக் "கலிகாலன்" என மாற்றி, அவன் கலிப்பகைக்குக் காலன் என்றும் பொருள் கொண்டு மயங்குவாரும் உளர்.

அழுந்தூர் வேளிர் தலைவன் மகளும், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும், கரிகாற் பெருவளத்தானின் தாயும் தந்தையுமாவர்; இது, "உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்" (பொருநராற்றுப்படை : ௧௩0.) என்ற தொடராலும், "மன்னர் பாங்கிற் பின்னராகுப" என்ற தொல்காப்பியத்திற்கு (அகத் : ௬ : ௩0.) "உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன் மகன் கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட் கோடலும்" என எழுதும் நச்சினார்க்கினியர் உரையானும், கரிகாலன் வெண்ணிப் பறந்தலையில் பெற்ற வெற்றி குறித்து அழுந்தூரில் விழாக் கொண்டாடப் பெற்றது எனக் கூறும் பரணர் பாட்டானும் (அகம் : உ௪௬.) உறுதியாதல் காண்க.

கரிகாலன் மனைவியார் நாங்கூர் வேளிர்குலச் செல்வியாராவர்; இச் செய்தியும் முன்னர்க் காட்டிய நச்சினார்க்கினியர் உரையினாலேயே விளங்குகிறது; கரிகாலன் இறந்த

பின்னர், அவன் பிரிவாற்றாது வருந்தும் கருங்குளவாதனார் என்ற புலவர், "துகளிர் மகளிரொடு வேத வேள்வித் தொழில் முடித்தான்" எனவும், "மகளிரும் இழை களைந்தனர்" (புறம்: உ௬௪.) எனவும் மகளிர் எனப் பன்மை வாய்பாட்டான் கூறுவதால், நாங்கூர் வேள் மகளே அன்றி, வேறு பல மகளிரும் கரிகாலன் மனைவியராய் இருந்தனர் என்று எண்ண வேண்டியுளது. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் கரிகாலன் மனைவியர் பலராவர் என்ற கருத்துடையவரே.

"பொன் தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்" (உ௬௫) என்ற பட்டினப்பாலைத் தொடரால் கரிகாலனுக்கு மக்கள் பலர் இருந்தனர் என்பது புலப்படுகிறது. ஆயினும், அம் மக்கள் யாவர் என்பது இனிது விளங்கவில்லை.

"கரிகாலன் காலத்தில் ஓராட்சிக்கு உட்பட்டதாக இருந்த சோணாடு, அவனுக்குப் பின் இருபகுதிப் பட்டதென்றும், அதனில் உறையூர், மணக்கிள்ளிக்கும், புகார், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் தலைநகரங்களாய் இருந்தன என்றும் தெரிய வருவதால் அக்கிள்ளிகள் இருவரையும் கரிகாலன் மக்களாகக் கருதுதற்கு இடமுண்டு; இவ்வாறாயின், மேற்கூறிய செங்குட்டுவனுக்கு மாமனான உறையூர் நெடுங்கிள்ளியும், புகார்க் கிள்ளிவளவன், நலங்கிள்ளிகளும் கரிகாலன் மகார் வயிற்றுப் பேரர்கள் ஆதல் வேண்டும்" என்று கூறுகிறார் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள்.

"சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்" (சிலம்பு: உ௯. உரைப் பாட்டு மடை), "சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள்" (சிலம்பு: பதிகம்: அடியார்க்குநல்லார் உரை), "சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்" (பதிற்றுப்பத்து: பதிகம்: ரு.) என்ற தொடர்களால், செங்குட்டுவன் தாய் சோழன் மகளாவள்; அவள் பெயர் நற்

சோணை; நற்சோணையைப் பெற்ற சோழன் பெயர் மணக்கிள்ளி என்ற செய்திகள்தாம் புலப்படுமே ஒழிய, அம் மணக்கிள்ளி, கரிகாலன் மகனே என்பதுவோ, அம் மணக்கிள்ளி உறையூரைத் தலைநகராக் கொண்டிருந்தான் என்பதுவோ. அவனுடைய மகனே உறையூரை ஆண்ட நெடுங்கிள்ளி என்பதுவோ அவற்றான் தெளிவாகா.

உறையூர் நெடுங்கிள்ளியைப் பற்றி நாம் அறிவதெல்லாம், நலங்கிள்ளி முற்றியிருக்க ஆவூரிலும், உறையூரிலும் உள்ளே அடைந்திருந்தான் (புறம்: சச-ரு.); நலங்கிள்ளியிடமிருந்து உறையூர் புகுந்த இளந்தத்தன் என்ற புலவனை ஒற்றன் எனக் கருதிக் கொல்லப்புகுந்தான் (புறம்: சஎ.), காரியாற்றில் இறந்தான் (காரியாற்றுத்துஞ்சிய என்ற அடைமொழி அவனுக்கு உண்மையால் அறியப்பெறுவது இது) என்ற இவையே நெடுங்கிள்ளி, மணக்கிள்ளியின் மகன் என்பதையோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, அந் நெடுங்கிள்ளியின் மகன் என்பதையோ நாட்டவல்ல சான்று ஒன்றும் கிடைத்திலது.

நலங்கிள்ளியும், கிள்ளிவளவனும் நெடுங்கிள்ளியொடு போர் செய்வதில் தம்முள் ஒத்து இருந்தனர் எனத் தெரிவதாலும், (புறம்: சரு, சசு.), சேரனும் பாண்டியனும் இவ்விருவர்க்கும் பகைவராவர் எனக் கூறுவதில், புறநானூறு, மணிமேகலைக் குறிப்புக்கள் ஒத்துள்ளமையாலும் (புறம்: கஉ, கசு; மணிமேகலை, ககூ: கஉச-எ.) "இளங்கோன் தன்னால் கொண்ட........மாவண்கிள்ளி" (மணி, ககூ: கஉச-எ.) என, உடன் பிறப்பு முறைமை எடுத்துக் கூறப்பட்டுள்ளமையாலும், இருவரும் உடன் பிறந்தவரே என்பதையும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, குடக்கோ நெடுஞ்சேரலாதனோடு போரிட்டு, இருவரும் களத்தில் மடிந்தனர் (புறம்: சுஉ, சு, சுசுஅ.) எனக் கூறப்படுவதாலும், கிள்ளிவளவன் கருவூரை முற்றுகை செய்தான் (புறம்: சுசு.), என்றும் சேரனை வென்று வஞ்சியை வாட்டினன் (புறம்: சுசு.) என்றும் கூறப்பெறுதலாலும், அவன் உடன் பிறந்தோனாய நலங்கிள்ளியும் வஞ்சிப் பகைவனவன் எனத்

தெரிதலானும் (புறம்: கூஉ). கிள்ளிவளவனும், நலங்கிள்ளியும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியின் மக்களாவர் என்பதையும், ஒருவாறு ஒப்புக்கொள்ளுதல் கூடும் ஆயினும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகாலன் மகன் என்பதைக் காட்டுதற்குரிய சான்று ஒன்றும் கிடைத்தின்று ; ஆகவே, மணக்கிள்ளியும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் கரிகாலன் மக்கள் என்றும், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியும், கிள்ளி வளவனும், நலங்கிள்ளியும் கரிகாலன் மகார் வயிற்றுப் பேரர்கள் என்றும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, நெடுங் கிள்ளியின் மகன் என்றும் கூறுவது பொருந்தாமை அறிக.

காவிரி யாற்றில், கழார்ப் பெருந்துறையின்கண் விழாக் காலத்தில், கரிகாற் பெருவளத்தான் கண்டிருப்ப, ஆட்டனத்தி என்ற ஆடுதல் தொழிலில் தேர்ந்த பொருநன் ஒருவன், காலில் கழல் புரள, அரையில் கட்டிய கச்சையின்மேல், பொன்னாற் செய்த பாண்டில் மணிகள் ஒலிப்ப, அழகுபெற ஆடிக்கொண்டிருந்தான் ; அப்பொழுது, அவன் வெள்ளத்தால் ஈர்க்கப்பட்டு, அதன் வழியே சென்று கடலிற் சேர்ந்தான் ; வெள்ளி வீதியாராலும் போற்றப்படும் புலமை வாய்ந்த அவன் மனைவி ஆதிமந்தியார், கணவன் புனலால் இழுக்கப்பட்டதை அறிந்து, பல ஊர்களிலும், பல நாடுகளிலும் சென்று தேடியும் காணாளாய்க் கவன்று அலைந்தாள் ; அப்போழ்து மருதி என்பவள் கடல்வாய்ப் பட்டிருந்த ஆட்டனத்தியை அவளுக்குக் காட்டிக் கடலுள் புகுந்துவிட்டாள் என்ற வரலாறு பரணர் பாக்களாலும், பிற பாக்களாலும் அறியப்படுகிறது ; ஆதிமந்தியார் கரிகாலன் மகள் என்றும், ஆட்டனத்தி சேரவேந்தன் என்றும், இவள் அவன் மனைவியென்றும் முறைவகுத்துக் கூறுகிறார் இளங்கோ வடிகளார் :

> "மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
> தன்னைப் புனல்கொள்ளத் தான் புனலின் பின்சென்று
> கன்னவில் தோளாயோ! என்னக் கடல்வந்து

முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடி போலப் போதந் தாள்."
(சிலம்பு : உக : கக-கரு)

கரிகாற் பெருவளத்தான் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, பெருவீரனாய்ப் பேரரசனாய் வாழ் வதைப் பொறாத அவன் தாயத்தார், அவனை ஒழித்து, அவன் அரசைக் கைப்பற்றக் காலம் நோக்கியிருந்தனர்; அவனும் இறந்துவிட்டான்; தந்தை இறக்கும்பொழுது கரிகாலன் பிறக்கவே இல்லை; அவன் தாய் கருவுற்றிருக் கும்போதே தந்தை இறந்துவிட்டான்; இதனால், பிறப்ப தற்கு முன்னரே, அரசுரிமையைப் பெற்றவனாயினான் கரி காலன்; இதையே, "தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி," (கூஉ) என்ற பொருநராற்றுப் படைத் தொடர் உணர்த்து கிறது. "தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே இருந்து பிறக்கையினாலே, அரச உரிமையைப் பெற்றுப் பிறந் தான்,'' என்று அத் தொடருக்குப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர்; தாம் வேண்டியவாறு சிறிது முன் னரோ, பின்னரோ குழந்தை பிறக்கச்செய்வது இயலாத செயல் என மருத்துவ நூலார் கூறுவர் ஆதலின், அத் தொடர்க்கு அவ்வாறு பொருள் கொள்வது பொருந்தாது; தாய் வயிற்றிலிருந்து பிறக்குமுன்னரே, தந்தை இறந்து விட்டானாதலின், அப்பொழுதே—பிறப்பதற்குமுன்—தாய் வயிற்றிலேயே—கரிகாலன் அரசு உரிமையை அடைந்தான் என்று கொள்வதே பொருந்தும்.

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்துவிட் டானாகவே, அரசைக் கைப்பற்றக் காலம் கருதியிருந்த அவன் தாயத்தார், நாட்டில் குழப்பநிலையை உண்டாக்கி விட்டுப் பிறந்த கரிகாலனையும் பிடித்துச் சிறையில் வைத் துச் சிலநாள் ஆண்டு வரலாயினர்.

இனி, இளஞ்சேட் சென்னி இறந்து விட்டானாகவே, நாடு அரசின்றி அலமரும் நிலையைப் போக்க, அரச யானையை அவிழ்த்துவிட்டு, அது தன்மீது ஏற்றிக்

கொணர்ந்த கரிகாற் பெருவளத்தானைச் சோணாட்டரசனாக்கினர் என்பர் சிலர்; அவர்கள் அவ்வாறு கொள்வதற்குக் காரணமாய் விளங்குவன,

> "கழுமலத்தில் யாத்த களிறும், கருவூர்
> விழுமியோன் மேற்சென் றதனால்,—விழுமிய
> வேண்டினும், வேண்டா விடினும் உறற்பால
> தீண்டா விடுதல் அரிது."

என்ற பழமொழிச் செய்யுளும், "கழுமலம் என்னும் ஊரின்கண்ணே பிணித்து நின்ற களிறும், கருவூரின் கண்ணே யிருந்த கரிகால் வளவன் கடிது இளையனாயினும், அவன் சிறப்புடையனாதலால் அவன்மேற் சென்று தன் மிசை எடுத்துக்கொண்டு அரசிற்கு உரிமை செய்தது," என்ற அதன் உரையுமேயாம்.

பண்டை நாட்களில் அரசனே எல்லாம்; அவன் தவறு செய்தால் அதை எடுத்துக்காட்டி அறிவுரை கூறிச் சில அறிஞர்கள் ஒரோவழி முயன்றது தவிர, அமைச்சர்கள், ஆளுங்குழு என்ற வகையில் ஓர் அமைப்பு முறை இருந்ததாகக் கொள்வதற்கில்லை; அரசன் இறந்தால், அவனுக்குப்பின் அவன் மகனே அரசனாதல் வேண்டும் என்ற முறையே நிலவி வந்துளது. அரசன் மகப்பேறின்றி இறந்தான் எனில், நாட்டில் ஆளும் அமைப்பு என ஒன்றில்லாமையால், அடுத்த அரசன் யாவன் என்பதை உறுதி செய்ய மாட்டாராய், வேற்றரசன் வருகையை எதிர்நோக்கி யிருப்பதல்லது, அந் நாட்டுக் குடிகள் பிறிதொன்றும் செய்யார்; அரசர் மரபில்வந்த ஆற்றல்மிக்க ஒருவனோ, அல்லது வேற்று நாட்டரசன் ஒருவனோ தன் முயற்சியால் அந் நாட்டைக் கைப்பற்றி ஆள்வன்; இதுவே, தமிழகத்தில் பண்டு நிலவிய அரசியல் முறை.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற அமைப்பு முறை வந்த பிற்காலத்தே, அரசன் மகப்பேறின்றி மறைந்துவிட்டால், அவன் மரபில் தக்காரைத் தேர்வதோ, அன்றி யானைவழி ஆள்வோரைத் தேர்வதோ, அக்குழு

வினர் செய்வர்; இதுவும், அரசன் மகப்பேறின்றி இறந்துழியேயன்றி, அவன் மகன் ஆளும் பருவம் அற்ற இளைஞன் என்பதற்காகவே, அவனை நீக்கிவிட்டுப் பிறரைத் தேரார்; மாறாக அவனையே அரசனாக்கி, அவன் பருவம் எய்தும்வரை அவனுக்காக வேறு சிலர் ஆள்வர்; ஒரோவழி, இளைஞனுக்காக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துபவரே அன்றிப் பிறரோ, அவனை ஒழித்துவிட்டு அவ்வரசைத் தாமே கைப்பற்றிக்கொள்வதும் உண்டு. இஃது இடைக்காலத்தில் கண்ட முறை.

கரிகாற் பெருவளத்தான் காலத்தே, ஆளும் குழு என்பதுபோன்ற ஒன்று இருந்தமைக்குரிய சான்று எதுவும் கிடைத்திலது; ஆகவே, எதிர்காலத்தில் நாடாளும் பொறுப்புப்பற்றிக் கவலைகொள்வார் யாரும் இலர் ஆதலாலும், இளஞ்சேட் சென்னி இறக்கும்பொழுது கரிகாலன் பிறக்கவில்லை என்றாலும், அவன் இறந்தவுடனே மகன் பிறந்துவிட்டான் ஆதலாலும், இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டமையால் நாட்டில் நிலவிய குழப்ப நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்ய முனைந்துவிட்டனர் அவன் தாயத்தார் என்பதற்குச் சான்றுகள் பல உள ஆதலாலும், யானையைக்கொண்டு அரசத் தேர்வு செய்யவேண்டுவது தேவை இல்லை; ஆகவே, பழமொழிக் கூற்று ஏற்கத்தக்கதன்று.

மேலும், யானை சோழர் தலைநகர்களாகிய புகார், உறையூர் ஆகிய இவற்றுள் ஒன்றினின்றும் விடப்படாமல், கழுமலம் என்ற சேரர் நகரிலிருந்து விடப்பட்டதாகவும், யானை கரிகாலனை அச்சேரர் தலைநகராய கருவூரிலிருந்தே எடுத்துவந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. தாயத்தார்க்கு அஞ்சிய அவன் தாய், தன் மகனைக் காப்பாற்றத் தலைநகர் விட்டு ஓடினாள் என்றால், அவள் தன் தாய்வீடாகிய அழுந்தூர்க்குச் செல்வளே அல்லால் தங்கள்குலப் பகைவராய சேரத் தலைநகர்க்குச் செல்லாள்; இவ்வரலாற்றை அளிக்கும் பழமொழிச் செய்யுட்கண், "விழுமியோன்" என்றுதான் காணப்படுகிறதே ஒழிய, கரிகாலன் பெயரோ, சோழர்

குலத்தான் என்ற குறிப்போ காணப்படவில்லை. யானை தந்தது எனக்கூறும் பழமொழியே வேறு செய்யுட்களால் கரிகாலன் பகைவர் கையகப்பட்டுச் சிறை வைக்கப்பெற்றான் என்றும், பின்னர் இரும்பிடர்த்தலையார் துணை கொண்டு வெளிப்போந்தான் என்றும் கூறுகிறது. இவற்றையும் ஏற்றுக்கொள்வதாயின், யானையைக்கொண்டு கரிகாலனை அரசனாக்க முன்வந்தோர் யாவர்? அவன் வந்ததும் குழப்பம் விளைத்து, அவனைச் சிறைசெய்தோர், யானைத் தேர்வின்போது வாளா இருந்தனர் எனல் பொருந்துமா? தாயத்தார் அவனைச் சிறை செய்யும்பொழுது, அவனை யானைவழித் தேர்வுமூலம் அரசனாக்கியவர் யாது செய்தனர்? அப்போது அவர்கள் வாளா இருந்தனர் எனக்கோடல் பொருந்துமா? என்பனபோலும் ஐயங்கள் பல உண்டாதலும் கூடும். கருவூரும், கழுமலமும் சேர நாட்டு நகரங்கள் ஆகும். சோணாட்டரசன் தேர்விற்குக் கழுமலத்தினின்றும் யானை விடுவதும், அது கருவூரில் வாழ்ந்த விழுமியோன் ஒருவனைத் தேர்வதும் வரலாற்று முறையொடு முரணுடையதாகும். அப் பழமொழிப் பாட்டான் குறிப்பிடப்படும் செயல், சேரநாட்டில் நடைபெற்ற அந்நாட்டு அரசன் தேர்வு ஒன்றைக் குறிப்பதாகக் கொள்வதல்லது, அதைச் சோணாட்டு அரசியலொடு தொடர்புபடுத்தல் பொருந்தாது. ஆகவே, பழமொழியும் அதன் உரையும் குறிப்பிடும் யானைவழி அரசர் தேர்வு, கரிகாலனைப்பற்றிய கற்பனையேயன்றி உண்மையன்று எனக் கொள்க.

பகைவர் சிறையகத்தே வாழ்ந்திருந்த கரிகாலன், அதனின்றும் மீளும் வழிவகைகளை எண்ணித் துணிந்து தக்கார் துணையையும் பெற்று, ஒருநாள் பகைவருடைய திண்ணிய காவலைத் தன் வாள்துணைகொண்டு திடுமெனத் தாக்கி வென்று வெளியேறி, விடுதலைபெற்றுத் தனக்குரிய அரசுரிமையைக் கைப்பற்றிக்கொண்டான்; கரிகாலன் செய்த செயற்கரும் இச்செயல் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் மிகமிக அழகாகப் பாராட்டப்பெற்றுளது; "கூரிய

நகத்தினையும், வளைந்த வரிகளையும் உடைய புலிக்குட்டி, கூட்டுள் வளர்ந்தாங்குப் பகைவர் சிறையகத்தே வாழ்ந்த கரிகாலனும், ஆண்மையும் உரனும்பெற்று வளர்ந்து, மேல் செய்யக்கடவ செயல்களை, நுண்ணிதாக எண்ணித்துணிந்து பெரிய யானை ஒன்று, தன்னைப் பிடிப்பார் வீழ்த்திய பெரிய குழியினின்றும் ஏறுதற்கு அக்குழியின் கரைகளைத் தன் கூரிய கோடுகளால் குத்திக் குழியைத் தூர்த்து ஏறித் தன் பிடிமுதலாம் தன் இனத்தோடு சேர்ந்தாற்போல, பகைவருடைய திண்ணிய காவலைத் தன் வாள் துணையால் அழித்து வெளியேறினான்" எனக் கூறுவர் அவர்.

"கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர் பிணியகத் திருந்து, பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி, நண்ணார்
செறிவுடைத் திண்காப்பு ஏறி, வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி."

(பட்டினப்பாலை : உஉ0-எ)

கரிகாலன் விடுதலைக்குப் பெருந்துணை புரிந்தவர் இரும்பிடர்த்தலையார் என்றும், அவர் கரிகாலனுக்கு அம்மான் முறையினராவர் என்றும், அவரே கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதியைப் பாராட்டிய புலவராவர் என்றும் கீழ்வரும் பழமொழிச் செய்யுளைச் சான்றாகக் கொண்டு கூறுவாரும் உளர்:

"சுடப்பட்டு உயிர்உய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇனான்; இல்லை
உயிர்உடையார் எய்தா வினை."

(பழமொழி)

உள்நாட்டில் தாயத்தார் விளைத்த குழப்பத்தையும், பகையையும் போக்கித் தனக்குரிய தாயத்தை முறைப்படி எய்திய கரிகாலன், வேறு பகைகளையும் வேரறுக்க

வேண்டியிருந்தது. உருவப்பஃறேர் இளையோன் இறந்தது, சோணாட்டில் தாயத்தார் விளைத்த உள்நாட்டுக் குழப்பம், கரிகாலன் ஆண்டிளமை ஆக இவை, பகை மன்னர்க்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பாகத் தோன்றவே, சேரனும், பாண்டியனும், பிறரும் ஒன்று சேர்ந்து, அவனை அழித்து, சோணாட்டரசைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். சேரமான் பெருஞ்சேரலாதன், பாண்டியன் ஒருவன், வேளிர் பதி னொருவர் ஒன்றுகூடி, நீடாமங்கலத்திற்கு அண்மையில் கோயில்வெண்ணி என வழங்கும் வெண்ணிவாயில் என்னு மிடத்தில் கரிகாலனை எதிர்த்தனர்.

தன்னை எதிர்த்த அத்தனை அரசர்களையும் கரிகாலன் தான் ஒருவனாகவே நின்று அழித்தொழித்தான். வெண்ணிப்போர் வெற்றி கரிகாலனுக்குப் புலவர் பல்லோர் பாராட்டைத் தேடித்தந்தது. போரில் பதினொரு வேளி ரொடு இருபெரு வேந்தரும் பட்டனர் எனப் பரணரும், இருபெரு வேந்தரும் ஒருகளத்தே அவிந்தனர் என முடத் தாமக்கண்ணியாரும், வெண்ணிப் பறந்தலையில் புறப் புண்பெற்ற சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தானாக, அதுகேட்ட சான்றோர் பலர் தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தனர் என மாமூலனாரும், உவாநாளன்று, ஒரே காலத்தில் மாறுபட்ட திசைகளில் ஞாயிறும் திங்களும் காணப்படினும், அவற்றுள் ஒன்று சிறிதுகால எல்லைக்குள் மறைந்துவிடுவதைப்போல், கரிகாலன் களத்தே தான் பெற்ற புறப்புண் நாணிச் சேரலாதன் வடக்கிருந்து உயிர் விட்டான் எனக் கழாத்தலையாரும், வென்ற கரிகாலனி னும், வடக்கிருந்த சேரலாதன் நல்லன் என வெண்ணிக் குயத்தியாரும் கூறிப் பாராட்டி யுள்ளனர். வெண்ணிப் போர், கரிகாலன் கன்னிப்போர்; ஆயினும், அதுவே அவன் பெற்ற வெற்றிகளுள் பெருவெற்றியாகும்.

இப்போரின் விளைவாய்த் தமிழ்நாட்டில் உள்ள கரிகாற் பெருவளத்தான் பகைவர் அனைவரும் பலம் குன்றுவரா யினர். வெண்ணியில் பெற்ற இவ் வெற்றி குறித்துக் கரிகாலன் தாய்பிறந்த அழுந்தூரில் வெற்றி விழாக்

கொண்டாடப்பெற்றது. இப்போரின் சிறப்பையும் இதனால் கரிகாலன் பெற்ற வெற்றிப் பெருமையையும் உணர்ந்த முடத்தாமக்கண்ணியார், பால் மணம் ஆறாத மிக இளமைக் காலத்திலேயே சிங்கக்குருளை, முதல் வேட்டையாகப் பெரிய களிறு ஒன்றைக் கொன்றதைப்போலக், கரிகாலன் தன் இளமைக் காலத்திலேயே பேரரசர் தம் கூட்டு முயற்சியை முற்றிலும் முறியடித்தான் எனப் பாராட்டு வாராயினர் :

"பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ்இசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே."
(பரணர், அகம் : உசசு)

"ஆளிநன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை, ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாங்கு,
இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."
(முடத்தாமக் கண்ணியார் : பொருநர் : கஙஅ-சஅ)

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது, புண் நாணிய சேரலாதன்,
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பிறிதாகி யாங்கு." (மாமூலனார், அகம் : ருரு)

"உவவுத்தலை வந்த பெருநாள் அமையத்து
இரு சுடர் தம்முள் நோக்கி, ஒரு சுடர்
புன் கண் மாலை மலை மறைந் தாங்குத்
தன் போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன்."

(கழாத் தலையார், புறம் : ௬௫)

"கரிகால் வளவ !
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே."

(வெண்ணிக் குயத்தியார், புறம் : ௬௬)

வெண்ணியில் கரிகாலனொடு போரிட்டுத் தோற்றோருள், உயிர் இழவாது பிழைத்த வேளிர் ஒன்பதின்மர், மீண்டும் ஒன்று கூடி வாகையெனும் இடத்தே வந்து எதிர்த்தனர்; ஆண்டும் கரிகாலனே வெற்றி பெற்றான்; அவ் வொன்பது குறுநிலத் தலைவர்களும் முரசு, குடை முதலாம் தம் அரச விருதுகள் அக்களத்திலேயே ஒழிய, நடுப்பகலிலேயே தோற்று ஓடி உய்ந்தனர்:

"பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர் போல, ஓடுவை."

(பரணர், அகம் : ௧௨௫)

கரிகாற் பெருவளத்தான், வெண்ணி, வாகை முதலாய இடங்களில் பெற்ற வெற்றியொடு அமையானாய்த் தமிழ் நாடெங்கும் தண்டு கொண்டு சென்று, ஆங்காங்குள்ள முடியுடை வேந்தர், குறுநில மன்னர் முதலியோரை வென்று வெற்றி வீரனாய் விளங்கினான்; இவ்வாறு அவனால் வெல்லப்பட்டோர், ஒளியர், அருவாளர், வடவர், குடவர்,

தென்னவர், பொதுவர், இருங்கோவேள் முதலியோராவர் என்று கூறுகிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார் :

"பல் ஒளியர் பணி பொடுங்கத்,
தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாடக், குடவர் கூம்பத்,
தென்னவன் திறல் கெடச், சீறி மன்னர்
மன்னெயில் கதுவும் மதனுடை நோன்தாள்
மாத்தானை, மறமொய்ம்பின்,
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன் பொதுவர் வழி பொன்ற
இருங்கோ வேள் மருங்கு சாய."

(பட்டினப் பாலை : உஎசு-அஉ)

தமிழ்நாடு முழுதும் தன் ஆணைக்கீழ் அடங்கியது கண்டும், கரிகாலன், பெற்றது மகிழானாய் மேலும் போரே விரும்பினனாக, தன்னை எதிர்ப்போர் தமிழகத்தில் யாரும் இன்மையறிந்து, நல்ல நாளில், வாள், குடை, முரசு முதலாயவற்றை முன்னே போகவிட்டு, 'என் வலிகெழு தோளின் பெருமையை, இம் மண்ணக மருங்கில் என் நண்ணார் பெறுக' என வஞ்சினம் கூறி, வட நாடு நோக்கிச் சென்றான் ; சென்றானை, இமயம் இடை நின்று தடுத்துவிட்டது; அதனால் சினங் கொண்ட சோழர்குலக் குரிசில் அதன் உச்சியிற் புலிபொறித்து மீண்டான் ; மீளுங்கால், வச்சிர நாட்டரசன் இறைக்கடனாகக் கொடுத்த முத்துப்பந்தல், மகத நாட்டரசன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம், அவந்தி வேந்தன் உவந்து கொடுத்த தோரணவாயில் முதலாயவற்றைப் பெற்றுத் தமிழ்நாடு வந்தடைந்தான் :

"செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளும், குடையும் மயிர்க் கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகஇம்
மண்ணக மருங்கின் என் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப்

பகை விலக்கியது இப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந் தோங்கு மரபிற் றோரண வாயிலும்."

(சிலம்பு, டு: கூ0-க0௪)

"வச்சிரநாடு என்பது சோணை (Son) நதி சூழ்ந்த தேசமாகும்; அதனை அடுத்துள்ளதே மகத நாடு; இது கங்கை யடுத்த பிரதேச மென்பது தெரிந்ததே; அவ்விரு நாட்டரசரையும் வென்ற பின்பே அவந்தி வேந்தனிடம் நட்பு முறையில் அவ்வளவன் சென்றனன் என்று இளங்கோ வடிகள் குறிப்பிடுகிறார்; இவற்றால், வச்சிர, மகத நாடுகளை அடுத்து, அவற்றின் வட பக்கத்தில் உள்ள இமயப் பகுதியே சோழன் தன் அடையாளத்தை நாட்டிய இடமென்பது நன்கு விளங்கும்.

"இவ்வாறு இமயப் படையெடுப்பு, சோழன் தலைமையின் கீழ்த் தமிழ் அரசரால் ஒருகாலத்து நிகழ்ந்தது என்ற வரலாற்றைப் புதியதாகத் தெரியவரும் அரிய செய்தியொன்றும் ஆதரித்து நிற்பதை இனிக் கூறுவேன்: மேலே நான் கூறியவற்றை யெல்லாம் ஒரு சேரக் கொண்டு நோக்குமிடத்து, திருமாவளவன் சென்று வந்த இமயமலை, இப்போது ஸிக்கிம், புட்டான் என்ற இராஜ்யங்களுக்கு இடையிலுள்ள மலைப்பகுதியே யாதல் வேண்டும். என்னெனில், இப் பகுதியில்தான், வங்காளத்து டார்ஜீலிங்கிலிருந்து தீபெத்துக்குச் செல்லும் கணவாய்கள் உள்ளன; இக் கணவாய்களிற் சில முற்காலத்தும், இக்காலத்தும் வியாபாரப் போக்குவரத்துக் குரியனவாய் அமைந்தனவாகும்; இவைகளும் பல மாதங்கள்வரை பனி மூடப்பெற்று அடைபட்டுக் கிடத்தலால், சில காலங்களே அப்போக்கு

வரத்துக்கு ஏற்றவாகின்றன............வங்காள மாகாணத்தில் அடங்கியுள்ள வச்சிரமகத, நாடுகளுக்கு வெகுதூரமில்லாத தாய், இமயத்தைக் கடந்து செல்வதற்கு ஏற்ற வழியுடைய பிரதேசங்களுள் ஸிக்கிம், புட்டான்களுக்கு இடையில் உள்ள கணவாய்களே சிறந்தவை. ஸிக்கிம் ராஜ்யத்துக்குக் கிழக்கே, அதற்கும் திபெத்துக்கும் உள்ள எல்லையை வரையறுத்து நிற்கும் மலைத் தொடரானது செங்குத்தாய் ஆகாசத்தை அளாவிக் கொண்டு பெருங்கோட்டை மதில்போல் நீண்டு செல்கிறது; இம் மலைத்தொடரை அடுத்துச் செல்லும் கணவாய், சமுத்திர மட்டத்துக்குமேல் 14,500 அடி உயரமுடையதாய், திபெத் பிரதேசமாகிய சும்பிப் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய்விடக் கூடியது; இம்மலைக்கும், இதனையடுத்த கணவாய்க்கும் வழங்கும் பெயர்கள் கவனிக்கத் தக்கன; சோழ மலைத்தொடர் (Chola Range), சோழர் கணவாய் (Chola Pass) என்பன அவற்றிற்கு இன்றும் வழங்கி வரும் நாமங்களாம்: [(a) Imperial gazetteer of India: Sikkim; Vol. 10: Page 327: Vol. 22: Page: 365. (b) Hand gazetteer of India; Chola pass. (C) Encyclopaedia Brittannica: Sikkim Vol 5: P: 667; Vol 20: P. 640.] மேற் கூறியவற்றைக் கொண்டு நோக்குமிடத்து இமயப்பகுதி யொன்றற்கு வழங்கும் இப் பெயர் சோழன் தொடர்புபற்றி வந்ததாகக் கூடாதோ என்பதே என் ஆராய்ச்சி. இம் மலையடியாகவே, இதனை யடுத்துள்ள கணவாயும் அப் பெயர் பெற்றதாக வேண்டும். "சோல" (Chola) என்பதற்கு ஸிக்கும், திபெத் பாஷைகளில் வேறு பொருள் இருப்பதாகத் தெரியவில்லை; "லா" என்பதற்குத் திபெத் பாஷையில் கணவாய் என்ற பொருள் உண்டு. நது-லா (Natu-la), ஜெலப்-லா (Jelap-la) எனக் காண்க. ஆனால், "சோல" (Chola) என்பது அவ்வாறு இரு சொல்லுடையதன்றி, ஒரு சொல்லாகவே மலைக்கு வழங்கிவருவதும், அச்சொற்கு வேறு பொருள் காணாமையும் நோக்கத்தக்கன; அதனால் திருமாவளவன், அப்பிரதேசத்தைக் கைப்பற்றி ஆண்டுள்ள மலைச்சிகரத்தில் தன் புலிப்பொறியை நாட்டி,

அங்கே தன் ஆணையை நிறுவிய காலமுதலா, அம்மலை அவ்வாறு பெயர்பெற்றது போலும் என்று கருத இடம் தருகிறது; இமயத்துக்கப்பாலும், அவ் வளவன் செல்லக் கருதியிருந்ததை அம்மலை தடுத்துவிட்டதாக இளங்கோ வடிகள் குறிப்பிட்டதற்கு, மேற்குறித்தபடி அச் சோழன் சென்ற காலத்தே பனியால் முழுதும் மூடப்பட்டு அக்கண வாய் அடைப்பட்டிருந்தது என்பதே கருத்துப் போலும்." (கலைமகள் : 1932 : Vol I : Page 62, 63.) எனக் கூறும் திருவாளர், மு. இராகவையங்கார் கூற்றுன், கரிகாலன் வடநாட்டு வெற்றி உறுதியாதல் காண்க.

கரிகாற்பெருவளத்தான், காவிரிக்கு இரு மருங்கும் கரை அமைத்து, அணைகட்டி ஆண்டான் என்ற வரலாறு ஒன்று கூறப்படுறது; இந்நிகழ்ச்சியைப் பழந்தமிழ் பாக் கள் குறிப்பிடவில்லை எனினும், விசயாலயன் வழிவந்த சோழர் கல்வெட்டுக்களிலும், தெலுங்குச் சோழர் செப் பேடுகளிலும், விக்கிரம சோழன் உலா முதலாம் பிற்காலத் தமிழ் நூல்களிலும், நவசோழ சரிதம் போலும் தெலுங்கு நூலினும், மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்றுத் தொகுப்பு நூலிலும் அந்நிகழ்ச்சியின் பல்வேறு நிலைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கரிகாலன், காவிரிக்குக் கரை அமைத்தான்; கரி காலன், காவிரிக்குப் பகையரசர் துணைகொண்டு கரை அமைத்தான்; காவிரிக்குக் கரைகட்ட வாராத மன்னன் கண்ணைப் போக்கினுன் கரிகாலன்; அங்ஙனம் கரை கட்ட வாராதவன் முகரி எனும் பெயருடையனுவன்; முகரியின் உருவைப் படத்தில் எழுதி நோக்க அதில் அவனுக்கு மூன்று கண் இருப்பது கண்டு, அவன் வாராமைக்குக் கார ணம் இதுவே என்றுகொண்டு, படத்தில் அம் மிகைக் கண்ணை அழிக்க அவனுடைய உண்மைக் கண் போயிற்று; கரிகாலனல் கண்ணிழக்கப் பெற்றேன் திரிநயனப் பல்ல வனே என்றெல்லாம் கூறுகின்றன அக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், பிற்கால இலக்கியங்களும் :

"தெள்ளருவிச்
சென்னிப் புலியேறிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரை கண்ட பூபதி."
(விக்கிரம சோழன் உலா: உச-கூ)

"தலையேறு
மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்."
(குலோத்துங்கச் சோழன் உலா: நச-கூ)

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியில்
தொடர வந்திடா முகரியைப் படத்து
எழுது கென்று கண்டு, இது மிகைக்கண் என்று
இங்கழிக்கவே அங்கழிந்ததும்."
(கலிங்கத்துப்பரணி: கஅச)

"முழுகுல நதிக்கரசர் முடிகொடு வகுத்தகரை
முகில்தொட அமைத்த தறிவோம்;
இருபுறமு மொக்கநின தொருபுலி பொறிக்கவட
இமகிரி திரித்த தறிவோம்;
இகல்முகரி முக்கணினு மொருகண்இழி யக்கிழியில்
எழுதுகண் அழித்த தறிவோம்."
(குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்: கூ)

நவ சோழ சரிதம் என்ற தெலுங்கு வீரசைவ நூல், "ஒரு நாள் கரிகாலன் காவிரியாற்றை அடுத்த காட்டில் வேட்டையாடிக் களையாறச் சிறிது நேரம் காவிரிக் கரையில் தங்கினான்; அப் போழ்து, காவிரியின் இரு மருங்கும் கரை அமைத்து நீரைத் தேக்கினால் சோழ நாட்டு வளம் பெருகும் என்ற எண்ணம் அவன் உளத்தே உருப்பெற்றது; உடனே, தன் ஆணைக்கு அடங்கிய அரசர் அனைவரையும் காவிரிக்குக் கரை அமைக்குமாறு பணித்தான்; முக்கண்டி சோழன், பாஸ்கர சோழன் என்ற இருவர் நீங்க ஏனையரசர் அனைவரும் பணியை ஏற்று நடத்தினர்; வாராத அவ்விருவர் மீது, கரிகாலன் படையொடு சென்று அவரை வென்று கைப்பற்றிக் கொணர்ந்து, கரையமைப்பு முடியும்வரை கடுந் தொழிலாற்றச் செய்தான் கரிகாலன்" என்ற வரலாற்றைக் கூறுகிறது.

பலவும் அவன்பால் பொருந்தியிருந்தன என்பதை உறுதி செய்யும்.

கரிகாலன் ஆட்சி, அறனொடு புணர்ந்த ஆட்சி; கொலை கடிந்து, களவு நீக்கி ஆண்டான் அவன்; அவன் நாட்டு மக்களும், வடுவஞ்சி வாய்மொழிந்து, நடுவுநின்ற நெஞ்சினராய் வாழ்ந்தனர் என்றால், அவன் ஆட்சிச் சிறப்பை எடுத்துக் கூறவேண்டுவதின்று; இவன் நீதியின் நேர்மையை விளக்க, தம்முள் மாறுபட்டுப் பகைகொண்டு கரிகாலன்பால், தம் வழக்கை உரைத்து முறைவேண்டி வந்த முதியோர் இருவர், அறங்கூர் அவையில் அமர்ந்திருந்த கரிகாலன் நனி இளைஞனாய் இருப்பது கண்டு, இத்துணை இளம்பருவம் உடையான், நம் வழக்கின் நன்மை தீமைகளை நாடி முடிவு கூறும் மூதறிவுடையனாய் இரான் என்று எண்ணியவராய்த் தம் வழக்கினை அவன்முன் உரைக்கத் தயங்கினராக, அவர்கள் தயக்கத்தைக் குறிப்பான் அறிந்து கொண்ட கரிகாலன், அவையின் நீங்கி, அறையுட் புக்கு, நரைதிரை பெற்ற முதியோன் உருவுகொண்டு வந்து அரியணை மீது அமர்ந்தானாக, வழக்குரைக்க வந்த முதியோர், இவன் போலும் அரசன் என எண்ணித் தம் வழக்கை அவன்பால் உரைக்க, அது கேட்டு, அம்முதியோர் வியக்குமாறு முறையளித்ததோடு, அவர் காணத் தன் முதுமைக் கோலத்தைக் களைந்து, தன் முன்னை இளமை உருவு காட்டி அவர் வியப்பையும், நாட்டு மக்கள் பாராட்டுதலையும் பெற்றான் என்ற ஒரு வரலாறு நிலவி வருகிறது.

இக் கொள்கையை அரண் செய்வன, "முதியோர் அவை புகு பொழுதில் தம்பகை முரண் செலவும்" (பொருநர்: கஅஎ-அ) என்ற பொருநராற்றுப் படைத் தொடரும், "இளமை நாணி, முதுமை எய்தி உரை முடிவு காட்டிய உரவோன்" என்ற மணிமேகலைத் தொடரும் (மணி, ச: க0எ-அ.)

'உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்

பலவும் அவன்பால் பொருந்தியிருந்தன என்பதை உறுதி செய்யும்.

கரிகாலன் ஆட்சி, அறனொடு புணர்ந்த ஆட்சி; கொலை கடிந்து, களவு நீக்கி ஆண்டான் அவன்; அவன் நாட்டு மக்களும், வடுவஞ்சி வாய்மொழிந்து, நடுவுநின்ற நெஞ்சினராய் வாழ்ந்தனர் என்றால், அவன் ஆட்சிச் சிறப்பை எடுத்துக் கூறவேண்டுவதின்று; இவன் நீதியின் நேர்மையை விளக்க, தம்முள் மாறுபட்டுப் பகைகொண்டு கரிகாலன்பால், தம் வழக்கை உரைத்து முறைவேண்டி வந்த முதியோர் இருவர், அறங்கூர் அவையில் அமர்ந்திருந்த கரிகாலன் நனி இளைஞனாய் இருப்பது கண்டு, இத்துணை இளம்பருவம் உடையான், நம் வழக்கின் நன்மை தீமைகளை நாடி முடிவு கூறும் மூதறிவுடையனாய் இரான் என்று எண்ணியவராய்த் தம் வழக்கினை அவன்முன் உரைக்கத் தயங்கினராக, அவர்கள் தயக்கத்தைக் குறிப்பான் அறிந்து கொண்ட கரிகாலன், அவையின் நீங்கி, அறையுட் புக்கு, நரைதிரை பெற்ற முதியோன் உருவுகொண்டு வந்து அரியணை மீது அமர்ந்தானாக, வழக்குரைக்க வந்த முதியோர், இவன் போலும் அரசன் என எண்ணித் தம் வழக்கை அவன்பால் உரைக்க, அது கேட்டு, அம் முதியோர் வியக்குமாறு முறையளித்ததோடு, அவர் காணத் தன் முதுமைக் கோலத்தைக் களைந்து, தன் முன்னை இளமை உருவு காட்டி அவர் வியப்பையும், நாட்டு மக்கள் பாராட்டுதலையும் பெற்றான் என்ற ஒரு வரலாறு நிலவி வருகிறது.

இக் கொள்கையை அரண் செய்வன, "முதியோர் அவை புகு பொழுதில் தம்பகை முரண் செலவும்" (பொருநர்: ககள-அ) என்ற பொருநராற்றுப் படைத் தொடரும், "இளமை நாணி, முதுமை எய்தி உரை முடிவு காட்டிய உரவோன்" என்ற மணிமேகலைத் தொடரும் (மணி, ச: 50எ-அ.)

'உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்

சொல்லான் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.'

என்ற பழமொழி வெண்பாவும் அதன் உரையுமேயாகும்.

"முதியோர் அவைபுகு பொழுதில் தம் பகை முரண் செலவும்," என்ற அப் பொருநராற்றுப் படைத் தொடர்க்குக், கரிகாலன் நரை முடித்து முறைசெய்த வரலாற்றைக் குறிப்பதாகப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்; அத் தொடர், சோணாட்டு வளங்களை விரித்துரைக்கும் பகுதியில், "இளையோர் வண்டல் அயரவும்," என அந் நாட்டுச் சிறுவர் தொழிலாகிய ஆடலைக் குறித்துப் பின்னர் முதியோர் செயலைக் குறிக்க வந்துளது. இளையோர் தம்முள் பகையின்றிக் கலந்து வண்டலாடி விளையாடுகின்றனர்; அந் நாட்டு முதியவர்களும், முன்னே பகைமைகொண்டு இருந்தாலும், அப் பகை உணர்ச்சியை இறுதிவரை கொண்டு நிற்பாரல்லர்; அறங்கூரவையுள், தம் வழக்கினை உரைக்கப் புகுமுன்னரே, பகையொழித்து ஒன்றுபடுவர்; எனவே, அந் நாட்டு மக்கள், இளையராயினும், முதியராயினும் தம்முள் மாறுபட்டு வாழாமல், ஒன்று கலந்தே வாழ்கின்றனர் என, அத் தொடர்கள் எல்லாம், அந் நாட்டு மக்கள்தம் பண்பாட்டைக் குறிப்பதாகத் தோன்றுகிறதே ஒழிய, கரிகாலன் முறைசெய்யும் முறையினை விளக்க வந்ததாகத் தோன்றவில்லை. பாட்டைத் தமக்கு வேண்டியவாறு பிரித்தும், கொண்டு கூட்டியும், தம் மனத்தில் நிறைந்துள்ள கருத்துக்களையும், கதைகளையும் ஏற்றிப் பொருள் காணல், நச்சினார்க்கினியர்பால் காணலாம் முறையாகும் என்பதற்கு இதையும் ஒரு சான்றாகக் கொள்வதல்லது, அவர் பொருளை உண்மைப்பொருள் எனக் கொள்வதற்கில்லை.

மணிமேகலை, பழமொழிச் சான்றுகளைக் கொண்டு இவ் வரலாற்றை உண்மையென ஒப்புக் கொள்வதாயின், அந் நாட்டு மக்கள், தங்கள் அரசன் யாவன் என்பதையும் உணராதவராவர் என்ற பழியையும், அறியாமையையும் சோணாட்டு மக்கட்குச் சூட்டுவதோடு, காட்சிக்கு அரியன்

கரிகாலன் என்ற பழியைக் கரிகாலனுக்கும் அளித்தவ ராவோம்; கரிகாலன் பிறப்பதற்கு முன்னரே, அவன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்துவிட் டான் என்பதும், அவன் தாயத்தார், கரிகாலன் இளமைக் காலத்தே அவனைக் கைப்பற்றிச் சிறைசெய்தனர் என்ப தும், அவன், தன் வாள்துணைகொண்டு சிறையினின்றும் மீண்டு தன் அரச உரிமையைப் பெற்றான் என்பதும் நாட்டுமக்கள் அனைவராலும் அறியப்பட்ட நிகழ்ச்சிக ளாதல் வேண்டும்; அவ்வாறாகவும், அந்நாட்டு மக்களுள் சிலர், அதிலும் முதியோர், தங்கள் அரசன் யாவன் அவன் இளையோனா, முதியோனா என்றும் அறியாராயினர் எனக் கூறல் அந்நாட்டு நிலைமையை நன்கு அறியாதார் கூறிய அறியாமையேயாம்.

கரிகாலனுக்குக் காலத்தால் அண்மையில் வாழ்ந்த சாத்தனாரே அந்நிகழ்ச்சியைக் கூறுகின்றாரே என்றால், "இளமை நாணி, முதுமை எய்தி உரை முடிவு காட்டிய உரவோன்," என்ற மணிமேகலைத் தொடர், கரிகாலனையே குறிக்கிறது என்று கொள்வதற்குரிய அகச்சான்று எதுவும் அதில் இல்லை என்பதை உற்று நோக்குதல் வேண்டும்; பழமொழிச் செய்யுள் மூலமும், "சோழன்," எனப் பொதுவகையான் கூறியுளதே ஒழிய, கரிகாலன் பெயர் கூறிற்றில்லை என்பதையும் நோக்கினால், மணிமேகலை யும், பழமொழியும் கூறும் நீதிவழங்கிய நிகழ்ச்சி, சோழர் குலத்தில் தோன்றிய ஒருவனைக் குறிக்கிறது என்று கொள்வதல்லது, அது, கரிகாலனையே குறிக்கிறது எனக் கொள்வதற்கில்லை.

கரிகாற் பெருவளத்தான், தன் நாட்டுவளத்தைப் பெருக்கச் செய்த அருஞ்செயல்கள் பலப்பல; நாட்டின் விளைபொருள் பெருக வழிசெய்தான் முதற்கண்; நாடு களைச் சூழ இருந்த காடுகளை அழித்து, அவற்றை வள மிக்க நிலங்களாக மாற்றினான்; அந் நிலம் நீர்வளம் உடையதாகக், குளம் பல தோண்டினான்; அந்நீர் வளமும் போதாது என உணர்ந்த அந்நிலையே, பயனின்றிக்

கொன்னே கடலிற் போய்ச்சேரும் காவிரிநீரைப் பயன் படுத்திக்கொள்ள எண்ணிக், காவிரியின் இருமருங்கும் கரை அமைத்து அணைகட்டி நீரைத் தேக்கி, நீர்வளத்தைப் பெருக்கிச், "சோழ வளநாடு சோறுடைத்து," என்ற சிறப்பிற்குக் காரணமாய்க் கவின் உற்றான்;

"காடு கொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கி."
(பட்டினப்பாலை : உஅங-ச)

நாட்டை வளமுடையதாக்கி விளைபொருள் வளர வழி செய்ததோடு அமைதி உறாத கரிகாலன், தன் நாடு, செல்வத்தாலும் சிறந்ததாதல் வேண்டும் என்று விரும்பினான்; விரும்பிய அவன், அதற்குத் தலைநகர் உறையூர்போலும் உள்நாட்டு ஊராக இருத்தல் கூடாது என உணர்ந்து, காவிரி கடலோடு கலக்குமிடத்திற்கு அண்மையில், காவிரிப்பூம் பட்டினம் என்ற அழகிய நகர் ஒன்றை அமைத்தான்; அதனால் கடல் வாணிபம் வளர்ந்து நாட்டுச் செல்வம் பெருகிற்று; வாணிபப் பொருள்களை வகைப்படுத்தி, அவற்றிற்கான சுங்கத்தை முறையாகப் பெற்று அரசச் செல்வத்தையும் பெருக்கினான்.

புதிய தலைநகரைப் பிறநாட்டு மக்களும் கண்டு வியக்கும்வண்ணம் அமைத்த கரிகாலன், பழைய தலைநகரின் இன்றியமையாமையினை மறந்தவனல்லன்; காவிரிப்பூம் பட்டினம், கடல்வாணிபத்திற்கு ஏற்றது என்பதும், உறையூர் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்றது என்பதும் உணர்ந்து, உறையூர்க்கண் இருந்த அரசன் கோயில் முதலாம் பல்வேறு மாளிகைகளைப் புதிய முறையில் மாற்றி அமைத்ததோடு, அந் நகரைச் சூழப் பெரிய மதில் ஒன்றை எடுத்து, அம்மதில் முழுதும் பகைவர் கண்டு அஞ்சத்தக்க படைக்கலம் பல அமைத்துத் தலைநகரை அணுகுதற்கு அரிய அரண் அமைந்ததாக ஆக்கினான். (பட்டினப்பாலை : உஅரு-கூக).

பிறந்த நாள்தொட்டு, எல்லையும், இரவும், நாடு, நாட்டாட்சி என்ற எண்ணமேகொண்டு வாழ்ந்த கரிகாலன்,

மனைவி, மக்களோடு மகிழ்ந்து வாழ்வதிலும் தவறினானல்லன்; வாய்ப்புக் கிடைக்குந்தோறும், சுற்றம் சூழச் சென்று, காவிரியில் கழார்ப் பெருந்துறைக்கண் நடைபெறும் புதுப்புனலாட்டு விழாவில் கலந்துகொண்டு மகிழ்வதும் செய்வன்.

கரிகாலன், புலவர்களைப் பேணிப் புகழ் பெருக்குவதிலும் பெருவிருப்புடையனாவன்; அவன் வாயில், "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்," எனப் புலவர் புகழ்வர்; பரணர், கருங்குழல் ஆதனார், வெண்ணிக் குயத்தியார், மாமூலனார், முடத்தாமக் கண்ணியார், கடியலூர் உருத்திரங் கண்ணனார் முதலாய புலவர் பெருமக்கள் அவனைப் பாராட்டியுள்ளனர்; அவன் புலவர்களைக் கேளிர் போல நோக்கி, வேட்பக்கூறி அழைத்து, கண்ணிற்காண நண்ணுவழி யிருத்தி, அவர்க்கு வேண்டும் உணவும் உடையும் உறுபொருளும் பலப்பல தந்து அனுப்புவன்; அவன் தன்னைப் பாராட்டிப் பாலை பாடிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான் என்றால், அவன் தமிழ்ப் பற்றினை என்னெனக் கூறிப் போற்றுவது!

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தோ டாறுநூறு[ஆயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்."
(கலிங்கத்துப்பரணி)

"பெருஞ்சேரலாதனைத் தோற்கடித்த கரிகாலன் முற்பட்டவன்; இமயம்வரை சென்ற கரிகாலன் பிற்பட்டவன்; சங்கநூல்களில் கரிகாலன் என இருவர் கூறப்பட்டுள்ளனர்; முதற் கரிகாலனைப் பற்றிய அகப்புறப் பாடல்களின் நடைக்கும், இரண்டாம் கரிகாலனைப் பற்றிய பட்டினப்பாலை, பொருநராற்றுப் படை இவற்றின் நடைக்கும் இடையில் நிலவும் சிறிதளவு வேறுபாடு நுணுகி நோக்குவார்க்குப் புலனாம்" எனக் கூறுவாரும் உளர்;

இதனால், பரணர், நக்கீரர், மாமூலனார், கருங்குழலாதனார், கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார் ஆக இவர்களால் பாடப்பெற்றோன் முதற் கரிகாலன் என்பதும், இவர்கள் பாடலால் அறியப்பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்த பெருஞ்சேரலாதனோடு போரிட்டோன் இம் முதற் கரிகாலனே என்பதும், வடநாடு சென்றோன் இவனல்லன் என்பதும், கடியலூர் உருத்திரங் கண்ணனார், முடத்தாமக் கண்ணியார் இவர்களால் பாடப்பெற்றோனும், முடத்தாமக் கண்ணியார் கூற்றுப்படி உருவப்பஃறேர் இளையோன் சிறுவனும் ஆகிய கரிகாலன் இரண்டாம் கரிகாலன் என்பதும், இவனே வடநாடு சென்றோன் என்பதும் அவர்கள் கருத்தாதல் தெளிவாம்.

கரிகாலன் இருவர் என்ற கொள்கையுடையார், "இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சம், கி. பி. 171-193-இல் ஒரு கயவாகுவையும், கி. பி. 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு கயவாகுவையும் குறிப்பிடுகிறது; இவ்விருவருள் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்தவன் முதற் கயவாகுவே யாதலின், அவன் காலம் இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலமே. வடக்கே கங்கையாறுவரை பிரபல முற்றிருந்த ஆந்திர சதகர்ணி அரசன் யக்ஞஸ்ரீ என்பவன் கி. பி. 166-196-இல் அரசாண்டவனாவன்; இவனே சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்ற செங்குட்டுவன் நண்பன் நூற்றுவர் கன்னர் என்பவன்; இவன் காலம் கயவாகுவின் காலத்தோடு ஒற்றுமையுடையது; ஆகவே செங்குட்டுவன் காலம் அவ்விரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலமே ஆகும்; செங்குட்டுவனுக்கு முற்பட்டவன் கரிகாலன் ஆதலாலும், அவன் வடநாடு செல்ல ஏற்றகாலமாக விளங்கியது, புஷ்யமித்ர சுங்காவுக்குப் பிற்பட்ட காலமே (கி. மு. 148-27) ஆதலாலும், இக்காலமே, இலங்கைமீது தமிழரசர் படையெடுத்துச் செல்ல ஏற்றகாலம் என்று மகாவம்சம் கூறுவதாலும், இரண்டாம் கரிகாலன் காலம் கி. மு. 60, கி. மு. 20-க்கு இடைப்பட்ட காலமே ஆகும்" என்றும் முடிவுசெய்வர்.

முதற் கரிகாலனைப் பாடிய பரணரே, இரண்டாம் கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளையோனையும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன் செங்குட்டுவனையும் பாடியுள்ளார்; கரிகாலன் இருவர் எனக் கொள்ளாது, ஒருவனாகவே கொண்டு, பரணர், கரிகாலனை அவன் ஆட்சிக்கால இறுதியிலும், அஃதாவது கி. மு. 20-இலும், சேரன் செங்குட்டுவனை அவன் ஆட்சித் தொடக்கத்திலும், அஃதாவது கி. பி. 166-இலும் பாடியதாகக் கொண்டாலும், பரணர் நூற்று எண்பத்தாறு ஆண்டுகட்குமேல் (கி. மு. 20+ கி. பி. 166: 186) வாழ்ந்தவராகக் கோடல்வேண்டும்; இம்முடிவு கொள்ளற் பாலதன்று; கரிகாலனுக்கும், செங்குட்டுவனுக்கும் இடைப்பட்டகாலமே இத்துணைப் பெரிது என்றால், கரிகாலன் தந்தை உருவப்பஃறேர். இளையோனுக்கும், செங்குட்டுவனுக்கும் இடைப்பட்டகாலத்தை நோக்கின், பரணர் வாழ்நாள் மேலும் நீளும். இனி, கரிகாலனை இருவராகவேகொண்டு, பரணர் அகப்புறப் பாடல்களால் முதற் கரிகாலனைப் பாடியுள்ளார் என்பதை வைத்து நோக்கினால், அவர் வாழ்நாள் எத்துணை நீளமுடையது என்பதை எண்ணிப் பார்க்கவே இயலாது; இதனால், இரண்டாம் கரிகாலனுக்கும், செங்குட்டுவனுக்கும் வரையறுத்த காலமும் பொருந்தாது; அக்காலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கரிகாலன் இருவர் எனக் கொள்வதும் பொருந்தாது.

இவ்வாறு அவர்கள் கூறியகாலம் பொருந்தாமையோடு, மேலும் ஒரு அகச்சான்று, கரிகாலன் இருவர் என்ற கொள்கையொடு முரண்படுவதையும் அவர்கள் அறிந்திலர். முதற் கரிகாலனைப் பாராட்டிய பாக்கள் என்று அவர்களால் கூறப்பெறும், பரணர், மாமூலனார், வெண்ணிக் குயத்தியார் முதலியோரால் பாடப்பெற்ற அகப்புறப் பாடல்களில் எடுத்துக் கூறப்பெற்ற வெண்ணிப் பறந்தலை நிகழ்ச்சி, அவர்களால் இரண்டாம் கரிகாலனைப் பற்றியது என்று கூறப்பெற்ற பொருநராற்றுப் படையிலும், அப்பாட்டுடைத் தலைவன் செயலாகக் கூறப்பட்

டுளது; பரணர், கரிகாலனைப் பாடினார் என்றால், அவன் காலத்தில் வாழ்ந்தவர் என்று கொள்ளவேண்டுவதின்று. கரிகாலனுக்குப் பிற்காலத்தே வாழ்ந்த அவர், இறந்த கால நிகழ்ச்சிகளையே பாடினார் என்று கொள்ளுதல்வேண்டும் என்றால், பரணர் இரண்டாம் கரிகாலன் தந்தை எனக் கூறப்பெற்ற உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியை எதிர்முகப்படுத்தியே பாடியுள்ளமையானும், இக் கரிகால னுக்குப் பிற்பட்டோனாகிய செங்குட்டுவனையும் பாடியுள் ளமையானும், அவர் முதற் கரிகாலன் காலத்தில் வாழ்ந் தவரல்லர் என்பதை ஒப்புக்கொள்வதானாலும், இரண்டாம் கரிகாலன் காலத்தில் வாழ்ந்தவரே என்பது உறுதிசெய் யப்படும்; ஆகவே, அவர் அகப்பாடல்களில் குறிப்பிடும், வெண்ணி, வாகை நிகழ்ச்சிகளுக்கு உரியோன் எனக் கூறப் பெற்ற கரிகாலன், அவர் காலத்தில் வாழ்ந்தோனாகிய இரண்டாம் கரிகாலன் அல்லன்; அவருக்கும், அவ்விரண் டாம் கரிகாலனுக்கும் முற்பட்டோனாகிய முதற் கரிகா லனே என்று கூறுவது பொருந்தாது; வெண்ணிப் போர் வெற்றி குறித்து, அழுந்தூரில் ஆர்ப்பு எழுந்தது எனப் பரணர் கூறுவதால், பரணரால் குறிப்பிடப் பெற்றோன், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னிக்கும், அழுந்தூர் வேள் மகளுக்கும் பிறந்த கரிகாலனே என்பது தெளிவாகிறது.

பொருநராற்றுப் படைபெற்ற கரிகாலனும், உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகனே எனக் கூறுகிறது அப்பாட்டு; இதனால், அகப்புறப் பாடல்களில் பாராட்டப் பெற்ற கரிகாலனைப் பெற்றோரும், பட்டினப்பாலை, பொரு நராற்றுப் படைகளால் பாராட்டப்பெற்ற கரிகாலனைப் பெற்றோரும் ஒருவரே என்பது நன்கு தெளிவாகிறது. பரணர், முதற் கரிகாலன்மீது ஏற்றிக் கூறும் அதே வெண் ணிப் போர், முடத்தாமக் கண்ணியாரால் பாராட்டப் பெற்ற இரண்டாம் கரிகாலனுக்கும் ஏற்றிக் கூறப்பட் டுளது; அது, முன்னோர் செயலைப் பின்னுள்ளோர்க்கு ஏற்றிக் கூறும் முறைபோலன்றி, அப்பாட்டுடைத் தலைவன் செயலாகவே கூறப்பட்டுளது; ஆகவே, அச்செயல், இரண்

டாம் கரிகாலனுடையதே ஆகும்; ஆக, அவன்செயலை முதற்கரிகாலனுக்கு ஏற்றிக் கூறுவது இயலாது; முன்னுள்ளோர் செயலைவேண்டுமானால், அவர்வழி வந்தோர்க்கு ஏற்றிக் கூறுதல் இயலும்; காலத்தால் பிற்பட்டோர் செயல் ஒன்றை, அவருக்கு முற்பட்டோர்க்கு ஏற்றிக் கூறுவது இயலாது; இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து ஊன்றி நோக்கின், அகப்புறப் பாடல்களால் பாடப்பெற்ற கரிகாலனும், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலைகளால் பாடப்பெற்ற கரிகாலனும் ஒருவரே; வேறுபட்ட இருவரல்லர் என்பது திண்ணமாகத் தெளியப்படும்.

# கூ. குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன்

திருமாவளவன் எனும் பெயர் கரிகாற் பெருவளத்தானுக்கே உரித்து ஆதலின், இவ்வரசன், அவனின் வேறு அறிதற்குக் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன் என அழைக்கப் பெற்றுளான். இவ்வேந்தன், குராப்பள்ளி என்னும் இடத்தே உயிர் துறந்தவனுவன். உறையூரிலிருந்து ஊராண்டவனுவன். பெருந் திருமாவளவன், நாட்டு மக்கள் பகைவராலும், பிறராலும் துன்புறுமல் வாழ நாடாள்வதே நல்லரசின் இயல்பாம் என அறிந்து, அம் மக்களுக்குப் போர் முதலாம் செயற்கை நிகழ்ச்சிகளாலோ, மழையின்மை முதலாம் இயற்கையின் விளைவுகளாலோ கேடு வந்துற்றவிடத்து, “இக் கேடுகளை எவ்வாறு போக்கிக் காப்பேன்?” எனக் கலங்காது நின்று, நெடிது எண்ணி, கொடிது கடியுங் கோல்வன்மையுடையனுவன்; அதற்கேற்ற அறிவும் ஆற்றலும் அமைவரப் பெற்றவனுவன். கடலைச் சார்ந்த கழிநீர் கொண்டு உப்பை விளைத்து, அவ்வுப்பினைக் கல்நிறை நிலமாம் குறிஞ்சி முதலாம் உள்நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்கும் உமணர், அவ்வுப்பின நிறைய ஏற்றிய வண்டி, இடையில் பெருமணல் வெளியிலும், நிறைசேற்று நிலத்திலும் சிக்கியவிடத்து, அதைப் பொருட்படுத்தாது, மண்டியிட்டு இழுத்துச் சென்று, வண்டியை உரிய இடத்திற்குக் கொண்டு சேர்க்கும் வலிய எருதுகளைப் போன்றவன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன்.

திருமாவளவன் இருந்து ஆளும் உறையூரில் வாழ்ந்த மருத்துவன் தாமோதரனுர் எனும் புலவர், தங்கள் அரசன் பால் காணலாம் இவ்வரும் பண்புகளை எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார்:

“கானல்,
கழி உப்பு முகந்து, கல்நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்

உரனுடை நோன்பகட் டன்ன எங்கோன்
வலனிரங்கு முரசின் வாய்வாள் வளவன்.''

(புறம்: ௬0)

குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன், தன் காலத்தே வாழ்ந்த பிற அரசர் போலாது, குலப் பகைவர், குடிப் பகைவர் எனக் கருதப்பட்டோரையும் தன் நண்பர்களாகக் கொண்டு, அன்புநெறி தழைக்க அரசாண்ட நல்லவனவன். அவன், தன் காலத்தே, பாண்டி நாடாண்டிருந்த வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியொடு நட்புப் பூண்டு ஒழுகினான். தமிழரசர்கள் தம்முள் ஒற்றுமை இலராய், ஒருவரோடொருவர் பகை கொண்டு, ஒருவரை ஒருவர் கொன்றும், ஒருவர் நாட்டை ஒருவர் அழித்தும் வாழ்ந்த அறிவிழந்த வாழ்க்கையினாலேயே, தமிழகம் தாழ்ந்தது என்பதறிந்த புலவர்க்கு, இவ்வேந்தரிடையே நிலவும் ஒற்றுமைக்காட்சி உயர்பேரின்பம் அளித்தது;

அவ்வாறு பேரின்பம் கொண்டாருள் ஒருவராய காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், அவ்வொற்றுமை நின்று வாழ விரும்பினார்; உடனே அவர் பெருந் திருமாவளவனும், பெரு வழுதியும் ஒருங்கிருந்த அவையடைந்து, "நீவிர் இருவீரும் இவ்வாறு அன்பு கொண்டு வாழ்வதினும் இனியது பிறிது இல்லை; நீவிர், இருவீரும், ஒருவர்க்கு ஒருவர் உறுதுணையாகி உயர்வாழ்வு வாழ்வீராகுக! நீவிர், இந்நிலையினின்றும் திரியீராயின், இந்நிலவுலகெல்லாம் நுங்கள் காலடிக்கீழ் வந்துறுதல் உறுதியாம்; ஆனால், தமிழரசர்கள் தம்முள் ஒற்றுமை கொண்டுவிடுவாராயின், தமிழரசு வாழும்; தமிழகம் தழைக்கும்; தமக்குக் கேடு உண்டாம் என்ற எண்ணமுடையாராய நும் பகைவர், உங்களிடையே பகைவளரப் பற்பல புரிவர்; அவர்கள் நண்பரைப் போலவும், நல்லன தேடுவார் போலவும், முன்னோர் முறைகளை முன்னின்று கூறுவார் போலவும் நும்மொடு பழகிப் பாழ்தரும் உரைகளைப் பக்குவமாகக் கூறுவர்; அவ்வாறு கூறுவார் உரைகளை நீவிர் செவிக் கொள்ளீராகுக! இன்றே போல் என்றும் ஒன்றிய வாழ்வினீராகுக! இவ்வொற்று

மையால் வெற்றி பல பெற்று, பிற நாட்டுக் குன்றுகள் தோறும் நுங்கள் கொடியே பறக்க வழி செய்வீராகுக!" என்ற அறிவுரையினை அவர் அகம் கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தார்:

"இன்னீ ராகலின் இனியவும் உளவோ?
இன்னும் கேண்மின்; நும் இசை வாழியவே!
ஒருவீர், ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவிரும்
உடனிலை திரியீ ராயின், இமிழ்திரைப்
பெளவமுடுத்த இப்பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே;
அதனால், நல்ல போலவும், நயவ போலவும்,
தொல்லோர் சென்ற நெறிய போலவும்,
காதல் நெஞ்சின் நும்இடை புகற்கு அலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும் புணர்ச்சி! வென்று, வென்று
அடுகளத்து உயர்க நும் வேலே! கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டை யொடு பொறித்த
குடுமியவாக, பிறர் குன்றுகெழு நாடே!"

(புறம்: ௫௮)

இவ்வாறு, புலவர் பாராட்ட வாழும் பண்புடையான் பெருந் திருமாவளவன் என்பதறிந்த, கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவர், உறையூர் சென்று அவனைக் கண்டு பாராட்டிப் பரிசில் வேண்டி நின்றார்; பெருந் திருமாவளவன், தன் படைப்பெருமையினாலோ, அன்றிச் செல்வச்செருக்காலோ, அல்லது, அரசியல் அலுவல் மிகுதியினாலோ, புலவரை உடனே அழைத்துப் பரிசில்தாராதாயினான். அதனால், சினங்கொண்ட புலவர், "வேந்தே! அரசர்கள், காற்றெனக் கடிது செல்லும் குதிரைகளை உடையரென்றோ, நெடிய பலதேர்களை உடையரென்றோ, கடல் போலும் பெரும்படையினை உடையரென்றோ, மலைபோலும் களிறுகளையுடையரென்றோ, முரசு

முழங்கச் சென்று அரசர் அடிபணியப் பெறும் வெற்றி யுடைய ரென்றோ, கருதி, அவர்கள் ஆற்றல் ஒன்றையே கண்டு வியந்து பாராட்டும் பண்பினேம் அல்லோம்; எம்மால் வியந்து பாராட்டத் தக்கார், முள்வேலி உள்ளே முளைத்து, மறியும், மாடும் மேய்ந்து ஒழித்த முன்னைக் கீரையும், வரகரிசிச் சோறும் ஆய புல்லிய உணவினையே அளிக்கவல்ல, செல்வத்தாற் செழிக்கப்பெறாத சிற்றூர் மன்னரே யாயினும், எம் பெருமை யறிந்து பேணும் பண்புடையாளரே யாவர். எத்துணைக் கொடிய துன்பம் வந்துற்ற போதும், உயரிய புலவர்களை உணர்ந்து பாராட்டத் தக்க உணர்ச்சி யில்லார்தம் உறுபொருள் விரும்பேம்; நல்லறிவும், நற்பண்பும் உடையார் நல்குரவினராயினும், அவர் நல்குரவினையே நயந்து பாராட்டுவோம்." என்று கூறி வெளியேறினர் என்ப.

"வளி நடந்தன்ன வாச் செலல் இவுளியொடு
கொடி நுடங்கு மிசைய தேரினர் எனாஅக்
கடல் கண்டன்ன ஒண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ
உரும் உரற்றன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர் எனாஅ
மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே;
எம்மால் வியக்கப் படூஉ மோரே,
இடுமுட் படப்பை, மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்னா ராயினும், எம்வயின்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே;
மிகப் பேர் எவ்வம் உறினும், எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்;
நல்லறி வுடையோர் நல் குரவு
உள்ளுதும் பெரும! யாம் உவந்து நனிபெரிதே."

(புறம்: கக௯)

## எ. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

திருமாவளவன் ஆட்சிக்குப் பின்னர்ச் சோழநாடு இருகூறுபட்டு இருதிறத்தாரால் ஆளப்பட்டு வந்தது; அவற்றுள் ஒன்றிற்குத் தலைநகர் புகார்; மற்றொன்றிற்குத் தலைநகர் உறையூர். கரிகாற் பெருவளத்தானுக்குப் பிறகு உறையூரும், உறையூர்ச் சோழருமே சிறந்து விளங்கினர். உறையூராண்ட சோழ அரசர்களுள், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சிறந்தோனவன். கிள்ளிவளவன் புலவர் போற்றும் புகழ்மிக்கோனவன். ஆடுதுறை மாசாத்தனார், ஆலத்தூர்கிழார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஐயூர் முடவனார், கோவூர்கிழார், நக்கீரர், நல்லிறையனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார் முதலிய புலவர் பலர், இவன், கொற்றம், கொடை, வெற்றி, விழுப்புகழ் முதலாயினவற்றை விளங்கப் பாடிப் பாராட்டியுள்ளனர்.

முதலைகள், ஊர் காவலர், இடையாமத்துக்கொளுத்திய விளக்கொளியைக் கண்டு, ஒன்று கூடி ஓடிக் கவர்ந்து செருக்கொண்டு திரிந்து வாழ்தற்காம் ஆழமும், அகலமும் கொண்ட அகழியினையும், செம்பையொத்த திண்ணிய மதிலையும் உடைய ஊரகத்தே பகையரசன் வாழ்கிறான் என்பதறிந்தானாயின், அவ்வூரின் பண்பும், பெருமையும் பாராட்டுவதொழித்துப் போரிட்டு அழித்தலைச் செய்யும் ஆற்றல் உடையவன் :

"கராஅம் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத்து உடன்தொக்கோடி
யாமம் கொள்பவர் சுடர்நிழல் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத்து உண்மையின்
நல்ல என்னாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத்தானே."

(புறம் : ௩௭)

கிள்ளிவளவன், எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணியனுவன்; அவன் விரும்பினுல், ஞாயிறு, நில வொளி வீசி மகிழ்வூட்டும்; திங்கள், வெப்புற்றுக் காய்ந்து வெந்துயர் தரும்; அவன் அருள்நோக்குப் பெற்றவர், பொன்னும், பொருளும் பெற்றுப் பொலிவுறுவர்; அவனுல் சினந்தோர் நாடு, தீவாய்ப்பட்டுத் தீய்ந்தொழியும்.

'நீ, உடன்று நோக்கும்வாய் எரிதவழ,
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்,
வெண் திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை.'' (புறம்: ௩௮)

வளவன், பகைவர்தம் கடத்தற்கரிய அரண்கள் பல வற்றையும், அரிய என எண்ணுது சென்று அழித்து, தோற்ற பகையரசனின் தலையில் விளங்கும் பொன்னுலாய முடிகளைக் கைப்பற்றி அழித்து, அப்பொன்னுல் கழல் செய்து காலில் புனைந்து வாழும் பேராண்மை உடையவன். அவனை இகழ்ந்தோர் எவரும் எழில்பெற விளங்குவதைக் காணல் இயலாது; அவரனைவரும், அவனுல் ஆற்றல் குன்றி அடங்கி அழிந்தே போயினர்; அவ்வாறின்றி, அவன் புகழ் பாடுவோரெல்லாம், பொலிவுற்று வாழ்வரேயல்லால், தம் நிலையில் தாழ்வாரல்லர்.

'நீயே, பிறர் ஓம்புறுமற மன்னெயில்
ஓம்பாது கடந்து அட்டு, அவர்
முடிபுனைந்த பசும் பொன்னின்
அடிபொலியக் கழல் தைஇய
வல்லாளனை வயவேந்தே!
யாமே, நின் இகழ்பாடுவோர் எருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவு தோன்ற
இன்று கண்டாங்குக் காண்குவம்.'' (புறம்: ௪0)

உயிர்களைக் கொல்வதே தொழிலாகக் கொண்ட கூற்றுவனும், உயிர்களைக் கொல்லுதற்காம் காலம் பார்த்தே கொல்வன்; தாம் விரும்பியாங்கே, விரும்பிய

போதே கொல்வானல்லன்; ஆனல், கிள்ளிவளவனே, காலம் எதையும் பாரானய்த், தான் அழிக்க விரும்பிய பகைவர்களைத், தான் வேண்டியவாறு வேண்டிய இடத்தி லேயே அழிக்கும் கொடியனவன். இதனல், கிள்ளிவள வன் பகைபெற்ற நாட்டு அரசரும், வீரரும், தம் மக்களைப் பிரிந்து மாளவேண்டுமே என்ற எண்ணத்தால், அம் மக்களை வாரியெடுத்து வாய்நிறைய முத்தம் அளிப்பர்; தமக்கும், தம்நாட்டிற்கும் உண்டாம் ஏதத்தைத் தம் மனைவி மார் அறியின் பெரிதும் வருந்துவரே என்ற எண்ணத் தால், அதை அவர் அறியாவண்ணம் மறைத்துத் துயர் உறுவர். பகைவர் நாட்டார், இவ்வாறு எண்ணி எண்ணி வருந்துமாறு, காற்ருேடு கலந்து செல்லும் கடுநெருப் பெனப் படையொடு செல்லும் பேராண்மையாளன் கிள்ளி வளவன்:

"காலனும் காலம் பார்க்கும்; பாராது
வேலீண்டுதானை விழுமியோர் தொலைய
வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே!
..........................................
.........நின் வருதிறன் நோக்கி
மையல்கொண்ட ஏமமில் இருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி, மனையோட்கு
எவ்வம் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன் ருல்தானே, காற்ருேடு
எரிநிகழ்ந் தன்ன செலவின்
செருமிகு வளவ! நிற்சினைஇயோர் நாடே."

(புறம்: ௪௧)

புலி ஈன்று புறங்காக்கும் அதன் குட்டியைக் கைப் பற்றுதல் எவர்க்கும் இயலாது; கிள்ளிவளவன், குட்டி யைக் காக்கும் புலியே போல், தன் நாட்டினைக் காத்து நிற்பன்; ஆகவே, அவன் காக்கும் நாட்டினைப் பகைவர் கைப்பற்றுதல் இயலாது; அவன் அத்துணை ஆற்றல் வாய்ந்தவன்; அவனை அழித்து அவன் நாட்டைக் கைப் பற்றும் துணிவு, அவன் பகைவர்க்கு உண்டாகாது.

வளவன், இவ்வாறு காத்து நிற்பதால், சோணுட்டு மக்கள் பகைவர் படையால் பாழாவது இலர்; பெரு மழை பெய்து உண்டாம் வெள்ளப்பெருக்கால் ஒரொருகால் அழிவுறு வரேயல்லாமல், "வளவ! பகைவர் படையால் பெருந்துயர் உற்றேம்; உறுதுணைபுரிந்து உறுதுயர் களைக!" என அவர் என்றும் வேண்டியதிலர்:

"தண்புனல் பூசல் அல்லது நொந்து
களைக வாழி வளவ என்றுநின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது
புலிபுறம் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப." (புறம்: சுஉ)

வளவன், வெற்றிச்சிறப்பு விரும்பும் வேந்தனுவன், பெருவேந்தனுய் விளங்கும் தன்முன், பெருநாடொடான் றின் அரசராய்ப் பிறர் வாழ்வதைப் பொறுது அவன் உள் ளம்; இத்தகு உள்ள ஊக்கமுடையோனுய வளவன், தன் நாட்டை அடுத்துள்ள சேரநாட்டைப் பேரரசனொருவன் சிறக்க ஆண்டிருப்பதைக் கண்டு வெகுண்டான்; அவன் தலைநகர் கருவூரை அழித்து, அவன் தன் அடி பணிதலைக் காணத் துடித்தது அவன் உள்ளம். உடனே, சோழர் பெரும்படையொன்று, கருவூர்க் கோட்டையை வளைத்துக் கொண்டது; சோழன் வரவுணர்ந்த சேரன், நெடுநாள் முற்றுகைக்கு வேண்டும் பொருளோடு கோட்டையை அடைத்துக்கொண்டு உள்ளிருக்கலாயினன்; சேரன் செயல் கண்டு சினந்த சோழர் படை, கருவூர்க்கோட்டையைச் சூழ உள்ள காவற் காட்டினும் புகுந்து மரங்களை வெட்டி வீழ்த்தி அழிக்கலாயிற்று; அந்நிலையிலும், சேரன் சினந்து வெளிப்போந்தானல்லன்; சேரன் செயலறிந்து வளவனும் முற்றுகையினை விட்டானல்லன்; இந்நிலையினை வளவன் அரசவையில் வாழ்ந்துவரும் ஆலத்தூர்கிழார் உணர்ந்தார்; அரசர், தம்மொத்த ஆற்றல் வாய்ந்த அரசரோடு போர் புரிவதையே விரும்புவர்; அதுவே, அவர் வீரத்திற்கு அழ காம்; தமக்கு நிகரில்லாதாரொடு போரிடுதல் அரசர்க்கு இழுக்காம்; இவ்வுண்மை உணர்ந்த ஆலத்தூர்கிழார்; தம்

அரசன்பால் அத்தகு பழியுண்டாதல் கூடாது என எண்ணினார்; உடனே வளவனை அடைந்து, "வளவ! நின் பெரும் படையால் வளைக்கப்பெற்ற கருவூர்க் கோட்டையுள் வாழ்வோன் இயல்பினைச் சிறிதும் எண்ணிப் பார்த்திலை போலும். பகைவர் படை, தம் கோட்டையைப் பல நாளாகச் சூழ்ந்திருப்பதையே பழியாம் எனக் கருதுவர் சிறந்த வீரர். நின் படை இக் கோட்டையினை இவ்வளவு நாட்கள் சூழ்ந்திருப்பது கண்டும், சேரன் வெகுண்டு வெளி வந்தானல்லன். அம்மட்டோ! நின் படை, கோட்டையைச்சூழ்ந்து வறிதே கிடக்கவும் இல்லை. அவன் காவற்காட்டு மரங்களை வெட்டி வீழ்த்திக்கொண்டு இருக்கின்றன; மரங்களை வெட்டிவீழ்த்தும் ஓசை, உள்ளிருப்போன் காதுகளிற் சென்றும் நுழைகிறது; அது கேட்டும் அவன் வெளிப்போந்தானல்லன்; அத்துணை அச்சமுடையோனுவன் அவன்; அத்தகையானொடு போரிடல், ஆற்றல் வாய்ந்த பெருவீரனாய நினக்குப் பெருமை தரும் செயலாகாது. இம் முற்றுகையால் நின் பெருமை குன்றுவது காண வருந்துகின்றேன்," என்று கூறினார்:

'கடி மரம் தடியும் ஓசை, தன்னூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்கு இனிதிருந்த வேந்தனொடு, ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தக வுடைத்தே."
(புறம்: ௩௬)

புலவர்தம் பொருள் நிறைந்த பொன்னுரை கேட்டும், கிள்ளிவளவன் கருவூர்க் கோட்டையை அழிக்காது விட்டானல்லன்; வளவன், கோட்டையையும், கோட்டையகத்து ஊரையும் அழித்து, ஆண்டு, இமயத்தே விற்பொறித்த வீரம் மிக்கோன் யான் என்ற பெருமிதம் தோன்ற வீற்றிருந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் அழித்து வெற்றிபெற்று விழுப்புகழ் கொண்டான். வஞ்சியானை வென்ற வளவன் வெற்றிச்சிறப்பினை, மாறோக்கத்து நப்பசலையார் ஒரு பாட்டகத்தே வைத்துப் பாராட்டியுள்ளார்:

"இமயம் சூட்டிய ஏமவிற் பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்தாள்." (புறம் : ௩௯)

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், பெண்ணையாற்றுப் பாய்ச்சலையுடையதும், திருக்கோவலூரைத் தலைநகராக் கொண்டதுமாய மலைநாட்டை மலையமான் என்பான் ஆண்டுகொண்டிருந்தான். மலையமான், கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்து விளங்குவ தறிந்தோ அன்றி யாது காரணத்தாலோ, கிள்ளிவளவன் அவனோடு பகைகொண்டான். மலையமானுக்குரிய முள்ளூர்மலையை முற்றி அழித்தான். அவ் வெற்றியோடு அமைதியுறாத வளவன், மலையமான் மக்கள் இருவரையும் கைப்பற்றிக் கொணர்ந்து, தன் யானையின் காற்கீழிட்டுக் கொல்லத் துணிந்தான். அரசன் கொடுஞ்செயலால், அவன் புகழ் குன்றும் என்பதறிந்த கோவூர்கிழார் எனும் அவன் அரசவைப்புலவர், அவனை அணுகி, "அரசே! நின் முன்னோர், 'யானுற்ற துயர் தீர்த்து அருள்புரிய வேண்டுகின்றேன்,' எனத் தன் குறைகூறும் ஆற்றலற்ற புறாப்போலும் சிற்றுயிர்க்குற்ற துயரையும் போக்கவல்ல பேரருட் குணமுடையராவர்; நின் யானையால் கொல்லப்பட விருக்கும் இவர்களோ, அறிவுடைப்பெருமக்கள் வறுமையால் வருந்துவதஞ்சி, வாரி வழங்கும் வள்ளல் ஒருவன் வயிற்றுதித்தோராவர். அடைக்கலம் புகுந்தாரை ஆதரிக்கும் அருட்குண முடையோர் வழிவந்த நீ, அண்டியோரை ஆதரிக்கும் அக்குணமே உடையான் மக்களாய இவரை அழிக்க எண்ணுதல் அறச்செயலாமோ? இவர்கள் நின்னோடு பகைத்துப் போரிடும் பருவமுற்றாரு மல்லர்; கனிமிக இளையர்; இன்னாரைக் கோறல் நினக்கு இழுக்கன்றிப் புகழாமோ?" எனக் கூறினார். கோவூர்கிழார், கோவைபட எடுத்துக்காட்டிய காரணங்களைக் கேட்ட பின்னரும் தான் துணிந்ததே செய்யும் தகுதியில்லானல்லன் வளவன்; அவர் அறிவுரைகொண்டு அம் மக்களைப் போக விடுத்தான்:

"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை ;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி
தமது பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டு அழூஉம், அழாஅல் மறந்த
புன்தலைச் சிறுஅர் ; மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர் :
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே." (புறம்: ௪௬)

துளுநாட்டைச் சேர்ந்த கோசர் எனும் போர்வீரர் கூட்டம், தமிழகத்துட் புகுந்து, தமிழரசுகளுக்குத் தொல்லை பல விளைத்துவந்தது. அதனால், அக் கோசரை அழித்து ஒழித்தல்வேண்டும் என அக்கால அரசர்கள் பலரும் எண்ணியதைப் போன்றே, கிள்ளிவளவனும், வாய்மை வழுவாப் பேரொழுக்கத்தால் பெற்ற பெரும்புகழ் உடைமையாலும், செல்வச் சிறப்பாலும் சிறந்து விளங்கிய கோசர்தம் படைவலியைப் பாழ்செய்து, அவர் பண்டு கைப்பற்றியிருந்த நாடுகளைக் கைக்கொள்ள முன்வந்தான் என்ற நிகழ்ச்சியொன்றை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார் :

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்கு படைநூறி
நிலங்கொள் வெஃகிய பொலம்பூண் கிள்ளி."
(அகம் : உ0௫)

கிள்ளிவளவன் கோசரைத் துரத்திய வெற்றிச்சிறப்பினை விளங்கப்பாடிய நக்கீரரே, அவன் பாண்டிநாட்டகத்தே மேற்கொண்ட போர் ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார். பழையன் மாறன் என்பான் ஒருவன், பாண்டியர் படைத்தலைவனாய் விளங்கினான். கிள்ளிவளவன், வெள்ளம்போல் பரந்த பெரும்படையுடன், பழையன் வாழ்ந்திருந்த கூடல்நகரை அடைந்து ஆங்கே, நெடிய பல தேர்களையும், அணி பல அணிந்து தோன்றும் யானைப் படைகளையும் உடைய பழையனை எதிர்த்துப் போராடினான் ; ஆனால். போரில் தோற்றான் ; அவனுடைய புரவிகளும் களிறுகளும் பழையன் கைப்பட்டன ; தன் பகைவ

னுய வளவன் படையிழந்து தோற்றான் என்பதறிந்த கோக்கோதை மார்பன் எனும் சேரன் பெருமகிழ்வு எய்தினான்.

"நெடுந் தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர் கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே." (அகம் : ந௩௪௬)

கிள்ளிவளவன், பழையன் மாறனொடு செய்த பாண்டி நாட்டுப் போரின் முடிவுகுறித்து மாறுபடுவாரும் உளர். பாண்டிநாட்டுப் போரில், தோற்றோன் கிள்ளிவளவனல்லன்; பழையன் மாறனே; பழையன் மாறன், பேரரசர் பலரும் கண்டு அஞ்சத்தக்க பெரும்படையும் பேராற்றலும், உடையனாகவே, அவன் படை கண்டு அஞ்சும் அவன் பகைவருள் ஒருவனாய கோக்கோதை மார்பன், அவன் அழிவுகண்டே மகிழ்ந்தான் என, அவர் கூறுவர்; ஆனால், கிள்ளிவளவனைப் பாடிய புலவர் எவரும், அவன் பாண்டிநாட்டை வென்றான் என, யாண்டும் கூறவில்லை யாதலாலும், பழையன் மாறன், கிள்ளிவளவன் ஆகிய இருவருள், கருவூரை அழித்து, ஆண்டு அரசோச்சியிருந்த சேரனை அழித்த கிள்ளிவளவனே, சேரர்தம் பெரும் பகைவனாவன் ஆகவே, சேரன் ஒருவன், அவன் பெற்ற வெற்றி கண்டு மகிழ்ந்தான் என்பதினும், அவன் தோல்வி கண்டு உவந்தான் என்பதே பொருந்துவதாம் ஆதலாலும், பழையன் படைத்தலைவனே யல்லால் பேரரசன் அல்லனாகக், கிள்ளிவளவன் பழையனைச் சாய்த்து 'மன்னர் ஊர் கொண்டான்,' எனல் பொருந்தாது ஆதலாலும், பாண்டிநாட்டில், கிள்ளிவளவன் வெற்றி பெற்றவனல்லன், எனக் கோடலே பொருந்துவதாம்.

கிள்ளிவளவன் பெயர்க்கு முன்வரும், "குளமுற்றத் துத் துஞ்சி," என்ற சிறப்பு, அவன் குளமுற்றம் என்னும்

இடத்தே இறந்தான் என்பதை அறிவிக்கிறது. குளமுற்றம் எனும் இடம், சேரநாட்டில் உளது என்ப; ஆகவே, கிள்ளி வளவன், தன் இறுதிக்காலத்தே, தன்குலப் பகைவனுய சேரனேடு செய்த போரில் உயிர் துறந்தானுதல் வேண்டும்.

கொற்றத்தால் சிறந்து விளங்கிய கோனுகிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், கொடையாலும் சிறந்த கோவேந்தனுவன். "ஈதலும், இரத்தலுமாகிய இருபெருந் தொழில்களும் ஒருங்கே நிகழும் உலகே உம்பர் உலகினும் சிறந்தது என்ப ; அவ்விருதொழிலும் இனிது நிகழ்தற்கு ஏற்ப, ஈவோர், இரப்போராய இருவரையும் ஒருங்கே கொண்டு சிறப்புற்று விளங்குவதால், வளவ ! பரிசிலர், நின்பகைவர் நாட்டில் வாழும் அக்காலத்தும் நின் நாட்டையும், நின்னையுமே நினைந்து வாழ்வர்" என ஆவூர் மூலங்கிழாரும்,

"பொலம் பூங்காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும், இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையின் கையறவு உடைத்து என
ஆண்டுச்செய் நுகர்ச்சி ஈண்டும் கூடலின்
நின்னேடு உள்ளுவர் பரிசிலர்,
ஒன்னர் தேஎத்தும் நின்னுடைத்து எனவே."
(புறம் : கூஅ)

வளவன் நாடும், மனமும் வற்ருது வளங்கொழித்து நிற்பதறிந்தமையால், அவன் காலத்துப் புலவர் எல்லாம், மலையிடத்தினின்றும், மாக்கடல் நோக்கிப் பாயும் பலப்பல பேராறுகளைப்போல், அவன் நாடுபுகுந்து வாழ்வாராயினர்; புலவர் பலர் வருவதறிந்த வளவனும், வருவார்க்கு இல்லையென்னது வழங்குதற்குவேண்டும் பெரும்பொருள் பெறுவான் வேண்டிப் பகைவர்தம் நாடுபுகுந்து வெற்றிபெற்று மீள்வதை விரும்பி மேற்கொள்வன்," என, இடைக்காடனரும்,

"மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லாம் நின்னோக் கினரே;
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண்டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே." (புறம் : சஉ)

'அள்ளிக் கொடுக்கும் வள்ளன்மையுடைய வளவன் அருள்பெற்ற இரவலர், ஊழிவெள்ளத்தே உலகமே அழியினும், ஞாயிறு கிழக்குத்திசையில் தோன்றல் இன்றித் தென் திசைக்கண் தோன்றலாம் இயற்கையல்லன செயற்கையில் தோன்றும் காலமேயாயினும், வருந்துவதிலர்' என எருக் காட்டூர்த் தாயங்கண்ணனாரும்,

"எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்
தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்
என்னென்று அஞ்சலம்; யாமே வென்வேல்
அருஞ்சமம் கடக்கும் ஆற்றலவன்
திருந்துகழல் நோன்தாள் தண்ணிழ லேமே"
(புறம் : ௩௯ள)

வளவன்பால் பொருள்பெறுதல், காட்டகத்தே விறகு வெட்டி, ஊரகத்தே விற்றுப் பிழைப்பார்க்கு, அக்காட்டகத்தே அருநிதி கிடைப்பதுபோலும் அருமையுடைத்தன்று; அவ்வாறு நிதிகிடைத்தல் அரிதாம்; ஆனால், வளவன்பால் பொருள்பெறுதல் எளிதாம்; வருவார்க்குப் பொருள் வழங்கத் தவறான் வளவன்; ஆகவே, வளவன் பால் கொடைப்பொருள்பெறும் நல்வாய்ப்பு நமக்கும் உண்டாமோ என்ற ஐயம் எவர்க்கும் வேண்டாம் எனக் கோவூர்கிழாரும்,

"விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பா டன்று அவன் ஈகை;
நினைக்க வேண்டா வாழ்க அவன்தாளே." (புறம் : எ0)

கிள்ளிவளவன் இறந்தான் எனக்கேட்டு, "இத்துணைப் பேராற்றல் வாய்ந்த வளவன் எப்படி இறந்தான்? அவனை

வென்று கோறல் யாரால் இயலும் ? அவனை அணுகவும் அஞ்சுவரே பகைவர் ! எமன் எப்படி அவன் உயிரைக் கவர்ந்தான்? அவனை நெருங்கக் கூடிய ஆண்மை எமனுக்கு ஏது? எமன் தன் ஆற்றல் காட்டி அவன் உயிரைக் கவர்ந் திருக்கமாட்டான்; பகைத்து அவனுயிரைப்பற்ற அவனால் முடிந்திராது; கிள்ளிவளவன் ஒரு பெருங்கொடைவள்ளல் என்பதை எமன் அறிந்திருத்தல்வேண்டும் ; ஆகவே, அவன்பால் பாடிச்சென்று பரிசில்பெறும் இரவலர் போலவே, தானும் சென்று இருகை கூப்பி வணங்கி இரப் புரை கூறிநின்றே அவன் உயிரைப் பெற்றிருத்தல் வேண்டும்" என மாறோக்கத்து நப்பசலையாரும் கூறுவன வற்றால் வளவன் கொடைக்குணம் தோன்றிநிற்றல் உணர்க.

"செற்றன் றாயினும், செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும், உய்வின்று மாதோ!
பாடுநர் போலக் கைதொழுது எத்தி
இரந்தன் றாகல் வேண்டும்; பொலந்தார்
மண்டமர் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே." (புறம் : உஉசு)

உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற ஏனைய அடங்கி வரும். அவ்வழி, அறநூல் உணர் அறிவு அடங்கிவிடுமா யின், அரசற்கும், அவன் நாட்டிற்கும் கேடுபல உண்டாம்; ஆதலின், அவ்வாறு அவன் அறிவு அடங்கியவழி அவ னுக்கு அறிவுரை கூறத்தக்க நல்லோர் அவனருகே இருத்தல் நன்றாம்; இதை உணர்ந்தே அரசர்கள், அறிவு டையோர் கூறுவனவற்றை ஏற்றுப் போற்றி வந்துள்ள னர்; "யான் ஒரு பேரரசன் ; என்னிடம் இரந்து பொருள் பெற்றுப் பிழைக்கும் புலவன் இவன்; இவன் எனக்குப் புத்திப் புகட்டுவதா?" என, அக்கால அரசர் எண்ணினா ரல்லர். செவிகைப்பச் சொற்பொறுக்கும் இப்பண்புடைமை கிள்ளிவளவன்பாலும் அமைந்து கிடந்தது.

வளவன் ஆட்சிக்காலத்து ஓர் ஆண்டில் சோணாட்டு நிலங்கள் விளையாதொழிந்தன; அரசன் இறையாகப் பெற

வேண்டுவது நிலம் தரும் விளைவில் ஆறில் ஒன்றே ஆதலின், விளையாத ஆண்டில் அரசன் இறை வாங்காது விடுத்தல் வேண்டும். ஆனால், வளவன் அரசியல் அலுவலர் அவ்வாறு செய்யாது, அதைக் கடனாகவே கருதி அடுத்துவந்த ஆண்டில் அதையும் சேர்த்துத் தண்டுவாராயினர்.

அதனால் வருந்திய குடிகளுள் ஒருவராய வெள்ளைக்குடி நாகனார், வளவனை அடுத்து, காவலன் காட்சிக்கெளியனாதல் வேண்டும்; கடமையில் தவறாமை வேண்டும்; அவை யிரண்டும் அவன்கீழ்ப் பணியாற்றும் அலுவலரிடத்தும் நீங்காது நிற்றல்வேண்டும் என்றும், தன் நாட்டு மக்கள் நல்வாழ்விற்காம் பொருளிற்குப் பிறநாடுகளை எதிர்நோக்காத நாடே தனிசிறந்த நாடு; அத்தகு நாட்டில் வாழ்வார், அவ்வளம் பெருக வழிசெய்யும் தம் அரசு அழியாது வாழ விரும்புவர். அதற்குக் கேடுண்டாம் என அறியின், அதை இழந்து வாழ்வதினும் அழிந்து மறைவதே மாண்புடைத்தாம் என்ற மனநிறைவுடையவராய்க் களம் புகுவர். அவ்வெண்ணம் உடையார்தம் உள்ள உரனை அழிக்கும் ஆற்றல் உலகில் எத்துணைச் சிறந்த படையாளர்க்கும் இல்லை. ஆதலின், களத்தே அவ்வில்லேருழவர் பெறும் வெற்றி, நாட்டில் நல்லேருழவர் தரும் நற்பயனின் விளைவாம் ஆதலாலும், தன் நாடு வளம்பல செறிந்த நல்ல நாடாதல் காணும் பிறநாட்டு மக்கள் இத்துணை வளங் கொழிக்க ஆளும் அரசே தங்கள் நாட்டினும் அமைய விரும்புவர்; அத்தகைய எண்ணம் கொண்ட மக்கள் நிறைந்த ஆட்சியைப் போர்புரிந்து கைப்பற்ற வேண்டியதும் இல்லை; அந்நாட்டு மக்கள் தாமே முன்னின்று, தம் நாட்டில் உள்ள ஆட்சியை அழித்துவிட்டு, இவன் நல்லாட்சியினை விரும்பி வரவேற்பர். ஆதலின், உலகெலாம் ஆள ஆசைகொள்ளும் அரசர்க்கும் உறுதுணைபுரிவோர் அவ்வுழவரே ஆதலாலும் நாட்டிற்கு அரணாக நிற்கும் அவ்வுழவர்க்கு நல்லன செய்தலை அரசன் நாடோறும் அறிந்து மேற்கோடல் வேண்டும் என்றும் அறிவுரை கூறினார். புலவர் கூறியன கேட்ட குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், புலவர் நிலத்திற்

காம் பழங்கடனையேயன்றி, நாட்டு நிலத்திற்காம் பழங் கடன்கள் அனைத்தையும் விடுதலை செய்தான்.

> " வருபடை தாங்கிப் பெயர்புறத்து ஆர்த்துப்
> பொருபடை தரூஉம் கொற்றமும், உழுபடை
> ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;
> ..................................
> பொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
> பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
> குடிபுறம் தருகுவை யாயின், நின்
> அடிபுறம் தருகுவர் அடங்கா தோரே." (புறம் : கூடு)

"பொன்மலை சார்ந்த காகமும் பொன்னிறம்பெறும்" என்றும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றும் ஆன்றோர் கூறுவர். புலவர்பலர் போற்ற வாழும் நல்வாய்ப்புற்ற கிள்ளிவளவன், தானும் ஒரு புலவனாய் விளங்கினான். "தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன் பண்ணன்", "கைவள் ஈகைப் பண்ணன்", "மாற்றோர் மலைமருள் யானை மண்டமர் ஒழித்த கழற்கால் பண்ணன்" எனப் புலவர் பாராட்டும் பெருமை மிக்கோனாய பண்ணன் என்பான், காவிரிக்கரையில் இருந்த சிறுகுடி எனும் சிறந்த ஊரில் வாழ்ந்திருந்தான். பெரும்படைத் தலைவனும், பெருங்கொடை வள்ளலுமாய அப்பண்ணனைப் பாடிப் பாராட்டிய வளவன் பாட்டொன்று புறநானூற்றில் இடம் பெற்றுளது.

பண்ணன்பால் பரிசில்பெறக் கருதிய பாணன் ஒருவன் அவன் சிறுகுடியை நோக்கிச் செல்கிறான்; பண்ணன்பால் பரிசில் பெற்ற இளைஞரும் முதியருமாய பாணர் பல்லோர், வேறுவேறு திசைநோக்கி வரிசை வரிசையாகச் செல்லு கின்ற காட்சியினையும் காண்கிறான் அப்பாணன்; பழுமரம் ஒன்றில் பழம் உண்ணவந்து ஒன்றுகூடி நிற்கும் பறவைகள் எழுப்பும் பேரொலிபோல், பண்ணன் அறச்சாலையில் உணவுபெறுவார் எழுப்பும் ஓசையும் கேட்கிறது. அவன் சிறுகுடி அண்மையில் உளது என்பதை உணர்த்துகின்றன இவை. ஆயினும், பாணன் பசிக்கொடுமை இதை உணர்ந்த

பின்னரும், வழியில் எதிர்ப்படுவார் ஒவ்வொருவரையும் 'பண்ணன் சிறுகுடி யாண்டுளது? பண்ணன் சிறுகுடி யாண்டுளது?' என, மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டிற்று. பரிசில் பெற்று மீளும் பாணர் சிலரை அணுகி, 'ஐய! பசிப்பிணி மருத்துவனும் பண்ணன் இல்லம் யாண்டுளது? அஃது அண்மையில் உளதா? சேய்மைக்கண் உளதா?' என்று கேட்கலாயினன். இந்தக் காட்சியைக் கவிபாடிப் பாராட்டும் வளவன், அப்பண்ணன் வாழ்நாள் பல பெற்று வாழ்க என்றும் வாழ்த்தியுள்ளான்; என்னே அவன் புலமையும், பேரன்பும்!

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர் காண்கஇவன் கடும்பின திடும்பை;
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்; கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே."

(புறம்: கஎந)

மணக்கிள்ளியின் மகனாய், நற்சோணையின் உடன்பிறந்தானாய்ச் சேரன் செங்குட்டுவன் மைத்துனனாய் வளவன் கிள்ளி எனும் பெயருடைச் சோழன் ஒருவன் இருந்தான். அவன் இளவரசனாய்ச் சோணாட்டு அரியணை அமர்தலை விரும்பாத அவன் தாயத்தார் ஒன்பதின்மர் அவனை எதிர்த்துக் குழப்பம் விளைவித்தனர்; அவர் அனைவரையும் நேரிவாயில் எனும் இடத்தே எதிர்த்து வென்று வளவன் கிள்ளியைச் சோணாட்டு அரசனாக்கி மீண்டான் செங்குட்டுவன் என்ற வரலாற்றுக் குறிப்பொன்றைக் கூறுகிறது சிலப்பதிகாரம்.

கிள்ளிவளவன், தொடுகழற்கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வென்வேற் கிள்ளி, வடிவேற் கிள்ளி என்ற பெயருடைச் சோழன் ஒருவன் வரலாறு மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது. அவன் மாவலி மரபினரான பாணஅரசர் குடியிற் பிறந்த சீர்த்தி என்பாளை மனைவியாகப் பெற்றவன்; அவள் வயிற்றுதித்த உதயகுமரன் என்ற தன் மகன், மணிமேகலையின் பின் திரிந்து, தகாவொழுக்கம் உடையனாக, வித்தியாதரன் ஒருவனால் கொலையுண்டான் என்ற செய்திகேட்டு, "பிழை செய்தவன் தன் மகன் என்றும் பாராமல், தேர்க்காலில் இட்டுக்கொன்று அறங்காத்த அரசன் பிறந்த சோழர் குடியில், இவன்போலும் தீயோன் ஒருவனும் பிறந்தனன் என்ற செய்தி பகையரசர்க்கு எட்டுமுன்னரே, இவனை ஈமத்து ஏற்றிவிடுக" என்று கூறிய உயர்பேரொழுக்கமுடையவன்; இளங்கிள்ளி எனும் பெயருடையனாய தன் தம்பியை அனுப்பிக் காரியாற்றில் தன்னை வந்தெதிர்த்த சேரனையும், பாண்டியனையும் வென்று அவர்தம் குடை முதலாயினவற்றைக் கைப்பற்றிக் கொணர்ந்த கொற்றம் உடையவன். ஒருநாள், கடற்கரையில் பேரழகு உடையளாய பெண் ஒருத்தி தன்னைக் கண்டு காதல் கொண்டு, ஒரு திங்கள் வரை தன்னோடு வாழ்ந்து மறைந்துவிட்டாளாக, அவளைக் காணப்பெறாது, கடிதுயர் உற்றுக் கலங்கி நிற்புழி, 'மறைந்தவள் நாகநாட்டு அரசன் வளைவணன் மகள்; பீலிவளை எனும் பெயருடையாள்; இனி அவள் வாராள்; அவள் பெறும் மகனே வருவன்' எனச் சாரணன் ஒருவன் கூறியனகொண்டு மகனை எதிர்நோக்கி இருந்தான் முன், நாகநாடு சென்று கடல் வாணிபம் புரியும் கம்பளச் செட்டி எனும் புகார் நகர் வணிகன் ஒருவன், பீலிவளை, தன் மகனைச் சோழனொடு கொண்டு சேர்க்குமாறு வேண்டித் தன்பால் அளித்ததாகவும், அவனோடு வருவுழிக் கலம் கவிழ்ந்துவிட்டதாகவும், தான் ஒருவனே பிழைத்து வந்ததாகவும கூறினனாக, அது கேட்டு மாத்துயர் உற்று, மகன் பிரிவால் இந்திரவிழாவினை மறந்து மணிமேகலா தெய்வத்தின் ஏவலால் கடல் புகாருட் புகுந்து அழிக்கக் காரணமாயவன்.

சிலப்பதிகாரம் கூறும் வளவன் கிள்ளியும், மணிமேகலை கூறும் மாவண் கிள்ளியும், கோவூர்கிழார் முதலாம் புலவர் போற்ற வாழ்ந்த கிள்ளிவளவனே ஆவர் என்பாரும், மூவரும் ஒருவரல்லர்; வேறுவேறுபட்டவரேயாவர் என்பாருமாக ஆராய்ச்சியாளர் இருவேறு கருத்துடையராவர். கிள்ளிவளவன் என்ற பெயருடையார் பலர் இருப்பதாலும், அவர்தம் வரலாறுகள் ஒன்றற்கொன்று முரண்பாடுடையவாகக் காணப்படுதலாலும், அவர்தம் வரலாற்றை அறுதியிட்டுக் கூறுதற்கண் அறிஞர்கள் பெரிதும் விழிப்புடையராதல் வேண்டும்.

# அ. கோப்பெருஞ் சோழன்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு, உலகோர்போற்ற நாடாண்ட சோழ அரசர்களுள், கோப்பெருஞ் சோழனும் ஒருவன்; கோப்பெருஞ் சோழனைப் பாடிய புலவர் பலர். அவருள் எவரும், அவன் அரசியல் வாழ்வு பற்றிய எதையும் கூறினரல்லர்; புலவரும் போற்றும் புலவனாய, அவன் பாடிய பாக்கள் ஏழனுள், எதுவும், அவன் அரசியல் பற்றிய குறிப்பு எதையும் கொண்டிலது; அவன் பாக்களும், அவனைப் பாடிய புலவர் பாக்களும், நண்பனாய்ப் பழகற்குரிய நல்லோன், மானம் இழந்த பின் வாழா மாண்புடையான் என்று அவன் பண்புடைமைகளையே பாராட்டுகின்றன.

அரசனாய், அறிவுடைப் புலவனாய், மானம் நிறை மகனாய் வாழ்ந்த கோப்பெருஞ் சோழன், நண்பர் உலகிற்கோர் நல்ல எடுத்துக் காட்டாய் விளங்கினான்; உள்ளம் ஒத்தவர்களிடையே நட்புத்தோன்றி வளர்தற்கு, ஒரே நாட்டிற் பிறந்து, ஒரே ஊரில் வாழ்ந்து, புணர்ச்சியும், பழகுதலும் மேற்கொள்ள வேண்டுவதில்லை என்ற உண்மையினை உலகறியக் காட்டுதற்கேற்றதோர் எடுத்துக் காட்டாகக் கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் எனும் புலவரொடு கொண்டிருந்த நட்பையே காட்டுவர் அறிஞர் எனின், அவன் நட்பின் சிறப்பினை நம்மால் புகழ்தல் ஆகுமோ?

"புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்." (குறள்: எஅரு)

என்ற குறட்பாவிற்கு உரை எழுதிய ஆசிரியர் பரிமேலழகர், புணர்ச்சி பழகுதல் ஆகிய "இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி யொப்பின், அதுவே உடனுயிர் நீங்குமுரிமைத் தாய நட்பினைப் பயக்கு மென்பதாம்," என இவ்விருவர் நட்பையே எடுத்துக் காட்டுவது காண்க.

தலைமகள் ஒருத்திபால் உள்ளத்தைப் பறிகொடுத்த கவலையால், உடல் நலம் கெட்டானொரு தலைமகன், தன்

உடல்நலக் கேடு குறித்து வருந்தி விளைய தன் நண்பனை, "என் நண்ப! இளைஞர்கள் இன்புறுதற்குக் காரணமாய நட்புக் குணமுடையாய்! அறிவுடைப் பெருமக்கள் தம் அன்புடைத் தோழ!''—

"எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ!" (குறுந்: ௧௨௯)

என விளித்தான் எனப் பாடிய கோப்பெருஞ் சோழன் குறுந்தொகைப் பாட்டொன்று, அச் சோழன் தன் நண்பர்கள்பால் கொண்டிருக்கும் மதிப்பின் மாண்பினைப் புலப் படுத்தி நிற்கிறது.

கோப்பெருஞ் சோழன், புலவர் பல்லோர் பாராட்டைப் பெற்ற பெருமையுடையனவன்; பழந்தமிழ் அரசர் பலரும், புலவர் பாராட்டைப் பெற்றவர்களே ஆயினும், அவர்கள் பெற்ற பாராட்டு, கோப்பெருஞ் சோழன் பெற்ற பாராட்டைப் போல் விழுமியதாகாது. பழந்தமிழ் அரசர் கள், புலவர் தம் பாராட்டைப் பெறுதற்குக் காரணமாயது, அவ்வரசர்கள்பால் காணலாம் கொடையும், கொற்றமுமே யாம்; அவரைப் பாடிய புலவர்களும், அவ்விரு பெருஞ் சிறப்புக்களையே பாராட்டியுள்ளனர்; கொடுத்தான் எனப் பாராட்டுதல், செய்ந்நன்றி யறிதலாம்; கொடுப்பான் எனப் பாராட்டுதல் அவர் அளிக்கும் பொருளை எதிர்நோக்கி.

ஆகவே, இத்தகைய பாராட்டு, உண்மைப் பாராட் டாகாது; இதனால், அப்பாராட்டைப் பெற்றார் தம் உண்மைப் பெருமை உருவாகிவிடாது; அதைப் போன்றதே ஒருவன் கொற்றம் கண்டு பாராட்டுவதுமாம்; அஃது அவன்பால் உள்ள, கொற்றம் கண்டு தோன்றிய அச்சம் காரணமாகவும் இருத்தல் கூடும். ஆதலின், அதுவும் உண்மைப் பாராட் டாகாது; ஆனால், கோப்பெருஞ் சோழன் பெற்ற பாராட்டு இவைபோல்வதன்று; அவனைப் பாராட்டிய புலவர்கள், அவன் கொடையின் பெருமை கண்டோ, கொற்றத்தின் கொடுமை கண்டோ பாராட்டினாரல்லர்; புணர்ச்சியும் பழகு தலும் இன்றி உணர்ச்சி யொன்றிய நட்புடைமை, இனி

வரின் வாழாத மானமுடைமை முதலாம் அவன்பால் காணலாம் அரும்பண்புகளைக் கண்டே பாராட்டியுள்ளனர்; ஆகவே, இப் பாராட்டே உண்மைப் பாராட்டாம்; இவ்வாறு புலவர்தம் உண்மைப்பாராட்டைப் பெறும் உயர் புகழ் கொண்டவன் கோப்பெருஞ் சோழன் ஒருவனே.

கோப்பெருஞ் சோழன், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார், பொத்தியார் போன்ற புலவர்பெருமக்கள் போற்ற உறையூர்க்கண் வாழ்ந்திருந்த காலத்தே, பாண்டி நாட்டில் பிசிர் என்னும் ஊரின்கண் ஆந்தையார் என்ற அறிஞர் பெருந்தகை ஒருவர் வாழ்ந்திருந்தார்; வாழ்வாங்கு வாழும் பிசிராந்தையாரைக் கோப்பெருஞ் சோழன், தன் நண்பருள் பெரு நண்பராய் மதித்துப் பெருமிதம் கொண்டான்; "பிசிராந்தையார், தெற்கே மிகச் சேய்மைக் கண்ணதாகிய பாண்டி நாட்டினராயினும், அவரே என் உயிரைப்பேணும் உயரிய நண்பராவர்; அவர், பிறர் பெயரையும் பழித்தறியார்; எவரிடத்தும் இனியராய்ப் பழகும் பண்புடையார்; என் உயிரைப் பிணிக்கும் உயர்ந்த நட்புடையார்; பொய் கூறுவதால் புகழ் மிக உண்டாம் எனக் கூறினும், புகழை விரும்பிப் பொய் கூறியறியார்; தன் பெயரைக் கூறுந்தொறும், 'என் பெயர் கோப்பெருஞ் சோழன்" என, என் பெயரையே தம் பெயராக்கொண்டு கூறும் அத்துணை அன்பும், உரிமையும் என்பால் கொண்டவர்" எனப் பலரும் அறிய அவர் புகழ் பாடிக்கொண்டிருந்தான்:

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநன்"
(புறம்: உகரு)

"இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;
தன்பெயர் கிளக்கும் காலை, 'என்பெயர்
பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்" (புறம்: உகசு)

கோப்பெருஞ் சோழனைப் போன்றே பிசிராந்தை யாரும், கோப்பெருஞ் சோழன் புகழ்பாடுவதையே தம் பண்பாகக் கொண்டிருந்தார்; மாலைக்காலத்தே, தெற்கினின்றும் வடக்கு நோக்கிப் பறந்து செல்லும் அன்னத்தை நோக்கி, "உறையூரில், என் நண்பன் கோப்பெருஞ் சோழன்பால் நேரே சென்று, 'நான் ஆந்தையார்பால் அன்புடையேன்' என்று கூறின், 'நின் அன்புடை மனைவி யணியுமாறு தன் அழகிய அணிகள் அத்தனையும் அளிப்பன்' என்று கூறியும், 'நின் நண்பன் யாவன்? அவனுறை யும் இடம் யாது?' என்றெல்லாம் கேட்பார்க்கு, 'என் தலைவன் உறையூரை வாழ்விடமாக் கொண்டவன்; கோப் பெருஞ் சோழன் எனும் பெயருடையான்; சிறந்த நண்பனாகிய பொத்தியார் என்ற புலவரோடு கூடி மகிழ்ந்துறை யும் இயல்புடையான்' என விடையளித்தும் சோழன் புகழ் பாடி வாழ்ந்திருந்தார்; நிற்க.

"புல்லிதழ் பூவிற்கும் உண்டு" எனக்கூறுவர்; குணங்களான் நிறைந்த குன்றெனவிளங்கும் கோப்பெருஞ்சோழனுக்குப் பிறந்த மக்கள், தகாவொழுக்கம் மேற்கொண்டு மாண்பிழந்தாராயினர்; தங்கள் தந்தையார் இருக்கும் போதே, தாம் நாடாள வேண்டும் என்ற பேராசையுடையராயினர்; மக்கள் மாண்பிலராதல் அறிந்த கோப்பெருஞ் சோழன், அவர் விருப்பத்திற்கு இசையானாயினான்; அதனால் வெகுண்ட அவன் மக்கள், அவனைப் போரிடை வென்று நாடாள முனைந்தனர்; அவர்கள்பால் ஆட்சியை ஒப்படைப்பின், நாட்டு மக்கள், அல்லல் பல உறுவரே! என, அந்நாட்டு மக்கள்பால் கொண்ட நல்லெண்ணம், தன் மக்களை வென்று ஒழிக்கத் துணிந்தது; படையோடு வந்து நிற்கும் மக்கள்மீது போர் தொடுக்க எழுந்தான்.

கோப்பெருஞ் சோழன் கொண்ட முடிவு நன்றேயாயினும், மக்களையே பகைவராக் கொண்டான் என்ற பழிச்சொல் எழுமே என அஞ்சிய அவன் நண்பர்களுள், புல்லாற்றூர் எயிற்றியனார், கோப்பெருஞ் சோழனை அணுகி, "வேந்தர் வேந்தே! நின்னொடு பகைகொண்டு போரிட

வந்து நிற்கும் அவர்கள், நின் குலப் பகைவராகிய பாண்டியரோ, சேரரோ அல்லர்; அவரை வென்று புறங்காண முன் செல்லும் நீயும், அவர்கள் குலப்பகைவர் குலத்துத் தோன்றினவன் அல்லை; அவர்கள் உன் மக்கள்; நீ அவர்கள் தந்தை; நின்புகழ் நிலவுலகில் நிற்க, இறந்து சிறந்த வீட்டுலகம் சென்ற பின்னர், இந் நாடாட்சிக்குரியவர் அவரேயன்றோ? இந்த நியதியை நீ நன்கு அறிவாயன்றோ? அது நிற்க; நீங்கள் மேற்கொண்டிருக்கும் போரில், நின்னோடு பொர வந்திருக்கும் நின் மக்கள் தோற்று இறந்து விடுகின்றனர் என்றே கொள்வோம்; பின்னர் நின் ஆட்சிச் செல்வத்தை எவர்பால் தருவை? ஆள்வாரைப் பெறமாட்டாது அல்லலுறுமேதா நின் நாடு? அவ்வாறின்றி, இப்போரில் நின்மக்களுக்கு நீ தோற்று இறந்துவிடுகின்றனை என்றால், அதனால் நினக்குண்டாம் பழியினை எண்ணிப் பார்ப்பாயாக! எவ்வாறு நோக்கினும், போர் மேற்கோடல் நினக்குப் பொருந்துவதன்று" என்று நயம்படக் கூறினர்; புலவர்தம் அறிவுரை கேட்ட அரசன் போரொழித்து மீண்டான்:

"மண்டம ரட்ட மதனுடை நோன்தாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே!
பொங்குநீர் உடுத்தஇம் மலர்தலை உலகத்து
நின்தலை வந்த இருவரை நினைப்பின்,
தொன்றுறை துப்பின்நின் பகைஞரு மல்லர்;
அமர்வெங் காட்சியொடு மாறெதிர்பு எழுந்தவர்
நினையுங் காலை நீயும் மற்றவர்க்கு
அனையை அல்லை; அடுமான் தோன்றல்!
பரந்துபடு நல்லிசை எய்தி மற்றும்நீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குரித் தன்றே;
அதனால், அன்ன தாதலும் அறிவோய்! நன்றும்
இன்னும் கேண்மதி இசைவெய் யோயே!
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே?

அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே ;
அதனால், ஒழிகதில் அத்தை நின்மறனே."

(புறம் : உகந)

மக்கள் செயலால், மன்னன் மனம் குன்றினான் ; "மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே," என்று எண்ணினான் ; சோழன்பால், அவன் மக்களே படை கொண்டு சென்றனர் என்ற பழிச்சொல், ஏனைப் பகை வேந்தர்களாகிய சேர, பாண்டியர் செவியுட் சென்று புகு முன்னரே, உலக வாழ்வினின்றும் விடைபெற்றுக் கொள்ள விரும்பினான் ; வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்தான் ; தன் உள்ளக் கருத்தினைத் தன் புலவ நண்பர்களுக்கு உணர்த்த விரும்பி, அவர்களை அன்புடன் அழைத்து, "அறிவுடைப் பெருமக்களே! யானைவேட்டை மேற்கொண்டு சென்றவன், தன் வேட்டம் தப்பாது வாய்க்க யானையொடு வருதலையும், சிறிய பறவை வேட்டை மேற்கொண்டு சென்றோன், அதுவும் கிடைக்கப்பெறுமல் வறிதே மீள்வதையும் உலகில் காண்கிறோம் ; உள்ளுவ எல்லாம் உயர்வுடையவே உள்ளும் நல்லோர்க்கு ஆகூழ் உண்டாயின், அவர் உம்பர் உலகம்புக்கு அவ்வுலக இன்பத்தை நுகர்தலும், அவ்வும்பர் உலகத்தினும் மேலாம் வீட்டுலகடைந்து பிறவாப் பெருநெறி அடைதலும் உண்டாம் ; அத்தகைய பேரின்பநிலை உறுதுபோயினும், உலகுள்ளளவும் நிற்கும் உயர்ந்த புகழ்பெறுதல் உறுதி ; ஆகவே, நல்வினையினை எண்ணியபோதே செய்வர் அறிவுடையார் ; அவ்வறிவு வாய்க்கப் பெறுதாரே, நல்வினை செய்யவேண்டுமா? இன்னும் சின்னுட் கழித்துச் செய்தலாகாதா? நல்வினை சிறிது செய்தல் போதாதா? செய்வன எல்லாம் நல்வினையாகவே இருத்தல் வேண்டுமா? என்றெல்லாம் ஐயப்பாடுற்று அவற்றில் தெளிவேதும் பெற மாட்டாமல் வருந்துவர் ; யான் அத்தகைய தெளிவிலா அறிவுடையோ னல்லேன் ; ஆகவே வடக்கிருந்து உயிர் விடலாம் நல்வினையினை இன்றே மேற்கொள்ளத் துணிந்து விட்டேன்," என்று கூறினான்.

"செய்குவங் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே ;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே ;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே ;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும் ;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும் ;
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே."

(புறம் : உகச)

புலவர்கள், அரசன் உள்ளம் உணர்ந்தவராதலின், அவன் விருப்பத்திற்கு மாறாக ஏதும் சொல்லினரல்லர் ; மாறாக, அவன் ஆற்றும் நல்வினையினைத் தாமும் ஆற்றி, அவன் செல்வுழிச் செல்லவேண்டும் என்ற விருப்பினராய் அவனோடு வடக்கிருக்கத் துணிந்தனர். காவிரியாற்றின் இடையே அமைந்தவோர் ஆற்றிடைக் குறையின்கண், நிழல் சேர்ந்த நீண்ட மரத்தின்கீழே, வடக்கிருப்பார் அனைவர்க்கும் இடம் செய்வாராயினர் ; அந் நிலையில் கோப்பெருஞ் சோழன், தன் இடத்தையடுத்துப் பிசிராந்தையார்க்கு இடம் ஒதுக்குமாறு பணித்தனன். அரசன் கூறுவன கேட்ட ஆண்டிருந்த புலவர்கள், "அரசே! ஆந்தையார், நின் பெயரும், புகழும் கேட்டவரே அல்லால், நின்னைக் கண்டு பழகியவரல்லர் ; மேலும், நின்னை அறிந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும், ஒரு முறையேனும் ஈண்டு வந்தவரல்லர் ; மேலும், அவர் உள்ள இடமோ மிக மிகச் சேய்மைக்கண்ணது ; ஆகவே, நின்நிலை அறிந்து, ஈண்டு வந்து நின்னொடு வடக்கிருத்தல் இப்போது இயலாது ; ஆதலின், அவர்க்கு இடம் ஒழிப்பது வீண் அன்றோ ?" என்றனர்.

அவர் கூறுவன கேட்ட சோழன், "புலவர் பெரு மக்களே! வருவாரா அவர் என்ற ஐயம் உங்கட்குவேண்டுவ தின்று; பிசிராந்தையார் மிகச் சேய நாட்டினரே; என்று ம் வருவர்; 'கெட்டகாலை விட்டனர்' என்ற பழிச்சொல் நாணும் பண்பினர் பிசிராந்தையார்; ஆகவே, அவர், நான் அரசாள் காலத்து வாராராயினும், அரசிழந்து, உயிர் துறக்க உறுதிபூண்டு நிற்கும் இக் காலத்தே வாராதிரார்; அவர் வருவார்; இடம் அவர்க்கும் ஒதுக்குக," என்றனன்.

"கேட்டல் மாத்திரை யல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்,
அரிதே தோன்றல்; அதற்பட ஒழுகல் என்று
ஐயம் கொள்ளன்மின் ஆரறி வாளீர்!
.........................................
இன்னதோர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க அவற்கு இடமே."
(புறம்: உகசு)

"செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே." (புறம்: உகரு)

ஆண்டு வாராத பிசிராந்தையார்க்கு இடம் ஒதுக்க வேண்டும். கோப்பெருஞ் சோழன், ஆண்டு, தன்னோடு இருந்து வடக்கிருக்கத் துணிந்த புலவர் பொத்தியார்க்கு இடம் அளிக்க மறுத்தான்; பொத்தியார் மனைவியார் மகப்பெறும் நிலையில் உள்ளார் என்பதை அறிந்தவனாத லின், அவரை அன்புடன் அழைத்து, "ஐயன்மீர்! நீவிர் என்னோடு இப்போதே வடக்கிருத்தல் கூடாது; நின் மனைவி மகனை ஈன்றபின்னர் வந்து வடக்கிருப்பாயாக!" என வேண்டிக்கொண்டான்; அவரும் அரசன் வேண்டு கோளை மறுக்கமாட்டாது இசைந்தார்.

கோப்பெருஞ் சோழனும் எஞ்சிய புலவர்களும் வடக் கிருந்து நோற்கத் தொடங்கினர்; சின்னாட்களுக்கெல்லாம், கோப்பெருஞ் சோழன் கூறியவாறே, ஆந்தையார் ஆண்டு

ஓடோடியும் வந்து, அரசன் செயலறிந்து வருந்தி, அவன் அணித்தே, தமக்கு ஒதுக்கிய இடத்தே இருந்து தாமும் வடக்கிருப்பாராயினர்; "வருவார்," என்று கூறிய அரச னின் சொல்லாற்றலையும், அரசன் கூறிய சொல் பழுதுரு வண்ணம் ஆண்டு வந்துசேர்ந்த ஆந்தையாரின் செயலையும், ஆண்டிருந்தார் அனைவரும் அறிந்து பெருவியப்புற்றனர்; "நினைக்குங்காலை மருட்கை உடைத்தே," எனப் பாராட்டி னர் புலவரெல்லாம். வடக்கிருந்த வேந்தனும், புலவர் களும் சின்னாட்களுக் கெல்லாம் பொன்றும் உடல்கள் அழியப் பொன்றாப் புகழ்பெற்றுச் சிறந்தனர்.

மனைவி மகப்பெற்ற பின்னர் வருக எனக் கோப் பெருஞ் சோழனால் தடைவிதிக்கப்பெற்ற பொத்தியார், மறைந்த மன்னனையும், புலவர்களையும் நினைந்து நினைந்து புலம்பி அவர் புகழ் பாடிக்கொண்டே சின்னாட்கள் வாழ்ந்து, மனைவி மகப்பெற்றவுடனே, ஆற்றிடைக் குறை யடைந்து, அரசன் வடக்கிருந்து உயிர் துறந்த இடத்திற்கு அணித்தே தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தார்; அரசன் உயிர் துறந்தான்; அவன் பிரிவினைப் பொறாத புலவர் பல்லோர் அவனைத் தொடர்ந்து தங்கள் உயிர்களையும் துறந்தனர் என்று உலகோர் போற்றும் உயர் பெரும்புகழ் பெற்று வாழ்ந்த கோப்பெருஞ் சோழன்வழி வாழ்க!

பாவலரும், காவலரும் பாராட்ட வாழ்ந்து, பிறவாப் பெருநிலையுற்ற கோப்பெருஞ் சோழனின் புலமையும், பண்பாடும் நிறைந்த பேருள்ளம் விளங்கும் பாடல்கள் பல உள; அவற்றுள் ஒன்றைக்கண்டு அவனை அறிந்து அக மகிழ்வோமாக! பொருள் தேடுங்கால், பொருள்பெறும் வழி அறநெறிப்பட்டதாக இருத்தல் வேண்டும்; பொருள் செய்வார் தம் உள்ளத்தில் நிலவவேண்டிய மக்கட் பண்பு களாகிய அன்பையும், அருளையும் அறவே ஒழித்துவிட்டு, பொருள் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளுதல் கூடாது; பொருள் வரும்வழி, அன்புநெறியோடும், அருள்நெறியோடும் மாறுபடுதல் கூடாது: "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார்; புரள

விடல்" (குறள் : ௭௫௫) எனக் கூறுவர் பெரியோர். இந்தப் பண்பாட்டுள்ளம் கோப்பெருஞ் சோழன்பாலும் குடி கொண்டிருக்கக் காண்கிறோம்; ஒரு தலைவன் பொருள்வயின் பிரியக் கருதியதைத், தோழி தலைமகட்கு உணர்த்தினள்; அதுகேட்ட தலைவி, "தோழி! அருளையும், அன்பையும் அறவே மறந்துவிட்டுப் பொருள்வயின் பிரிதல் அறவுள்ளம் உடையார்க்கு இயலாது; அருளும், அன்பும் அற்ற தன்மை உரம்பெற்ற உள்ளமுடையார்க்கே அஃது இயலும்; நம் தலைவர்க்கு அத்தகைய உள்ளஉரம் உண்டாயின், அவர் அன்பும், அருளும் அற்றவராயின் பொருள்வயின் பிரிக!" எனக் கூறினள் எனப் பாடிய இப் பாட்டில் கோப்பெருஞ் சோழனார் தம் உள்ளம் தோன்றுவது உணர்க!

"அருளும், அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர், உரவோ ராயின்
உரவோர் உரவோ ராக." (குறுந் : ௨0)

# ௬௧. செங்கணான்

செங்கணானைப் பாராட்டிய பாட்டு எதுவும், பத்துப் பாட்டு, எட்டுத்தொகைகளாகிய பழந்தமிழ் நூல்கள் எதிலும் இடம்பெறவில்லை; ஆயினும், சேரமான் கணைக்கா லிரும்பொறை என்பான் பாடிய "குழவி இறப்பினும்" (புறம்: ௭௪) என்ற பாட்டின் அடிக்கண் வரையப்பட்டுள்ள "சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணா னோடு திருப்போர்ப்புறத்துப் பொருது, பற்றுக்கோட் பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண் ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்ற விளக்கம், அவன் வரலாற்றின் ஒரு பகுதியை அறி யத் துணைபுரிகிறது. இதைப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய, களவழி நாற்பது என்ற நூல் அரண் செய்கிறது.

சோழன் செங்கணான், கணைக்காலிரும்பொறை என்ற சேரநாட்டுப் பெருவேந்தன் ஒருவனோடு பகை கொண் டான்; இருவரும் கழுமலம் என்ற நகரை அடுத்துள்ள திருப் போர்ப் புறம் என்ற இடத்தே போரிட்டனர்; பெரும் படையும், பேராண்மையும் உடையானாகிய சேரமான் கணைக்காலிரும்பொறை, பெரிய யானைப்படையால் பீடுற் றானாகிய சோழன் செங்கணானை வெல்லமாட்டாது தோற் றான்; செங்கணான், தோற்ற சேரனைக் கைப்பற்றிக் கொண்டுபோய்க் குடவாயிற்கோட்டத்துச் சிறையில் காவல் வைத்தான்; சிறையில் இருந்த சேரன், ஒரு நாள் சிறைக்காவலரை உண்ணீர் தர வேண்டினன்; அவர்கள் அவனுமோர் சிறைக்கைதியே என்ற எண்ணமுடையராய், ஏனைக் கைதிகள்பால் நடந்துகொள்வதேபோல், அவன் கேட்டபோதே தாராது காலம் தாழ்த்தித் தந்தும், தரும் போதும், அரசன் என்ற மதிப்பின்றித் தந்தும் இழிவு செய்தனர்; காவலர் தம் இழிசெயல் பொறாத அரசன், அவர் தந்த அந்நீரை உண்ணாது ஒருபால் வைத்துவிட்டு,

"குழவி இறப்பினும்" என்ற பாடலைப் பாடிப் பக்கத்தே வைத்துவிட்டு உறங்கிவிட்டான். சேரமான் கணைக்கா லிரும்பொறையின் அவைக்களத்தே யிருந்து அவன் புகழ் பாடிப் பரவும் புலவராய பொய்கையார், அரசனுக்கு நேர்ந்த கதியினைக் கண்டார்; கலங்கினார்; அவனைச் சிறை வீடுசெய்து சிறப்பித்தல் தம் கடன் என உணர்ந்தார்; சோழன் செங்கணான், சேரனைச் சிறைசெய்த கொடி யோன் எனினும், புலவர்பாலும், அவர்தம் பாக்கள்பாலும் பெரு மதிப்புடையான் என்பதை அறிந்தவராதலின், உடனே அவன் அவை அடைந்து, அவனுக்கும், இரும் பொறைக்கும் நடந்த கழுமலப்போரின் சிறப்பையும், அதில் செங்கணான் பெற்ற வெற்றிச் சிறப்பினையும் பாராட் டிக் "களவழி நாற்பது" என்ற பெயரால் நாற்பது பாக்க ளைப் பாடி நின்றார்; அவர் பாடற் பொருளும், பெருமை யும் உணர்ந்த செங்கணான், அவர் உள்ளம் உவக்கும் வண் ணம், அவர் அன்பு காட்டும் அரசனாய கணைக்கால் இரும் பொறையைச் சிறைவிடுத்தான். அவ்விரண்டாலும் அறி யக்கிடக்கும் வரலாறு இது. இவ் வரலாற்றினைச், சோழர் வரலாறு உரைக்கும் இடைக்கால நூல்கள் சிலவும் உரைத் துள்ளன:

"களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய, உதியன்
கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட பரிசும்."
(கலிங்கத்துப்பரணி)

"இன்னருளின்
மேதக்க பொய்கை கவிகொண்டு, வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திபனும்."
(விக்கிரம சோழனுலா)

"பொறையனைப் பொய்கை கவிக்குக்
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்."
(குலோத்துங்கச் சோழனுலா)

"பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் கால்தளையை விட்டக்கோன்."
(இராசராச சோழனுலா)

பெரும்பூட் சென்னி யென்பானோடு சோழ வேந்தன், சேர நாடு புகுந்து அந் நாட்டுக் கழுமலம் எனும் நகரை முற்றுகையிட்டான்; கழுமல நகர் அரணுள், நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை போன்ற பெரு வீரர்கள் கூடியிருந்தனர்; சோழன் படைத்தலைவனாகிய பழையன் என்பான், அவ்வரணின் திண்மை கண்டும் அஞ்சாது கடும் போரிட்டான்; பருந்துகள் பெருங் கூட்டமாய்ச் சுற்றித் திரியுமாறு களம் முற்றும் பிணங்கள் வீழ்ந்தன; ஆயினும், அப் போரில் அவன் தன் உயிரை இழந்தான்; தன் படைத்தலைவன் இறந்தான் என்பதறிந்த சோழன் பெருஞ்சினம்கொண்டு களம்புகுந்து, கோட்டைத் தலைவனாய கணையன் என்பானையும், அவன் காத்து நின்ற அவ்வரணையும் கைக்கொண்டான் என்ற நிகழ்ச்சியொன்றைக் குடவாயிற் கீரத்தனார் என்ற புலவர் கூறியுள்ளார்:

'நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறல் கங்கன் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பரும் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டு அது நோனன் ஆகித் திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலம் கண்ணிப் பெரும்பூண் சென்னி."
(அகம்: சசு)

குடவாயிற் கீரத்தனார் கூறும் இக் கழுமலப் போர், கணைக்காலிரும்பொறைக்கும், செங்கணானுக்கும் நடந்த போராம்; ஈண்டுக் கூறப்படும் கணையனும், பெரும்பூண் சென்னியும் முறையே கணைக்கால் இரும்பொறையும், செங்கணானுமாவர் எனக் கோடல் பொருந்தும்.

சோழன் செங்கணானை, "உலக மாண்ட தென்னாடன்; குடகொங்கன்; சோழன்", "தென் தமிழன் வடபுலக் கோன்", "கழல் மன்னர் மணி முடிமேல் காகம் ஏறத் தெய்வ வாள் வலங்கொண்ட சோழன்", "விறல் மன்னர்

திறல் அழிய வெம்மாவுய்த்த செங்கணான்", "படைமன்னர் உடல் துணியப் பரிமாவுய்த்த தேராளன்" என்றெல்லாம் பாராட்டும் திருமங்கை யாழ்வார், அவன், தமிழ் நாட்டில் சிவனுக்குரிய கோயில்கள் எழுபது அமைத்துச் சிறப்புற்றான் என்றும் கூறியுள்ளார் :

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன்."

அம்பர், வைகல், நன்னிலம் முதலாய இடங்களில் அமைந்துள்ள சிவன் கோயில்கள் எல்லாம், கோச்செங்கட் சோழன் திருப்பணியே என்று கூறுகின்றனர், சம்பந்தரும், சுந்தரரும். செங்கணான், முற் பிறவியில் சிலந்தியாய்ப் பிறந்தவன் என்றும், திருவானைக்காவில், நாவலடியில் அமர்ந்த இறைவனை வழிபடும் அச் சிலந்தி, இறைவன் மீது இலை முதலாயின விழாமை குறித்துத் தன் வாயின் நூலால், அவ்விறைவன் தலைமீது வலை பின்னி வழிபட்டு வந்தது ; அச் சிலந்தியைப் போன்றே, அவ்விறைவனை வழி படும் யானை, அவ்விறைவன் மீது வலை கிடப்பது கண்டு வருந்தி நாள்தோறும் அதை அழித்து வழிபட்டது ; தான் அன்புடன் பின்னும் வலையை அழிக்கும் யானைமீது சினங்கொண்ட சிலந்தி, அதன் துதிக்கையுட் புகுந்து துயர் விளைத்தது ; அதனால் யானை இறந்தது ; இறக்கும் யானை, தன் கையை வலி பொறுக்கமாட்டாது ஓங்கி அடித்ததாக, அதனுட் கிடந்த சிலந்தியும் இறந்தது ; இறந்த சிலந்தி, சுபதேவன், கமலவதி ஆகியோர் இயற்றிய அருந்தவப் பயனாய் அவர்க்கு மகனாய்ப் பிறந்தது ; பிறந்த மகனுக்குச் செங்கணான் எனும் பெயரிட்டுப் பாராட்டினர். வளர்ந்து அரியணை ஏறிய செங்கணான், சிவனுறையும் தலந் தோறும் கோயில் அமைத்து வழிபட்டான் என்ற ஒரு கதையினைக் கூறுவர் சேக்கிழார். கூறுவார் கூறுவன எல்லாம் கொண்டு நோக்கின், செங்கணான் சிறந்த போர் வீரன் ; புலவர்பால் பேரன்புடையவன் ; இறைவன் திருவடிக்கண் நீங்காப் பேரன்புடையவன் என்பன புலனாம்.

## ௧௦. செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி

வேளிர்க்கு உரிய ஊர்களுள் பாழி என்பதும் ஒன்று; சேரநாட்டைச் சேர இருந்த இப்பாழி, அவ்வேளிருட் சிறந்தானாகிய நன்னன் என்பானுக்கு உரியதாய் இருந்தது; ஆஅய் எயினன் என்பான் நன்னனோடு பகைகொண்டிருந்தான்; அவனைப் பாழியில் எதிர்த்துக் கொன்றான், நன்னன் நண்பன் மிஞிலி என்பான்; இவ்வாறு தனக்கு அருந்துணைபுரிந்த ஆருயிர் நண்பன் மிஞிலிக்குத் தனக்குரிய பாழி ஆட்சிப் பொறுப்பை, நன்னன் அளித்தான்; ஏழில்மலையை அடுத்திருந்த பாழி, இயற்கை, செயற்கையாய இருவகை அரண்களையும் பெற்றிருத்தல் அறிந்த வேளிர், தம் பெரும்பொருளை ஆண்டுத்தொடுத்து வைத்துப் போற்றி வந்தனர்; அரணுடைமையாலும், பொருள் உடைமையாலும் பாழி சிறந்திருந்தமையின், அதைக் கைப்பற்றிக்கொள்ளுதல் வேண்டும் என்ற ஆசை, அக்கால அரசர் அனைவர் உள்ளத்திலும் உறுதியாக இடம்பெற்றிருந்தது; பாழியை வடுகரும் கைப்பற்றிச் சிலநாள் ஆண்டிருந்தனர்; இதனால், பாழி, பலரும் கூடிப் பொரும் பெரும் போர்க்களமாய்க் காட்சியளித்தது; அதனால், புலவரும், பிறரும், பாழியைப் போர் நிறைந்த பாழி எனும் பொருள்படச் செருப்பாழி எனச் சிறப்புப் பெயரிட்டு அழைப்பாராயினர்.

பிற அரசர்களைப் போன்றே, சோழரும் பாழி நகரைக் கைப்பற்ற அரும்பாடு பட்டனர்; அதைக் கைப்பற்றுவது தம் குடிக்கடனும் என்றே கருதினர்; ஆயினும், அம்முயற்சி இளஞ்சேட்சென்னி காலம்வரை குறைவினையாகவே இருந்தது; இறுதியில் இளஞ்சேட்சென்னியே, பாழியைப் பற்றி, ஆங்கு ஆண்டிருந்த வடுகரை வென்று அழித்துத் தம் குடிக்கடனாற்றினான்:

"சோழர் பெருமகன்,
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி

குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானை." (அகம்: ௩எ௫)

தன்னாட்டின் வடபகுதிக்கண் தொல்லை விளைத்து வந்த வடுகரை அழித்து, அச்சிறப்புத் தோன்ற "செருப் பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி" எனும் சிறப்புப் பெயர் பெற்ற சென்னி, தென்னாட்டுக் கடற்கரைகளில் வாழ்ந்து, சோழ பாண்டிய நாடுகளுட் புகுந்து பாழ் விளைத்து குறும்பு செய்துவந்த குறுநில மன்னர் குழுவாகிய பரதவர் என்பார் தம் ஆற்றலையும் அழித்து அமைதி நிலைநாட்டினான்:

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய." (புறம்: ௩எஅ)

இனி, ஈண்டுக் கூறிய வடவடுகராவார், வடுகர்வாழ் நிலத்திற்கும் வடக்கில் வாழ்வாராகிய கோசராவர்; ஆகவே, இளஞ்சேட்சென்னி, கோசரையும், அவர் துணை பெற்றுத் தமிழகத்துட் புகுந்த மோரியரையும் வென்றான் எனக் கூறுவாருமுளர். தமிழர்கள், தங்கள் நாட்டை அடுத்து வடக்கே வாழ்ந்தாரை மட்டுமே வடுகர் என அழைத்து, அதற்கு அப்பால் வாழ்ந்தாரை எல்லாம், கோசர், மோரியர், நந்தர் என அவரவர்க்குரிய இனப் பெயரிட்டே அழைத்துள்ளனர் ஆதலாலும், தமிழ்நூல்களில் யாண்டும், கோசர் வடுகர் என அழைக்கப்பெற வில்லை ஆதலாலும், புறநானூற்றில், வடவடுகர் என வந்து வழங்கும் அச்சொல், அப்பாட்டின் மேல்வரிக்கண் தென் பரதவர் என வந்ததற்கேற்ப, எதுகை நோக்கி வடவடுகர் என வந்துளதே யல்லாமல், வடுகர்க்கும் வடக்கில் வாழ்வார் என்ற பொருளில் வந்திலது ஆதலாலும், பாழியைக் கைப் பற்றினான் இளஞ்சேட்சென்னி எனக் கூறும் அகநானூற்றுப் பாட்டில், ஆண்டு அவனால் அழியுண்டார், வடவடுகர் எனக் குறிப்பிடப் பெறாமல், வடுகர் என்றே குறிப்பிடப் பெற்றுள்ளமையாலும், மோரியர் தென்னாட்டுப் படை

பெடுப்பு, இளஞ்சேட்சென்னிக்கு இரண்டுதலைமுறை கழித்து வாழ்ந்த செங்குட்டுவன் காலத்தை யொட்டி நிகழ்ந்ததொன்று ஆதலாலும், இளஞ்சேட்சென்னி, கோசரையோ, மோரியரையோ அழித்தான் எனக் கோடல் சிறிதும் பொருந்தாது.

இளம்பெருஞ்சென்னி என அகத்திலும், செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி எனப் புறத்திலும் அழைக்கப்பெறுவோரெல்லாம், கரிகாற்பெருவளத்தான் தந்தையாய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியேயாதல் கூடும் என்பது, உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பற்றிய கட்டுரையில் கூறப்பட்டுளது; ஊன்றி நோக்கி உண்மையுணர்க.

இளஞ்சேட்சென்னியின் வெற்றிச்சிறப்புக்களை விளங்கப் பாடிய புலவர், அவன் தன்னைப் பாடிவரும் இரவலர் தமக்கு அணிபல அளிக்கும் அருட்கொடைத் திறத்தை அழகொழுகப் பாடிப் பாராட்டியுள்ளார்; இளஞ்சேட்சென்னி, தன்பால் வந்து இரந்து நின்ற இரவன் மாக்களுக்குத் தான் போரில் கைப்பற்றிய அணிகள் பலவற்றையும் அளித்தான்; அவ்வணிகளின் வகைகளையும், அவற்றை எங்கெங்கே அணிவது என்பதையும் அறிய மாட்டாத அவ்விரவலர்கள், விரலில் அணியத்தக்க அணிகளைச் செவியிலும், செவியில் அணியத்தக்க அணிகளை விரலிலும், அரைக்கு உரியனவற்றைக் கழுத்திலும், கழுத்தணிகளை இடையிலும் அணிந்து, காண்பார் கைகொட்டி நகைக்குமாறு விளங்கினர்; அவர் செய்கை, பண்டு இராமனுடன் காடுசென்ற சீதையை இராவணன் தூக்கிச்சென்ற போது, அவள் கழற்றி எறிந்த அவள் அணிகளைக் கண்டெடுத்த குரங்கினம், அவ்வணிகளை அணியும் வகை அறிய மாட்டாது அணிந்து நின்ற காட்சியினை ஒத்திருந்தது; இவ்வாறு, வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மையுடையான் இளஞ்சேட்சென்னி:

"மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு

இலம்பா டுழந்தஎன் இரும்பே ரொக்கல்,
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்,
செவித்தொடர் மரபின விரல்செறிக் குநரும்,
அரைக்கமை மரபின மிடற்று யாக்குநரும்,
மிடற்றமை மரபின அரைக்கு யாக்குநரும்,
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகும்." (புறம்: ௧௭௮)

## ௬௬. தித்தன்

தித்தன், சோழர்க்கு உரிய பழைய தலைநகராய உறையூரிலிருந்து ஊராண்ட ஓர் அரசனாவன். இவனுடைய உறையூர், புலவர் பலர் வாழ்வாலும், அறம் பிறழா அவையுடைமையாலும் நிலைத்த பெரும்புகழ் உடையது. உறையூரைச்சூழ வெண்ணெல் விளையும் வயல்கள் பரந்துகிடந்து பயன் விளைக்கும்; அதனால், நெற்குவியல் பல ஆங்காங்கே நின்று காட்சிதரும்; உறையூர் தன்னைச்சூழப் பெரிய மதிலையும், சிறுசிறு மலைகளை இடைஇடையே கொண்டு, பகைவர்க்குப் பல்லாற்றானும் தடை விளைக்கும் அரிய காவற்காட்டையும் உடையது; இத்தகு வளஞ்சால் ஊரிலிருந்து உலகாண்ட தித்தன், ஒரு பெரும் கொடைவள்ளலுமாவன்; அவனுக்கு ஐயை எனும் பெயருடையாளொரு மகள் இருந்தாள்; பரல் ஒலிக்கும் காற்சிலம்பும், ஆம்பல் மலரால் ஆய அழகிய மாலையும், அரங்கொண்டு அறுத்துச் செய்யப்பெற்ற கைவளையும், அணி பல அணிந்த மூங்கில் போலும் தோளும் கொண்டு காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்கும் கவின்மிகு காட்சியளாய அவள், கற்பாலும் பொற்புடையளாவள்; இத்தகு சிறப்புடைமையால் தித்தன் மகள் ஐயை என, அவள் தந்தையைக் காட்டி அவளை அறிமுகம் செய்விக்கவேண்டியதற்கு மாறாக, ஐயை தந்தை தித்தன் என, அவளைக் காட்டி அவள் தந்தையை அறிமுகமாக்குவர் புலவர்; அவள் அத்துணை உயர்ந்தவளாயினாள்.

தித்தனுக்குப் போரவைக்கோப்பெருநற்கிள்ளி என்ற பெயருடை மகனொருவனும் இருந்தான்; தித்தனுக்கு யாது காரணத்தாலோ தன் மகன்மீது வெறுப்புண்டாயிருந்தது. அதனால் போரவைக்கோ, தந்தையைப் பிரிந்து மூக்காவனாட்டு ஆமூர் அடைந்து, ஆண்டுத் தன் மற்போர் வன்மை காட்டி மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்; மகன்மீது மாறாச் சினம் கொண்டு துரத்திய தித்தன், மகன் மற்போர் ஆற்றலைக்கண்டு அகமகிழ்தற்கு இல்லையே என மனமிரங்கிப் பாடியுள்ளார் சாத்தந்தையார் எனும் புலவர்.

"சீர்சான்ற விழுச் சிறப்பின்
சிறுகண் யானைப் பெறலரும் தித்தன்
செல்லா நல்லிசை உறந்தை." (நக்கீரர்: புறம்: ங௬ரு)

"மாவண் தித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன உரைசால் நன்கலம்."
(பரணர்: புறம்: ங௬௨)

"நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால்." (பரணர்: அகம்: ௧௨௨)

"அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோள் ஐயை தந்தை
மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை." (பரணர்: அகம்: ௬)

"போரருந் தித்தன் காண்கதில் அம்ம,
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே."
(சாத்தந்தையார்: புறம்: அ௦)

தித்தன் வாழ்ந்திருந்த உறையூரையே தன்னுடைய வாழ்விடமாகவும் கொண்ட தித்தன் வெளியன் என்பான் ஒருவன் வரலாற்றைத், தித்தன் வரலாற்றை உரைக்கும் பரணரே கூறியுள்ளார். தித்தன் வெளியன் உறையூரில் வாழ்ந்தவன்; அவனுக்குரிய கடற்கரை கலங்கள் பல நிற்கும் கவினுடையது; அக் கலங்களையும் சிதைக்கவல்ல இறாமீன் கூட்டமும் அக் கரைக்கண்ணே உண்டு. தித்தன் வெளியன் பெரும்படை யொன்றும் பெற்றிருந்தான்; பரணர் முதலாம் இரவலரைப் புரக்கும் கொடைக்குணமும் அவன்பால் குடிகொண்டிருந்தது. அரசவை அமர்ந்து முறையளித்தும், குறைபோக்கியும், கொடைக்கடன் இறுத்தும் கனிசிறந்து விளங்கும் தித்தன் வெளியன் நாளோலக்கம் கனிமிகச் சிறப்புவாய்ந்தது; ஒருகால், கட்டி என்

பாளுெரு பெருவீரன், பாணன் எனும் வடநாட்டு மற்போர் வல்லானொருவன் துணைக்கொண்டு, தித்தன் வெளியனோடு பொரவந்து, அவன் நாளோலக்கத்தின்போது ஆண்டு எழும் கிணையோசைபோலும் இசையொலி கேட்டே அவன் பெருமையறிந்து, அஞ்சிப் போர்புரியாதே ஓடிவிட்டான்.

"நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்
இரங்குநீர்ப் பரப்பின் கானலம் பெருந்துறைத்
தனம்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள் ளிறவின் குப்பை."
(பரணர் : அகம் : கடுஉ)

"வலிமிகு முன்பின் பாணனொடு, மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பு." (பரணர் : அகம் : உஉசு)

ஈண்டுக் கூறப்பெற்ற தித்தன், தித்தன் வெளியன் இருவருமே, உறையூரில் வாழ்ந்தோராக விளங்குவதாலும், கொடை, கொற்றம் ஆய இரண்டிலும் ஒற்றுமை உடையராதலாலும், பரணர் இருவரையும் பாடியுள்ளார் ஆதலாலும், தித்தன் மகன் மற்போர் வல்லனாதலின், தித்தனும் மற்போர் வல்லனாதல் வேண்டும் எனவும், தித்தன் வெளியனோடு பொரவந்த கட்டிக்குத் துணைவந்த வடநாட்டுப் பாணன், ஒரு மற்போர் வீரனாதல் விளங்கவே அவன் நண்பன் கட்டியும், அவன் பகைவன் தித்தன் வெளியனும் மற்போர் வல்லராதல் வேண்டும் எனவும் பெறப்படுதலால் தித்தன், தித்தன் வெளியன் ஆய இருவருமே மற்போர் வல்லராகத் தெரிவதாலும், இருவரையும் தந்தையும் மகனுமாவர் என்றோ, மகனும் தந்தையுமாவர் என்றோ கொள்வதினும் இவ்விரு பெயராலும் குறிப்பிடப்படுவோர் வேறுபட்ட இருவரல்லர் ஒருவரே எனக்கோடலே பொருந்துவதாம்.

## கஉ. துலைபுக்க பெரியோன்

கிள்ளிவளவனைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார், கோவூர்கிழார், நலங்கிள்ளி தம்பி மாவளத்தானைப் பாடிய தாமப்பல்கண்ணனார் ஆய முப்பெரும் புலவர்களும், அவ் வேந்தர் பிறந்த சோழர்குடிப் பெருமைகுறித்துக் கூறுங் கால், துலைபுக்க பெரியோன் ஒருவன் வரலாற்றைச் சுருங்க உரைத்து, அவனைப் பெற்றெடுத்த பெருமைசால் பழங் குடி, சோழர்குடி எனக்கூறிப் பாராட்டியுள்ளனர்.

வளைந்த வலிய சிறகினையும், கூரிய உகிரினையும் உடைய பருந்தால் பற்றப்பட்டு உயிர் இழத்தற்கு அஞ்சிய புறா ஒன்று, தன்பால் அடைக்கலம் அடைந்ததாக, அதன் உயி ரையும் காத்தல் வேண்டும், அதைக் கொன்று தன் பசி போக்கத் துடிக்கும் பருந்தின் பசித்துயரையும் ஒழித்தல் வேண்டும் என்ற கருத்துடையனாகிப் புறாவின் நிறையளவு தன் உடற்றசையை அரிந்து அளிக்கத் துணிந்து, யானை யின் வெண்கோடு கடைந்து பண்ணிய துலாவினைக் கொணர்ந்து, தன் உடற்றசையைச் சிறிது சிறிதாக அரிந்து அரிந்து வைக்கவும் ஈடாகாதது அறிந்து, தானே துலையுள் புகுந்துநின்று நிறைவாக்கி அளித்தான். புறா வின் பொருட்டுத் தன் உடலையே உவந்தளிக்க முன்வந்த அவன் செயல் அறிந்து, அமரரும் வியந்து பாராட்டினர். புலவர் கூறும் வரலாறு இத்துணையவே.

> "புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
> சினங்கெழு தானைச் செம்பியன்."

> "புறவின் அல்லல் சொல்லிய, கறையடி
> யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
> கோல்நிறை துலாஅம் புக்கோன்"

> "அவிர்சடை முனிவரும் மருளக், கொடுஞ்சிறைக்
> கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்
> தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
> தபுதி அஞ்சிச் சீரை புக்க
> வரையா ஈகை உரவோன்."

"புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன்."
(புறம்: ௩௭, ௩௯, ௪௩, ௪௬)

இவ்வரலாறு உரைத்த புலவர் மூவருள் ஒருவரும் அவன் பெயர் யாது என்பதை அறிவித்தாரல்லர்; அவன் வரலாற்றைத் தாம் பாடிய சிலப்பதிகாரத்தே பல இடங்களில் எடுத்துக்கூறிப் பாராட்டும் இளங்கோவடிகளும், அவன் பெயர் இஃது என்பதை ஓரிடத்திலேனும் உரைத்தாரல்லர்.

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்."

"புறவு நிறை புக்கோன்."

"குறுநடைப் புறவின் நெடுந்துயர் தீர
எறிதரு பருந்தின் இடும்பை நீங்க
அரிந்து உடம்பு இட்டோன்."

"புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்."
(சிலம்பு: ௨0: ௫௧-௨; ௨௩: ௫௮; ௨௭: ௧௬௬-௬௮;
௨௮: ௧௭, அம்மானை)

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற குறள் உரைக்கண், "என்பும் உரியராதல் தன்னகம்புக்க குறுநடைப் புறவின் தபுதியஞ்சிச் சீரைபுக்கோன் முதலாயினோர்கண் காண்க" எனக் கூறும் பரிமேலழகரும் அவன் பெயரை அறிந்தவரல்லர்.

சோழர் வரலாறு உரைக்கும் நூல்களாய கலிங்கத்துப் பரணி, இராசராசசோழன் உலா, குலோத்துங்கசோழன் உலா, விக்கிரமசோழனுலா முதலாய நூல்களும் அவன் பெயரை அறிவித்தில; ஆயினும், அவ்வாறு துலைபுக்க பெரியோன், சிபி என்னும் பெயருடைப் பெரியோனவன் என, நாட்டு மக்கள் நவில்கின்றனர்.

# ௬௩. தூங்கெயில் எறிந்தோன்

சோழர் குலத்திற்குப் பெருமையளித்து நின்ற பேரரசர்களுள் ஒருவனாகத் தூங்கெயில் எறிந்தோன் என்பவன் ஒருவனையும் வைத்து உயர்த்திக் கூறுவர் புலவர்கள். இவன் வரலாறு உணரத் துணைபுரிவார், மாறோக்கத்து நப்பசலையார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் முதலிய நால்வராவர்.

மாறோக்கத்து நப்பசலையார், பகைவரும் கண்டு அஞ்சத்தக்க கரிய காவலையுடைய தூங்கெயிலை அழித்தவன் இவன்; இவன் கிள்ளிவளவன் முன்னோருள் ஒருவனாவன் எனக் கூறுகிறார் :

"ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்த நின் ஊங்கணோர்." (புறம் : ௩௯)

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், உருமேறு, தினவெடுத்த தன் கழுத்தினை அத்தினவு போகத் தேய்க்குமளவு உயர்ந்த மதில்களைக்கொண்ட பகைவர்தம் தூங்கெயிலை அழித்த ஆற்றல் நிறைந்த கையையும், அதனால் உண்டாய உயர்ந்த புகழையும் உடையவன் இவன் எனக் கூறுகிறார் :

"ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்."
(சிறுபாண்: ௮0-௮௨)

இளங்கோவடிகள், விண்ணவர் தலைவனாய இந்திரனுக்குரிய அரணிற்கு அழிவு விளைத்துவந்தனர் பகைவர் சிலர்; ஆகாயத்தே விளங்கும் அரிய கோட்டைகள் மூன்று அவர்கள்பால் இருந்தன; இந்திரன் இரந்து வேண்ட அவர்க்கு ஆற்றல் அளிப்பன அக்கோட்டைகளே என

அறிந்து, அவற்றை அழித்துத் துணைபுரிந்தான் இவன் என்று கூறுகிறார்:

"வெயில் விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப,
எயில் மூன்றெறிந்த இகல்வேற் கொற்றம்."

"வீங்குநீர் வேலி உலகாண்டு, விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன் யார் அம்மானை,
ஓங்கரணம் காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்."

(சிலம்பு : உள : கசு௪-கூ௫; உக : அம்மானை)

சீத்தலைச்சாத்தனார், புகார்நகரத்தே தனிமிகு சிறப்புடன் நிகழும் இந்திரவிழாவினைத் தொடங்கிவைத்தோன் இவனே; இவன் வேண்டுகோட்படி விழாநிகழும் இருபத்தெட்டு நாட்களிலும், இந்திரன் தன் பொன்னகர் விடுத்துப் பூம்புகார் புகுந்து வாழ்வன் எனக் கூறுகிறார்.

'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று
மண்ணகத்து என்தன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோள் எடுத்த
நாலேழ் நாளினும் நன்கினிது உறைகென
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவார்."

(மணி : க : ௪-க0)

## கச. நலங்கிள்ளி

திருமாவளவனால் புதுப்பிக்கப்பெற்று, மணிமேகலை கூறும் கிள்ளிவளவன் காலத்தே அழிவுற்ற புகார்ப்பெரு நகரை, அஃது அழிவுறுதற்குச் சில ஆண்டுகட்கு முன், தலைநகராகக் கொண்டு, சோணுடாண்ட அரசர்களுள் ஆற்றவும் சிறந்தோன் நலங்கிள்ளி எனும் நல்லோனுவன். "என் அரசைப் பெற விரும்பும் பகைவர், மெல்ல வந்து என் அடிபணிந்து 'நின் அரசுரிமையினைத் தந்தருள்க' எனக்கூறி இரந்து நிற்பாராயின், அவர்க்கு இவ்வரசையேயன்றி என் உயிரையும் தருகுவன்; அன்றி, ஆற்றல் மிக்க என் அமைச்சர், படைத் தலைவர் முதலாயினோரை மதியாது, என் உள்ளத்தின் ஊக்கத்தையும் இகழ்ந்து, பகைப்பாராயின், அவர் தூங்கும் புலியைக் காலால் இடறிய குருடனைப் போல் அழிந்து ஒழியாமல் பிழைத்துப்போதல் அரிதினும் அரிது; அவர்கள், யானையின் காலால் மிதியுண்ட மூங்கில் முளையைப்போல் அழிந்து போமாறு, அவர் நாடு புகுந்து வெற்றிபெறேனாயின், அன்பின் விளையாது பொருள் விழையும் பரத்தையர் தொடர்பு கொண்ட பழியுடையேனாகுக" (புறம்: எங). எனவும், "தம் குடியிற் பிறந்த முன்னோரும், முன்னோர்க்கு முன்னோரும் இறந்தாராக, முறைப்படி வந்த அரசுரிமையைப் பெற்றானொருவன், பேரரசைப் பெற்றுவிட்டோம் என்ற பெருமிதத்தால், தம் குடிகள் பால், இறை தண்டிப் பிழைக்கும் இழியரசுடையனாயின், அத்தகையானுக்கு, அவ்வரசுரிமை பெரும்பாரமாய்த் துன்பம் தரும்; பெரும் போர் கண்டும் கலங்காப் பேருள்ளமுடையானொருவன், அவ்வரசுரிமையைப் பெறின், அஃது அவனுக்குக் கோடையால் உலர்ந்து ஒடிந்து வீழ்ந்த சிறு சுள்ளியைப் போல் நனிமிக எளிதாம்" (புறம்: எரு) எனவும் உரைக்கும் அவன் பாடற் பொருள்கள், நலங்கிள்ளி, இரப்போர்க்கு உயிரையும் கொடுக்கும் உயர் கொடையாளன்; இகழ்ந்தோரை எளிதில் அழிக்கவல்ல ஆற்றல் உடையான்; பரத்தையர் ஒழுக்கம் பேணாப் பண்புடையாளன்; குடிபுரவு

இரக்கும் குறையரசு அறியான்; மண்டமர் கடக்கும் மதனுடையாளன் என, அவன் பண்பு பலவற்றையும் பாராறியச் செய்தல் காண்க.

நலங்கிள்ளி, சேர, பாண்டிய மன்னர்களின் இரு குடைகளும் பின்னே நிற்கத், தன் குடைமட்டுமே உயர்ந்து முன்னே விளங்குதல் வேண்டும் என்ற ஆர்வமுடையவன். வெற்றிப் புகழே விரும்பும் அவன், அதைப் பெறும் கருத்துடையனாய், எப்பொழுதும் படைகளோடு பாசறைக்கண் வாழ்தலை விரும்புவனேயல்லால், நகர் வாழ்தலை நச்சுவானல்லன்; அவன் படையைச் சேர்ந்த யானைகளும், பகைவர்தம் பேரரண்களைத் தம் கோடு மழுங்கக் குத்தி அழிப்பதையே விரும்புவதல்லது, அமைதியாய் இருக்க விரும்பா; அவன் படை மறவரும், பகைவர் நாடு, இடையில் காடும் மலையும் கிடக்க மிகச் சேய்மைக் கண் உளது; ஆண்டு எவ்வாறு செல்வேம் எனத் தயங்காது, போர் என்றவுடனே பூரிக்கும் தோளினராவர். நலங்கிள்ளியின் இயல்பும், அவன் படை இயல்பும் உணர்ந்த வடநாட்டரசர், நலங்கிள்ளியின் பெரும்படை எந்த நேரத்தில் தம் நாட்டுட் புகுந்துவிடுமோ என்ற அச்சத்தால் உறக்கம் பெறாது உறுதுயர் உறுவர்.

இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்து சேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி, வெல்போர்ப்
பாசறை யல்லது நீ யொல்லாயே;
நுதிமுகம் மழுங்க மண்டி, ஒன்னார்
கடி மதில் பாயும் நின் களிறடங் கலவே;
போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடு நனி சேய
செல்வே மல்லேம் என்னார்;
......................................
வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து
நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே." (புறம்: ௩௧)

குயவன் திகிரியின் கீழே, அவன் சிறுவர்கள் பிசைந்து வைத்த மண், அக் குயவன் எண்ணிய வடிவமாகவே மாறிப் பயன் அளித்தலேபோல், இந்நாடு, நலங்கிள்ளியாட்டியபடி யெல்லாம் ஆடும் இயல்புடையது; நலங்கிள்ளி, தன்பால் வந்து பொருள் வேண்டி நிற்கும் பாணர்க்குப் பொருள் அளித்தற்கு மாறாக, அப் பொருட்குரிய விலையாக, சேரர்க்குரிய வஞ்சி மாநகரை வென்று கொடுப்பன்; பாணர்பின் பாடி நிற்கும் விறலியர்க்குத் தரும் பூவிற்கு மாறாக, அப் பூவின் விலையாகப், பாண்டியர்க்குரிய மதுரையை வென்று தருகுவன்; அத்துணை ஆற்றலுடையான் நலங்கிள்ளி:

"கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங் கொடிப்
பூவா வஞ்சியும் தருகுவன்; ஒன்றோ;
வண்ணம் நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையும் தருகுவன்; எல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசில் மாக்கள்!
தொன்னிலக் கிழமை சுட்டின், நன்மதி
வேட்கோச் சிறாஅர், தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத் திரள் போல, அவன்
கொண்ட குடுமித்து இத் தண் பணை நாடு."

(புறம்: ௩௨)

நலங்கிள்ளியின் காலத்தே, தமிழகத்தில் வேறுபல அரசர்களும் வாழ்ந்திருந்தனர் எனினும், அவர்கள் எல்லாம் அவனுக்கு அடங்கி ஆள்பவரே யன்றித் தனியரசு செலுத்தும் தகுதியுடையவரல்லர்; வேந்தர்கள், தம் வெற்றி விளங்க வலம்புரிச் சங்கு முழங்கும் பழந்தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப, அப் பகையரசரிடத்தும் வலம்புரிச் சங்குகள் இருந்தன எனினும், அவற்றை முழக்கினால், அவ்வொலி கேட்டு நலங்கிள்ளி சினப்பன் என அஞ்சி முழக்காது, அவற்றை அரண்மனையின் ஒருபால் வறிதே தொங்க விட்டு வைப்பர்:

"சேட் சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல் என
இன்னிசைப் பறையொடு வென்றி நுவலத்

தூக்கணங் குரீஇத் தூங்கு கூடேய்ப்ப
ஒரு சிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி"

(புறம் : உஉ௫)

நலங்கிள்ளியின் நால்வகைப்படை நனிமிகப் பெரிதாம்; அப்படை ஓரிடம் நோக்கிச் செல்லத் தொடங்கி, ஒரு பனந்தோப்பினிடையே நுழைந்து செல்வதாயின், அப்படையின் முதற்கண் வருவோர் அத் தோப்பினுள் நுழையுங்கால் நுங்குக் காலமாம்; ஆதலின், அவர்கள் நுங்குண்டு செல்வர்; படையின் இடையில் நிற்போர் ஆண்டு வருங்கால், நுங்குக் காலம் கழியப் பழக் காலம் வருமாதலின், படையிடை வருவார், நுங்கு உண்ணல் இயலாது பழமே உண்பர்; படையின் இறுதியில் நிற்போர், ஆண்டு வருங்கால் பழக்காலமும் பழங்காலமாய்க் கழியக், கிழங்கு தோன்றும் காலமாம் ஆதலின், அவர்கள் கிழங்கே உண்பர். இவ்வாறு, நுங்குக் காலத்தில் நுழைந்த ஒரு படையின் கடைப்பகுதி, கிழங்குக் காலம் தோன்றிய பின்னரே அவ்விடத்தை விட்டுக் கழியும் எனின், அப்படை எத்துணைப் பெரிதாம் என்பதை எண்ணிப் பாருங்கள் :

தலையோர் நுங்கின் தீஞ்சோறு மிசைய,
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்து பீடழித்த ஏந்துவேல் தானை."

(புறம் : உஉ௫)

இவ்வாறு, பெரும்படையும், பேராண்மையும் துணை செய்ய, நலங்கிள்ளி புகார் நகரத்தே யமர்ந்து நாடாண்டிருந்த காலத்தே, உறையூர் தன் அரசனை இழந்துவிட்டது; அவ் ஆட்சிப் பொறுப்பையும் தன தாக்கிக்கொள்ள விரும்பினன் நலங்கிள்ளி. ஆவூர்க் கோட்டைக்குரியோனுய நெடுங்கிள்ளி என்பானும், உறையூரைத் தான் கைப்பற்றி ஆள எண்ணினன்; இதனல், நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் பகை உண்டாயிற்று; பகைவன் படைபலம் பெற்று வளர்தற்குமுன்னர் அவனை அழித்துவிடுவதே

போர் நுணுக்கமாம் என்பதறிந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி உறையூர்ச் செல்லாவாறு, அவனை அவன் வாழும் ஆவூர்க்கோட்டையிலேயே அழித்துவிட எண்ணினான். உடனே, பெரும்படையோடு சென்று அக் கோட்டையை முற்றுகையிட்டான்; நலங்கிள்ளியின் பெரும்படையைப் பாழ்செய்யும் வன்மை தன் படைக்கு இன்மையறிந்த நெடுங்கிள்ளி, ஆவூர்க் கோட்டையகத்தே அடைந்திருத்தலை மேற்கொண்டான்; முற்றுகை பலநாள் நீடிக்கவே, உள்ளிருப் போர்க்கு வேண்டும் உணவு முதலாம் பொருள்கள் கிடைப்பது அரிதாயிற்று; அந்நிலையை எண்ணியும் நெடுங்கிள்ளி, புறம் போந்து போரிடத் துணிந்தானல்லன்; நலங்கிள்ளியும் முற்றுகையைத் தளர்த்தினனல்லன்; உள்ளிருப்போர் உறுதுயர் உறலாயினர்; அகத்தோர் அடையும் ஆற்றொணாத் துயர்நிலை அறிந்து அகம்மிக நொந்த கோவூர் கிழார் எனும் அருந் தமிழ்ப் புலவர், நெடுங்கிள்ளிபால் சென்று, "ஆற்றல் உடையையாயின், வாளேந்திப் போரிட்டு வெற்றி பெற வெளியேறு; அறம்நிற்கும் உளம் உடையையாயின், அரணை மாற்றான்கை ஒப்பித்துப் பணிய வெளியேறு; அறமோ, மறமோ இன்றி மறைந்து வாழ்தல் மாண்புடைத்தன்று," என்று அறிவுரை கூறினார்.

கோவூர்கிழார் கூறிய அறிவுரை கேட்டு ஆவூர்க் கோட்டையை நலங்கிள்ளிபால் ஒப்படைப்பான்போல் ஒப்படைத்த நெடுங்கிள்ளி, உடனே ஓடி உறையூரைக் கைப்பற்றிக் கொண்டான். உறையூர் அரியணையில் அமர விரும்பிய நலங்கிள்ளி, எவ்வாற்றானும் அதைக் கைப்பற்றுதல் வேண்டும் என்ற கன்றிய உள்ளத்தனாயினான். அக்காலை நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று, உறையூரை விரைந்து கைப்பற்றவேண்டும் என்ற எண்ணம் நலங்கிள்ளியின் உளத்தே எழச்செய்தது; நலங்கிள்ளியைப் பாடிப் பரிசில் பெற்றதே போல், நெடுங்கிள்ளியையும் பாடிப் பரிசில்பெற விரும்பிய இளந்தத்தன் என்ற புலவன், உறையூர் சென்றானாக, அவனைப் பகைவன் ஒற்றன் எனக்கருதிக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி. இதை யுணர்ந்த நலங்கிள்ளி, நெடுங்

கிள்ளி பெரிதும் விழிப்பாயுளன் ; காலம் கடத்தின் பின்னர் அவனை உறையூரினின்றும் ஒழித்தல் அரிதாகி விடும். ஆகவே, அவனை இப்போதே எதிர்த்தல் வேண்டும் எனத் துணிந்தான்; உடனே பெரும்படையொன்று உறை யூர் நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டது ; அஃதறிந்த நெடுங்கிள்ளி, வேண்டும் பொருள்களோடு உறையூர்க் கோட்டையுட் புகுந்து அடங்குவானாயினன். நலங்கிள்ளி யின் பெரும்படை உறையூர்க் கோட்டையை முற்றிக் கொண்டது; முற்றுகை செய்து நாள்பல ஆயின ; மதிலை அழித்து உட்புக நலங்கிள்ளியும் எண்ணினானல்லன்; மதிற் புறம் போந்து போரிட்டு வெல்ல நெடுங் கிள்ளியும் நினைந்தானல்லன்.

இந்நிலையில், ஒருகுடிப் பிறந்த அரசர் இருவர், இவ் வாறு பகைத்துப் போரிடல் பழியாம் என உணர்ந்த கோவூர்கிழார், அவ்விருவர் உள்ளத்தும் உணர்வுமிகுமாறு இருவரையும் அடுத்து, "நீவிர் இருவீரும் ஒருகுடிவந்தோ ராவீர்; நீவிர் மேற்கொண்ட இப்போரில் இருவரும் வெற்றி கோடல் ஒருபோதும் இயலாது ; ஒருவர் வெற்றிபெற வேண்டின், மற்றொருவர் தோற்றல் இன்றியமையாதது ; உங்கள் இருவரில் தோற்போர் யாவரேயாயினும் தோற்றது சோழர் குடியேயாம்; சோழன் ஒருவன் தோற்றான் எனப் பகையரசர் நீவிர் பிறந்த குடியைப் பழிப்பதைக் காணல் நன்றோ? பிறந்த குடிக்குப் பெருமை தேடித்தருதலன்றோ குடிப்பிறந்தார் கடமையாம் ; அதை மறந்து பிறந்த குடிக்குப் பழிதேடித் தருதல் பண்புடைத்தன்று," என்று கூறினார்.

நெடுங்கிள்ளி, புலவர் கூறும் பொருள்நிறை அறவுரை களைப் பொன்னேபோல் போற்றும் பெருங்குடிவந்தோனே யாயினும், உறையூர்க்கோட்டையைக் கைப்பற்றி ஆள வேண்டும் என்ற ஆசைப்பெருக்குடையனாகவே, அவர் தம் அறிவுரையை அக்காலை மனங்கொளானாயினன் ; நெடுங் கிள்ளியை வென்று, உறையூரிலிருந்து ஊராள்வானா யினன்.

இவ்வாறு பேரரசுகள் பலவும் பணிந்துவாழ நாடாண்ட நலங்கிள்ளி, அறிவுடைப் பெருமக்கள் அறிந்துகூறும் அறவுரைகேட்டு அந்நெறி நிற்கும் நல்லறிவுடையனுவன் ; அவன்பால் அப்பண்பு பொருந்தி யிருந்தமையினாலேயே, உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற முதுபெரும் புலவர், அவனை அடுத்து, 'நலங்கிள்ளி' புலவர் பாடும் புகழ் உடையோர், உயர்ந்தோர் உறையும் உம்பர் உலகில் உயர் நிலை பெற்றுப் பெருமையுறுவர் எனப் பெரியோர்கள் கூறக் கேட்டுளேன் ; அப்புகழ் நின்பகைவரிடத்தோ, அன்றி வேறு பிறரிடத்தோ நிற்றலை யான் விரும்புகிலேன் ; அது நின்பால் நிற்பதையே பெரிதும் வேண்டுகின்றேன் ; ஆதலின், அப்புகழ்பெறுநிலை நினக்கே உண்டாம் வண்ணம், நின்பால் வருந்தி வருவார்தம் தகுதி, தகுதியின்மைகளை நோக்கி அளிப்பதும், மறுப்பதும் செய்யாது, அவ்வாறு வருவார்தம் வாடி வருந்திய வயிறு ஒன்றையே நோக்கி எல்லோர்க்கும் வழங்க வல்லனுகுக !

"புலவர் பாடும் புகழ் உடையோர், விசும்பின்
வலவன் ஏவா வானவூர்தி
எய்துப என்ப தம்செய்வினை முடித்து எனக்
கேட்பல்; எந்தை! சேட்சென்னி நலங்கிள்ளி!"

"வல்லா ராயினும், வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை ஆகுமதி." (புறம்: உஎ)

"நலங்கிள்ளி! அரிது அரிது மானிடராதல் அரிது; அதினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என்றெல்லாம் கூறுவர் பெரியோர்; மக்கட்பிறவியில் குருடாகவும், உருவற்று மணைபோலும் மாமிசப் பிண்டமாகவும், கூனாகவும், குறளாகவும், ஊமையாகவும், செவிடாகவும், விலங்கின் வடிவாகவும், உணர்வற்ற உருவாகவும் பிறக்கும் பிறவிகளும் உள; அவையெல்லாம் மக்கட்பயனும் அறம் பொருள் இன்பங்களை அடைதல் இல்லை; ஆகவே அவை, பயனுறுப் பிறவிகள் எனப் பழித்திடப் பெறும்; அக்குறைபாடுகள் நீங்கி, ஆறறிவும் வாய்க்கப் பிறந்தாரும்,

பிறவிப் பெரும்பயனும் அவ் அறம் பொருள் இன்பங்களை ஆற்றிப் பயனுறுராயின், அவர்களும் அப்பிறவிகளேபோல் பயனற்றுரேயாவர். ஆகவே நலங்கிள்ளி! அறம், பொருள், இன்பங்களை ஆற்றுதற்காம், பொருளும், காலமும் பொருந்தப் பெற்றநீ அவற்றை ஆற்றிப் பயனுறு வாழ்வுடையோனுகுக! இன்றேல் நிறை பிறப்புடைய நீயும், குறைபிறப்புடையனபோன்றே பயனற்றவனுகுவை, அது நினக்கு நீங்காப் பெரும்பழியாம்."

"சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்,
கூனும், குறளும், ஊமும், செவிடும்
மாவும், மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பே ரெச்சம் என்றிவை எல்லாம்
பேதைமை யல்லது ஊதியம் இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்.
.............................................
அதனுல், அறனும், பொருளும், இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும! நின்செல்வம்;
ஆற்ருமை! நின் போற்றுமையே." (புறம்: உஅ)

என்பன போலும் அறிவுரைகளை வழங்கி வாழ்ந்தார்.

நலங்கிள்ளி, கிள்ளிவளவன் உடன் பிறந்தோனுவன்; இருவரும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியின் மக்களாவர்; வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, கரிகாற் பெருவளத்தான் மகனுவன் என முறை கூறுவாரும் உளர்; இது குறித்துக், கரிகாற் பெருவளத்தான் என்ற தலைப்பின் கீழ் உரைத்தனவற்றை ஊன்றி நோக்கி உண்மையுணர்க.

## கரு. நல்லுருத்திரன்

"கற்றறிந்தார் ஏத்தும் கலி," எனப் போற்றப்படும் கலித்தொகைக்கண், முல்லைத்திணை குறித்துவரும் கலிப் பாக்கள் பதினேழைப் பாடிய புலவன் இச் சோழன் நல்லுருத்திரன் என்பதல்லால், இவன் வரலாறுபற்றிய செய்தி எதையும் அறிந்து கொள்வதற்கில்லை. நல்லுருத்திரன், இன்றைய இந்து சமயக் கடவுள்கள் பலவற்றையும் அறிந்தவன், பாரதக் கதையினை நன்கு பயின்றவன் என்பது அவன் பாடிய முல்லைக்கலிப் பாக்களால் தெளிவாம். சோழர் குலத்துப் பிறந்த நல்லுருத்திரன், பாண்டியர் பகைவர் குலத்தவராவர் என வெறுத்தொதுக்காது, அவர் பெருமைகளை யெல்லாம் பாராட்டிப் பரவும் பேருள்ளம் வாய்ந்தவனாவன். ஏறு தழுவல் விழாக் களத்தே, தன்னைக் கைப்பற்றத் தவறித் தன்முன் வீழ்ந்த ஆயர் இளைஞன் ஒருவனை, முட்டித்தாக்க முனையாது மீளும் காளைக்குப் போர்க்களத்தே வாள் பெற்றிருந்தும் வெற்றி கொள்ளாது, தன்கை யகப்பட்ட வீரனை, அவன்பால் மறமின்மை யுணர்ந்து, அவனைக் கொன்றொழிக்காது உய்ந்து போக விடும் பெருவீரனை உவமைகூறி, "அழியுநர் புறக்கொடை அயில்வே லோச்சாக் கழிதறுகண்மை," யினைக் காதலிக்கும் மறப்பண்பு வாய்ந்த தன் மன நிலையினைப் புலப்படுத்தியுள்ளான்.

> "கோள்வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேற் செல்லாது
> மீளும் புகரேற்றுத் தோற்றங்காண் ; மண்டமருள்
> வாளகப் பட்டானை ஒவ்வா எனப் பெயரும்
> மீளி மறவனும் போன்ம்." (முல்லைக்கலி : ௪ : ௪௭-௫0)

நல்லுருத்திரன் உள்ளம் உயர்ந்தோர் போற்றும் விழுமிய உள்ளமாம் ; ஊக்கம், உயர்வுள்ளல் ஆய உயர் பெறும் பண்புடைப் பேரரசனாவன் என்பது, அவன் பாடிய புறநானூற்றுப் பாட்டொன்றால் நன்கு புலனாகிறது.

உழவர் உழுது பயிர் செய்தாராக, விளைந்து முற்றி வளைந்த கதிர்களை அவ்வுழவர் அறியாவண்ணம் சிறுகச்

சிறுகத் திருடிச்சென்று தன் வளையினுள்ளே சேர்த்து வைக்கும் இயல்புடையது எலி; தன் பெரும்பசியைப் போக்கிக் கொள்வான்வேண்டி, கொழுத்த பன்றியொன்றை அடித்தக்கால், அது தனக்கு இடப்பக்கத்தே வீழ்ந்ததாக, இடப்பக்கத்தே வீழ்ந்ததனை உண்ணுத் தன் உறுதியே முன்நிற்க, தன் பசிக்கொடுமையையும் பாராது, அதை உண்ணுதே ஒழித்துச் சென்று, மறுநாள் முழையினின்றும் வெளிப்போந்து, பெரிய ஆண்யானை யொன்றை அடித்து வலப்பக்கத்தே வீழ்த்தித் தன் பசியாறும் பண்புடையது புலி. எலியொத்த இழிவுள்ளம் உடையாரும், புலிநிகர் பேருள்ளம் பெற்றுருமாய இருவகை மக்கள் உலகிடை வாழக் காண்கிறோம்; எலி யொத்தவர், தம் தோள்வலிகொண்டு உழைத்துப் பொருள்பெற எண்ணுது, பிறர் உழைத்துச் சேர்த்த பொருளை, அவர் அறியா வண்ணம் சிறிது சிறிதாகக் கவர்ந்து, அதையும் ஆர உண்டு மகிழாமல், உண்ணுதே சேர்த்துவைக்கும் சிறு செயல் உடையராவர்; புலிநிகர் மாந்தர், "ஈன்றுள் பசிகாண்பாளுயினும், செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை," என்ற உயர்நோக்கு உணர்ந்தவராய்த் தம் புகழ்கெட வரும் செல்வம், பெருஞ்செல்வமேயாயினும், அதைப் பொருளென மதியாப் பேருள்ள முடையராவர்; இவ் விருவகை மக்களுள், முன்னையோர் உள்ள உயர்வும், ஊக்கமும் அற்றவராவர்; அத்தகையார் பெரும்பொருள் உடையராயினும், அவரோடு நட்புக்கோடலை அறிவுடையார் விரும்பார்; விரும்புதல் கூடாது; "பழி மலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல் குரவே தலை," என்பவாகலின், பின்னையோர் நட்பினையே சான்றோர் பெரிதும் பேணி வரவேற்பர்; இவ் வரிய உண்மையுணர்ந்து ஒழுகும் உரனுடையனுய நல்லுருத்திரன், அவ் வுண்மையினை உலகிற்கு உணர்த்தி உயர்வு பெற்றுளான்:

"விளைபதச் சீறிடம் நோக்கி, வளைகதிர்
வல்சி கொண்டு அளைமல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளம்இ லாளரொடு

இயைந்த கேண்மை இல்லா கியரோ!
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணு தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ!" (புறம் : கக0)

காடும், காடுசார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தில், ஆடு, மாடு, எருமை முதலாயின காத்தலும், வரகுபோன்ற புன்செய்ப் பொருள்களை உளவாக்கலுமாய தொழில் மேற்கொண்ட ஆயர்தம் வாழ்க்கையினை வகுத்துரைப்பார் போல், அவ் வாயர் மகளிர்தம் கற்பின் மாண்பினைக் காவியப் பொருளாக்கிப் பாடுவதாய முல்லைத்திணை பாடவந்த நல்லுருத்திரன், ஆடு காப்பர் புல்லினத்து ஆயர்; மாடு காப்பர் நல்லினத்து ஆயர்; எருமை காப்பர் கோட்டினத்து ஆயர் என ஆயரை அறிமுகம் செய்து, தந்தை நிரை மேய்ப்பன்; தாய் தினை கொய்வள்; மகன் பயிர் செய்வன்; மகள், நிரை மேய்க்கும் தந்தைக்குக் கறவைக் கலம் கொண்டு கொடுத்தலும், புனத்துளானுக்கு உணவு கொண்டு சேறலும், தினை அரிதாள் மேயும் கன்றுகளைக் காத்தலும் செய்வள் என அவ் வாயர் தொழில் இது என எடுத்துக் கூறி, இறுதியாக,

"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்,
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பன்று."

என அவ் வாயர் மகளிர்தம் கற்பின் மாண்பினை மனதாரப் பாராட்டியுள்ளார்.

## கசா. நெடுங்கிள்ளி

ஒரு குடைக்கீழ் இருந்து உயர் பெரும் புகழ்பெற்று விளங்கிய சோணாடு கரிகாற் பெருவளத்தான் காலத்திற்குப் பின்னர் இரு பிரிவாகிப் பகைகொண்டு பாழுறத் தொடங்கிவிட்டது; ஒரு குடிக்குள்ளே உருவெடுத்த அரசியற் போட்டியில் அறிவிழந்து உயிர் இழந்தோன் இந் நெடுங்கிள்ளி. உறையூர் ஆண்ட அரசன் இறந்து விட்டான்; அவ் வரியணையை அடைவதில் அரசர்களிடையே ஒற்றுமை உண்டாகவில்லை; அதைத் தானே கைப்பற்றி ஆள எண்ணினான் நலங்கிள்ளி எனும் அரசன்; உறையூர் அரசன் உயிரிழந்த காலத்தே, ஆவூர்க் கோட்டைக்கண் வாழ்ந்திருந்த நெடுங்கிள்ளியும், உறையூர் ஆட்சி உரிமையைப் பெற உளங்கொண்டான்; இதனால் நெடுங்கிள்ளிக்கும், நலங்கிள்ளிக்கும் பகை உண்டாயிற்று; பகைவன், படைபலம் பெற்று வளர்தற்குமுன்னர், அவனை அழித்துவிடுவதே போர் நுணுக்கமாம் ஆதலின், நெடுங்கிள்ளி ஆவூர்க்கோட்டையைவிட்டு வெளி வருதற்கு முன்னரே, அக்கோட்டையை முற்றி அழித்துவிடத் துணிந்தான் நலங்கிள்ளி; அவ்வாறே படையுடன் போந்து ஆவூரை முற்றி நின்றுவிட்டான்; நலங்கிள்ளியின் பெரும் படையினை எதிர்த்துத் துரத்தும் வன்மை தன் படைக்கில்லை என உணர்ந்த நெடுங்கிள்ளி, ஆவூர்க் கோட்டையினுள்ளேயே அடங்கியிருந்தான்.

முற்றுகை பல நாள் நீட்டித்தது. உள்ளிருப்போர்க்கு வேண்டும் உணவு முதலாம் பொருள்கள் கிடைப்பது அரிதாயிற்று; பகைவன் ஒருவன் தன்னைத் தாக்க வருகின்றான் என்றால், ஆற்றல் வாய்ந்த அரசனாயின், வருவானை எதிர்த்துத் தாக்குதல் வேண்டும்; அல்லனாயின், பகைவனுக்குப் பணிந்து போதல்வேண்டும்; இரண்டும் செய்யாது அரணகத்தே அடங்கியிருத்தல் அரசர்க்கு அழகன்று; நெடுங்கிள்ளி இதை உணரானாயினான்; இதனால் உள்ளே உறு துயர் இடங்கொண்டது; உண்டற்குரிய உணவும், குடித்தற்குரிய நீரும் கிடைக்கப்பெறாமல் யானைகள் வருந்தின; பால்

கிடைக்கப்பெறுமல் குழந்தைகள் கதறிக் கதறி அழுதன; மலர் சூட்டும் மகிழ்ச்சியிலராய் மகளிர் தம் கூந்தலை வறிதே கோதி முடித்தனர்; மணவளம் அற்றதறிந்து, ஆண்டு வாழ்வார் அழுது அரற்றினர்; இவற்றையெல்லாம் கண்டும், கேட்டும் நெடுங்கிள்ளி யாதும் செய்யானுயினுன்; இந் நிலையினைக் கோவூர் கிழார் எனும் புலவர் உணர்ந்தார்; அரசர் இருவர் பகைமையால் அரணகத்தோர் அழிவதை விரும்பாத அவர், அரணுட் புகுந்து, நெடுங்கிள்ளிமுன் நின்று, ஆண்டு மக்களும் பிறரும் படும் மனத்துயரை எடுத்துக்காட்டி, "இனியும் அடங்கியிருத்தல் அழகன்று; அறம் நிற்கும் உள்ளத்தனுயின், மாற்றுன்கை ஒப்படைத்து வெளியேறு; ஆற்றல் நிறைந்தோனுயின், வாளேந்திப் போரிட வெளியேறு; அறமோ, மறமோ இன்றி மறைந்து வாழ்தல் மாண்புடைத்தன்று," என்று அறவுரை கூறினுர்.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறுஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளும் கைய வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்,
பாலில் குழவி அலறவும், மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்,
இன்னு தம்ம ஈங்கினி திருத்தல்;
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவையாயின் இனிதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்து இது காணுங் காலே."

(புறம்: சச)

புலவர் அளித்த, பொருள் நிறைந்த அறிவுரையைப் பொன்னேபோல் போற்றுதல் வேண்டும் என நினைந்த

நெடுங்கிள்ளி, ஆவூர்க்கோட்டையை நலங்கிள்ளிக்குத் திறந்துவிட்டு வெளியேறினான்; பெரியோர் சொல் பிழைத்தல் கூடாது என்ற பேருள்ளம்கொண்டு ஆவூர்க்கோட்டையைக் கைவிட்டானே யல்லால், அவன் உள்ளத்தே உறையூர் அரியணை குறித்த ஆசை அடங்கவில்லை; ஆகவே, நலங்கிள்ளி, புதிதாகப் பெற்ற ஆவூர்க் கோட்டையுள் அமைதி காணுதற்கான அரும்பணியில் கருத்தூன்றி யிருக்கும் காலம் நோக்கி, உறையூரை யடைந்து, அக் கோட்டையைக் கைப்பற்றி வாழலாயினன்.

அக் காலை, நலங்கிள்ளியைப் பாடிப் பரிசில் பெற்ற இளந்தத்தன் எனும் புலவன், நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையில் நிலவும் பகையினை உணரானாய், நெடுங்கிள்ளிபால் பரிசில் பெறுவான் வேண்டி உறையூர் சென்றான்; நலங்கிள்ளிபால் மாறாச்சினம் கொண்டு நிற்கும் நெடுங்கிள்ளி, இளந்தத்தன் அவனிடத்தினின்றும் வந்துளான் என அறிந்தவுடனே, வந்தவன் புலவனல்லன்; பொருள் பெற்றுப் பிழைப்பதும் இவன் பணியன்று; நலங்கிள்ளியின் ஒற்றனே இவன்; நம் படைபலம் அறிந்து போவதே இவன் எண்ணம் என பிறழக் கொண்டான்; உடனே அவனைக் கொன்றுவிடவும் துணிந்தான்; இச் செய்தி கோவூர் கிழார்க்கு எட்டியது; அவர் உறையூர்க்கு ஓடோடி வந்தார்; நெடுங்கிள்ளியைக் கண்டு, "அரசே! இவன் ஒற்றனல்லன்; உண்மையில், என்னைப் போல், இவனும் ஒரு புலவனே; பழுமரம் நாடிச் செல்லும் பறவை போல், பரிசில் நல்கும் பெருங் கொடையாளரைத் தேடிச் சென்று அவர் கொடுப்பன கொண்டு வாழும் புலவர், பிறர்க்குத் துயர் தரும் செயலை உள்ளியும் அறியார்; மற மிக்க மன்னரை வென்று வீறுகொள்ளும் வேந்தரைப் போன்றே, கல்வியால் மாறுபட்டாரைத் தம் புலமையால் வென்று இறுமாந்து வாழ்தலே அவர்க்கு இயல்பு; அத்தகைய புலவருள் ஒருவனாய இவன் நினக்குத் தீங்கு எண்ணுவானல்லன்; ஆதலின், இவன் உயிர் கொடுத்து அருள் புரிவாயாக!" என்று கூறினார்; புலவர் சொல் போற்

றும் பண்புடையோனுய நெடுங்கிள்ளி, கோவூர் கிழார் கூறியன கொண்டு, கொல்லக் கருதிய இளந்தத்தனைப் பிழைத்துப் போகவிடுத்தான் :

" வள்ளி யோர்ப் படர்ந்து புள்ளிற் போகி,
..............................................
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை,
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே ; திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினிது ஒழுகி னல்லது, ஓங்கு புகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே."

(புறம் : சஎ)

நெடுங்கிள்ளி, இளந்தத்தன்பால் நடந்துகொண்ட முறைகளை எண்ணிப் பார்த்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி பெரிதும் விழிப்பாயுளன் ; காலம் கடத்தின், பின்னர் அவனை உறையூரினின்றும் ஒழித்தல் அரிதாகிவிடும். ஆதலின், அவனை இப்போதே எதிர்த்தல் வேண்டும் எனத் துணிந்து படையோடு சென்று உறையூர்க் கோட்டையைச் சூழ்ந்து கொண்டான் ; நெடுங்கிள்ளி, ஆவூர்க் கோட்டையுள் அடங்கியிருந்தவாறே, உறையூர்க் கோட்டையுள்ளும் அடங்கியிருக்கலாயினுன் ; முற்றுகை செய்து நாள் பல ஆயின ; மதிலை அழித்து உட்புக நலங்கிள்ளியும் முன் வந்தானல்லன் ; மதிற் புறத்தே போந்து போரிட்டு வெல்ல நெடுங்கிள்ளியும் நினைந்தானல்லன் ; இதனுல் உறையூர் மக்கள் உறுதுயர் கொள்ளலாயினர்.

ஆவூர்ப் போரைத் தடுத்து அழிவு நிகழா வண்ணம் காத்த கோவூர் கிழார், நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் மீண்டும் பகைத்து நிற்றலைக் கண்டார் ; இப் போரையும் தடுத்து நிறுத்தத் துணிந்தார் ; நெடுங்கிள்ளி, முன்னரே ஒரு முறை தம் சொற்கேட்டு ஒரு கோட்டையைக் கைவிட்டுளான் ; மீண்டும், அவனையே பணிந்துபோக வேண்டுதல் கூடாது என எண்ணினுர் ; முற்றி நிற்கும் நலங்கிள்ளிபால்

சென்று, “நலங்கிள்ளி! பகைத்து நிற்கும் நீவிர் இருவீரும், சோழர் குடியாம் ஒரு குடியில் வந்தவராவீர்; நீவிர், இருவீரும், வெற்றி கோடல் இயலாது; ஒருவர் வெல்ல, மற்றொருவர் தோற்றல் வேண்டும்; இருவரில் தோற்போன் யாவனே யாயினும், தோற்றோன் சோழர் குடிவந்தவனே ஆவன்; சோழன் ஒருவன் தோற்றான் எனப் பகையரசர் நும் குடியைப் பழித்தற்கே துணைபுரியும் அச்செயல்; பிறந்த குடிக்குப் பெருமை தேடித் தருதல் குடிப்பிறந்தார் கடமையாகவும், அதற்கு மாறாகப் பிறந்த குடிக்குப் பழி தேடித் தரும் நும் செயல் நன்றன்று” என நயம்படக் கூறினார்; புலவரைப் போற்றும் பண்பு நலங்கிள்ளிபாலும் உண்டு. ஆகவே, அவன் அவர் உரைகேட்டு உறையூர் முற்றுகையை ஒழித்தான்.

‘ஒருவீர் தோற்பினும் தோற்பது உம் குடியே;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே; அதனால்,
குடிப் பொருள் அன்று நும் செய்தி; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே.”

(புறம்: ௪௫)

நெடுங்கிள்ளி, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனவும் அழைக்கப் பெறுதலால், இவன், காரியாறு எனும் இடத்தே நிகழ்ந்த போர் ஒன்றில் உயிர் துறந்தவனாதல் வேண்டும்; அப் போரில், நெடுங்கிள்ளியின் பகைவராவார் யாவர் என்பது புலப்படவில்லை; நெடுங்கிள்ளியைக் காரியாற்றில் கொன்றோன், கிள்ளிவளவன் தம்பி நலங்கிள்ளியே எனக் கூறுவாரும் உளர்; “காரியாற்றில் துஞ்சிய” என்ற அடைமொழியிருப்பதால், அவன் காரியாற்றில் இறந்தான் என்பது மட்டும் துணியப்படுமே யல்லால், நலங்கிள்ளியொடு நடத்திய போரில் இறந்தான் என்பது புலப்படாது; நலங்கிள்ளியால் உயிர் துறந்தான் என்பதற்கு ஆதாரமாகக் காட்டும் மணிமேகலைப் பகுதி, அப்போரில் நலங்கிள்ளியின் பகைவராகச் சேரனையும், பாண்டியனையும்தான் குறிப்பிடுகிறதேயன்றி, நெடுங்கிள்ளியைக் கூறவில்லை. ஆகவே, அவர்

கள் கூறுவதை ஏற்றுக்கோடல் அத்துணைப் பொருந்துவ தன்று.

இனி, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, மணக் கிள்ளியின் மகனாவன்; இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி நெடுங்கிள்ளியின் மகனாவன் எனக் கூறுவாரும் உளர்;, அவ்வாறு முறை கூறுவதும் பொருந்தாது என்பது, கரி காற் பெருவளத்தான் என்ற கட்டுரைக்கண் காட்டப்பட் டுளது; ஆண்டுக் காண்க.

## கஎ. நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி

நெய்தலங் கானல் என்பது கடற்கரையைச் சார்ந்த ஓர் ஊர்; அவ்வூரொடு யாதோ ஒருவகையான் தொடர்பு கொண்டிருந்தமையான், இவ் விளஞ்சேட் சென்னி, நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி என அழைக்கப்பெற்றுளான்; இவன் பெயர், சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி எனவும் வழங்கப் பெறுதலின், இவன், சேரனுக்குரிய பாமுளூரை வென்று அழித்தான் என அறியலாம்; இளஞ்சேட் சென்னி, எண்ணியது எண்ணியாங் கெய்தும் திண்ணியனுவன்; கைப்பற்றுதற்கரிய காவலமைந்த பகைவர் கோட்டை அப் பகைவரிடம் இருக்கும்போதே, "இந்தக் கோட்டையை நினக்குத் தந்தேன், இன்றுமுதல் அது நின் உடைமை யாகுக" எனத் தன்னைப் பாடிவரும் பாணனுக்கு அளிக்கும் அத்துணைத் துணிவும், அவ்வாறே, அக்கோட்டையை வென்று அப் பாணனுக்கு அளிக்கும் ஆற்றலும் வாய்ந் தவனுவன்;

> "ஒன்னார்,
> ஆரெயில் அவர்கட்டாகவும், நுமது எனப்
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்." (புறம்: உ0௩)

இளஞ்சேட்சென்னி, தன்னைப் பணிந்து வழிபட்டு வாழ்வாரைத் தழுவி அன்பு காட்டும் அருட்குணம் உடையவன்; பிறர்பழி கூறுவதையே தொழிலாகக் கொண்டார் கூறுவனவற்றைக் கொள்ளாக் குணமுடையவன்; ஒருவன்பால் குற்றம் உண்டு என்பதை அறிவானும், நூலானும் துணிந்தானுயின், அக் குற்றத்திற்குரிய தண்டத்தை அவர்க்கு அளிக்கத் தவறுன்; குற்றம்செய்தான் தன் குற்றம் உணர்ந்து பணிந்து பிழைபொறுக்க வேண்டுவனு யின், பிழைபொறுத்துத் தண்டத்தை நீக்குவதோடு, அவற்கு அருளும் செய்வன்; தன்மனைநோக்கிவரும் மக்கட் கெல்லாம், அமிழ்தினும் சிறந்த உணவை அள்ளி வழங்கும்

அருட்குணம் உடையவன்; அவன் மார்பு, மகளிர் அன்பிற் கன்றி, பகைவர் படைக்குத் தளர்ந்து அறியாது; "என்ன காரியம் செய்துவிட்டேன்" எனப் பின் இருந்து இரங்கத் தக்க காரியத்தை அவன் என்றும் புரிந்து அறியான்; கூறிய இக்குணங்களை உடைமையால் அவன் பெற்ற புகழ், சேயபல நாடுகளிலும் சென்று பரவும்:

வழிபடு வோரை வல்லறி தீயே;
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே;
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;
வந்து, அடிபொருந்தி, முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி, நீபண்டையிற் பெரிதே;
அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்,
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை,
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப!
செய்து இரங்கா வினைச், சேண்விளங்கும் புகழ்,
நெய்தலங்கானல் நெடியோய்! (புறம்: ௧௦)

இளஞ்சேட்சென்னிபால் காணலாம் இப்பண்புகளெல் லாம் கண்டு பாராட்டிய புலவர் ஊன்பொதி பசுங்குடை யார், அவன், பாணர் முதலாம் பரிசிலர்க்குப் பொருள் அளித்துப் போற்றும் புகழ்நிறை வாழ்வினை என்றும் குறைவறப் பெறுதல் வேண்டும் என்ற விழைவின் மிகுதி யால், அவனை அடைந்து, "அரசே! வேண்டுமளவு முன் னரே பெய்துவிட்டோம்; மேலும் பெய்தல் வேண்டுவ தில்லை என்று மழை பெய்யாது பொய்ப்பினும், முன்னெல் லாம் நிறைய விளைவித்தோம், இனி விளைவித்தல் வேண் டுவதின்று என நிலம் விளைவினை மறுப்பினும், அம்மழை நீரையும், அந்நிலத்து விளைபொருளையும் எதிர்நோக்கி வாழும் உயிர்கள் வாழவழியின்றி மடிந்து மறைந்தே போய் விடும்; அதுபோல், என்போலும் இரவலர், நின்பால்வந்து இன்னும் சிறிது கொடுப்பாயாக என வேண்டிநின்றக்கால், அவர்க்கு, 'முன்னரே நிறையக் கொடுத்து விட்டேன்;

மறுவதும் கொடேன்' எனக்கூறி மறுத்துவிட்டால், அவர் வாழ்வு வளமற்றுப் போய்விடும்; ஆதலின், இரவலரைப் பேணிப் புரப்பது வாழ்வின் கடன் எனக் கொள்வாயாக" எனக்கூறி வாழ்த்தினர்:

"கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்,
தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்,
எல்லா வுயிர்க்கும் இல்லால் வாழ்க்கை;
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்,
முன்னும் கொண்டிர் என நும்மனோர் மறுத்தல்
இன்றது அம்ம! இயல்தேர் அண்ணல்!" (புறம்: உ0௩)

ஊன்பொதி பசுங்குடையாரால், ஈண்டுப் பாராட்டப் பெற்ற, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னியும், அவரால் பாராட்டப் பெற்ற, செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியும், கரிகாற் பெருவளத்தான் தந்தையாய், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி எனும் பெயர்பூண்ட சோழன் ஒருவனே ஆதல் கூடும் என்பதை, உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்ற தலைப்பின் கீழ்விளங்க விரித்துரைத் துள்ளேன்; ஆண்டுக் கண்டு உண்மையுணர்க.

# கரு. போரவைக்கோப் பெருநற்கிள்ளி

உறந்தை என வழங்கும் உறையூரைத் தலைநகராக் கொண்டு ஆண்ட சோழ அரசருள் தித்தன் என்பானும் ஒருவன்; வெற்றிபல கண்ட அவ்வேந்தனின் ஆற்றல்சால் பெருமகன், போரவைக்கோப் பெருநற்கிள்ளி. இப்பெரு நற்கிள்ளி, சோழர் பேரரசனின் வழிவந்தவனாவன் என்பதைக், கிள்ளி என வழங்கும் அவன் பெயரே அறிவிக்கிறது; இவன் தித்தன் மகனாவன் என்பதைச் சாத்தந்தையார் எனும் புலவர் இவனைப் பாராட்டிப் பாடிய பாட்டின் துணையால் அறிகிறோம்; போரவைக்கோப் பெருநற்கிள்ளி, பேரழகும், பேராண்மையும் நிறைந்த பெருந்திறல் இளைஞனாவன்; மற்போர்வல்ல மறவனாவன்; இக்கிள்ளிக்கும், அவன் தந்தைக்கும் யாது காரணத்தாலோ ஒற்றுமை குறைந்தது; பகை வளர்ந்தது; தந்தையொடு பகைகொண்ட கிள்ளி, அவனைப் போரிட்டு அழிக்க எண்ணாது, அவன் நாட்டைவிட்டகன்று, முக்காவல் நாட்டைச் சேர்ந்த ஆமூர் சென்று தனித்து வாழ்ந்திருந்தான்.

ஆமூர், மல்லர்க்கும் மற்போர்க்கும் சிறந்தது; மல்லருள் சிறந்தானொருவன், அவ்வூரில் இருந்தான்; அவன் ஆற்றல் சிறப்பறிந்த அவ்வூர்மக்கள், அவனை ஆமூர்மல்லன் என்றே அழைத்தனர். தான் வாழும் ஊரில் தன்னினும் வலியானொருவன் வந்து வாழ்வதா என்ற எண்ணத்தால் ஆமூர் மல்லற்கும் கிள்ளிக்கும் பகை உண்டாயிற்று; பகை வளர, ஒருநாள் இருவரும் மற்போர் நிகழ்த்தத் தொடங்கிவிட்டனர்; ஊர்மக்கள் எல்லாம் மற்போர்காண ஒன்று திரண்டு விட்டனர்; கிள்ளி, அந்நாட்டையோ, அவ்வூரையோ சேர்ந்தவனல்லன்; ஆகவே, அவனியல்பு அறியமாட்டாத அவ்வூரார், போரின் முடிவுகுறித்து பல்வேறு கருத்துக்களை வெளியிடலாயினர். "கிள்ளிக்கே வெற்றி" எனப் பேசிச் சென்றார் சிலர்; "கிள்ளிக்கு வெற்றி கிட்டாது" எனப் பேசிச் சென்றார் மற்றும் சிலர்.

"என்னைக்கு ஊர் இஃது அன்மை யானும்
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
ஆடு ஆடென்ப ஒரு சாரோரே;
ஆடன் றென்ப ஒருசாரோரே."

(புறம்: அ௫)

ஆமூர் மக்கள், போர்முடிவு அறியமாட்டாது, தாம் தாம் எண்ணியதைக் கூறிச் சென்றனராயினும், இறுதியில் கிள்ளியே வெற்றி பெற்றான்; ஆமூர் மக்களைப் போன்றே, அம் மற்போர்க் காட்சியைக் கண்டு நின்ற புலவர் சாத்தந்தையார், போரிடையே பெருநற்கிள்ளி காட்டிய போர் வன்மையினை வியந்து பாராட்டினார். மற்போரில் பகைவனைப்பற்றி எறிதற்கு விரையும், அவன் கைகளின் விரைவு அவர்க்கு அடக்கொணாப் பெருமகிழ்ச்சி யளித்தது.

ஊரில் நடைபெறும் விழாக்களுக்கு உதவலும், பிள்ளைப்பேற்றுப் பருவம் வந்துற்ற மனைவியின் மெய்ந்நோவுக்கு உதவலும் கடமையாகக் கொண்டவன் புலைமகன்; அப் புலைமகன் குடியில் பிறந்து கட்டில் பிணித்து வாழும் வாழ்க்கையினை மேற்கொண்டா னொருவன், ஊரில் விழாத் தொடங்கிவிட்டது; வீட்டில் மனைவி கருவுயிர்த்தற்கான் நோவுற்று வருந்தத் தொடங்கி விட்டாள் என்பதை ஞாயிறு மறையும் மாலைக் காலத்தே அறிந்து எடுத்த தொழிலையும் முடித்து, அவ் விரிடத்திற்கும் துணைபுரியச் செல்லவும் வேண்டி, அவன் கையிற்கிடந்து வாரை நுழைக்கும் ஊசி எத்துணை விரைவாகப் பணியாற்றுமோ, அத்துணை விரைவுடைய போரவைக்கோப் பெருநற்கிள்ளியின் கைகளைக் கண்டு பாராட்டினார்:

"சாறுதலைக் கொண்டெனப் பெண் ஈற்று உற்றெனப்,
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே."

(புறம்: அஉ)

ஆமூரிடத்தே, தன்னொடு போரிடவந்த மல்லனுடைய மெய்வலி யனைத்தையும் கெடுத்து, ஒரு கால், அவன் மார் பகத்தே மண்டியாக மடிந்து கிடக்க, மற்றொருகால் அவன் தன்னை வீழ்த்தச் செய்யும் முயற்சிகளை விலக்கிக் கொண்டு அவன் பின்புறத்தே கிடக்கப் போர் செய்யும் போரவைக் கோப் பெருநற்கிள்ளியின் மற்போர்க் காட்சியினைக் கண்டு களித்த சாத் தந்தையார், மகனின் ஆற்றற் சிறப்புணர்த் தும் இக் காட்சியைக் கண்டு அகமகிழும் அந் நல்வாய்ப்பு, அந்தோ தித்தனுக்கு இல்லாமற் போயிற்றே! என வருந்து வாராயினர் :

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்,
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி,
ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே;
நல்கினும், நல்கா னாயினும், வெல்போர்
போராருந் தித்தன் காண்கதில் அம்ம!"

(புறம் : அ0)

உறையூர்ப் பெருவணிகன் மகளாய நக்கண்ணை என்ற நல்லிசைப் புலமை மெல்லியலார் ஒருத்தி, கிள்ளியின், ஆண்மையும், அழகும், ஆற்றலும் கண்டு, காதல் கொண் டார் ; அவனை அடைந்து மணந்து மகிழ்ந்து வாழ எண்ணி னர் ; ஆனல், பெரு நற்கிள்ளிக்கு, நக்கண்ணைபால் காதல் உண்டாகவில்லை ; இதனல், அவனை அடைய மாட்டாமை யால் கவலை மிகுந்து, உடல் மெலிந்து வருந்தினர் ; மணந்து மகிழ மாட்டா அவர், அவன், ஆற்றல் ஆண்மை முதலாயினவற்றைக் கண்டு களிப்பதில் அகமகிழ்ந்து பாடிப் பாராட்டுவா ராயினர்.

## கக. மாவளத்தான்

திருமாவளவனுக்குப் பின்னர்ச் சிறந்து விளங்கிய சோழ அரசர்களுள் நலங்கிள்ளியும் ஒருவனாவன்; இந் நலங் கிள்ளியின் தம்பியாம் தகவுடையோன் இம் மாவளத்தான்; இஃதன்றி இவனைப்பற்றி அறியத் தக்க அரசியற் குறிப் பொன்றும் கிடைத்திலது; இவனும், தாமல் பல் கண்ண னார் எனும் புலவரும் கூடி ஆடிய வட்டாடற்கண் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றே, இவனைத் தமிழ் உலகம் அறியத் துணை புரிந்துளது.

மாவளத்தானும், புலவர் தாமல் பல்கண்ணனாரும், ஒரு கால் வட்டாடி மகிழ்ந்திருந்தனர்; அப்பொழுது, வட் டுக்களில் ஒன்று, புலவரை அறியாமலே, அவர்பால் மறைந்துவிட்டது; அதைக் கண்ட மாவளத்தான், புலவர் வட்டினை வேண்டுமென்றே ஒளித்தனர் எனக் கொண்டு, வெகுண்டு, அவரை அவ் வட்டினாலேயே எறிந்தான்; தவறு செய்திலராகவும், தவறு செய்தார்போல் எண்ணி எறிந்த மாவளத்தான் செயல், புலவர்க்கு மிக்க சினத்தை உண் டாக்கிற்று; "நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவ னைக் குலத்தின்கண் ஐயப்படும்" என்ப. ஒருவன், பழி செயலும், இழிகுணமும் உடையனாயின், ஊரார், அவன் பிறப்பின்கண் யாதோ பிழையுண்டு என்றே கருதுவர்; புலவர்க்கு, மாவளத்தான் உண்மையில் சோழர் குடியிற் பிறந்தவன்தானா என்ற ஐயம் உண்டாயிற்று; அக்குடி வந்தார், பார்ப்பார் மனம் நோகுமாறு நடந்துகொள்ளும் பண்பினரல்லரே; பருந்தால் தாக்குற்றுத் தன்பால் வந் தடைந்த சிறிய புறாவினைப் பேணிக் காத்தற்காகத் தானே துலையில் புகுந்து, தன் உடலையே உதவிய உயர்ந்தோர் பிறந்த பெருமை யுடையதன்றோ சோழர் பெருங்குடி! பெருமைசால் அப் பெருங்குடியில், இவன் போலும் இழி குணமுடையார் தோன்றியிருத்தல் இயலாதே; மேலும் பகைவரைக் கடக்கும் பேராண்மையும், புலவரைப் புரக்கும்

கைவண்மையும் உடைய இவன் முன்னோன் நலங்கிள்ளியின் நற்பண்பு எங்கே! இவன் இழிகுணம் எங்கே! இவனை அவன் தம்பியென எவ்வாறு கொள்வது? உண்மையில், இவன் அவனோடு பிறந்தவனுகான்; இவன் பிறப்பில் யாதோ ஐயம் உளது; இவ்வாறெல்லாம் எண்ணி வருந்தினர் புலவர்; எண்ணியதோடு நின்றாரல்லர்; சினம் மிகுதியால், அவர் எண்ணம் சொல்லுருப் பெற்று விட்டது.

கேட்டான் மாவளத்தான்; இதற்குள்ளாகவே, புலவர் தவறிலர் என்பதையும் அறிந்து கொண்டான்; அதனுல், புலவர் கூறும் வன்சொற்கள், அவனுக்குச் சினத்தை மூட்டிற்றில; மாருக, அவன் தலையை வணங்கச் செய்தன; தான் செய்த பிழைக்கு வருந்தினுன்; புலவரை வட்டால் எறிந்ததை எண்ணி எண்ணித் துயர் உற்றுன்; மாவளத்தான் நாணம், புலவர்க்குப் பெரு மகிழ்ச்சி அளித்தது; வட்டு மறைந்திருந்தது தம்மிடத்தில்; அதனுல் தவறு தம்முடையதே; தவறு செய்த தம்மை, மாவளத்தான் எறிதலில் தவறு இல்லை; அவன்பால் தவறு இல்லையாகவும், அவனைப் பழித்தது, தாம் செய்த மற்றொரு பெரும் பிழையாம்; இவ்வாறு தவறுமேல் தவறுசெய்தோர் தாமாகவும், தான் தவறு செய்யாத வழியும், தவறு செய்தான்போல் தாம் கூறிய வன்சொற்களைக் கேட்டும் சினம் கொள்ளாது, மாருகப் புலவர் நோவன செய்துவிட்டோமே என்று எண்ணிய எண்ணத்தால், நாணித் தலை வணங்கி நின்ற மாவளத்தான் பேருள்ளம்கண்டு பெரிதும் வியந்தார்; செவிகைப்பச் சொற்பொறுக்கா வேந்தரே உலகில் மிகப் பலராவர்; ஆனுல், இவனே, பிறர் கூறிய பழிகளையும் பொறுக்கும் பண்பும் உடையனுவன்; இக்குணம், இவனுக்கு, இவன் பிறந்த குடிதந்த பெரும் பண்பு; இவன் குடி வந்தார், தமக்குப் பிழைபுரிந்தாரையும் பொறுக்கும் பேருள்ளம் படைத்தோராவர்; அவர் குடிவழி வந்து, அப் பண்பு மாருது மாண்புற்ற இவன், இவர்கட்குரிய காவிரியாறு, கொண்டுவந்து குவிக்கும் மணலினும் பல்லாண்டு வாழ்ந்து வளம் பெருகுவானுக" என்று வாழ்த்தி வழிக்கொண்டார்.

"குணம் என்னும் குன்றேறி நின்றார்க்கு வெகுளி கணமே" நிற்கும்; அக் கண நேர வெகுளியின் ஆற்றல் அளவிடற்கரிதாம் என்ப; கணத்திற்கு முன் வெகுண்டு வட்டெறிந்த மாவளத்தான் எங்கே! புலவர் பொன்னுரை கேட்டுப் பிழை உணர்ந்து பணிந்து நின்ற மாவளத்தான் எங்கே! வாழ்க மாவளத்தான்! வாழ்க அவன் நெறி!

"கொடுஞ் சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்
தன்னகம் புக்க குறு நடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக!
நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்
தேர்வண் கிள்ளி தம்பி! வார்கோல்
கொடுமர மறவர் பெரும! கடுமான்
கைவண் தோன்றல்! ஐயம் உடையேன்;
ஆர்புனை தெரியல் நின் முன்னோ ரெல்லாம்,
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றிது
நீர்த்தோ நினக்கு? என வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய்; என்னினும்
நீ பிழைத்தாய் போல் நனி நாணினையே;
தம்மைப் பிழைத் தோர்ப் பொறுக்கும் செம்மல்,
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும் எனக்
காண்டகு மொய்ம்ப! காட்டினை யாகலின்,
யானே பிழைத்தனென்; சிறக்க நின் ஆயுள்!
மிக்கு வரும் இன்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே."

(புறம்: சஙு)

"வில்லேருழவர் பகை கொளினும், கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை" என்ற குறள் நெறியுணர்ந்து, புலவர் தம் பொல்லாங்கு மறந்து, பணிந்து போகும் பண்புடையனாய மாவளத்தான், "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை" என்ற கோல் நெறியும் உணர்ந்தவனாவன்; மாவளத்தான், அல்லற்

பட்டு ஆற்ருது அழுவார் தம் கண்ணீர் கண்டு அஞ்சும் அருள் உள்ளம் உடையவன் என்பது, அவன் பாடிய குறுந்தொகைப் பாட்டொன்றில், தலைவன், தன்னைத் தனியே விடுத்துப் பொருள்வயின் பிரிவன் என்பதறிந்து வருந்தும் தலைமகளைத் தேற்றும் தோழி, "நம் தலைவர் நம்மை ஈண்டே விடுத்துத் தாம்மட்டும் தனித்துச் செல்லக் கருதுவராயின், அவர் நின் கண்களினின்று வடியும் நீர், நின் அணிகிடந்து அழகு தரும் நின் மார்பகத்தை நனைப்பதைக் கண்டிலர் என்றே எண்ணுகின்றேன்; கண்டவராயின் அவர் செல்வா ரல்லர்; அவர் அதைக் காண்பர்; ஆகவே அவர் செல்லார்" எனக் கூறியதாகப் பாடிக் கண்ணீர் கண்டு அழுதும் தன் கருணை உள்ளம் தோன்ற நின்றமையான் உணர்க:

"தாமே செல்ப வாயிற் கானத்து
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் ருஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழில்
பூணக வனமுலை நனைத்தலும்
நாணுர் கொல்லோ மாணிழை! நமரே."

(குறுந்: ௩௨௮)

## ௨௦. முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி

முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி, நலம் மிகப் படைத்த வளமிகு நாடாண்ட சோழனவன்; அவன் நாட்டு உழவர், தாம் அறுத்துப்போட்ட நெற்சூட்டினைத் தொகுக்குங்கால், அவற்றின் இடையே மயில்கள் உதிர்த்த பீலிகள், பிரிக்கலாகாவாறு மண்டிக் கிடப்பதால், அவற்றையும் சேர்த்தே தொகுப்பர்; அத்துணை வளம் உடையது அவன் நாடு; மீனும், கள்ளும் முதலாம் உணவுப் பொருளினும் குறையுடையதன்று அது; இத்தகைய வளமெலாம் பெறுதற்கேற்ற நீர்வளத்தானும் நிறைந்தது அந் நாடு; முடித்தலைக்கோ, வளம் நிறை நாடாண்டதோடு, பெருவீரனுமாவன்; புலித்தோலால் ஆய மார்புக் கவசம், தன் இணைப்பற்று அழிந்தொழியுமாறு பகைவர்விட்ட அம்புற்று ஆய புண் பல பெற்றுப் புகழ் நிறைந்து உயர்ந்தது அவன் மார்பு; அவன் ஊர்ந்து செல்லும் யானையும், கூற்றுவன் போலும் கொலைத்தொழில் வல்லது; இம் முடித்தலைக்கோ, தன் காலத்தே, கருவூரைத் தலைநகராக் கொண்ட சேரநாடாண்டிருந்த அந்துவஞ் சேரல் இருப்பொறையொடு பகை கொண்டு, அவனுக்குரிய கருவூரை முற்றுகையிட்டான்; முற்றியிருக்கும் காலத்தே, ஒரு நாள், இவன் ஊர்ந்து செல்லும் யானை மதம் கொண்டு விட்டது; எதிர்ப்பட்ட பொருள்களை அழித்தல்லது மீளா வன்மை வாய்ந்த சுறுமீன் போலும் வாட் போர் வல்ல வீரர், சூழ்ந்து நிற்கக், கடலிடைச் செல்லும் கலம் போலவும், விண்மீன்களுக்கிடையே விளங்கும் வெண் மதி போலவும், பாகர்க்கும் அடங்காது, ஆற்றல் கொண்டு திரியத் தொடங்கிவிட்டது; இறுதியில், தம் பாசறையின் நீங்கிப் பகைவர் பாசறையையும் நெருங்கிவிட்டது; இந்தக் காட்சியைக் கருவூர் வேண் மாடத்துக்கண், அந்துவஞ் சேரல் இரும்பொறையொடு உடன் இருந்த புலவர், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் கண்டுவிட்டார்; தனித்துத் தன் நிலை தவற வந்திருக்கும் அவனைச் சேரர் படை வீரர் சூழ்ந்து அழிப்

பின், அறனல்லன செய்த பழி, சேரனைப் பற்றும்; அம்மட்டோ! யானை மதம் பெற்றுக்கொண்டு செல்லத் தனித்துச் சென்ற அரசனை அழித்து விட்டனர் பகைவர், எனச் சினங் கொள்ளும் சோழர் படையால் சேரர் அரணும் ஆற்றலும் அழிந்து போம்; அந்நிலை கண்டு அஞ்சிய அவர், களிற்றின் மீது வருவோன் யார்? அவன் வந்தது யாங்ஙனம்? என்பனவற்றை எடுத்துக்கூறி, அவன் அந்நிலையில் அழிவின்றித் திரும்பத் தன்னாலாவன செய்யுமாறு அந்துவஞ் சேரற்குக் கூறினர். இவ்வாறு பகைவர் முன்னும் பாராட்டிக் கூறத்தக்க பெருமை வாய்ந்தோன் முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி.

'இவன் யார் என்குவையாயின், இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்று மிசையோனே:
களிறே, முந்நீர் வழங்கும் நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்து பட்டன்றே;
நோயில ளாகிப் பெயர்க தில்அம்ம!
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன், விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடு கிழவோனே." (புறம்: ௧௩)

## உக. வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி

வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற பெயர் உடைமையான், இவன், வேற்படையால் விறல் பெற்றவனுவன் என்பது தெளிவாம்; இவன் நாடாண்டிருந்த காலத்தே, சேர நாட்டில், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் எனவும், குடவர் கோமான் நெடுஞ் சேரலாதன் எனவும், அழைக்கப் பெறும் குடக்கோ நெடுஞ் சேரலாதன் நாடாண்டிருந்தான்; தமிழரசர்கள்பால் நிலவும் இயல்பிற்கேற்பவே, இவ்விருவரும் பகைகொண்டு வாழ்ந்தனர்; இறுதியில் சோழநாட்டில், திருப்போர்ப் புறம் எனும் இடத்தே இருவர் படையும் ஒன்றையொன்று எதிர்த்துக் கடும்போர் ஆற்றின; இருவரும் பெரு வேந்தராவர் ஆதலாலும், இருவர் படையும், பல்வேறு மொழி வழங்கும் மக்களைக் கொண்ட பெரும் படையாகவே காணப்பட்டமையாலும், போர் மிகமிகக் கொடுமையாக நடைபெற்றது; இருதிறப் படையிலும் பிழைத்தார் ஒருவரும் இலராம் நிலையில் போர் முடிந்தது; அரசர் இருவரும் ஆண்டே அழிந்தனர்; இவ்வாறு, களனழிய அழிந்த காவலர் நிலை குறித்துக் கண்ணீர்விட்டுக் கலங்கியுள்ளனர் பெரும்புலவர் இருவர்.

"களம் புகுந்த களிறுகள் எண்ணித் தொலையா; அவை அத்தனையும், அம்பால் அடியுண்டு, இனி, செய்யக் கடவ கடமையின்றிக் களத்தே மடிந்தன; வெற்றிப் புகழும், விரைந்த செலவும் உடைய குதிரைகள் எல்லாம், மறம் மிக்க தம் மேலாட்களுடனே, ஆங்கே அழிந்து ஒழிந்தன; தேர் ஏறி வந்த பெரு வீரரெல்லாம், ஒரு சேர மடிந்தனர்; வார்கொண்டு வலிக்கப்பெற்று, மயிர்சீவாத் தோல் போர்க்கப் பெற்ற போர் முரசுகள், முழக்குவாரின்றிக் கொன்னே கெட்டன; மார்பில் வேலேற்று வேந்தர் இருவரும் வீழ்ந்து மடிந்தனர்; அந்தோ! இளைய மகளிர், ஆம்பல் தண்டால் ஆக்கிய அழகிய வளையணிந்து, அவலை வாயில் அடக்கிப் புனல் பாய்ந்து ஆடி மகிழ்தற்காம் பெரு

வளம் பெற்ற நாடு அவர் நாடு இனி என்னும்! அந் நாட்டு மக்களை ஆற்றுவார் யார்? தேற்றுவார் யார்? அவலம்! அவலம்!" என்று புலம்பிப் பாடியுள்ளார் பரணர்.

"எனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படை யொழிந்தனவே
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொடு ஆண்டுப் பட்டனவே;
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்,
தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே;
விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்,
பொறுக்குநர் இன்மையின் இருந்து விளிந்தனவே;
சாந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருது களத்து ஒழிந்தனர்; இனியே,
என்னாவதுகொல் தானே, கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்,
பாசவல் முக்கித் தண்புனல் பாயும்
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கையவர் அகன்தலை நாடே." (புறம்: கசுங)

"அறன் அறிந்த ஆற்றல் மறவராய அரசர் இருவரும் அழிந்தனர்; அவர்தம் வெண்கொற்றக் குடை வீழ்ந்தன; புகழ்பெற்ற போர் முரசு, முழக்கொழிந்தன; பதினெண் மொழி வழங்கும் பல்வேறு நாட்டுப் படைவீரர் எல்லாம், இனி இடம் இல்லை எனத் தொக்க அக் களத்தே, வென்று களங்கொள்ளுதற்கு உரிய வீரர் ஒருவரையும் ஒழிய விடாது, அனைவரையும் அழித்து அமர் அடங்கிற்று; ஆங்கு மடிந்தார் தம் மனைவியரும், பனிநீரில் மூழ்கிப் பச்சிலை தின்று வாழும் கைம்மை வாழ்வு கருதாராய்த் தம் கணவன்மாரோடு தாமும் ஒருங்கு மாய்ந்தனர்; தேவர்களும், தம் உலகு நிறைய விருந்தினரைப் பெற்றனர்! வெம்போர் ஆற்றி வீரப்புண்பெற்று மாண்ட வேந்தர்காள் உங்கள் புகழ் ஓங்குக"!

"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்,
தாமாய்ந் தனரே! குடைதுளங் கினவே!

உரைசால் சிறப்பின் முரைசு ஒழிந்தனவே!
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர
உடன் வீழ்ந்தன்றால் அமரே! பெண்டிரும்,
பாசடகு மிசையார்; பனிநீர் மூழ்கார்;
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே;
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவினோரும் ஆற்ற
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்து பெற்றனரால்பொலிக நும்புகழே!" (புறம்: சுஉ)

களம்பாடிப் பரிசில் பெற்றுக் களித்துச் செல்லும் விருப்புடன் வந்தவன் நான்; களிறு பெற்றுச் செல்ல எண்ணின் அவையெல்லாம் பெய்யும் பெருமழையைத் தாங்கி நிற்கும் மலைகளைப்போல், வீரர் ஏவிய அம்புகளைத் தாங்கி அழிந்து வீழ்ந்து விட்டன; கொடிஞ்சியொடு கூடிய நெடிய தேர்களைப் பெறலாம் என எண்ணின், காற்றெனக் கடிது ஓடும் குதிரைகள், களம் முழுதும் வளைத்து வளைத்து இழுத்து ஓடியதால், நிலை தளர்ந்து, வலியிழந்து, முறிந்து சிதறி நிலத்தே வீழ்ந்து அழிந்து விட்டன; கொய்யப் பெற்ற பிடரியினையுடைய குதிரைகளைக் கொடுக்கக் கொள்ளக் கருதின், வீரர் தம் வாள்தந்த புண்கள், உடலெலாம் விளங்க, காற்றின் இயக்கம் அற்ற கலங்கள் ஆடாது, அசையாது கடலிடை நிற்பதேபோல், குருதி வெள்ளத்தில் வீழ்ந்து விட்டன; இவ்வாறு, பெறுதற்காம் பொருள் எதையும் பெறமாட்டாமையால் உள்ளத்தே மகிழ்ச்சி அற்ற புலவர், வாழும் வகையறியாது வாடுவாராயினர்! அந்தோ! அவர் நிலை என்னே!" எனக் களத்தின் கொடுங்காட்சி கண்டு கண்ணீர்விட்டுப் புலம்புவர் கழாத்தலையார்:

"களிறு முகந்து பெயர்குவம் எனினே,
ஒளிறுமழை தவிர்க்கும் குன்றம் போலக்
கைம்மா எல்லாம் கணையிடத் தொலைந்தன;
கொடிஞ்சி நெடுந்தேர் முகக்குவ மெனினே,

கடும்பரி நன்மான் வாங்குவயின் ஒல்கி,
நெடும் பீடழிந்து நிலஞ்சேர்ந் தனவே;
கொய்சுவற் புரவி முகக்குவம் எனினே,
மெய்ந்நிறை வடுவொடு பெரும்பிறி தாகி
வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும்புனல் கூர்ந்தொழிந்தனவே: ஆங்க
முகவை இன்மையின், முகவை இன்றி
இரப்போர் இரங்கும் இன்னா வியன்களம்."

(புறம்: ௩௬௮)

பண்டைத் தமிழகத்தே நடந்த போர் பல ஆயினும், இவ்வாறு எதிர்த்த அரசர் இருவரும், அவர்தம் இருவர் படையும், ஒருங்கே அழிய முடிந்த இப் போர்க்கொடுமையினை, அப் போர் ஒன்றினும் காணல் இயலாது!

கழக வெளியீடு: ௭௬௩

சங்ககால அரசர் வரிசை - ௫

# பாண்டியர்

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Dec., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
I/140, BROADWAY, MADRAS-I.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1100.

# பதிப்புரை

முடியுடை வேந்தர் மூவருள், சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த பெருமை பாண்டிமன்னரைச் சார்ந்ததாகும். அவரால் தமிழகம் இன்றும் வீறுகொண்டு நிற்கின்றதென்றால், அது, மிகையாகாது. உலக அறநூலாகிய திருக்குறள் மதுரைத் தமிழ்ச்சங்கத்து அரங்கேறியதென்றால் அவர் பெருமையை அளப்பிட்டுரைக்க ஒல்லுங்கொல்?

இஃதன்றியும் அவர் கோல்முறை கோடாக் கொற்றவர்; கோவலனைக் கொன்ற பழிதீரத் தன் உயிரையே ஆணியாகக்கொண்டு வளைந்த கோலைச் செங்கோலாக நிமிர்த்திய அறமுறையும் பாண்டியர் பெருமையை விளக்கும் பான்மைத்து.

எல்லாவற்றானும் உயர்ந்த குடிப்பண்பினராகிய இப் பாண்டியர்தம் வரலாறு, இன்று நம் தமிழகத்தில் 'பாண்டியர்' என்னும் பெயரால் நூலாக மலர்கின்றது.

இதனைத் திரு. புலவர், கா. கோவிந்தன் அவர்கள் வரலாற்று நூலாக ஆக்கி உதவியுள்ளார்கள். இச்சீரிய நூல் 'சங்ககால அரசர் வரிசை'யில் மூன்றாவதாக நன்முறையில் அமைத்து வெளியிட்டுள்ளோம்.

நந்தமிழக மேன்மக்கள் இந்நூலை வாங்கிக் கற்றுப் பாண்டிவேந்தர் பண்பாட்டையும் மொழிப்பற்றையும் நாடெல்லாம் நலம்பெறப் பரப்புவித்து இன்புறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | அண்டர்மகன் குறுவழுதி | 14 |
| உ. | அறிவுடை நம்பி | 16 |
| ங. | ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் | 22 |
| ச. | இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் | 28 |
| ரு. | உக்கிரப் பெருவழுதி | 33 |
| ௬. | ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் | 35 |
| எ. | கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி | 33 |
| அ. | கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி | 42 |
| கூ. | கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி | 45 |
| க0. | கீரஞ்சாத்தன் | 50 |
| கக. | குறுவழுதியார் | 52 |
| கஉ. | கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி | 54 |
| கங. | சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் | 58 |
| கச. | தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் | 60 |
| கரு. | நம்பி நெடுஞ்செழியன் | 84 |
| க௬. | நல்வழுதி | 87 |
| கஎ. | நிலந்தருதிருவின் நெடியோன் | 89 |
| கஅ. | பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி | 92 |
| ககூ. | பொற்கைப் பாண்டியன் | 98 |
| உ0. | மதிவாணன் | 101 |
| உக. | மாலைமாறன் | 102 |
| உஉ. | மாறன்வழுதி | 103 |
| உங. | முடத்திருமாறன் | 104 |
| உச. | வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி | 106 |
| உரு. | வெற்றிவேற் செழியன் | 110 |

# பாண்டியர்

## தோற்றுவாய்

சிலம்பும், மேகலையும் சிறக்க அளித்த சேரர் கோவும், சாத்தனாரும், "தமிழகம்," எனப் பெயரிட்டு அழைக்கும் வடவேங்கடம் தென் குமரிகட்கு இடைப்பட்ட இந் நாட்டை, ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார், "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு," எனப் பெயரிட்டுப் போற்றுவதால், தமிழகம், மிகப் பழைய காலத்தி லிருந்தே சேர, சோழ, பாண்டிய மரபினரால் ஆளப்பட்டு வந்துளது என்பது புலனும். இப் பேரரசுகள் மூன்றும், கிழக்கே சீனப் பேரரசும், மேற்கே உரோமானியப் பேரரசும் சிறந்து விளங்கிய அக் காலத்திலேயே, அவற்றோ டொப்பச் சிறந்து விளங்கிய பழமையும், பெருமையும் உடையனவாகும்; இவ் வரசுகள் இன்ன காலத்தே தோன்றின என்றோ, இன்னரால் தோற்றுவிக்கப்பட்டன என்றோ அறுதியிட்டுக் கூறமாட்டாப் பழமை வாய்ந்தன; இவ் வரசுகளின் பழமை காண முற்பட்டார் அனைவரும், "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி," "படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வரும் குடிகள்," என்றே கூறி அமைவாராயினர். வடமொழி இராமாயண ஆசிரியர் வான்மீகியாராலும், அம் மொழிப் பேரிலக்கணப் பேராசிரியர் காத்தியாயனராலும், தங்கள் நூல்களில், சீரும், சிறப்பும்பெற்ற நாடுகளாக, இந் நாடுகள் கூறப்பட்டுள்ளன; இந்திய நாட்டின் பெரும்பகுதியினை வென்று ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட மவுரியப் பேரரசன் அசோகன், "என் ஆட்சியோடொத்த, என் ஆட்சிக்குட்படாப் பேரரசுகள், சேர, சோழ, பாண்டிய

அரசுகள்,'' எனப் பாராட்டியுள்ளான் எனின், இவ்வரசு களின் பழமை, பெருமைகளை மேலும் விளக்குதல் வேண்டுமோ ?

சேர, சோழ, பாண்டியர் மூவரும் ஒரு தாய்வயிற்றில் பிறந்தோர் எனவும், அவர்கள் தென்னாட்டில் நாகரிக வளர்ச்சிக்குத் தோன்றுமிடமாகிய தாமிரவருணி யாற்றின் கரையில், கொற்கையைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்து வந்தனர் எனவும், பின்னர், யாது காரணத்தாலோ, அவர்கள் தம்முள் பிரிந்தனர் எனவும், அவருள் பாண்டியர் ஆங்கேயே நிலைத்துவிட்டனராக, ஏனை இருவரும் முறையே மேற்கினும், வடக்கினும் சென்று தங்கள் தங்கள் பெயரால் தனியரசு அமைத்துக்கொண்டனர் எனவும் பழைய வரலாறுகள் கூறுகின்றன.

மூவேந்தர் நாடுகள் மூன்றும், சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என வழங்கப்பெறுதலோடு, அவை முறையே, "குடபுலம்,'' "குணபுலம்,'' "தென்புலம்,'' என அவை அமைந்துள்ள திசையானும் அழைக்கப்பெறும். இது, அந் நாடுகாவல் மேற்கொண்டாரை முறையே, "குடபுலம் காவலர் பெருமான்,'' "குணபுலம் காவலர் பெருமான்,'' "தென்புலம் காவலர் பெருமான்,'' எனப் பெயரிட்டுச் சிறுபாணாற்றுப்படை அழைப்பதால் புலனும். இவற்றுள், குடபுலம் என்பது, கொல்லிமலையை உள் அடக்கிய தமிழகத்தின் மேல்பால் நிலப்பகுதியும், குணபுலம் என்பது, அக் கொல்லிமலைக்கும், அம் மலையினின்று தோன்றி ஓடும் கரைபோட்டா ணாற்றிற்கும் கீழ்ப்பாலுள்ள நிலப்பகுதியும், தென்புலம் என்பது, பழனிமலைத் தொடர்க்குத் தெற்கணுள்ள நிலப்பகுதியுமாம்.

சீதையைத் தேடிச்செல்லும் வானர வீரர்பால், தெற்கே கபாடபுரம் என்றொரு நகர் உண்டு; அதன் வாயிற் கதவுகள் பொன்னும், முத்தும் வைத்திழைக்கப் பெற்ற வனப்புடையன என்று கூறினான் சுக்கிரீவன் என வான்மீக இராமாயணம் கூறுவதும், குமரியாடும் குறிப் போடு தென்னாடு போந்த அர்ச்சுனன், பாண்டியன் மகளை

மணந்து மாண்புற்றான் என வடமொழிப் பாரதம் கூறு வதும், இலங்கையின் முதல் அரசனாய விஜயன், பாண்டி யன் மகளை மணந்து பெற்றமகன் பாண்டு வம்ச தேவன் எனப் பெயர் பெற்றான் என இலங்கை வரலாற்று நூலாய மகாவம்சம் கூறுவதும், உரோமானியப் பேரரசனாக கி.மு. உ0-ல் விளங்கிய அகஸ்டஸ் சீஸர்பால், பாண்டியன் அரசி யல் தூதரை அனுப்பியிருந்தான் என அந்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதும், உரோமர்கள் வழங்கிய செப்புக் காசுகள் கணக்கற்றன, மதுரையைச் சூழக் கிடைப்பதும் பாண்டிநாட்டின் பழமையையும், பெருமையையும் நிலை நாட்டுவனவாம்.

மூவேந்தருள், சேரர்க்கும், சோழர்க்கும் இல் லாத் தனிச் சிறப்பொன்று, தென்னவராய பாண்டி யர்க்குரித்து எனப் புலவர்கள் பாராட்டுவர்; நிலவளமும், நீர்வளமும்பெற்று, அவற்றின் துணையாலாம் நெல்வளமும் பெறுதல், எல்லா நாட்டிற்கும் உண்டு; நாடனைத்திற்கும் சிறப்பளிக்கும், அவ் வளங்களையே தாமும் பெறுதல் தமக் குப் பெருமை தருவதாகாது என உணர்ந்த பாண்டியர், தம் கடல்படு பொருளாம் முத்தையும், பகைவரைப் பணிய வைத்துத் திறைகொள்ளும் பேராற்றல் வாய்ந்த தம் மலையிற் பிறக்கும் சந்தனத்தையும் அழகுற அணிந்து, அவனி போற்ற வாழ்வர் எனப் புலவர்கள் பாராட்டுவ துணர்க

"நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய என
வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ் குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே." (புறம்: ருஅ)

"தன்கடல் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிறை கொடுக்கும் துப்பின் தன்மலைத்
தெறலரும் மரபின் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன்." (அகம்: கரு)

சேரர்க்கும், சோழர்க்கும் இல்லாத் தனிச் சிறப்புற்ற தென்னவர், அவ் விருவர்க்கும் இல்லாப் பெரும் பகை யொன்றையும் பெற்றிருந்தனர்; பாண்டி நாட்டார், மக்கட் பகையோடு, கடல்கோள் போலும் இயற்கைப்பகை யோடும் போராட வேண்டியவராயினர்; காய்சின வழுதி முதலாக் கடுங்கோன் ஈறாகவுள்ள பாண்டியர் எண்பத் தொன்பதின்மர் இருந்து ஆட்சி புரிந்ததும், முதற்சங்கம் இடம் பெற்றதுமாய தென்மதுரையைத் தலைநகராக் கொண்ட அவர் நாடு, கடலால் அழிவுற்றது முதற்கண்; இக் கடல்கோளால் பாண்டியர் இழந்த நாடுகள், பஃறுளி என்னும் ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடைப் பட்ட ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண காரை நாடும், ஏழ்குறும்பனை நாடும், குமரி கொல்லம் முதலாம் பன்மலை நாடும், உள்ளடக்கிய பெருநிலப் பரப் பாம் என்பர் அடியார்க்கு நல்லார். (சிலம்பு: வேனில்: க-உ; உரை) இக் கடல்கோட்குப் பின்னர்ச் சிறிதுவடக்கே போந்து கபாடபுரத்தைத் தலைநகராக் கொண்டு ஆண்டு வந்தனர்; 'வெண்தேர்ச் செழியன் முதலாக, முடத்திரு மாறன் ஈறாகவுள்ள ஐம்பத்தொன்பதின்மர் ஆட்சி புரிந் தனர்; ஆனால், அந்தோ! அந் நாடும் கடலால் அழிவுற்றது; இம் முறை, பஃறுளியாறும், பன்மலை அடுக்கிணையுடைய குமரி மலையும் அழிவுற்றன' என்பர், இளங்கோவடிகள்:

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள."

(சிலம்பு, கக : கக-உ0)

இவ்வாறு தெற்கண் நாடு பல இழந்த பாண்டியர், அதனால் மனங்குன்றினா ரல்லர்; அவர்கள் ஆண்டு எவ்வளவு நாடுகளை இழந்தனரோ, அவ்வளவு நாடுகளைத் தம் நாட்டின் வட பகுதிக்கண் வென்று ஆட்சி புரிவா ராயினர்; இறுதியாகக், கூடல் எனும் பெயர் பூண்ட இன்றைய மதுரையைத் தலைநகராகக் கொண்டு அவர் கண்டநாடே இற்றைநாள்வரை அழிவுற்றிலது; ஆனால் அந்தோ! அந் நாடு கண்ட அவர் அரசு அழிந்துவிட்டது.

இவ்வாறு பழமையான் பாடுற்ற பாண்டிநாடு, வளம் பலபெற்று வனப்புமிகு வாழ்வும் உடையதாகும்; பாண்டி நாட்டில் மழை பொய்த்தல் இல்லை; வேண்டும் காலத்தே பெய்து, அந் நாட்டுப் பல்வேறு தொழில்களும் நன்கு நடைபெறுதற்காம் நற்றுணையாம் நீர்வளம் நிறையப் பெற்ற அந் நாட்டு நிலங்கள், தங்கண் விதைத்த ஒன்று ஆயிரமாக விளையும் வளம் உடையதாகும்; இவ்வாறு வளங்கொழிக்கும் அந் நாட்டார், பசியறியாராயினர்; பகையும், பிணியும் தோன்றத் துணைபுரியும் பசி அறவே, அப் பகையும், பிணியும் அந் நாட்டைவிட்டு அகன்று வாழ்ந்தன; அதனால், மக்களும், மாவும் வளமுற்று வனப்புமிகு உடலமைப் புடையராயினர்; உண்ண உண்ணக் குறையா உணவு வளமும், காணக் காணக் குறையாக் காட்சி இன்பமும் உடையவாயின அந் நாட்டுப் பேரூர்த் தெருக்கள்; இவ்வாறு, வேண்டுவார்க்கு வேண்டுவ எல்லாம் கிடைக்கும் வகை நிலைபெறவே, அந்நாட்டுக் கொடுவிலங்கு களும், பிற உயிர்க்குத் தீங்குதரும் தம் கொடுமை மறந்து வாழலாயின; கரடிகள், புற்றினை அகழ்ந்து, ஆண்டுவாழ் சிதல்களைச் சிதைத்துண்ணு; புலிகள், மானினங்களை மருட்டுவதில; நீர்வாழ் முதலையும், நிலத்தூரும் பாம்பும் பிறர்க்கு ஊறு செய்வதில; இவையேயல்லால், உருமும், சூரும்போலும் கொடுமை செய்யும் இயற்கைகளும் மக்கட் குத் துயர் தருவதில:

> "மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்கத்,
> தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய,
> நிலனும், மரனும் பயனெதிர்பு நந்த
> நோயி கந்து நோக்கு விளங்க
> ....................................
> கண்டு தண்டாக் கட்கின் பத்து
> உண்டு தண்டா மிகுவளத்தான்
> உயர் பூரிமவிழுத் தெருவு." (மதுரைக்காஞ்சி: க0-அ)

> "கோள்வல் உளியமும் கொடும் புற்று அகழா;
> வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா;

அரவும், சுரும், இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்த வர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு."
(சிலம்பு, கங: ரு-க)

மாநிலம் போற்றும் மாண்புடைத்தாம் பாண்டியர் தலைநகராம் மதுரை, சங்க இலக்கியங்களுள், கூடல் என்ற பெயரினாலேயே பெரிதும் வழங்கப்பெறும்; மதுரை நோக்கிச் செல்வார், அம் மதுரையைக் காணலாகாச் சேய்மைக்கண் செல்லும்போதே, மதுரை அணித்தாயிற்று என்பதை அறிவர். அகில், குங்குமம், நாவி, சந்தனம், கத்தூரி முதலாம் மணங்களை வாரிக்கொண்டும், கழுநீர், சண்பகம், குருக்கத்தி, மல்லிகை, முல்லை முதலாம் மலர்களின் மணத்தில் திளைத்தும், அடுக்களைகளில் எழும் தாளிப்புப் புகை, அங்காடிகளில் அப்பம் சுடுவாரிடத்தே எழும் அப்பப்புகை, மகளிரும், மைந்தரும், தம் துகிலீரம் போக எழுப்பும் அகிற்புகை, வேள்விச் சாலைதொறும் எழும் ஆகுதிப் புகையாய இவற்றையும் உடன்கொண்டு பல்வேறு மணங்கமழ வரும் தென்றலை அறிந்தவுடனே, மதுரை அணித்தாயிற்று என்பதை யாவரும் அறிவர்:

"காழகிற் சாந்தம், கமழ்பூங் குங்குமம்,
நாவிக் குழம்பு, நலங்கொள் தேய்வை,
மான்மதச் சாந்தம், மணங்கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ் சேறுடி, ஆங்குத்
தாதுசேர் கழுநீர், சண்பகக் கோதையொடு
மாதவி மல்லிகை, மனைவளர் முல்லைப்
போதவிழ் தொடையல் பூவணை பொருந்தி,
அட்டிற் புகையும், அகலங் காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும், மகளிரும் மாடத் தெடுத்த
அந்தீம் புகையும், ஆகுதிப் புகையும்
பல்வேறு பூம்புகை அளைஇ
...................................
மதுரைத் தென்றல் வந்தது காணீர்,
நனி சேய்த் தன்று அவன் திருமலி மூதூர்."
(சிலம்பு, கங: ககரு-நக)

மதுரையில், கடவுளர்க் கமைந்த கோயில்கள், அரசன் உறையும் அரண்மனை ஆகிய இவ் விடங்களில், எழும் முரசொலியும், அவ்வூர் வாழ் அந்தணர் ஓதும் அருமறையொலியும், மாதவர் ஓதும் மறையொலியும், வேந்தன் அளித்த விருதுகள் பெற்ற வீரர்தம் வெற்றிப் பேரொலியும், போரில் கொண்டனவும், காட்டில் கைக்கொண்டனவும் ஆய களிறுகளின் பிளிறொலியும், பந்திகளில் நிற்கும் பரிகளின் முழக்கொலியும், பொருநர் கொட்டும் கிணையொலியும் ஒன்றுகூடிக் கடல் ஒலித்தாற்போன்று பேரொலி செய்து, வருவாரைச் செய்மைக்கண்ணேயே வரவேற்று நிற்கும் :

"அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்,
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்,
பால்கெழு சிறப்பின் பல்லியம் சிறந்த,
காலை முரசக் கனைகுரல் ஓதையும்,
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்,
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்,
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்,
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்,
பணைநிலைப்புரவி ஆலும் ஓதையும்,
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
கார்க்கடல் ஒலியிற் கலிகெழு கூடல்
ஆர்ப்பொலி எதிர்கொள."

(சிலம்பு, கங : கஙஎ-ஙo)

மதுரை, ஒரு பேரரசின் தலைநகராம் பெருமையுடைத்து ஆதலின், அந்நகர்க்குப் பகைவரான் அழிவுண்டாதலும் கூடும் ; அவ்வாறு அஃது அழிவுறாவண்ணம், அதைக் காக்கவல்ல அரண், மதுரையைச் சூழ அமையப் பெற்றிருந்தது ; காவற் காட்டையும், அகழியையும், மதிலையும் அமைத்து அரண்செய்த அவர்கள், காவற்காட்டையும், அகழியையும் கடந்துவந்த பகைவர், மதிலைக்

கடக்கலாகாவாறு, அரிய பொறிகள் பலவற்றை அம் மதிற்கண் அமைத்து வைத்தனர்; வளைந்து தானே எய்யும் வில், கருவிரல் குரங்குபோலும் பொறி, கல்லுமிழ் கவண், காய்ந்து இறைத்துச் சேர்ந்தாரை வருத்தும் நெய், செம்புருக்குமிடா, இரும்புருக்கும் உலைகள், கல்லிட்டு வைக்கும் கூடை, மதிலைப் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் தூண்டில், கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி, உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் ஆண்டலைப் புட்பொறி, அடித்துத் தள்ளும் இருப்புக் கவை, கழுக்கோல், அம்புக்கட்டு, ஏவறைகள், ஐயவித்துலாம், மதிலைப் பற்றுவார் கையைப் பொதுக்கும் ஊசி, பகைவர் கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பறவைபோலும் பொறி, பகைவர் உடலைக் கோட்டால் கிழிக்கும் பன்றிப் பொறி, பணைபோலும் பொறி, வாயிற் கதவுக்கு வலியாக உள்ளே விட்டுவைக்கும் எழுவும் சீப்பும், கணையமரம், கோல், குந்தம், வேல், இவைபோல்வன பிறவெல்லாம், அம் மதிலகத்தே அமைக்கப்பெற்றுள அரும் பொறிகளாம்:

> 'மிளையும், கிடங்கும், வளைவிற் பொறியும்,
> கருவிரல் ஊகமும், கல்லுமிழ் கவணும்,
> பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்,
> காய்பொன் உலையும், கல்லிடு கூடையும்
> தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை அடுப்பும்,
> கவையும், கழுவும், புதையும், புழையும்
> ஐயவித் துலாமும், கைபெயர் ஊசியும்
> சென்றெறி சிரலும், பன்றியும், பணையும்
> எழுவும், சீப்பும், முழுவிறற் கணையமும்,
> கோலும், குந்தமும், வேலும் பிறவும்
> ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
> வாயில்." (சிலம்பு, கரு : உ0எ-கஅ)

பகைவர் படைகொண்டு வருதற்குமுன்னர், அதற்காம் இடமும், காலமும், ஏற்ற வலியும் ஆராய்தற்பொருட்டு ஒற்றர் பலரை ஊரகத்தே அனுப்புதல் செய்வர்; ஆதலின், அத்தகையார் எவரும் உட்புகாவண்

ணம் காத்தலைக் காவலர் கடமையாகக் கொள்ளுதல்வேண்டும்; ஆதலின், மதுரையைச் சூழஉள்ள மதிலகத்து வாயில்களதோறும், வாட் போர்வல்ல யவன வீரர் பலர் நின்று காப்பர்; அவரைக் கடந்து உட்புகல் அரிதினும் அரிதாம்.

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு."
(சிலம்பு, கசு : சுசு-சுஎ

மதுரை, பேரரசின் தலைநகராம் பெருமையோடு, வளங் கொழிக்கும் வாணிபத்தாலாம் வனப்பும் உடையது; மதுரை, நாளங்காடி, அல்லங்காடி எனும் இருபெரும் அங்காடிகளைப் பெற்றிருந்தது. அவற்றுள் நாளங்காடி, மேகங்கள் படிந்து முகத்தலால் குறைதலும், ஆறுகள் நிறைந்து பாய்தலால் மிகுதலும் இன்றி ஒரு தன்மைத் தாய் விளங்கும் முந்நீரைப்போன்று, பலரும் போந்து, பல காலும் கொள்ளுதலால் குறைதலும், பலரும் மேன் மேலும் கொண்டுவரக் கொண்டுவர மிகுதலும் இன்றி, என்றும் ஒரு தன்மைத்தாய்க் குவிந்துகிடக்கும் பெரும் பொருளைப் பெற்றிருக்கும்.

"மழைகொளக் குறையாது, புனல்புக மிகாது
கரைபொருது இரங்கும் முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது, தரத்தர மிகாது
..........................................
நாளங் காடி நனந்தலைக் கம்பலை."
(மதுரைக்காஞ்சி : சஉச-நடO)

மதுரைப் பெருங் கடைவீதி, மக்கள் கண்டு மருண்டு மகிழ்தற்காம் வளமும், வனப்பும் உடையது என்ப; அக் கடைவீதியில், காகபாதம் முதலாம் குற்றத்தின் நீங்கி, ஐந்து குணங்களும், நால்வேறு நிறங்களும் கொண்ட வயிரம், ஏகை, மாலை, இருள் எனும் குற்றம் நீங்கிய மரகதம், பதுமம், நீலம், விந்தம், படிதம் எனும் நால்வகை மாணிக்கம், மாசறத் தெளிந்த பொன்போலும் நிறங்

கொண்ட புருடராகம், தேன் துளிபோலும் தோற்ற முடைய வயிடூரியம், தெளிந்த இருள்போலும் நீலம், மஞ்ச ளும், சிவப்பும் மாறி மாறிக் காட்டும் கோமேதகம், காற் றேறு முதலாம் குற்றத்தின் நீங்கி, வெள்ளி அங்காரகன் போல் வெண்மையும், செம்மையும் காட்டும் முத்து, கருப் பத்தே துளைப்படல் முதலாம் மூவகைக் குற்றத்தின் நீங்கிய பவளம், ஆய நவமணிகள் ஒருபால் விற்கப்படும். (சிலம்பு, கச : கஅ0-உ00).

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் எனும் நால்வகைப் பொன்களுள், இன்னது, ஈண்டுளது எனக் கொடிகட்டிக் காட்டி விற்கும் பொன்வணிகர் ஒருபால் இருந்து தொழில்புரிவர் :

"சாத ரூபம், கிளிச்சிறை, ஆடகம்,
சாம்பூ நதமென ஓங்கிய கொள்கையின்
பொலந்தெரி மாக்கள் கலங்கஞர் ஒழித்து ஆங்கு
இலங்கு கொடி எடுக்கும் நலங்கிளர் வீதி."

(சிலம்பு, கச : உ0க-ச)

பருத்தி நூலினும், எலி மயிரினும், பட்டு நூலினும் வகைக்கு நூறெனு வகை வகையாக நெய்யப்பெற்ற ஆடை வகைகளை அடுக்கிவைத்து விற்கும் வணிகர் ஒருபால் இருந்து தொழில் புரிவர் :

"நூலினும், மயிரினும், நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்."

(சிலம்பு, கச : உ0ரு-எ)

மணம்மிகு மலர்களைப் பூந்தட்டிலே இட்டுவைத்து விற்பார் சிலர் ; ஒன்றற்கொன்று மாறுபட்ட மலர்மாலை களை விரித்துவைத்து விற்பார் சிலர் ; பொன்னும் நவமணி யும், சந்தனமும், கற்பூரமும் முதலாம் பொருள்களைப் புழுகிலும், பனிநீரிலும் நனையவைத்து இடித்த பன்னிறச் சுண்ணங்களை விற்பார் சிலர் ; பாக்கும், வெற்றிலையும், சங்கு சுட்ட சுண்ணாம்பும் விற்பார் சிலர் ;

"பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்;
பலவகை விரித்த எதிர்பூங் கோதையர்;
பலர்தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்;
தகைசெய் தீஞ்சேற்று இன்னீர்ப் பசுங்காய்,
நீடுகொடி இலையினர்; கோடுசுடு நூற்றினர்."
(மதுரைக்காஞ்சி : 397-401)

இவ்வாறு பல்வேறு வாணிகம் புரிவோர், மலையிலும், நிலத்திலும், நீரிலும், பிற இடத்திலும் உண்டாய பொருள்களை எல்லாம் ஒருங்கு தொகுத்து, வைத்துக்கொண்டு, அவற்றிற்கு ஈடாக, பல்வேறு மணிகளையும், முத்துக்களையும், பொன்னையும் விலையாகக்கொண்டுவிற்றுப் பொருள் குவிப்பர் :

"மலையவும், நிலத்தவும், நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நர்."
(மதுரைக்காஞ்சி : 504-6)

மதுரை மாநகர், இவ்வாறு மாநிதிபெற்ற பெரு நகராதலின், ஆண்டு அப் பொருளைக் கவரும் கருத்துடையராய கள்வர் பலர் வாழ்தலும் கூடும்; ஆகவே, அவரை அறிந்து ஒறுக்கத்தக்க ஊர்க்காவலர் பலரையும் கொண்டிருந்தது அப் பேரூர்; பொருள்களைக் கவரும் கருத்துடையராய் விழித்தகண் இமைக்குமளவில் மறையும் கள்வர் ஒதுங்கும் இடத்தைக், களிற்றிரை தேடித்திரியும் கொடும்புலிபோல் அறிந்துகொள்ளவல்ல காவலர் பலர் அந் நகர்க்கண் வாழ்ந்திருந்தனர்; அன்னார், துயில் மறந்த கண்ணுடையார்; அஞ்சாமை நின்ற உளம் உடையவர்; அத்தொழில் வல்லார் புகழ்ந்த ஆண்மையுடையவர்; களவு நூலினும், காப்பு நூலினும் தேர்ந்த அறிவுடையவர்; குறி தவறாது அம்பெய்யும் ஆற்றல் உடையவர்; மழைபெய்யும் நள்ளிரவினும், மடிந்திராது பணிபுரியும் மாண்புடையவர்; இத் தகையார் காவல் உண்மையால், களவு இன்றிச் சிறந்த காவலையுடைத்து மதுரை மாநகர் :

"கலன் நசைஇக் கொட்கும்
கண்மா றாடவர் ஒடுக்கம் ஒற்றி,
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர்; அஞ்சாக் கொள்கையர்;
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்; செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண்தேர்ச்சி
ஊர் காப்பாளர்; ஊக்கருங் கணையினர்;
தேர்வழங்கு தெருவின் நீர்திரண்டு ஒழுக
மழையமைந் தற்ற அரைநாள் அமயமும்
அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்."

(மதுரைக்காஞ்சி : ௬௪௧-௫௦)

இவ்வாறு ஆட்சிச் சிறப்பாலும், அரும்பொருள் உடைமையாலும் புகழ்பெற்ற மதுரைப் பேரூர், புலவர் பலர் வாழ்வாலும் சிறப்புடையதாகும்; மதுரை, சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த தனிச் சிறப்புடையதாகலின், ஆண்டு நூற்றிற்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள் கூடித் தமிழாராய்ந்து வந்தனர்; "உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறை," எனத் திருக்கோவையார் கூறுவதும் காண்க.

மதுரையை அடுத்துச் சிறப்புடைய பாண்டி நாட்டுப் பேரூர் கொற்கை. "முத்துடைத்து," என்ற பெருமையைப் பாண்டி நாட்டிற்குத் தேடித்தந்த சிறப்புடையது கொற்கை; கொற்கை, செல்வம் கொழிக்கும் சிறப்புடைத்தாதல் அறிந்த பாண்டியர், அந் நகர்க்காவலை அரிதின் பேணிவந்தனர்; கொற்கைத் துறையும், அத்துறை முத்தும் உரோமர் முதலாம் மேனாட்டுமக்கள் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளன; கடலுள் மூழ்கி முத்தெடுக்கும் பணியினைப் பாண்டியர் தம் காவற் கைதிகளைக்கொண்டும் மேற்கொண்டு வந்தனர் எனக் கூறுவர் மேனாட்டு அறிஞர்கள்; "பாண்டியர் அறம் பிறழாது காக்கும் கொற்கைத் துறைமுத்து," என்றும், "திரை கொணர்ந்தொதுக்கும் கொற்கைத்துறை முத்துக்கள், ஆண்டு வரும் குதிரைகளின் கால்களைச் சிதைத்து மேற்செல்லவொட்

டாமல் தடுக்கும்," என்றும், "புகழ்மிக்க கொற்கைக்கண், முத்தும், வலம்புரியும் கலந்து காட்சி தரும்," என்றும், "கடலுள் மூழ்கிக்கொண்ட முத்துச் சிப்பிகளைக் கள்விலையாகத் தரும் கவின்மிகு வளமுடையது கொற்கை," என்றும், "முத்தெடுக்கக் கடலுள் மூழ்கிய பரதவர், ஆண்டுறை சுறு மீன்களோடு போரிட்டுக் கொன்று போக்கி, முத்துக்களை வாரிக்கொண்டு வருங்கால், கொற்கைத் துறைக்கண் வாழ்வார், சங்கு முழக்கி வரவேற்பர்," என்றும் புலவர்கள் பாராட்டுவர் :

"மறப் போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்து"

"இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர் நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை."

"விறற் போர்ப் பாண்டியன்,
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தம்."

"பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்நொடை கூட்டும்
பேரிசைக் கொற்கை."

"இலங்கிரும் பரப்பின் எறிசுறு நீக்கி
வலம்புரி மூழ்கிய வான் திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்."

(அகம்: உஎ, கஉ0, உ0க, உகக, ஙுுு0)

இவ்வாறு, பழமையால், பெருமையால், மொழிவளர் சிறப்பால் பாடுற்ற பாண்டிநாட்டைக் கடைச்சங்க காலத்தே இருந்து அரசாண்ட அரசர் இருபத்தைவர் வரலாற்றை, அக்காலப் புலவர்கள் அளித்த பாக்களின் துணைகொண்டு இயன்ற அளவு எடுத்துரைப்பதே இந்நூல்.

# க. அண்டர்மகன் குறுவழுதியார்

தமிழரசர் மூவருள், சேரரைக் குறிக்க, இரும்பொறை, கோதை, குட்டுவன், ஆதன் முதலாய பெயர்கள் வழங்குவதைப் போலவும், சோழரைக் குறிக்க, கிள்ளி, சென்னி, வளவன் முதலாய பெயர்கள் வழங்குவதைப் போலவும், பாண்டியரைக் குறிக்கும் பெயர்களாக, செழியன், மாறன், வழுதி முதலாய பெயர்கள் வழங்கும். ஆகவே, வழுதியார் எனும் பெயர் பூண்டு விளங்கும் இவர், பாண்டியர் வழிவந்தவராவர் என்பது முடிபாம். குறுவழுதியார் எனும் பெயருடையார், பிறிதொருவரும் உளராகவே, அவரின் வேறு அறிதற்கு, இவர் அண்டர்மகன் குறுவழுதியார் என, அழைக்கப் பெற்றுளார்; அண்டர் என்பது ஆயரைக் குறிக்க வரும் பெயராம். "அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர், மரம் செல மிதித்த மாஅல்" (அகம்: ருக.) "அண்டர் பல்லா பயந்த நெய்" (குறுந்: உ௧௦.) என்புழி அண்டர், அப் பொருட்டாதல் அறிக. ஆயர்குடி, பாண்டியர் குடியோடு ஒப்பத்தோன்றிய பழமையும், பெருமையும் உடையது எனக் கூறுவர் சோழன் நல்லுருத்திரனார்: "புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை, வலியினான் வணக்கிய வாடாச் சீர்த்தென்னவன், தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத்து ஆயர்" (முல்லைக் கலி: ச.) அவ்வுறவுடைமையால் போலும், இவர் அண்டர்மகன் குறுவழுதியார் என அழைக்கப் பெற்றுளார்; அண்டர்மகன் குறுவழுதியார் ஆண்ட நாடு இது; அவர் காலத்து வாழ்ந்த அரசர் இன்னார் என்ற செய்தி எதுவும் தெரிந்திலது; இவர் வரலாறாக நாம் அறியக்கூடியதெல்லாம், அவரோர் அருந்தமிழ்ப் புலவர் என்பது மட்டுமே; குறுந்தொகை, நெடுந்தொகை, புறநானூறு ஆகிய மூன்றினும், இவர் பெயரால் ஒவ்வொரு பாட்டு இடம் பெற்றுளது.

அரசனொருவனிடத்தில் அழகிற்சிறந்த மகளொருத்தி உளள் என அறிந்த பிற அரசர்கள், அம் மகளை மணஞ் செய்து தருமாறு வேண்டுவர்; அவ்வரசர் எவரும் தம் மக

ளுக்கு ஏற்றவராகார் என உணர்ந்த அவள் தந்தையும், அண்ணனும், அவர்க்கு அவளை மணஞ்செய்து தர மறுப்பர்; அவர் மறுப்பதறிந்து சினங்கொண்ட அரசர்கள், அவள் நாட்டின்மீது படையொடுசென்று, அவள் உற்றார் பெற்றோரையும், அவள் ஊரையும் அழித்து, அவளை வலிதிற் பெற முனைவர்; அவ்வாறு பகைத்து வந்தாரை, அவள் தந்தையும் தமரும் எதிர்த்துப் போரிட்டு, வென்று விரட்டுவர். பழந்தமிழர்களிடையே கண்ட நாகரிகம் இது; தம் மகளைத் தகவிலார்க்குத் தர மறுக்கும் தமிழன் உள்ளத்தின் விழைவால் விளையும் இந்த நிகழ்ச்சியை மகட்பாற் காஞ்சி எனப் பெயரிட்டுப் புலவர்கள் பாடிப் பாராட்டுவர். அத்தகைய மகட்பாற் காஞ்சித்துறை தழுவிய பாட்டொன்றைப் பாடி, தமிழர்தம் வீரமும், மானமும் விளங்கத் துணைபுரிந்துள்ளார் :

“பசிதீர் நிலை அறியும் அறிவுற்றாயல்லை; ஆகவே இன்னும் சிறிது உண்” எனக்கூறி, மகள் வாயில் பாற்கிண்ணத்தை வைத்து உண்பிக்கும் அன்புடையள் தாய்; நிறையக் கற்றும், யான் கற்றன அத்துணைப் பெரிதன்று’ எனக் கூறும் பண்பாடும், வல்லாண்மையும் உடையனாகிய உடன் பிறந்தான், வேலேந்திப் போரிடுவதில் வல்லனவன்; ஆகவே, பகைவரொடு போரிட்டு அழிவார் அழியவும், அழியாது உயிர் பெற்றார், தம்மை வரவேற்றுப் பேணுவார் எவரையும் பெறாமல் அழியவும் பெருங் கேட்டைத் தரும் இவள் பேரழகு” என்ற பொருள் பொதிந்த அவர் பாட்டு, அக் கால வீரர் இயல்பை விளக்கி நிற்றல் உணர்க.

“பிறங்கிலை; இனி, உளபால், என மடுத்தலின்
ஈன்ற தாயோ வேண்டாள் அல்லள் :
‘கல்வி என்?’ என்னும் வல்லாண் சிறுஅன்
ஒள்வேல் நல்லன்; அது வா யாகுதல்;
அழிந்தோர் அழிய, ஒழிந்தோர், ஒக்கல்
பேணுநர்ப் பெறாஅது விளியும்
புன்தலைப் பெரும்பாழ் செயும் இவள் நலனே.”

(புறம்: ங௨௯)

## உ. அறிவுடை நம்பி

பாண்டியன் அறிவுடை நம்பி என, இவன் பெயர் ஏடுகளில் எழுதப் பெற்றுளது ஒன்றே, இவன் பாண்டியர் வழி வந்தவன் என்பதை அறிவிக்கிறது; ஆடவரிற் சிறந்தானை நம்பி என்றலும், பெண்டிரிற் சிறந்தாளை நங்கை என்றலும் தமிழ்நூல் மரபு ஆதலாலும், அறிவுடை என்ற அடை இவன் பெயர் முன் இடம்பெற்றுள்ளமையாலும், பாண்டியன் அறிவுடை நம்பி, ஆடவரிற் சிறந்தவன், அறிவால் நிறைந்தவன் என்று கொள்க.

அறிவுடை நம்பி, நாட்டின் தேவையை நன்கு உணர்ந்த நல்லரசனாவன்; நாடாட்சிக்கு வேண்டும் நல்லறிவை, அறிந்தார்வாய்க் கேட்கும், அவாவுடையனாவன். 'புதல்வர்ப் பேறு பொருட்கேடு; ஆகவே, புதல்வர்ப் பேற்றினைப் போற்றுதொழிக' எனக் கூறும் இக்காலம்போலல்லாமல், மக்கட்பேறு, மாநிதிப் பேற்றினும் மாண்புடைத்து; அப் பேற்றினைப் பெறுதல் மாநிலத்தார் அனைவர்க்கும் கடனாம்; ஆகவே, போர்க்களம் புகும் வீரருள், அப்பேற்றினைப் பெறாதார் உளரேல், அவர் அப்பேற்றினைப் பெறுவான் வேண்டிப் போர்க்களம் புகுதல் ஒழிவாராக'—'பொன் போற் புதல்வர்ப் பெறாஅதீரும், எம அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்'—எனக் கூறி, மக்கட் பேற்றினை மாண்புடைச் செல்வமாப் போற்றிய காலம் சங்க காலம்:

> "இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
> மறுமை உலகமும் மறுவின்று எய்துப
> செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
> சிறுவர்ப் பயந்த செம்மலோர்." (அகம்: ௬௬)

> "பெறுமவற்றுள், யாம் அறிவது இல்லை, அறிவு அறிந்த
> மக்கட் பேறு அல்ல பிற." (குறள்: ௬௧)

என மக்கட் பேற்றின் மாண்பினை அவர் போற்றுவது அறிக. ஊர்வாழ் மக்களினும், ஊராள் அரசர் மாட்டு இவ்

அறிவு பொருந்தி யிருத்தல் வேண்டும் என்பதை உணர்ந்த வன் அறிவுடை நம்பி. "பல கோடி செல்வத்தைக் குவித்து வைத்து, அச் செல்வத்துப் பயனும் பலரோடு இருந்து பகுத்து உண்ணும் பெருவாழ்வு பெற்ற மிகப் பெரிய செல் வர்க்கு, மக்கட்பேறு இன்றாயின், அவர்தம் பெரு வாழ்வு, பயனுடைப் பெருவாழ்வெனப் போற்றப்படாது, பயனிலா வாழ்வெனப் பழித்தே உரைக்கப்படும்" என, மக்கட்பேற் றின் மாண்பினை மாநிலம் அறியக்கூறிய அறிவுடை நம்பி, "மெல்ல மெல்ல அடி வைத்துக் குறுகக் குறுக நடந்து சென்று, தம் சிறிய கைகளைக் கலத்துள் இட்டு, உணவை எடுத்துத் தரையில் இட்டும், அதைத் தாமே தோண்டிப் பிசைந்தும், தம் வாயில் இட்டுக்கவ்வியும், தம் இருகைகளை யும் ஒருங்கிட்டுத் துழாவியும், வாரி உடலெலாம் பூசிக் கொண்டும் பெற்றோர்க்குப் பேரின்பம் தருதலோடு, அவ் வின்பம் கண்டு மகிழும் அவர் தம் அறிவையும். மயக்கும் மக்கள் நலத்தைக் கண்ணாரக் கண்டு களிமகிழ் வெய்தியு முள்ளார்.

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வ ராயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே." (புறம்: கஅஅ)

பெரும் புலவனும், பேரரசனுமாய்த் திகழ்ந்த பாண் டியன் அறிவுடை நம்பிபால், பிசிராந்தையார் என்ற அந் நாட்டுப் புலவர் சென்றிருந்தார் ஒருநாள்; புலவனும், புலவனும் கூடியவழி, பொருள்நிறை சொல்லாடற்குக் குறையுண்டோ? பிசிராந்தையார் புலவரே; ஆதலின் அவர் எப் பொருளையும் விரும்புவர்; ஆனால், அறிவுடை நம்பியோ, புலவனாதலேயன்றி, ஊராளும் உரிமையுற்ற அரசனுமாவன்; ஆகவே, அவன் அரசியல்தொடர்புடைப் பொருளையே பெரிதும் விரும்புவன். அதனால், அவர்கள்

அன்று ஆய்ந்த பொருள் அரசன, குடிமக்கள்பால் கொள்ளும் வரியினைப் பற்றியதாயிற்று ; பிசிராந்தையார், அது குறித்துத் தாம் கொள்ளும் அரிய கருத்தினை அழகிய பாவொன்றின் வழியே, அணிபெறக் கூறினர் :

"விளைநிலம், மாஅளவு மிகச் சிறிது என்றாலும், அதையும் முறையாகப் பயிரிட்டு, அதில் விளையும் உணவுப் பொருளை, நாள்தோறும் இவ்வளவுதான் எனக் கணக்கிட்டுத் தந்துவந்தால், அச்சிறு நிலத்தில் விளைந்த உணவே, யானைக்குப் பல நாளைய உணவாய்ப் பயன்பெறும். பல வேலியளவு பரந்துள்ள பெருநிலத்தில் பயிர் செய்துவிட்டு, அவை விளைந்து பண்பட்டிருக்கும் காலத்தே, யானை ஒன்றை, அந் நிலத்தில் அவிழ்த்துவிட்டு, அது விரும்பியாங்கு உண்ணச்செய்யின், பரந்த அந்நிலத்தில் விளைந்து நிற்கும் பெரும்பயிர் அனைத்தும் ஒரேநாளில் பாழாகிவிடும்; யானையின் வாயுட்சென்று உணவாகிப் பயன் படுவதினும், அதன் கால்களால் மிதியுண்டு அழிவனவே பெரும் பகுதியாம் ; அதைப் போலவே, ஆளும அரசன் அறிவுடையனாகிக் குடிகளிடமிருந்து எவ்வளவு பெறலாம்; எவ்வளவு பொருள்களை அவர்களால் கொடுக்க முடியும் என்பதறிந்து, அதற்கேற்ப, ஆறிலொரு கடமை என்பதைப்போல், ஒழுங்கான ஒரு முறையை அடிப்படையாகக் கொண்டு, வரி வாங்குவனாயின், அவன் நாட்டு மக்கள், அவனுக்குக் கொடுக்கவேண்டிய பொருளையும் விரும்பிக் கொடுத்துத் தாங்களும் நன்கு வாழ்வர் ; அவ் வரசனும் நல்வாழ்வுடையனாவன் ; அரசன், தானும் கொடுங்கோலனாய்க், குடிகள் அழ அழ, அவரிடமிருந்து வரி வாங்குவதே அறநெறியாம் என்று அழிவுப்பாதை காட்டுவோரையே அமைச்சராகவும் கொண்டு, குடிகளை வருந்த வரி வாங்குவதை வழக்கமாக மேற்கொள்வனாயின், அவன் நாட்டுமக்கள், வரிச்சுமை தாங்கமாட்டாது வருந்தி, வாழ்விழந்து வாடி வதைவர் ; அவனும் அந் நாட்டு அரசனாய் நெடுநாள் வாழான் ; அரசியல் பற்றிய பிசிராந்தையார்தம் அரிய கருத்துரை இது ; "யானோர் அரசன்மட்

டும் அல்லன்; புலவனும் ஆவேன்; ஆகவே, எனக்குப் பிறர் கூறத்தக்க அறிவுரை ஒன்றும் இல்லை," என்று எண்ணுமல், தன்னையொத்த புலவர் தம் பொருண்மொழி கேட்டு முறைசெய்யும் அறிவுடை நம்பியின், அறநெறியோடியன்ற அரசியல் நெறி கண்டு அகமகிழ்வோமாக.

இனி, பிசிராந்தையார் கூறிய இவ் அறவுரையை அடிப்படையாகக் கொண்டு, "இப் பாண்டியன் தன் குடிகளிடத்து இறை வாங்கும் நெறியிற் பெருந் தவறு செய்தான்; இவன்பால் சூழ்ந்த அரசியற் சுற்றத்தார் இவனை இடித்துரைத்து நெறிப்படுத்தும் நேர்மையின்றி, நீர் போகும்வழிப் புல் சாய்ந்து கொடுப்பதுபோல், இவன் விழைந்த வழியெல்லாம் நுழைந்து கொடுத்து அரசியலில் வாழும் மக்கட்குத் துன்பம் உண்டாக்கினர்; குடிகளை மிக வருத்தி இறை வாங்குவதில் அவ் வேந்தன் விருப்புடையனுயினன். அதனைக் காணப்பொருத பிசிராந்தையார், அரசனுக்கு அறிவுரை கூறினர்," என, அரசனும், அமைச்சரும் ஆய இருவருமே அறிந்து குற்றம் புரிந்தனர் என்றும், "பாண்டியன் அறிவுடைநம்பி, சிறந்த கல்வியறிவும், அரசியலறிவும், குடிகளிடத்து அருளும் உடையவனுயிருப்பினும், அவன் அரசியல் வினையாளர், குடிமக்கள் துன்பம் கருதாமல், அரசனுக்கு இனிமையாக நடந்து கொள்ளுதல் வேண்டும் என்ற ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, குடிமக்கள் துன்பங்களைத் தாங்களாகவும் போக்காமல், அரசனுக்கும் அறிவுறுத்தாமல் இருந்ததனுல், புலவர், மக்கள் துன்பங் கண்டு மனம் பொருதவராய், அரசியல் வினையாளர்க்கு அறிவுறுத்துவதனுற் பயன் உண்டாகாதென்றெண்ணி, நேரே அரசன்பாற் சென்று அறிவுறுத்துவாராயினர்," எனத் தவறு செய்தார், அரசன் வினையாளரே; அவர் செய்த தவறு அறியாத் தவறுடையான் அரசன் எனறும் கூறுவாரும் உளர்.

பிசிராந்தையார் பாராட்டிய பாண்டியன், ஆடவரிற் சிறந்தவன்; அறிவிற் சிறந்தவன் என்பது, அவன் பெயரினலேயே பெறப்படும்; இவ்வாறு எல்லாத் துறையினும்

சிறந்தானொருவன் தானே தவறுடையனாகவோ, தன் கீழ் அரசியற் பணிபுரிவார் புரியும் பிழையுணராப் பழியுடையனாகவோ இரான்; அக் குற்றம் அவன்பால் உண்டாயின், அத் தகையானை அறிவுடையான், ஆடவரிற் சிறந்தான் எனப் பாராட்டல் சிறிதும் பொருந்தாது; நாட்டின் நல் வாழ்விற்கு நன்மக்கட்பேறு நனிமிகத் தேவை என அறியும் நல்லறிவுடையான்பால், அந் நாட்டை நன்காளும் நல்லறிவு இன்றாயிற்று எனக் கூறல் முரண்படக் கூறலாம். நாள் பலவாகவும், நரை திரை பெறாது வாழும் தம் நல் வாழ்விற்கு நற்றுணையாய் நின்றவற்றுள், தம் நாட்டு வேந்தன், அல்லவை செய்யாது காக்கும் அறம்புரி செங் கோலன் ஆதலும், தம் ஊர் சான்றோர் வாழ்வால் சால்புற் றமையும் சிறப்புற்றனவாம் எனக் கூறுகின்றார், அவ் வறி வுரை வழங்கிய பிசிராந்தையாரே. தம் நாட்டு வேந்தன், அல்லவை செய்யாது காக்கும் அறநெறிக் காவலன் எனப் பிசிராந்தையாரே கூறியுள்ளார். மக்கள், கொடுங்கோல் மன்னன் நாட்டில் வாழ எண்ணார்; அவன் நாட்டினும் காடே நன்று என எண்ணி, அவன் நாட்டைவிட்டே அகல்வர்; இதற்கு மாறாகப் பாண்டிநாடு ஆன்றவிந் தடங்கிய சான்றோர் பலரை உடையது என்கின்றார் பிசிராந் தையார்; சான்றோர் பலர்வாழும் நாட்டு அரசன் சான்றோ னல்லனாதல் சாலாது; சான்றோனல்லா அரசன் நாட்டில் சான்றோர் வாழலும் இயலாது; புலவர் ஒருவர், பேரரசன் ஒருவன்முன், பொருள்நிறைந்த அறவுரை சில வழங்கு கின்றார் என்றால், அவர் கூறும் அவ் வறநெறி, அவ் வரசன் பால் இல்லை; ஆகவேதான் அவர் அவ் வறவுரை கூறினார் என்பதை யாண்டும் விதியாகக் கோடல் பொருந்தாது; கூறிய இக் காரணங்களால், அறிவுடைநம்பிபால், அக் குற்றம் உளவாகக் கூறல் பொருந்தாது எனத் துணிக.

பாண்டியன் அறிவுடைநம்பி பாடிய பாடல்கள் நான்கு; அவற்றுள், அகநானூற்றில் வரும் அவர் செய் யுள், வரையாது வந்து செல்லும் தலைமகன் சிறைப்புறத் தானாக, அவன் கேட்குமாறு, தலைவியை நோக்கி, "தோழி!

முற்றிய தினைக்கதிர்களை யாம் இன்னும் கொய்யத் தொடங்கவில்லை; ஆனால், புனத்தில், கதிர்களை இழந்த தாள்கள் பல நிற்கின்றன; இக் கதிர்களையெல்லாம் கிளிகளே கொண்டு சென்றுள்ளன; நீயோ, பல மணமும் கலந்து நாறும் கண்ணிசூடி, நாய்பின்வர வரும் தலைவனைக் காண்பதே கருத்தாக இருக்கின்றனை; இதனால் வரும் கேட்டினை நின் காதல் மிகுதியால் உணர்ந்திலை; கிளிகள் வந்து தங்கும் இடந்தொறும் சென்று, சென்று குரல் எடுத்துக் கிளிகளை ஓட்டாயாயின், தாய் 'இவள் கிளிகளை ஓட்ட அறியாள்,' எனக்கொண்டு, நின்னை இற்செறித்துப் பிறரைக் கொணர்ந்து வைப்பள்; பின்னர்த் தலைவனைக் காண்பதும் அரிதாம்," என்று கூறி, அவள் கூறியன கேட்ட தலைவன் உள்ளத்தே, "இனியும் களவொழுக்கம் மேற்கோடல் நன்றன்று; விரைந்து வரைந்துகொள்வதே நன்று," என்ற எண்ணம் எழச்செய்யும் தோழியின் அரிய தொண்டினை விளக்கி நிற்கிறது:

'மெய்யில் தீரா மேவரு காமமொடு
எய்யா யாயினும், உரைப்பல்; தோழி!
கொய்யா முன்னும் குரல்வார்பு தினையே,
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே; நீயே,
முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை, யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க, எழுந்து எழுந்து
கிள்ளைத் தெள்விளி இடை இடை பயிற்றி
ஆங்காங்கு ஒழுகா யாயின், அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவள்எனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயின்,
உறற்கரி தாகும் அவன் மலர்ந்த மார்பே." (அகம்: உஅ)

## ௩. ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்

ஆரியரையும், அவர் பழக்க வழக்கங்களையும் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே, தமிழகம் அறிந்திருந்தது; பிடி யானை பழக்கும் ஆரியரையும், கழைக்கயிற்றின் மேல் நின்று ஆடிக் காட்டும் ஆரியக் கூத்தரையும், தமிழ்ப் புலவர்கள் பார்த்துப் பாராட்டியுள்ளனர். ஆரியப் பொருநன் என்பா னொரு மல்லன், தமிழகத்தே வந்து, தமிழரசர்களால் பெருவீரன் எனப் பாராட்டப் பெற்றுளான். ஆரியம், தமிழகத்தில் கால்கொள்ளத் தொடங்கிய அடிச்சுவடுகளில் ஒருசில இவை. வடநாட்டை வாழ்விடமாக் கொண்ட ஆரி யர், தமிழகத்தின் தனிச்சிறப் புணர்ந்து, ஆங்கே தங்கள் நிலையை உறுதியுடையதாக்கி உயர்த்திக் கொள்ளப் பெரி தும் முயன்றுள்ளனர் அதனால், அவ் வாரிய அரசர் களுக்கும், தமிழரசர்களுக்கும் இடையில் போர் பல நடை பெற்றுள்ளன; தஞ்சை மாவட்டத்தின் அருகே வந்த ஆரியப்படையொன்று போரிட்டு அழிந்தது: "சோழர், வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை, ஆரியர் படை யின் உடைக." முள்ளூர் மலையைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசையால் பெரும படையுடன் வந்த ஆரிய அரசர்களைத் தன் வேற்படைகொண்டு கொன்று அழித் தான் காரி. தண்டகாரணியத்து ஆரியர் கவர்ந்து சென்ற ஆனிரைகளை, அவரை வென்று மீட்டுக் கொணர்ந்தான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்; இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், அவ்வாரியரை, அவர் நாட்டிலேயே வென்று, அவர்க்கு உரிய மலையாம் இமயத்தே விற்பொறித்து மீண்டான்.

நெடுஞ்செழியன் எனப் பெயர் பூண்ட இப் பாண்டிய மன்னனும், தன் காலத்தே, தமிழகத்தை வென்று அகப் படுத்த எண்ணித் தமிழக எல்லைக்கண் வந்திருந்து கொண்டு தமிழரசர் பலர்க்கும் தொல்லை பலதந்த ஆரிய அரசர்

களின் பெரும் படையினைப் பாழ்செய்து துரத்தி வீறு கொண்டான்; செழியனின் செயற்கரும் இச்செயலறிந்த அக்கால மக்கள், அவ் வெற்றிச் சிறப்பை, அவன் பெயரோடு இணைத்துப் பாராட்டினர்; சிலம்புச் செல்வத்தைச் செந்தமிழ் நாட்டிற்கு அளித்த இளங்கோ அடிகளார் அவன் புகழைப் பாட்டிடை வைதத்துப் பாராட்டினர்:

"வடவாரியர் படை கடந்து
தென்தமிழ் நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ் செழியன்." (சிலம்பு, உங: கச - அ)

ஆரியர் படையால், தமிழகத்திற்கு வர இருந்த அழிவைத் தடுத்துப் போக்கிய ஆற்றல் மிக்க அரசனை நெடுஞ் செழியன், தன்னாட்டின் தேவையுணர்ந்த நல்லரசுடையனுமாவன்; ஒருநாடு, நல்லாட்சி பெற்று நனி சிறந்து விளங்க வேண்டுமாயின், அந்நாடு அறிவன அறிந்த ஆன்றோர் பலரைத் தன்னகத்தே பெற்றிருத்தல் வேண்டும்; அதற்குக் கல்வியே கருந்தனம் என்பன போன்ற கருத்துரைகளை மக்கள் மனங்கொளச் செய்யும் மாண்புறு பணியினை நல்லோர் பலர் நாள்தோறும் மேற்கொளல் வேண்டும். இந்த உண்மை உணர்ந்தவன் நெடுஞ்செழியன்; ஆதலின் 'கல்வி கற்றார் உறும் ஏற்றம் இது; கல்லாதார் பெறும் பொல்லாங்கு இவை' என எடுத்துக் காட்டி, 'ஆகவே, கற்றல் நன்று' என்று அறிவுரை கூறும் அப்பணியினைத் தானே மேற்கொண்டான். அவன் புரிந்த பணி அழகிய பாட்டாய் அமைந்து விட்டமையால், அஃது அவன் காலமக்களுக்கும், அவன் நாட்டு மக்களுக்குமே யல்லாமல், எக்கால மக்களுக்கும், எந்நாட்டு மக்களுக்கும் பயன்படும் நிலைத்த துணையாய் நின்று விளங்குகிறது.

"தன் வயிற்றிற் பிறந்த மக்கள் அனைவர் பாலும் ஒத்த அன்பே காட்டும் இயல்பினள் தாய் என்ப; அத்தகைய தாயும், தன் மக்களிடையே காணும் கல்வியின் ஏற்றத்

தாழ்வுகளுக்கேற்ப அவர்கள்பால் தான் காட்டும் அன்பிலும் ஏற்றத் தாழ்வு காட்டுவள். ஒருகுடியில் பிறந்தார் பலரா யினும், அவருள் மூத்தோன் கல்விகல்லாதவனாகவும், இளை யோன் கற்றோனாகவும் காட்சிதரின், மூத்தோனை, 'வா' என்றழைக்கவும் நாணும் இவ்வுலக மக்கள், கற்ற அவன் இளையோன் ஆட்டும் சுட்டுவிரல் கண்டே ஆட முன்வருவர். மக்களைப் பிறப்பால் நால்வகையினராக்கி, ஒருவர் பிறப்பி னாலேயே உயர்ந்தவர்; ஒருவர் பிறப்பினாலேயே இழிந்தவர் என்றுகூறும் சில அறநூல்கள். ஆனால், மேற்குலத்தில் பிறந்தான் கல்லாதவனாயும், இழிகுலத்தில் பிறந்தான் கற்ற வனாயும் காணப்படின், கற்ற இழிகுலத்தான் காலின்கீழ்க் கல்லாத மேற்குலத்தான் வீழ்ந்து கிடப்பன்; ஆகவே, ஒருவன், உயர்விற்கும், தாழ்விற்கும் காரணம் பிறப்பன்று; அவன்பால் காணப்படும் கல்வி, கல்லாமைகளே அதற்குக் காரணமாம். ஆகவே, ஒவ்வொருவரும் கற்றல் வேண்டும்" என்று கல்வியின் இன்றியமையாமையினை எடுத்துக் காட் டிப், பின்னர்க் கற்கும் முறை பற்றிக் கூறுவார், "கல்வி யைக் காசு கொடுத்துப் பெறல் முடியாது; ஆணையிட்டும் அடிமைகொள்ளல் இயலாது; கல்வியை உடையார், அதை விரும்பிக் கொடுத்தாலன்றி, அதைப் பெறுதல் எவர்க்கும் அரிதாம்; ஆகவே, கல்வியைப் பெற விரும்புவார், அதை வேண்டுமளவு கொடுக்கும் நல்லுள்ளம் கல்விதரும் ஆசிரி யர்க்கு உண்டாமாறு ஆக்குதல் வேண்டும்; உள்ளம், அடிக்கும், ஆணைக்கும் அடங்காது; அது, அன்பிற்கும், ஆர்வத்திற்குமே அடங்கும்; அது தானே மாறுதல் வேண்டும்; அம்மாற்றம் உண்டாம் வண்ணம், அவர் உள் ளம் உவப்பன செய்தல் வேண்டும்; அது, அவர்க்குத் துன்பம் உற்றவழி முன்னின்று செய்யும் உதவியாலும், போதும் என அவர் உள்ளம் உணருமளவு பெரும்பொருள் தருதலாலும் உண்டாம். இது மட்டுமன்று; நாமோ மேற் குல மகன்! பணிந்து நிற்பது நம் பண்பிற்கு இழுக்கா மன்றோ? என்ற எண்ணம் கற்கவருவார்பால் எழல் கூடாது; அந்த எண்ணம், அவர்பால் உண்டு என அறி யின், ஆசிரியன் உள்ளம் திரிந்துவிடும். திரிந்த உள்ளத்தி

னின்றும் தெளிந்த கல்வியைப் பெறல் இயலாது; ஆகவே, பணிந்து, பின்னின்று, பெரும் பொருள் கொடுத்துப் பேணிக் கற்றல் வேண்டும்'' என்று அதற்கு வழியும் வகுத்துள்ளார்:

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே." (புறம்: கஅங)

ஆற்றல் மிக்க அரசனாய், அறிவறிந்த ஆசிரியனாய் விளங்கிய நெடுஞ்செழியன், அறம் விரும்பும் செங்கோலனுமாவன்; வலியரான் நலிவெய்தி முறைவேண்டி நிற்பாரையும், வறுமையால் வாடிக் குறைகூறி நிற்பாரையும் அற்றது அவன் நாடு; அவன் நாட்டு மக்கள், மறையொலி கேட்டு மகிழ்வதல்லது, முறை வேண்டி வந்தார் அடிக்கும் மணியொலிகேட்டு அறியார்; அவனால் பாழுற்ற பகைவர் அவனைத் தூற்றுவரேயன்றி, அவன் நாட்டு மக்கள் அவனைத் தூற்றி அறியார், என அவன் செங்கோற் சிறப்பினைச் செவ்விதின் கூறுகிறது சிலப்பதிகாரம்:

'மறைநா ஓசை அல்லது, யாவதும்
மணிநா ஓசை கேட்டதும் இலனே;
அடிதொழுது இறைஞ்சா மன்னர் அல்லது
குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்."
(சிலம்பு, உங : ஙக - ச)

நெடுஞ்செழியன் நீதிதவறாதவன்; நீதிதவறிய வழி நின்று வாழநினையா நெஞ்சுறுதி உடையவன்; தன் அவை அடைந்து கணவன் கள்வனல்லன் என்பதைக் கண்ணெ

திர் காட்ட முன்வந்த கண்ணகி, அதனை நிறுவத் தன் காற் சிலம்பினை உடைத்தாளாக, அதன் உள்ளிருந்த மாணிக்கப் பரல் தன் வாயிற்பட்டுத் தெறித்தது கண்டு, "பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன், மன்பதை காக்கும் தென் புலங் காவல் என் முதற் பிழைத்தது; கெடுக என் ஆயுள்" என்றுரைத்து, உரைத்த அவ்வளவிலேயே, அவ்வரசு கட்டிலிலேயே வீழ்ந்து உயிர் துறந்தான் நெடுஞ்செழியன் எனின், அவன் செங்கோற் சிறப்பினை என்னெனப் புகழ்வது, பாண்டியர் பகைவர் மரபிலே வந்த செங்குட்டுவனே! "தான் செய்த தவறு, தன்போலும வேந்தர் செவியுட் சென்று புகு முன்னரே, இறந்து இறவா நிலை பெற்ற செழியன் செங்கோற் சிறப்பே சிறப்பு! தன் அறியாமையால் அழித்த அறத்தைத் தன் உயிர்கொடுத்து உயிர்ப்பித்த அவ் வுரவோன் புகழே புகழ்!" எனப் போற்றுவானாயின், செழியன் சிறப்பினை நம்போல்வார் நவிலவும் ஒண்ணுமோ?

"எம்மோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை, மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது."

(சிலம்பு, உரு: கூ௫-கூ)

நெடுஞ்செழியன், இவ்வாறு எல்லாவகையானும் நல்லன் எனப் போற்றப் பெறுதலோடு, மாண்புமிக்க மனைவியையும், மதி நிறைந்த மகனையும் பெற்ற மாட்சிமையும் உடையனாவன்; அவன் மனைவி, அரசமாதேவியார் கணவற் குற்ற நிலையினைக் கண்டார்; "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்ற கழிபெருங் கற்புடையளாய அவரும், அந்நிலையிலேயே வீழ்ந்து, "தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடினள்போல்" உடன் உயிர்விட்டு உயர்ந்தோர் போற்றும் பெருநிலையுற்று மாண்புற்றார்; கொற்கையி

லிருந்து கோலோச்சிவந்த நெடுஞ்செழியன் மகன், வெற்றி வேற்செழியன், அறம்குலைந்த அந்நாள் முதலாத் தன் நாட்டில் மழை பெய்யாதாகப் பசியும், பிணியும் பல்கி னமை கண்டு, கண்ணகி தேவியார்க்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று பலிகொடுத்து, மழைகொண்டு, பசியும், பிணியும் போக்கி, வசியும், வளனும் பெற்று வாழ்ந் தான்; இவ்வாறு, மக்களால், மனைவியால், மாநிதிப்பெருக் கால், மதிநிறைவால், மாநிலம் போற்றும் ஆட்சிச் சிறப்பால் அனைத்துலகும் போற்ற வாழ்ந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் புகழ், இந்நிலவுலகில் நின்று நிலை பெறு மாக!

## ௬௪. இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்

தமிழர்கள், தங்கள் வாழ்விடங்களைத் தட்ப வெப்பக் கால நிலைகளுக்கேற்ப மாற்றி அமைத்து வாழும் வகையறிந்தவராவர்; வேனிற்காலத்தில் வேண்டுமளவு தென்றல் நுழைதற்காம் சாலேகங்கள் அமைந்த வேனிற் பள்ளிகளில் வாழ்வர்; குளிர்காலத்தில் வாடை நுழையாவாறு அமைந்த வாயில்களைக் கொண்ட கூதிர்ப்பள்ளிகளில் குடியிருப்பர்; அதைப் போன்றே, தங்கள் ஆண்டு முதிர்ந்த காலத்தே இருந்து ஒய்வு பெறுதற்காம் இனிய இடங்களைத் தேர்ந்து வாழும் வகையினையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவ்வாறு, அவர்கள் வாழ்ந்த இடங்களுள், இலவந்திகைப் பள்ளி என்பதும் ஒன்று; இலவந்திகைப் பள்ளியாவது, நீரை வேண்டுமளவு நிறைக்கவும், போக்கவும் வல்ல பொறிகள் அமைந்த வாவியை நடுவிடத்தே பெற்று, நறுமணம் நாறும் பல்வேறு மலர் நிறை மரங்களால் நிறைந்து மாண்புற்ற மலர்ப் பூஞ்சோலையாம்; அஃது, அரசர், தம் மனைவியரோடு இருந்து மகிழும் இடமாதலின் அரிய காவலையும் உடையது என்ப. "நிறைக்குறின் நிறைத்துப் போக்குறின் போக்கும், பொறிப்படை அமைந்த பொங்கில வந்திகை" (பெருங்கதை: க: ௪௰: ௩௧௧—௧௨.) "பன்மலர் அடுக்கிய பந்தர் இலவந்திகை." (சிலம்பு, ௧௰: ௩௰—௩௧.) அரசர்கள், இத்தகைய இலவந்திகைப் பள்ளிகளில் வாழும் காலம், ஆண்டு நிறைந்த முதுமைக்கால மாதலின், அவர்தம் வாழ்நாள், பெரும்பாலும் ஆண்டே முடிந்து போதலும் உண்டு; அவ்வாறு இறந்தார் பெயர்களோடு, அந்நிகழ்ச்சியை நினைப்பூட்டி வழங்கினர் தமிழர்; இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட் சென்னி என்பான் பெயரைக் காண்க. நன் மாறனும், அத்தகைய இலவந்திகைப் பள்ளியொன்றில் இறந்துபோனமையால், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என அழைக்கப் பெற்றுளான்.

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பெற்ற வெற்றிகள் யாவை? அவனால் அழிவுற்ற பகைவர் யாவர் என்பதை, அவனைப் பாடிய புலவர் ஐவருள் ஒருவரேனும்

உணர உணர்த்தினாரல்லர்; அவருள் நக்கீரர், நன்மாறன் சினத்தால் சிவனையும், வலியால் பலராமனையும், புகழால் திருமாலையும், முன்னியது முடித்தலால் முருகனையும் ஒத்துளான் என, அவன் ஆற்றல் சிறப்பை ஓரளவு எடுத்துக் கூறிப் போற்றியுள்ளார்; காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், "அரசே! போருடற்றிப் பகைவர் நாட்டைக் கைப்பற்றும் காலத்தே, நின்வீரர், அந்நாட்டுக் கழனிகளிற் புகுந்து, ஆங்கு ஆற்ற விளைந்து, முற்றி வளைந்து கிடக்கும் நெற் பயிர்களைக் கொள்ளையிட வேண்டின், அவ்வாறே கொள்ளையிடுக! அவர் நாட்டகத்து ஊர்களைத் தீயிட்டுச் சுடவேண்டின், அவ்வாறே சுடுக! நின் கைவேல், அப் பகைவரை அழிக்க வேண்டின், அவ்வாறே அழிக்கட்டும்! ஆனால், அப் பகைவர் நாட்டுக் காவற்காடுகளைமட்டும் அழிக்கக் கருதற்க; அக் காவற்காடுகளில் வளர்ந்துள மரங்களை வெட்டிப் பெறும் கட்டுத்தறிகள், நின் யானைகளைப் பிணிக்கும் அத்துணை வன்மையுடையன அல்ல," என அவன் பேராற்றல் புலப்படப் பாடியுள்ளார்:

நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை, அவர் நாட்டு
இறங்கு கதிர்க் கழனி, நின் இளையரும் கவர்க!
நனந்தலைப் பேரூர் எரியும் நைக்க!
மின்னுநிமிர்ந் தன்னநின் ஒளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினும் செகுக்க! என்னதூஉம்
கடிமரம் தடிதல் ஓம்பு! நின்
நெடுநல் யானைக் கந்து ஆற்றாவே." (புறம்: ருஎ)

நன்மாறன் காலத்தே நாடாண்டிருந்த, சேர, பாண்டிய அரசர்களினும் இவனே சிறந்தவனாவன்; தமிழ் வேந்தர் மூவருள், நன்மாறன், நனிமிகச் சிறந்தோனாதலின், அவன், சிவனுக்குரிய கண்கள் மூன்றினும், எல்லோராலும் போற்றப்படும் நெற்றிக்கண் போல்வன் எனப் பாராட்டுகிறார், மதுரை மருதன் இளநாகனார்:

"கறை மிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!" (புறம்:ருரு)

வேந்தருட் சிறந்தோனாய் விளங்கிய நன்மாறன், நாட்டவர் போற்றும் நல்லோனாதலையும் விரும்பினார் புலவர் மருதன் இளநாகனார். நாற் படையும் நனி சிறக்கப்பெற்று வாழும் வாழ்வே வாழ்வு; அவற்றை உடையார்க்கு ஆகாத செயல் இல்லை; அனைத்துலகும், அவன் காற்கீழ் வந்தொதுங்கும்; அவனை வெல்வார், இவ் அகன்ற உலகில் ஒருவரும் இரார் என்ற எண்ணம் உடையான் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்பதை உணர்ந்தார் புலவர்; அவ் வெண்ணம் தவறானது; அழிவுப் பாதைக்கு அடிகோலுவது; வேந்தற்கு வெற்றி தருவது, அவன் கோலேயன்றி, வேலன்று; குடி பழி தூற்றும் கொடுங்கோலன், நாற்பெரும் படையும் நனிமிக உடையனே ஆயினும், அவன் நெடிது வாழ்தல் இயலாது; செங்கோல் வேந்தனே சிறக்க வாழ்வன்; ஆகவே, நாற்படையுடையான், நன்றுபுரி கோலனுமாயின், அவன் வெற்றிக்கோ ரளவே இராது; நன்மாறனும் அத்தகையனாதலை நனிமிக விரும்பினார்; விரும்பியவாறே, வேந்தன்பால், வேலினும் சிறந்தது கோலே என்பதை விளங்க உரைத்தார்; உரைத்தவர், செங்கோலனாதல் வேண்டும் என்று கூறியதோடு நில்லாது, செங்கோலின் இயல்பு இஃது என்பதையும் சிறக்க எடுத்துக் கூறினார்: பிழை புரிந்தார் நம்மவர் ஆகவே, பிழைத்துச் செல்க என ஒறுக்காது விடுத்தலும், இவர் நம் பகைவர்; ஆகவே, பிழை புரியாராயினும் பெருந்தண்டம் கொடுக்க என ஒறுத்தலும் அறனன்று; அவ்வறனல்லன தன் பால் நிகழாவண்ணம் நின்று காத்தல் வேண்டும்; இவ்வாறு நடுநிலை நின்று நாடு காப்பார்பால், ஆண்மையும் அருளும், அருட்பெருங் கொடையும் ஆய, இப் பெருங் குணங்களும் இன்றியமையாது இருத்தல் வேண்டும் என்று அறனும் கூறினார்; நன்மாறனும், புலவர் நவின்றன நல்லனவாதல் அறிந்து, அவர் கூறுவன கேட்டுச் சிறப்புற்றான்.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், மக்கள் பலரும் மனைவியும் போற்ற, நிறைந்த செல்வமும், நீடிய வாழ்நாளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோனாயினும்,

தன்னைப் பாடிப் பாராட்டும் புலவர் முதலாம் பரிசிலர் தமக்கு, அவர் வேண்டும் பொருளை, அவர் வேண்டுங் காலத்தே அளிக்கும் அருட்குணம் அமையப் பெறு யினன்; அவன்பால உளதாம் இக் குறைகண்டு இடித்துரைத் தார் பலராவர்; வடமவண்ணக்கன் பேரி சாத்தனார் எனும் பெரும் புலவர், "அரசே! தமிழ்நாட்டில் வாழ்ந்த பேரர சர், குறுநில மன்னர் அனைவரையும் வென்று, அவர்பால் பெரும்பொருள் கொண்டு குவிக்கும் கொற்றம் உடைமை யால், ஆற்றலில் நின்னையொத்த நின் மக்கள், அருள் உடைமையால், பெரும்பொருள் சேர்த்து, வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளல்களாய நின் முன்னோரை ஒப்பாராக!" என, அவன் மக்களை வாழ்த்துவார்போல், பொருள் கொடா அவன் புன்மையைப் பழித்துச் சென்றார்;

> தண்டமிழ் வரைப்பகம் கொண்டி யாகப்
> பணித்துக் கூட்டுண்ணும் தணிப்பருங் கடுந்திறல்
> நின்னோ ரன்னநின் புதல்வர், என்றும்
> ஒன்னார் வாட அருங்கலம் தந்துநும்
> பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
> முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம்!"
>
> (புறம்: கஉஅ)

ஆவூர் மூலங்கிழார் எனும் மற்றோர் அருந் தமிழ்ப் புலவர், "அரசே! தன்னாற் கொடுத்தற்கு இயலும் பொருள் களை இயலும் எனக் கூறிக் கொடுத்தலும், தன்னால் கொடுக்க இயலாததொன்றை இயலாது என முதலிலேயே கூறி மறுத்துவிடலும், நல்லோர் மேற்கொள்ளும் நற்செயல் களாம்; தன்னால் இயலாததனை இயலும் எனக் கூறி ஏமாற் றலும், இயல்வதனை இயலாதெனக் கூறி மறைத்தலும் இரப் போர்க்குத் துயர் தருவதோடு, ஈவோர்க்கும் இகழ்ச்சியைத் தரும்; யான் இதுகாறும் எத்தனையோ வள்ளல்களை வாழ்த்தி வந்துளேன்; இத்தகைய இழிசெயலை யான் இன்றுவரை கண்டதில்லை; அதை இன்று நின்பால் கண்

டேன்; அதனால் என் உளம் மிக வருந்துகின்றது" எனக் கூறிப் பழித்துச் சென்றுளார்:

" ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும், இரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே;
ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
இல்லென மறுத்தலும், இரண்டும், வல்லே
இரப் போர் வாட்டல்; அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை;
அனைத்தா கியர்இனி; இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம்." (புறம்: கசுக)

" ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது, ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற உணர்வுடைப் பெருமக்கட் கிடையே, " ஈயேன்" என்னும், இயல்புடையார் சிலரும் அக்காலத்தே வாழ்ந்திருந்தனர் போலும்!

# ரு. ஏனாதி நெடுங்கண்ணன்

ஏனாதி நெடுங்கண்ணனார், பாண்டியன் ஏனாதி நெடுங் கண்ணன் என அழைக்கப்பெறுவது ஒன்றையே கொண்டு, இவனைப் பாண்டியர் குடிவந்தவன் என்று கூறிவிடுதல் இயலாது; படைத்தலைமை பூண்டு சிறந்தார்க்கு, அரசர்கள், ஏனாதி என்ற சிறப்புப்பெயரையும், அதற்கு அடையாளமாக ஏனாதி என்ற பெயர்பூண்ட மோதிரத்தையும் கொடுத்துப் பெருமை செய்வர். அவ்வாறு பட்டம்பெற்ற பாண்டியர் படைத்தலைவருள், பாண்டியன் ஏனாதி நெடுங் கண்ணனும் ஒருவன். இனி, பாண்டியர் படைத் தலைவராய்ப் பணியாற்றுவார், பாண்டியராகார் எனக் கூறிவிடுதல் பொருந்தாது. ஆகவே, ஏனாதி நெடுங்கண்ணனைப் பாண்டியன் அல்லன் எனத் தள்ளிவிடுதலும் பொருந்தாதாம்: பகைவர் படைவருகையினை, அது மிகச் சேய்மைக்கண் வரும்போதே அறிந்து ஆவன மேற்கொள்ளும் இவர் அறிவுடைமை கண்டு, சேய்நிலத்து நிகழ்ச்சிகளையும் அறிந்துகொள்ளும் அவர் அறிவின்தொழிலை, அவர்கண் மேலேற்றி நெடுங்கண்ணன் எனப் பெயர் சூட்டியுள்ளனர். இவர் வரலாறு குறித்து எதுவும் விளங்கவில்லையாயினும், இவர் பாடிய பாக்கள், இவர்தம் போர்ப்பயிற்சிகளைப் புலப்படுத்திநிற்கின்றன.

பகைவர் படையால் பற்றப்பட்ட ஒரு பேரூரில் வாழ் வஞ்சிய மக்கள், மனக் கலக்கமுற்றுப் பிரிந்து போய்விடுவ ராகவே, அவர் மனைகள் எல்லாம், பீர்க்கு முதலாம் கொடிகள் ஏறிப்படர்ந்து காணப்படும்; இவ்வாறு பாழ் பட்ட மனைகளையே கொண்ட அவ்வூர் மன்றத்தே மக்கள் காணப்பெறார்; மரையாக்கள் கூட்டமே மண்டிக்கிடக்கும்; அவ்வூர் அம்பலம், பகைவர் யானைகள், தம் உடற்றினவு போகப் பலகாலும் உரிஞ்சுவதால், விட்டமும் தூணும் வீழ்ந்து பாழ்படும், எனப் பகைவர் படையால் பேரூர்கள் பாழ்படுவதையும், போர்வல்ல அரசர்கள் சூழ்ந்து அழிக்க எல்லாம் அழியவும், எஞ்சியுள்ள ஒரு மதிலும் உறுதியின்

றிக் குலைந்துளது என அறிந்த சிற்றரசன், பகைவர் படை எந்நேரத்தில் உட்புகுந்துவிடுமோ என்ற அச்சத்தால் உறக்கம் ஒழித்து இருப்பன் எனப் போர்ப்பண்புகளையும் அவர் கூறியுள்ளமை யுணர்க.

"முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்துப்
பணைத்தாள் யானை பரூஉப்புறம் உரிஞ்சச்
செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியில்.
............ .............. . ...........
வெண்வேல், அண்ணல் யானை அடுபோர் வேந்தர்
ஒருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயில்
ஓரெயில் மன்னன் போலத்
துயில் துறந்து." (அகம்: ௩௭௩)

ஏறை நெடுங்கண்ணன், தன் காலத்துப் பார்ப்பனர், தண்டு கமண்டலம் தாங்கி, உணவுவிரதம் மேற்கொண்டு வாழும் உயரிய வாழ்வினராவர்; அவர்க்கு எழுதாக் கிளவியாம் வேதம் ஓதுதல் உரிய தொழிலாம் எனக் கூறி, அவரையும் அவர் தொழிலையும் பாராட்டியுள்ளார்:

"பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல்." (குறுந்: ௧௫௬)

## ௬௯. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒலியமங்கலமும், அதைச் சூழஉள்ள நாடும் பண்டைக் காலத்தில் ஒல்லையூர் எனவும், ஒல்லையூர் நாடு எனவும் முறையே பெயர் பெற்றிருந்தன; சோழ நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக ஓடும் வெள்ளாற்றின் தென்கரை தென்கோனாடு என அழைக்கப்பெறும்; இத் தென்கோனாட்டின் மேலைப் பகுதியே ஒல்லையூர் நாடு; ஒல்லையூர் நாடு பாண்டிய நாட்டின் வடவெல்லை நாடாகும்; ஒருகால், அதைச் சோழர்கள் கைப்பற்றிக் கொண்டனர்; இதனால், பாண்டியர் குடிக்கு உண்டாய சிறுமையைப் போக்க வேண்டும் என்ற எண்ணம்கொண்ட பூதப்பாண்டியன், அந் நாட்டின்மீது படையொடு சென்று அதை வென்று, மீண்டும் பாண்டியர் உடைமை யாக்கினான்; பூதப்பாண்டியனின் செயற்கரும் இச் செயல் கண்ட பாண்டிநாட்டுப் பெருமக்கள், அவன வெற்றி விளங்குமாறு, ஒல்லையூர் தந்த என்ற சொற்றொடரை அவன் பெயர்முன் கொடுத்துப் பெருமை செய்தனர்.

பூதப்பாண்டியன், பேராலவாயர் முதலாம் பெரும் புலவர்களும் பாராட்டும் பெருமையுடையாரும், கணவனை இழந்து வாழக் கருதாக் கற்பு நிறைவுற்றாரும், பெரும் புலமை வாய்க்கப் பெற்றாரும் ஆய பெருங்கோப் பெண்டெனும் பெண்ணினல்லாரைப் பெருமனைக் கிழத்தியாகக் கொண்டு பெருவாழ்வு வாழ்ந்திருந்தான். பாண்டி நாட்டு மையல் எனும் ஊரினனாய மாவன், எயில் எனும் ஊரினனாய ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆய இவ் வைவரும், பூதப்பாண்டியனோடு பெருநட்புடையராவர்.

பூதப்பாண்டியன், தான் ஒரு பெரு வீரனாதலின், தன்போலும் பெரு வீரரைப் பாராட்டும் பேருள்ளம் பெற்றிருந்தான்; பொதியிலிருந்து ஆட்சி மேற்கொண்

டிருந்தோனாய திதியன் என்பான், பகைவர்தம் பேராண்மையைப் புறங்காண வல்ல வில்லாண்மை யுடையான் என அவன் பாராட்டியிருத்தலை உணர்க.

'பொருநர்,
செல்சமம் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்."
(அகம் : உடு)

பூதப்பாண்டியன் பெருவீரனாதலோடு, பாராட்டற்குரிய பண்புகள் பலவும் நிறைந்தவனாதல் வேண்டும்; அவன், மனைவியைப் பிரிந்து வாழும் வாழ்வினை மனதாலும் நினையா மாண்புறு குணம் உடையனாவன்; தன் நாட்டு அறங்கூர் அவைகள், நெறி பிறழா நீர்மையவாதல் வேண்டும் எனும் நினைவுடையனாவன்; நண்பரைப் பிரிந்து வாழும் நலனில் வாழ்வை நெஞ்சினும் நினையா நெடியோனாவன்; குடிப்பற்றும், குலப்பற்றும் குறைவறக்கொண்ட குணக் குன்றாவன்; பூதப்பாண்டியன்பால் பொலிவுறக் கிடக்கும், ஆற்றல், அன்பு, நட்பாடற் பண்பு, நாடாள் சிறப்பு ஆய இன்ன பல் குணங்கள் எல்லாம், அவன் பாடிய அழகிய பாட்டில், அமைந்து புலப்படுதலை, அப் பாட்டை உணர்ந்தார் அனைவரும் உணர்வர்.

பாண்டியர்க்குப் பகை வேந்தர்களாய சேரனும், சோழனும், சிங்கம்போல் சினந்து, தொடங்கிய வினையை இடையில் மடங்காது முடிக்கவல்ல தம் பெரும் படையோடு தன் நாட்டின்மீது போர் தொடுக்கப் போகின்றனர் என்ற செய்தி கேட்ட பூதப்பாண்டியன், "என்னோடு போரிட விரும்புவோர் வருக! வருகின்றவர் யாவரேயாயினும், அவரைப் போர்க்களத்தே அலற அலறத் தாக்கி, அவர்களும் அவர்தம் தேர்ப்படைகளும், தோற்றுப் புறங்காட்டி ஓடுமாறு செய்கின்றேன்; அவ்வாறு செய்யேனாயின், இதோ, என்னருகிருக்கும் என் அழகிய மனைவியை விட்டுப் பிரிவேனாகுக! நீதி தவறாது நன்மை நிலைபெறும் என் நீதிமன்றத்தே, முறைவேண்டியும், குறை வேண்டியும்

வந்தார் கூறுவன கேட்டு நீதி அளிக்கவல்ல ஆற்றல் அற்றானொருவனை இருத்திக் கொடுங்கோலாட்சிக்கு வழிகோலியோனாவேனாகுக! மாவன், ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் முதலாய கண்போற் சிறந்த என் நண்பர்களை இழப்பேனாகுக! வழி வழியாக உலகாள் பெருமை உடையராய பாண்டியர்குடியிற் பிறக்கும் உரிமைஇழந்து வனப்பிலா வன்புலங்களைக் காக்கும் வளமிலாக் குறுநிலமன்னர் குடியிற்பிறந்து பெருமை குன்றுவேனாகுக!" எனக் கூறும் வஞ்சினம்நிறைந்த அவன் பாட்டை அறிந்து, அவனை உணர்ந்து போற்றுவோமாக!

'மடங்கலிற் சினைஇ மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணே னாயின், சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக!
அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக! மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையல் கோமான்
மாவனும், மன்னெயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆத னழிசியும்,
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி யான், ஒன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே." (புறம: எக)

## எ. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாண்டிய மன்னருள், பெருவழுதி என்ற பெயருடையார் பலர் உளர் ஆதலாலும், ஆண்டானும், அறிவானும் நிறைந்த ஆன்றோர்கள் பால் காணலாம் அரியகுணங்கள் அனைத்தையும் தன் இளமைக் காலத்திலேயே இவர் பெற்றிருந்த காரணத்தாலும், அக்கால மக்கள், இவ்வழுதியை இளம்பெருவழுதி என அழைப்பாராயினர்; தமிழர்கள், கடைச்சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்திலேயே, கடலில் கலஞ்செலுத்தும் கலையறிவுடையராய் இருந்தனர்; தமிழக வணிகர்கள், கடாரம், சீனம் முதலாய கீழ்நாடுகளுக்கும், எகிப்து உரோம் முதலாய மேல்நாடுகளுக்கும் கலங்களிற் சென்று கடல் வாணிபம் புரிந்து வாழ்ந்தனர்; தமிழரசர்களும், கடற்படையுடையராய், ஈழம், கடாரம் முதலாம் அரசுகளை ஆண்டுவந்தனர். இத்தகைய கடற் செலவு ஒன்றில் இறந்துபோனமையால், இளம்பெருவழுதி, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எனப் பிற்காலத்தவரால் அழைக்கப் பெற்றுளான்.

இளம்பெரு வழுதியார், அரசனாய் நாடாண்ட வரலாறு எதுவும் விளங்கவில்லை; இவரைப் பற்றி நாம் அறியக் கூடியன எல்லாம், அவரோர் அருந் தமிழ்ப் புலவர்; அரிய சிந்தனை யாளர்; திருமாலை வழிபடும் திருந்திய சமய உணர்வினர் என்பனவே.

தன்னைத் தனியே விடுத்துப் பொருள்தேடிப் போயிருக்கும் தலைவனையே எண்ணி ஏங்கும் தலைமகள் ஒருத்தி, தன் உள்ளம் எப்போதும் அவனையே நினைந்து கொண்டுளது; அவனைப் பிரிந்துறை துயரால், தன் உடல்நலம் குன்ற, தன் பண்டைய வடிவழகும் மாறிவிட்டது என்ற கருத்தை, "சென்ற தலைவரைத் தேடிப் பின்சென்ற என் உள்ளம், அவர் செய்யும் வினைக்குத் துணையாய் நின்று, வினையை முற்றுவித்து அவருடன் ஒருங்குவர எண்ணியுளதோ? அல்லது, அவர் தனக்கு அருள்செய்யாமையால்

மீண்டும் இவண் வந்து, அது பிரிந்து செல்லுங்கால் இருந்த நலம் அழியப் பசலை பாய்ந்து விளங்கும் என் உடலைக் கண்டு, இவள் நம் தலைவி அல்லள்; அயலாள் ஒருத்தி என எண்ணி வருந்தி என்னைத் தேடி வேறிடம் சென்று விட்டதோ? யான் ஒன்றும் அறியேன்'' எனக் கூறினாள் எனப் பாடிய பாட்டு அவர் புலமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்குவது காண்க:

"சென்ற நெஞ்சம் செய்வினைக்கு உசாவாய்
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ?
அருளா ஞதலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்தஎன் பொன்னிறம் நோக்கி
ஏதிலாட்டி இவள்எனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே?"

(நற்: ருசு)

உலகில் உயிர்கள் தோன்றுகின்றன; அழிகின்றன; மக்கள் பிறக்கின்றனர்; மாள்கின்றனர்; ஆனால் உலகியல் மட்டும் அழியாது நின்று நிலைபெறுகின்றது; இதற்குக் காரணமாயது எது? உலகியல் அழியாது இயங்குதற்கு உறுதுணையாவார் யாவர்? என்று வினவுவார்க்கு விடையாக, உலகம் அழியாது இயங்குவது ஒரு சில பெரியோர்களால் தான்; நல்லோர் சிலர் வாழ்வதால்தான் நானிலம் நின்று நிலவுகிறது என்றுகூறி, உலக வாழ்விற்கு உறுதுணையாகும் அப்பெரியார் யாவர்? யாது அவர் பண்பு? என்பார்க்கு விடையாக, பெரியார் எனப்படுவார், "விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'' என்ற குறள் நெறி உணர்ந்து, அமிழ்தமே கிடைக்கினும், அஃது உடற்கும், உயிர்க்கும் உறுதி தருவது என்ற காரணத்தால், அதைத் தாமே தனித்து உண்ணார்; எவர் மாட்டும், எத்தகைய உயிர் மாட்டும் சிறிதும் சினம் கொள்ளார்; சோம்பித்திரியார்; 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்பவாகலின், அஞ்சவேண்டிய பழிபாவங்கட்கு அஞ்சுவர்; மேற்கொண்ட செயல் புகழ்தரும் செயலாயின், அதற்குத் தம் உயிரைக்கொடுத்தும் செய்து

முடிப்பர்; பழிதரு வழிவரும் செல்வம், உலகளவு உயர்ந்த மிகப்பெருஞ் செல்வமாயினும், அதைக் கொள்ள உள்ளத்தானும் உள்ளார்; இடுக்கண்கள் பல அடுக்கிவரினும், கண்டு கலங்காத் திண்ணியராவர்; கூறிய இக்குணங்களைக் குறைவறப் பெற்று மாண்புற்றதோடு எச்செயல் புரியினும், தன்னலம் கருதிச்செய்யாது, இதனால் உலகிற்கு என்ன பயன் என்று எண்ணி, உலகநலம் கருதியே செய்யும் சிறப்புடையராவர்; இக்குணங்களுள் ஒன்றுங்குறையாமல் அனைத்தும் பொருந்தியவரே உயர்பெரும் பெரியார்'' எனப் பெரியார்ப் பண்புரைக்கும் வழுதி சொற்கள், "உண்மையில் இவரே பெரியார்; ஒப்புயர்வற்ற பெரியார், இளம்பெருவழுதி என்ற பாராட்டிற் குரிய பெரியார்'' என்பதை உறுதி செய்து நிற்றல் காண்க!

"உண்டாலம்ம! இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும், இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே." (புறம்: கஅ௨)

திருமால், கண்ணனும், பலதேவனும் ஆய இருவேறு உருக்கொண்டு, சொல்லும் பொருளும்போல் பிரிவின்றித் திருமாலிருங்குன்றத்தே வீற்றிருக்கும் காட்சி, கரிய நீர் நிறைந்த கடலும், வெண்ணிற மணல் பரந்த கானலும் ஒன்று கலந்து நின்றாற்போலும் எனவும், பொன்னாடை புனைந்து நிற்கும் திருமால் காட்சி பொன்னிற இளவெயில் சூழ்ந்து வர வளரும் இருட்காட்சியை ஒக்கும் எனவும், நீலம் மலர்ந்த சுனையையும், அச் சுனையைச் சூழ நிற்கும் பொன்னிற மலர்நிறை அசோகையும், உச்சியில், காய்களும், கனிகளும், மலர்களும் நிறைந்த வேங்கையையும் கொண்டு விளங்கும் மலை, நீல நிறத்தையும், பொன்னுடையினையும்,

மணிகள் இழைத்த மணி முடியினையும் உடைய திருமாலை ஒக்கும் எனவும், திருமால் காட்சியை மலையிலும், கடலிலும் மலர் நிறைக் காட்டிலும் கண்டு கண்டு களித்து, இன்புற்று, தான் உற்ற இன்பம், உலக மக்கட்கும் உண்டாதல் வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் கொண்டு, "உலகீர்! நறுமணம் நாறும் துழாய் அணிந்தோனாய அத் திருமால் அளித்தால் அல்லது துறக்க இன்பம் கிட்டாது; ஆகவே, நீவிர், மனைவியரோடும், தாய் தந்தையரோடும், மக்களோடும், மாபெருஞ் சுற்றத்தினரோடும் கூடிச் சென்று அவன் உறை மலையை வணங்கி வழிபடுவீராக." என, உடன் அழைக்கும் வழுதியார் செயல், அவர் தம் கடவுட் பத்தியைப் பலர் அறியத் துணைபுரிதல் காண்க!

"கடலும் கானலும் போலவும்,
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்,
எல்லாம், வேறுவேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்
தாங்கும் நீர்நிலை ஓங்கிரும் குன்றம்."

"இளவெயில் வளாவ இருள்வளர் வெனப்
பொன்புனை உடுக்கையோன் புணர்ந்து அமர்நிலை."

"சுனையெலாம் நீலம் மலரச் சுனைசூழ்
சினையெலாம் செயலை மலரக் காய்கனி
உறழ நனை வேங்கை ஒள்ளிணர் மலர
மாயோன் ஒத்த."

"நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்?"

"தையலவரொடும், தந்தார் அவரொடும்
கைம்மக வோடும், காதலவ ரொடும்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின்."
(பரிபாடல்: கரு)

## அ. கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி

பாண்டிய நாடாண்ட பேரரசருள், பெருவழுதி என்ற பெயருடையார் பலராவர்; ஆனல், பெரும்பெயர் வழுதி என்ற பெயருடையான் இவன் ஒருவனே. பெரும்பெயர் என்ற தொடர், மிக்க புகழ் எனும் பொருளுடையதாம்: "பெரும்பெயர்ச் சாத்தன்," "பெரும் பெயர் மூதூர்," (புறம்: கஎஅ, ௩௬அ) என்ற தொடர்களைக் காண்க. இதனல், இவ் வழுதி, வழுதியர் குலத்து வந்தாருள் எல்லாம், நிறை புகழ் உடையானுதல் வேண்டும் என்பது தெளிவாகும். இவன் பெயர்க்கு முன்வந்து வழங்கும் கருங்கை ஒள்வாள் என்ற தொடருள், கருங்கை என்பது, வாள் பிடித்துக் காழ்ப்பேறிய வலிய கைஎனப் பொருள்படும். ஆகவே, இவன் வாட்போர் வல்ல வீரனுதலும் விளங்கித் தோன் றும்; அதற்கேற்ப, இவ்வழுதி, பொன்னுன் இயன்ற முக படாத்தினையும், புள்ளிகள் பொருந்தி அணிபெறத் தோன் றும் மத்தகத்தினையும், அணுகுதற்கரிய ஆற்றலையும், மணம் நாறும் மதநீரையும், கயிற்ருற் கட்டுண்டு தொங்கும் மணி ஒலிக்கும் இரு பக்கங்களையும், பெரிய கையையும் உடைய யானையின் பெரிய கழுத்திடத்தே அமர்ந்து, யானை, கொலைத்தொழில் வல்ல கூற்றுவனேபோல், காலால் அடு தலும், கையால் ஊக்குதலுமன்றித் தன் கூரிய கோடே படையாகப் பகைவர்தம் கோட்டைக்கதவைக் குத்திப் பாழ் செய்யும் கொலைத்தொழில் கண்டும் நிலைகலங்கா நெஞ்சுரன் உடையான் எனப் பாராட்டப் பெறுதலும் காண்க.

கொற்றத்தால் சிறந்த இக் கோவேந்தன், கொடை யாலும் சிறந்தோனுவன். தன்னைப் பாடி வருவார், வேண்டு வனவற்றை விளங்க உரைக்கா முன்னரே, அவர் முகத்தை நோக்கும் அவ்வளவிலேயே, அவர் அகத்துள வேட்கையை அறிந்துணர்ந்து, அவர் விரும்புவ அளித்து அனுப்பும், அறிவும் அருளும் ஒருங்கே உடையனுவன். இவன்பால் பொருள்பெற வேண்டும் என்ற ஆசைப்பெருக்கால், பாணர், கூத்தர், பொருநர், புலவர் முதலாம் இரவலர்,

இடையே சிற்றாறும் அற்றனவும், உறுதுயர் தருவனவும், உண்ணுநீர் அற்றனவும், நடக்க நடக்க நீண்டே செல்வன வும், ஆறலை கள்வர், அம்பேவி அலைக்க, அழிந்தார் உடற் குவியல்மீது பருந்திருந்து வருந்தும் கொடுமை யுடையன வும் ஆய வழிகள் பலவற்றை, அவற்றின் கொடுமையையும் எண்ணாது கடந்து வருவர் எனின், வழுதியின் வள்ளன் மைச் சிறப்பினை வாய்விட்டுப் புகழ்தலும் ஒண்ணுமோ!

இவ்வாறு, கொற்றமும் கொடையும் குறைவறப் பெற் றிருந்த வழுதி போலும் வேந்தர் வாழின், உலகம் பெரு வாழ்வு பெறும்; ஆகவே அத்தகையார் ஆட்சி, நிலைத்த ஆட்சியாய் நின்று விளங்குதல் வேண்டும் என்று வேண்டி னர் அவன் காலத்துப் பெரியோர் சிலர். அவருள் இரும் பிடர்த்தலையார் எனும் புலவரும் ஒருவர். அவர், அவனை அடைந்து, "அரசே! உலகமே நிலைகலங்கி, உருவற்று அழியும் காலம் வந்தழியும், நின் அரச ஆணை அழியாது வாழ வேண்டுகின்றேன்," என வாழத்தியருளினார்; வாழ்க வழுதி! வளர்க அவன் கொடையும் கொற்றமும்!

"உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக் கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி உய்த்த நேஎம் நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக!
செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ!
பொன்னோடைப், புகரணி நுதல்,
துன்னருந் திறல், கமழ் கடாஅத்து,
எயிறு படையாக, எயில் கதவிடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கின்,
பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து,
மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாள் பெரும்பெயர் வழுதி!
நிலம்பெயரினும், நின்சொல்பெயரல்!
பொலங்கழற்கால், புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப!

ஊரில்ல, உயவரிய,
நீரில்ல, நீளிடைய,
பார்வல் இருக்கைக் கவிகண் நோக்கின்
செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையின் இரவலர் வருவர்; அது
முன்னம் முகத்தின் உணர்ந்துஅவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே." (புறம்: ௩)

கருங்கை யொள்வாட் பெரும்பெயர்வழுதி, வழிவழி உலகாண்ட பெரியோர் வழிவந்தவனவன்; கற்பிற் சிறந்த காரிகையா ளொருத்தியை மனைவியாப்பெற்ற மாண்புடையனவன் என்பனவும் இப் பாட்டால் புலப்படுதல் அறிக.

இவ்வாறு இவன் பெருமையெலாம் தோன்றப் பாராட்டிய புலவர் இரும்பிடர்த் தலையார், கரிகாற் பெருவளத்தான் பெரு வாழ்விற்குத் துணைபுரிந்த அம்மானவர் எனக் கூறுப ஆதலின், இவ் வழுதி, அக் கரிகாலன் காலத்தவனவன் என்று கொள்க.

## ௬௧. கானப்பேர் எயில்கடந்த உக்கிரப்பெருவழுதி

உக்கிரப்பெருவழுதி காலத்தே, இன்று, காளையார் கோயில் என வழங்கும் கானப்பேர் எனும் இடத்தே, வேங்கைமார்பன் என்பானொரு பெருவீரன் வாழ்ந்திருந்தான்; அவன், தன் நகரைச்சூழ, நிலவெல்லையும் கடந்து விட்டதோ என மதிக்கத்தக்க, ஆழ்ந்த அகழியைத் தோண்டியும், வான எல்லையையும் கடந்துவிட்டதோ எனக் கருதுமாறு உயர்ந்த மதிலை எடுத்தும் அரிய கோட்டையொன்றை அமைத்தான்; அதைச் சூழ ஒளியும் நுழையாவாறு நெருங்கிய மரங்கள் செறிந்த காவற் காட்டை வளர்த்து வைத்தான்; இவற்றிற்கெல்லாம் மேலாக, அவ் வரணைச் சூழச் சிற்றரண்கள் பலவற்றையும் அமைத்து வைத்தான்; தன் நாட்டகத்தே, இத்தகைய அரண்கள் இடம் பெறுவதோ, அவற்றை வாழ்விடமாகக் கொண்டு, தனக்கு அடங்காதார் வாழ்வதோ, தன் ஆட்சிக்குக் கேடாம் என அறிந்த உக்கிரப் பெருவழுதி, ஒரு பெரும் படையுடன் சென்று, வேங்கை மார்பனை வென்று, அக் கானப் பேரெயிலைக் கைப்பற்றிக் கொண்டான்; எயிலை இழந்த வேங்கை மார்பன், வறிதே இராது, அதை மீளவும் கைப்பற்ற அரும் பெரும் முயற்சிகளெல்லாம் எடுத்துப் பார்த்தான்; ஆனால், உக்கிரப்பெருவழுதியை வெல்வதோ, அவன் கைப்பற்றிய கோட்டையை மீட்பதோ இயலாது என்பதை உணர்ந்தான்; காய்ச்சிய இரும்புண்ட நீரை மீட்டலும் கூடும்: ஆனால், உக்கிரப்பெருவழுதி கைப்பற்றிய கானப்பேரெயிலை மீட்டல் இயலாது என்பதுணர்ந்து வருந்தி வறிதே மீண்டான்; உக்கிரப்பெருவழுதியின் பேராண்மை விளங்கும், இவ் வெற்றிச்செயலை, அவன் பெயரோடு இணைத்துப் பாராட்டினர் மக்கள்; ஐயூர் மூலங்கிழார் எனும் புலவர், அழகிய பாவொன்று பாடிப் பாராட்டினார்:

'புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்!
நிலவரை இறந்த குண்டுகண் அகழி,

வான்தோய் வன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன உருவ ஞாயில்,
கதிர் நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும்பு உடுத்த கானப் பேரெயில்,
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்புஉண் நீரினும் மீட்டற்கு அரிது என
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே!
இகழுநர் இசையொடு மாயப்,
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே!" (புறம்: உக)

கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு தனிச்சிறப்புடையது: தமிழ்ச்சங்கங்கள் மூன்றனுள், கடைச்சங்கத்தைப் புரந்த பாண்டிய அரசர்களுள் உக்கிரப்பெருவழுதியும் ஒருவனாவன்; கடைச்சங்கத்தின் இறுதிக்காலத்தே வாழ்ந்த இவன், அச் சங்கம் கலைந்துவிடுமோ என்ற அச்சம் உடையனாயினான்; அதனால், அச் சங்கப் புலவர்களின் பாக்களை ஆராய்ந்து, அவற்றுள் அகத்திணை தழுவிய பாடல்களைத் தேர்ந்து, அவற்றுள்ளும், பதின்மூன்றடிச் சிறுமையும், முப்பத்தோரடிப் பெருமையும் கொண்ட நானூறு பாக்களை எடுத்து, அகநானூறு அல்லது நெடுந்தொகை என்ற பெயரால் தொகுத்து அளித்தான்; இவ் அரிய தொண்டில், இவனுக்கு உற்றதுணையாய் உதவிபுரிந்தவர், மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார், உருத்திர சன்மனார் எனும் ஊமைப் புலவராவர். திருக்குறள் அரங்கேறிய அவைக்குத் தலைமை வகித்த தனிப்பெருமையையும் இவனுக்கே அளிப்பாரும் உளர்.

ஆற்றற் பெருமையால், அருந்தமிழ்த் தொண்டின் சிறப்பால் ஆன்றோர் போற்ற வாழ்ந்த உக்கிரப்பெரு வழுதிபால், அக்காலத் தமிழரசர்களபால் காண இயலா நற்பண்பொன்றும் இருக்கக் காண்கிறோம்; உலகம் போற்றும் உயர்நிலைபெற்றுத் திகழ்ந்த தமிழகம், இன்று

உலகோர் துணைவேண்டி நிற்கும் தாழ்நிலையுற்றதற்குத், தமிழரசர்களிடையே, ஒற்றுமை நிலவுவதற்கு மாறாகப் பகையும், பொறாமையும் நிலைபெற்றிருந்தமையே காரணமாம்; அவர்கள் பகையும், பொறாமையும் கொண்டிருந்த காரணத்தால், அவர்கள் தங்களுக்குள்ளேயே, பல போர்களை இடைவிடாது மேற்கொண்டு, தமிழ்நாட்டின் வாழ்வும், வளமும், வனப்பும் குன்ற வழி செய்துவிட்டனர்; உக்கிரப்பெருவழுதி, தமிழரசர்கள் செய்த தவற்றினை உணர்ந்தவன்; ஆகவே, தன் காலத்தே, சேர, சோழ நாடுகளில் செங்கோலோச்சியிருந்த மாரிவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆய இருபெரு வேந்தரோடும் பகைகொண்டு வாழாமல், பெருநட்புடையனாய் வாழ்ந்திருந்தான்.

தமிழரசர்களிடையே நிலவிய இவ்வொற்றுமை, அக்காலத் தமிழ்ப்புலவர்களுக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது; அவ்வொற்றுமை, அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவையார் உள்ளத்தே உவகைப்பெருக்கையும், இவ்வொற்றுமை இன்றேபோல் என்றும் நிலைபெற்று வாழாதா என்ற ஆசைப்பெருக்கையும் எழச்செய்தது; மூவரும் நட்புப்பூண்டு ஒருங்கிருந்த காட்சியைக் கண்ணாரக் கண்டு களித்து நின்ற ஔவையார், அக் காட்சி நிலைபெற்று வாழ்தற்காம் நல்லுரைகள் சிலவற்றையும் அவர்க்கு அளித்தார்:

“நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும், தம்மொடு செல்லா;
வேற்றோ ராயினும் நோற்றோர்க் கொழியும்.”

“இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி,
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை;
ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்!
யானறி அளவையோ இதுவே.” (புறம்: ௩௬௭)

தமிழ்ப்புலவரோடு இருந்து தமிழை வளர்த்தும், தமிழரசரோடிருந்து தமிழ்நாட்டு நல்வாழ்விற்குத் துணை புரிந்தும் புலவர் போற்ற வாழ்ந்த கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி தானும் ஓர் புலவனாவன்; தம் காலத்து மக்களிடையே காணலாம் மாண்புறு நிகழ்ச்சிகளையெல்லாம், பின்னுள்ளோரும் அறிந்து, அதன் வழி ஒழுகுதல்வேண்டும் என்ற உயர் நோக்குடையராய், அவற்றைத் தம் பாவிடை அமைத்துப் பாராட்டலே புலவர் வழக்கமாம்; அதற்கேற்பவே, உக்கிரப்பெருவழுதி யாரும், தம் காலத்துத் தமிழ் மகள் ஒருத்தியின் மனநலம் விளக்கும் அழகிய பாட்டொன்றைப் பாடியுள்ளார்:

கணவன் செய்யும் எத்துணைப் பெரிய தவற்றினையும் மறந்து மன்னிக்கும் மாண்புடையவள் தமிழ் மகள் என்ப; வள்ளுவர் கண்ட தமிழ்மகள் ஒருத்தி, "எழுதுங்கால், கோல் காணாக் கண்ணேபோல் கொண்கன், பழிகாணேன் கண்ட விடத்து," (குறள்: கஉஉரு) எனக் கூறுவது காண்க. உக்கிரப்பெருவழுதியார் அறிந்த ஒரு தமிழ்மகள், "பரத்தையர் உறவுபூண்டு, பழிநிறை வாழ்வினனாய தலைவன், என் மனைநோக்கி வந்தவிடத்து, அவன் தவறு கண்டு, 'அன்பிலை; கொடியை,' என்றெல்லாம் கடிந்துரைக்கக் கருதி யிருந்தேனாகவும், என் நெஞ்சம், நன்கு உழப்பெற்று உலர்ந்து புழுதியான ஒரு நிலத்தில் பெருமழை பெய்தக்கால், அப் புழுதி கரைந்து, குழைந்து போவதேபோல், அவன் செய்த பெருந்தலையளியைக் கண்டவுடனே, நெகிழ்ந்து, அவன் செய்த தவற்றினையும், என்னையும் மறந்து அவனோடு கலந்து ஒன்றிவிட்டது," என்று கூறுகிறாள்; இத் தமிழ்மகளின் தன்னேரில்லாச் சிறப்பினைப் புலவர் உக்கிரப்பெருவழுதியார் உணர்ந்து பாடியுள்ளார்:

"வளங் கெழு ஊரனைப்
புலத்தல் கூடுமோ? தோழி!
..................................
சிறுபுறம் கவையின னாக, உறுபெயல்
தண் துளிக் கேற்ற பலவுழு செஞ்செய்

மண்போல் நெகிழ்ந்து அவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய அறிவி னேற்கே." (அகம்: உகசு)

மக்கள் மனவளம் உணரும் மாண்புடையராய நம் வழுதியார், மண்வளமும், மழைவளமும் உணர்ந்து, தன் நாட்டுக் குடிவளமும் உணர்ந்தவராவர்; நிலம் நன்கு புழுதியாமாறு சால் பல ஓட்டி உழுதல் நிலத்திற்கு வளமாம்; நீரை நிறையக் கொள்ளற்கும் வழியாம்; "தொடிப் புழுதி கஃசா உணக்கின், பிடித் தெருவும் வேண்டாது சாலப் படும்," என்ப; இவ் வுண்மையை உணர்ந்து உழவுத் தொழில் வளர்தற்காம் உணர்வூட்டிய பெருமையும், பெரு வழுதியார்க்கு உண்டு என்பது, ஈண்டுக் காட்டிய அவர் பாட்டால் இனிது விளங்குவது அறிக.

# ௬௦. கீரஞ்சாத்தன்

கீரஞ்சாத்தன், பாண்டியர்குலத்து வந்தவன் என்பதை உறுதி செய்யும் நல்ல சான்றுகள் எவையும் கிடைத்தில; அவனைப் பாராட்டி ஆவூர் மூலங்கிழார் பாடிய பாட்டைக் குறிப்பிடுங்கால், "பாண்டியன் கீரஞ்சாத்தனை ஆவூர் மூலங்கிழார் பாடியது" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதொன்றே அதை உறுதி செய்யும் சான்றாகும். பேரரசர் வழி வராது, அவர் ஆட்சியின்கீழ்ப் பணியாற்றும் பிறரும், அப் பேரரசர் பெயர்களை மேற்கொள்வது வழக்கமாம்; ஈண்டுக் கூறப்பெறும், கீரஞ்சாத்தனும் அவ்வாறு வந்த பாண்டியனே எனக் கோடலும் கூடும். கீரன், சாத்தன் என்பன அக்கால மக்கள் பயில மேற்கொள்ளும் பெயர்களாம்; யாதோ ஒருவகையால், பாண்டியரோடு தொடர்புடையனாய இவன், கீரன் என்பானுக்கு மகனாய்ச், சாத்தன் எனும் இயற்பெயர் பூண்டு வாழ்ந்தமையான், பாண்டியன் கீரஞ்சாத்தன் என, அழைக்கப் பெற்றுள்ளான்.

கீரஞ்சாத்தன் கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்தவனாவன். அவனைக் கண்டு பாராட்டிய ஆவூர் மூலங்கிழார் அவற்றைக் கண்டு களித்து அணிபெறப் பாடியுள்ளார். ஆவூர் மூலங்கிழார், பாண்டியன் கீரஞ்சாத்தன் வாழும் பேரூர்சென்று அவன் வாழ்மனையினைக் கண்டார்; ஆங்குக் கட்டுத்தறிகளில் கட்டப்பெற்றுள்ள அவன் யானைகள், மதம் மிக்கு, கட்டுண்டிருப்பதை வெறுத்துப் பெருமூச்சு விட்டு அசைந்தாடி நிற்கும் நிலையினையும், குதிரைக்கொட்டில்களில் வாழும் குதிரைகள், ஆங்கு அடையுண்டிருப்பது பொறாது கனைத்துப் பெருங்குரல் எழுப்பி நிற்கும் நிலையினையும், கண்டு அவன் படைப்பெருமையினை வியந்து நின்றார்; பின்னர், அவன் மனையடைந்து, புது மணல் பரப்பி அழகு செய்யப்பெற்ற முன்றிலைக் கண்டு மகிழ்ந்தார்; அம்மகிழ்ச்சியோடு மனையுட் புகுந்தார்; ஆண்டு, "பசியில்லை; ஆகவே இப்போது உணவு வேண்டாம்" என உரைத்து மறுப்பாரையும் விடானாய், "என்

ஞெடு அமர்ந்து உண்ணத்தான் வேண்டும்; என்மேல் ஆணை" என்று கூறி, அவரை உண்பித்து மகிழும் சாத்தனைக் கண்டார்; இரப்பார்க்கு எளியனும் அவன் பெருமையை வாழ்த்தினர்; அந்நிலையில், இவ்வாறு இரப்பார்க்கு இனியனாகிய இவன் போர்க்களம் புகினும், இரக்க உள்ளம் உடைமையால், எதிரிகளை அழித்தல் ஒழித்து அடங்கி மீள்வனோ என, அஞ்சினர்; அவ் வெண்ணத்தால் அறிவு கலங்கி அமர்ந்திருந்த காலை, சிலர் ஓடிவந்து, "நின் வீரர் போர்க்களம் நோக்கிப் போங்காலைக் கூறிய வஞ்சினம் மறந்து, பகைவர் படைக்குப் புறங்காட்டி விட்டனர்" என்று சாத்தன்பால் கூறினர்; அவர் கூறியன கேட்ட சாத்தன், சரேலெனப் பாய்ந்தெழுந்து போர்க்களம் புகுந்து, தோற்றோடி வரும் தன் வீரரைத் தடுத்து நிறுத்தி, அப்படைக்குத் தானே தலைமை தாங்கிச் சென்று, கடும் போரிட்டுக் களம் வென்றான். சாத்தன், சிறிது நாழிகைக்கு முன்னர்க் காட்டிய அன்புள்ளமும், இப்போது காட்டிய மறவுள்ளமும், ஆவூர் மூலங்கிழார்க்குப் பெருமகிழ்ச்சி அளித்தன; மகிழ்ச்சியால் அவர் வாயினின்றும் மலர்ந்தது ஒரு பாட்டு; அவன்பால் அமைந்து கிடந்த அவ் அருளும், ஆற்றலும் அனைவர்க்கும் உண்டாகுக!

> "கந்து முனிந்து உயிர்க்கும் யானையொடு, பணை முனிந்து
> காலியற் புரவி ஆலும் ஆங்கண்,
> மணல்மலி முற்றம் புக்க சான்றோர்
> உண்ணு ராயினும், தன்னொடு சூளுற்று
> உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்,
> ஈண்டோ இன்சா யலனே; வேண்டார்
> எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பில்
> கள்ளுடைக் கலத்தர், உள்ளோர்க் கூறிய
> நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
> அஞ்சி நீங்குங் காலை
> ஏம மாகத் தாம் முந்துறுமே." (புறம்: ௱௭௮)

# கக. குறுவழுதியார்

பாண்டியர் குடியில், பெருவழுதி, குறுவழுதி என்ற பெயர்கள் பயில மேற்கொள்ளப் பெறும்; அண்டர் மகன் குறுவழுதியார் என்பாரைப்பற்றி முதற்கண் அறிந்தோம்; அவர் வேறு; இக் குறுவழுதியார் வேறு; இவர் ஆற்றற் பெருமையால், அரசியற் சிறப்பால் அறியப்பட்டவரல்லர்; புலவராய்ப் புகழ்பெற்ற பாண்டிய வேந்தருள் இக் குறு வழுதியும் ஒருவர். இவர் பாடிய பாட்டொன்று நெடுந் தொகை, மணிமிடைபவளத்தின்கண் இடம் பெற்றுளது.

வரையாது வந்து செல்லும் ஒரு தலைவன்பால் "தலைவ! நின்னைக் காணப்பெறுக் காலங்களில், தலைவி, நின்னொடு கூடி மகிழும் இடங்களாய, கழியையும், கடற் கரைச்சோலையையும் காணுந்தோறும், 'தலைவர் இன்று வாரார் போலும்' என வாய்விட்டுக் கூறி வருந்துவள்; வருந்துவளாயினும், நின்னோடு பழகிய இடத்தைப் பார்ப்ப தனால், ஓர் அளவு நின்னைக் கண்டதேபோல் சிறிது மகிழ்ந் தவளாய்ப் பிரிவுத் துயரைப் பொறுத்திருப்பாள்; இனி அதற்கும் இடன் இன்று; தாய், தன் மகள் பண்டினும் பேரழகு உடையளாதல் அறிந்து, அவள் அவ்வழகோடு புறத்தே போதல், அவள் பெண்மைக்குக் கேடுண்டாதலும் கூடும் எனும் அச்சம் உடையளாய் இற்செறித்து விட்டாள்; இற்செறிக்குங்கால், அவள் தலைவியின் பேரழகு கண்டு விட்ட பெருமூச்சு, தன் மகட்கு மணவினையினை விரைந்து மேற்கோடற்கண் உள்ள அவள் உள்ளத்துடிப்பை உணர்த்துவதாகும்; ஆகவே, வேற்றுவரைவு வந்துறுமோ என்ற அச்சமும் உடையளாயினள். ஆகவே, இனி, நீவிர் இருவீரும் பண்டேபோல் களவில் கூடி மகிழ்தல் இயலாது; தலைவியின் கற்பும், நின் காதலும் வாழவேண்டின், வரைந்து கோடலை விரைந்து மேற்கோடல் வேண்டும்" என்று தோழி கூறிய கருத்துரை அடங்கியுளது அப் பாட்டில்.

மணப்பருவம் உற்ற மகள், தன் மாண்பினைப் போற்றிக் காத்துக்கொள்ளும் ஆற்றல் உடையளாகாள். அதைப்போற்

றிக் காத்தல் பெற்றெடுத்த தாயின் பெருங் கடனும் என் பதைக் கூறுமாற் கூறும் வழுதியார் அறிவுரையினை அறிந்து நடப்பார் இக்காலத்து அரியர் போலும்! தாய்க்குரிய தனிக்கடமை இஃது என உரைத்த வழுதியார் வாழ்க பல்லாண்டு!

“பின்னுவிட நெறித்த கூந்தலும், பொன்னென
ஆகத்து அரும்பிய சுணங்கும், வம்புவிடக்
கண்ணுருத் தெழுதரு முலையும் நோக்கி,
எல்லினை பெரிது ’ எனப் பன்மாண் கூறிப்
பெருந்தோள் அடைய முயங்கி நீடுநினைந்து
அருங்கடிப் படுத்தனள் யாயே; கடுஞ்செலல்
வாள்சுறா வழங்கும், வளைமேய் பெருந்துறைக்
கனைத்த நெய்தல் கண்போல் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ
மாலை மணியிதழ் கூம்பக் காலைக்
கள்நாறு காவியொடு தண்ணென மலரும்
கழியும் கானலும் காண்தொறும், பல புலந்து
வாரார் கொல் எனப் பருவரும்
தாரார் மார்ப! நீ தணந்த ஞான்றே.”

(அகம்: 150)

## கஉ. கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி

பண்டைத் தமிழ் அரசர்கள், போர், போர், போர் என என்றும் போரே மேற்கொண்டு வாழ்ந்தனராதலின், அவருள் பலர், தங்கள் அரண்மனையிலேயே இறவாது, தாம் மேற்கொண்டு சென்ற போர்க்களங்களிலேயே இறந்தனராவர்; அவ்வாறு இறந்தார்களைக் குறிப்பிடுங்கால், அவர் தம் இறப்பிற்குக் காரணமாய, அப்போர்க்களப் பெயர்களை, அவர் பெயரோடு இணைத்து வழங்கினர் அக்கால மக்கள். காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி, குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன், யானைமேல் துஞ்சிய இராசகேசரி இராசாதிராசன் என்ற பெயர்களைக் காண்க. இவ்வரசர்களைப் போன்றே, மாறன்வழுதியும் கூடகாரம் எனும் இடத்தே உயிர்நீத்தமையான், கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி என அழைக்கப் பெற்றுளான். மாறன் வழுதி இறந்த கூடகாரம் யாண்டுளது? அவன் ஆண்டு இறப்பதற்குக் காரணமாய அவன் பகைவர் யார்? என்பன விளங்கவில்லை.

கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, ஆற்றல் மிக்க அரசனாவன்; அவனைப் பாடிய புலவர் இருவரும் அவன் போர்வன்மையினையே விதந்தோதிப் பாராட்டியுள்ளனர். அவனைப் பாராட்டிய புலவருள் ஒருவராய ஐயூர் முடவனார், "கடல்நீர் பொங்கி எழுமாயின், அதைத் தடுத்து நிறுத்த வல்ல அணையினை யாண்டும் காணல் இயலாது; அளவின்றிப் பெருகி எழுந்து கொழுந்துவிட்டெரியும் தீயால் அழிவுறாமல், உயிர்களைக் காத்துப் பேணவல்ல இடம் உலகத்தில் எங்கும் இல்லை; பெருமலைகளையும் பெயர்த்தெறியும் பேராற்றல் கொண்டு சுழன்றடிக்கும் பேய்க்காற்றினைத் தடுத்து நிறுத்தவல்ல ஆற்றல், உலகில் எப்பொருட்கும் இல்லை; அதைப் போன்றே, வழுதியின் சினத்தைத் தாங்கும் ஆற்றல் ஒருவர்க்கும் உண்டாகாது; அவன் வெகுளியை

வென்று அடக்கல் எவர்க்கும் இயலாது; வழுதி சினந்தால் வாழார் எவரும்; தமிழகம் அரசர்க்கெல்லாம் பொதுவாகும்; அதை உரிமை கொண்டாடல் அரசர் அனைவர்க்கும் பொருந்தும் என்ற சொல்லைக் கேட்கவும் பொறுதவன் வழுதி; அவன், தமிழகம் அனைத்தினையும், தன் ஒரு குடைக்கீழ் வைத்துத் தான் ஒருவனாகவே ஆளுதல் வேண்டும் என்ற பேராசையும், அப்பேராசையினைக் குறைவற நிறைவேற்றுதற்காம் பேராற்றலும் உடையவன்; அவன் எண்ணம் அறிந்து, 'திறையிடுக' என அவன் கேட்பதற்கு முன்னரே, கொண்டுபோய்க் கொடுத்து, 'கொள்க' எனக் கூறி நிற்கும் அரசர்களே உயிர்பெற்றுப் பிழைப்பர்; கொடாதார் நிலை, அந்தோ! மிக மிக இரங்கத் தக்கதாம்; அவன் ஆணைக்கு அடங்காது ஒருநாள் வாழ்தலும் இயலாது; பலநாள் உழைத்து உழைத்துத் தாம் எடுத்த புற்றினின்றும் புறப்போந்தமை ஒன்றினாலேயே, ஞாயிற்றின் வெம்மையால் தாக்குண்டு, ஒருநாள் வாழவும் கொடுத்து வைக்காது, தம் புற்றையும இழந்து, தாமும் இறந்துபோகும் கரையான்களைப் போன்றே, காலமெல்லாம் அரிதின் முயன்று தேடிப் பெற்ற தம் பேராசை அவனுக்கடங்காமையால், ஒருநாள் அளவும் ஆண்டு மகிழாமல் இழந்து அழிவுறுவர்; அத்துணை ஆற்றல் உடையான் மாறன்வழுதி" என்று கூறிப் பாராட்டியுள்ளார்:

"நீர்மிகின் சிறையும் இல்லை; தீமிகின்,
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை;
வளிமிகின், வலியும் இல்லை; ஒளிமிக்கு
அவற்றோ ரன்ன சினப்போர் வழுதி,
'தண்டமிழ் பொது' எனப் பொறாஅன்; போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயின், கொள்கெனக்
கொடுத்த மன்னர், நடுக்கற் றனரே;
அளியரோ! அளியர்! அவன் அளிஇழந் தோரே;
நுண்பல சிதலை, அரிதுமுயன் றெடுத்த
செம்புற்று ஈயல் போல
ஒருபகல் வாழ்க்கைக்கு உலமரு வோரே." (புறம்: ௫௧

மாறன் வழுதி, ஒருகால் வடநாட்டார் சிலர்மீது சினந்து படையெடுத்துச் சென்றான்; சினந்து செல்லும் செழியன் காட்சி, நெடிய பெரியமலை முழைபின் கண்ணே உறங்கிக் கிடந்த தன் உறக்கம் ஒழித்து எழுந்து, உறுசுவை ஊனை உண்ணவேண்டும் என்ற ஆசை உள் நின்று உந்த, அவ்விரையைப் பெறுவான் வேண்டி, தான் விரும்பிய இடம் நோக்கிச் செல்லும் சினப்புலிக் காட்சி யொத்திருந்தது. இவ்வாறு போர் வெறிகொண்டு போதரும் வழுதியின் பகைவர் யாவர் என்பதை மக்கள் தெளிய அறியார்; ஆயினும், அவன் செல்வது வடநாடு நோக்கி என்பதை அறிவர். வடநாடு, வாழ்வும் வனப்பும் பொருந்திய வளமார் நாடு; அந்நாட்டு ஊர்தோறும் மீன்சுடுவார் எழுப்பும் புகை, புலால் மணம்கமழப் படர்ந்து எழுந்து, வயலருகே வானுற வளர்ந்து நிற்கும் மருதமரக்கோடுகளைச் சூழ்ந்து நிற்கும்; நரைதிரை தோன்றி மூத்த அந்நாட்டு நல்லோர், செயல்புரி காலம் கடந்தவராகவே, வேறு உறுதொழில் புரியாராய்ப் பலிபெறு தூண் நிற்கும் ஊர்மன்றத்தே இருந்து, வட்டிழைத்து ஆடி மகிழ்வர். இவ்வாறு வளத்தாலும், வாழ்வாலும் சிறந்த அந்நாடுகள் அழிதல் உறுதி; அந் நாட்டுவளம் குன்றும்; அந் நாட்டு வாழ்வை வெறுத்து, மக்கள் வேறிடம் சென்று விடுவர்; ஊர்மன்றத்தே பலியிடல் ஒழியும்; முதியோர் இழைத்த வட்டுக்குழிகள், காட்டுக் கோழிகளின் முட்டையால் மறைப்புறும்; பகைவர் நாட்டிற்கு வர இருக்கும் இவ்வழிவுக்காட்சியைக் கண்முன் கொணர்ந்து காணும் அம்மக்கள், அவ்வடநாட்டரசருள், அவ்வாறு தம் நாடழிய வாடப்போகும் அரசர் யாவரோ? என ஏங்கி இரங்குவாராயினர். மாறன் வழுதியின் மாற்றருந்திறலை இவ்வாறு பாடி மகிழ்வர் மருதன் இளநாகனார் எனும் மற்றொரு புலவர்:

"அணங்குடை நெடுங்கோட்டு அளையகம் முனைஇ,
முணங்குநிமிர் வயமான் முழுவலி ஒருத்தல்,
ஊன்நசை உள்ளம் துரப்ப, இரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு,

வடபுல மன்னர் வாட, அடல் குறித்து
இன்னா வெம்போர் இயல்தேர் வழுதி!
இதுநீ கண்ணிய தாயின், இருநிலத்து
யார்கொல் அளியர் தாமே? ஊர்தொறும்
மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி
வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரின் ஒரீஇ இனியே,
கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் நிறையப் பல்பொறிக்
கான வாரணம் ஈனும்
காடாகி விளியும் நாடுடை யோரே." (புறம்: ருஉ)

## ௧௩. சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

வேந்தர்கள் இன்பம் விழைந்து வாழும் இடங்களாய இலவந்திகைப்பள்ளி, வெள்ளியம்பலங்களைப்போலச்சித்திர மாடமும் ஒன்றாம்; சித்திரமாடம், ஓவியச் சாலை அல்லது ஓவியக் கூடமாம் என்ப; பழந்தமிழ் அரசர்கள், காவிய வளர்ச்சியில் கருத்துடையராதலைப் போன்றே, ஓவிய வளர்ச்சியிலும் கருத்துடையராவர். நன்மாறன் ஓவியக் கூடம் ஒன்றில் இருந்து ஓவியத்தில் ஊன்றிய உள்ளம் உடையனாய், ஆண்டுள்ள ஓவியங்களில் ஊறிய உணர்வினனாய் மகிழ்ந்து வாழ்ந்திருந்த காலத்தே, மாண்டமையால் போலும், சித்திரமாடத்துத் துஞ்சியநன்மாறன் என, அழைக்கப்பெற்றுள்ளான்.

கோவலன் கொலைக்குக் காரணமாய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியற்குப்பின், மதுரை அரசு கட்டிலில் அமர்ந்த அவன் மகன் வெற்றிவேற் செழியனே, சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறனாவன்; நன்மாறன் என்ற இப் பெயர், அவன் அரசுகட்டில் ஏறியபின்னர் மேற் கொண்ட பெயராம் எனக் கொள்வாரும் உளர். அவர்கள் அவ்வாறு கோடற்குரிய சான்று எதையும் காட்டின ரல்லர்; கோவலன் கொலைநிகழ்ந்த காலத்தே வாழ்ந்தவர் சீத்தலைச் சாத்தனார்; அவர் நன்மாறனைப் பாராட்டி யுள்ளார். ஆகவே, நன்மாறன், அக்காலத்து அரசாண் டிருந்த வெற்றிவேற் செழியனேயாவன் எனக் கொண்ட னரோ அறியேம்; ஆனால், ஒரு குலத்தில், ஒரே காலத்தில் பலர் பிறந்து நாட்டின் பல்வேறு பகுதியினும் நாடாண் டிருத்தல் அந்நாள் வழக்கமாம் ஆதலின், அவ்வாறு கோடல் பொருந்தாது; வெற்றிவேற் செழியன் வேறு; சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் வேறு என்றே கொள்க.

நன்மாறன் கலையுள்ளம் வாய்க்கப் பெற்றிருந்ததற் கேற்ப, கவின்மிகு தோற்றமும் உடையனாவன்; ஆரம் அணிந்து அகன்று விளங்கும் அழகிய மார்பையும், மழைக்

தாள்வரை நீண்டு மூதறிவுடையன் எனக்காட்டும் கைகளை யுங்கொண்ட அவன் தோற்றம், காண்பார் தம் கண்கட்குக் களிப்பூட்டும் காட்சித்தாதல் அறிக. இவ்வாறு புற அழகெல்லாம் பொலிவுறப்பெற்ற அவன், அகத்திற்கு அணி தரும் அருங்குணங்களாலும் நிறைந்த ஆன்றோனவன். வருவார்க்குப், பொருள்களை வாரிவாரி வழங்குவதில் வல்லனாய அவன், பொய்கூறி வாழும் வாழ்க்கையில் வல்லனல்லன்; இருளை அழித்து இல்லையாக்கும் ஞாயிறேபோல், பகைவரைப் பாழ்செய்யும் பேராற்றல் பெற்றுள நன்மாறன், தண்ணொளி பரப்பி இன்பம் ஊட்டும் திங்களே போல், இரவலர்தமக்குப் பெரும்பொருள் வழங்கும் பேரன்பும் உடையனவன். இவ்வாறு, எவ்வழி நோக்கினும், நல்லோனாய் நாட்டவர் போற்ற நனிசிறந்து விளங்கிய நன்மாறனை, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் கண்டு, அவன் நலமெலாம் விளங்கும் பாவொன்றைப் பாடி, நாவாரப் புகழ்ந்துள்ளார்:

'ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பின்
தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி!
வல்லை மன்ற நீ நயந்து அளித்தல்;
தேற்றாய் பெரும! பொய்யே என்றும்;
காய்சினம் தவிராது கடல்ஊர்பு எழுதரும்
ஞாயிறு அனையைநின் பகைவர்க்குத்;
திங்கள் அனையை எம்மனோர்க்கே!'' (புறம்: ருக)

# ௧௪. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

சேரவேந்தருள், செங்குட்டுவன் சிறந்து விளங்குவதைப்போன்றும், சோழவேந்தருள், கரிகாற் பெருவளத்தான் சிறந்து விளங்குவதைப்போன்றும், பாண்டியருள், பாருளோர் போற்ற வாழ்ந்தோன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவன். தலையாலங்கானத்துச் செரு வென்றோன் எனச் சிறப்பிக்கப்பெறும் இப் பாண்டியன், நெடுஞ்செழியன் என, இன்று அழைக்கப் பெறுகின்றனனேனும், அவனைப் பாடிய புலவர் பல்லோருள்ளும், அவனை நெடுஞ்செழியன் என அழைப்பார் ஒருவரையும் காண்கிலோம் "பசும்பூண்பாண்டியன்" என்ற பெயர் கொடுத்து அழைத்துள்ளனர் சிலர்: "வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்,"—பரணர் (அகம்: ௧௬௨); "விசும்பு இவர் வெண்குடைப் பசும்பூட் பாண்டியன்,"—ஈழத்துப் பூதன் தேவனார் (அகம்: ௨௩௧); "நாடு பல தந்த பசும்பூட் பாண்டியன்,"—நக்கீரர் (அகம்: ௨௫௩); "பலர் புகழ் திருவிற் பசும்பூட் பாண்டியன்,"—மதுரைக் கணக்காயனார் (அகம்: ௩௩௮) ஏனையோரெல்லாம், அவனை, "அடுபோர்ச் செழியன்," "இயல்தேர்ச் செழியன்," "கைவண் செழியன்," "கொடித்தேர்ச் செழியன்," "கொற்றச் செழியன்," "மறப்போர்ச் செழியன்" இவற்றுள் யாதேனும் ஒரு தொடரினாலேயே அழைத்துள்ளனர். இன்று, அவன் பெயர்க்கு முன்வந்து வழங்கும் நெடுமை எனும் பண்புப் பெயரடை, அவன் அன்று ஏறிய தேர்க்கே கொடுத்து வழங்கப்பெற்றுளது. "இழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன்," "காலியல் நெடுந்தேர்க் கைவண் செழியன்," "பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமான், எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்," "கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்." (அகம்: ௬௭, ௧௬௨, ௨௦௯, ௨௯௬.) ஆகவே, இவனைச், செழியன், பசும்பூட் பாண்டியன் என்ற இவ் விரு பெயர்களினாலேயே

அறிந்திருந்தனர் அக்கால மக்களும், புலவரும் என்பது தெளிவாம்.

நெடுஞ்செழியன், அரியணை ஏறுங்கால் நனிமிக இளையனவன்; அவன் ஆட்சிக்கீழ் வந்துற்ற பாண்டிய நாடு, பொதியமலைப் பல்வளமும், கொற்கைத்துறை முத்தும் பெற்றுப் பெருஞ்செல்வத்தால் பொலிவுற்றுத் திகழ்ந்தது; இதைக் கண்ணுற்றனர் அவன் பகை அரசர்கள்; யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும், ஒரு சோழனும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகியோர் அவன் பகைவராவர். இவர்கள் எழுவரும் ஒன்றுகூடி, "நாமோ நாற்படையும் நனிமிகப் பெற்ற பேரரசராவோம்; நெடுஞ்செழியன் கடிதிளையன்; அவனை வென்று பெறும்பொருள் மிகப் பலவாம்,"—என்று எண்ணிய அவர்கள், அவனை அவனூர் வாயிலிடத்திலேயே—சென்று எதிர்த்தனர்.

இளைஞனே எனினும், ஈடிலாத் திறனுடையனாய நெடுஞ்செழியன் பகைவர் செயல் அறிந்தான்; ஆற்றல் மறவரும், ஆன்றோரும் கூடிய அவையினரை நோக்கி, "யாமோ, யானையும் தேரும், மாவும் மறவரும் நிறைந்த பெரும்படை யுடையேம்; இவனோ இளையன்; இத்தகையான் நாட்டை நின்று புகழ்வார் நம்மால் நகைக்கத் தக்கோராவர்," என்பனபோலும் பொருளற்ற புல்லிய சொற்களை, என் உளம் புண்படுமாறு கூறிய, என் ஆற்றலறியா அவ் வரசர்களைப் போர்க்களத்தில் பொன்ற வென்று, அவர்களையும், அவர் போர் முரசுகளையும் ஒருங்கே கைப்பற்றி மீளேனாயின், என் ஆட்சிக்கீழ் வாழும் என் நாட்டு மக்கள், தாங்கள் சென்று பிழைப்பதற்காம் வழி காணாது, கலங்கி நின்று, 'எங்கள் நாட்டு அரசன், நனி மிகக் கொடுங்கோலனாயினன்; என் செய்வோம் நாங்கள்,' எனச் செயலற்றுக் கண்ணீர்விட்டுத் தூற்றும் பழியொடு மிடைந்த ஆட்சி மேற்கொண்டான்போல் இழிவுடையேனாகுக! ஓங்கிய சிறப்பினையும், உயர்ந்த புகழினையும் உடைய மாங்குடி மருதன் முதலாம் புலவர் பெருமக்கள்,

என்னையும், என் நாட்டையும் பாடிப் போற்றாராகுக! அவர் போற்றாமைக்குரிய பழி வந்து உறுக என்னை! பொருள் கொடுத்துப் புரக்கப்பட வேண்டியவர்களாய பாணன், பொருநன், கூத்தன் முதலாம் இரவல் மாக்கள், கண்ணீர்விட்டுக் கலங்கி நிற்குமாறு, அவர்கட்கு உறு பொருள் கொடுத்து உதவி புரியலாகா வறுமை வந்தடைக என்னை!'' என, வஞ்சினம் கூறி நின்றான் :

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர் ;
'இளையன் இவன் ;' என உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படையமை மறவரும் உடையம் யாம் ;' என்று
உறுதுப் பஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயின், பொருந்திய
என்னிழல் வாழ்நர் செல்நிழற் காணாது,
'கொடியன் எம்இறை' எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னாகுக !
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக! என் நிலவரை ;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே." (புறம்: எஉ)

வஞ்சினம் உரைத்து, விரைந்த தேர் ஏறிப் போர்க் களம் நோக்கிப் புறப்பட்டு விட்டான் நெடுஞ்செழியன்; தொன்று தொட்டு வந்த தன் முன்னோர்க்குத் தலைநகராம் தகுதி வாய்ந்த மதுரைமாநகரின் வாயிலிடத்து அமைந்த குளத்து நீரில் மூழ்கி எழுந்தான்; தன் குலமாலையாம் வேப் பந்தார் பூண்டான்; போர்ப்பறை முன்னே முழங்க, பெரு மதக்களிறேபோல் பெருமித நடைபோட்டுக் களம்நோக்கி நடந்தான்; செல்லும் செழியனையும், அவன் அரணகத்தே

வந்து தங்கியுள பகைவர் படைப் பெருமையினையும் நோக்கினார், இடைக்குன்றூர் கிழார் எனும் அவன் அவைக்களப் புலவர் ஒருவர். வந்துள்ளவர் மிகப்பலர் எனினும், அவரெல்லாம், இவன் ஆற்றல்முன் என்னுவர்? அவர்கள் அத்தனைபேரும் அழிந்தொழிவது உறுதி; ஆனால், பகற்பொழுது சிறிதே இருப்பதால், அவருள் ஒரு சிலர் உயிர் பிழைத்து உய்தலும் ஒருகால் கூடும் என்ற எண்ணம் எழக் களக்காட்சியைக் கண்டு நின்றார்:

"மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி,
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து,
தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன்; எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே;
எஞ்சுவர் கொல்லோ? பகல்தவச் சிறிதே!" (புறம்: எக)

இவ்வாறு, இருந்து காண்பார் வியந்து பாராட்டக் களம்புகுந்தான் நெடுஞ்செழியன்; களத்தே, கடலிடையே செல்லும் கலம் ஒன்று, காற்றுச் சுழன்றடிக்க, செல்லும் இடம் இது; செல்லலாகா இடம் இது எனும் வரையறையின்றிக், கடல்நீரைக் கிழித்துக்கொண்டு எங்கும் ஓடித்திரிவதேபோல், களிறுகள், பகைவர் படைநடுவே புகுந்து பெரும்பாழ் செய்து களத்தை எளிதாக்க, அவற்றைத் தொடர்ந்து வீரர்கள் வேலேந்திச் சென்று, வேந்தர் படைகளைப் பாழ்செய்து வந்தாருள், யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைச் சிறை செய்தும், அவ்வரசர்கள் தம் புகழ்கெடுமாறு அவர் போர்முரசுகள் அனைத்தையும் கைப்பற்றிக்கொண்டனர்; செழியன் படைவீரர் செய்யும் போர்ச்சிறப்பறிந்த பகைவர்படை அவரை எதிர்த்து நிற்றலாற்றாது தோற்றுப் புறங்காட்டி ஓடலாயிற்று. புறங்காட்டி ஓடும் பகைவர் படைகண்ட வீரர், தம் வெற்றிச் சிறப்பு விளங்க, வெற்றிமுழக்கம் விண்ணைப்பிளக்கப் பேரொலி செய்து மகிழ்ந்தனர்:

"நளிகடல் இருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்

களிறுசென்று களன்அகற்றவும்,
களன்அகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய எஃகேந்தி
அரைசுபட அமருழக்கி
உரைசெல முரசுவெளவி." (புறம்: உசு)

'மையணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனியைந் தெழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்
ஒருபுறம் கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களத்து ஆர்ப்பினும் பெரிதே."
(அகம்: கசுசு)

தன் போர்வன்மைக்கு ஆற்றுமையினுலேயே பகைவர் புறங்காட்டினராயினும், அவரை அம்மட்டோடுவிடின், அவர் ஆணவம் அழியாது; அவர், வேண்டும் படைகொண்டு மீண்டுவரினும் வருவர்; ஆகவே, அவர்களை முற்றிலும் அழித்தல்வேண்டும்; அதுவே தனக்கு அரணும், ஆக்கமுமாம் என்று எண்ணினன்; மேலும், பகைவரைத் தன் நாட்டகத்தே வெற்றி கொள்வது, தன்போலும் வேந்தர்க்கு விழுமிய சிறப்பாகாது; அப் பகைவரை, அவர்கள் நாட்டுட் புகுந்து அழிப்பதே தன் ஆண்மைக்கு அழகாம் என்றும் எண்ணினன்; ஆகவே, தோற்றோடும் பகைவரை விடாது துரத்துக என்றனன்; பகைவர் படைக்குத் தலைமை வகித்து வந்த வேந்தர் இருவருள், சேரன் சிறைப்பட்டானுகவே, பகைவர் படை சேரநாடு நோக்கிச் செல்லாது சோணுடு நோக்கி ஓடலாயிற்று; ஓடும் படையை விடாது துரத்திச் சென்றான் செழியன்; சென்ற செழியன், கொன்னே சென்றானல்லன்; இடைப்பட்ட பகைவர் நாடுகளைப் பாழ்செய்துகொண்டே சென்றான்; இவ்வாறு சோணுட்டுட் புக்க செழியன், தஞ்சைமாவட்டத்து ஆலங்கானம் எனுமிடத்தே, அவ்வரசர் படை அனைத்தையும் அழித்து, அவர் தம் முரசு, குடை, பொருள் முதலாம்

வளம் அனைத்தையும் வாரிக்கொண்டு, வெற்றி வீரனாய் வீடு திரும்பினான்.

தன்னை வந்தெதிர்த்த ஏழரசர்களையும், நனி இளையனாகிய தான் தனித்து நின்றே வென்ற செழியன் சிறப்பு, தமிழகத்தார் அனைவர் உள்ளத்தும் தனியிடம் பெற்றுவிட்டது; அவ் வெற்றிச் சிறப்பினை அவன் பெயரோடு இணைத்துத் "தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்" என அழைத்துச் சிறப்பித்தனர் மக்கள்; பாக்கள் பல பாடிப் பாராட்டினர் புலவர் பல்லோர்:

நெடுஞ்செழியன், தலையாலங் கானத்தே பெற்ற இவ் வெற்றிச் சிறப்பினை விளங்கப் பாடிய புலவர் பலராவர்; அவர்களுள், நக்கீரர், அவன் வெற்றிச் சிறப்பைப் பாராட்டியதோடு, அவனோடு பகைத்து வந்தார் இன்னார் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார்:

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நார்அரி நறவின் எருமை யூரன்,
தேம்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே."

(அகம் : ௩௬)

புலவர் பொதும்பில்கிழார் மகனார், ஆலங்கானத் தருகே அமைந்த செழியன் பாசறைச் சிறப்பினையும், மின்னலைப்போல் ஒளிவிடும் அவன் வாட்படைச் சிறப்பினையும் போற்றியுள்ளார்:

"செருவிறந்து,
ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்த
வேல்கெழு தானைச் செழியன் பாசறை
உறைகழி வாளின் மின்னி." (நற்: ௩௮௭

காற்றெனச் சுழன்றோடும் கடிய தேரும், கைவண்மையும் உடைய செழியன், ஆலங் கானத்தே அரிய வெற்றி பெறுதற்குப் பெருந்துணை புரிந்தது மின்னென ஒளிவிடும் அவன் வேற்படையே. அப் படையின் விறல் விளங்கப் பாராட்டியுள்ளார் புலவர் ஆலம்பேரி சாத்தனார் :

"காலியல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந் துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி. (அகம் : கஎரு)

மதுரைக் காஞ்சி பாடிச், செழியன் மாண்புகள் எல்லாம் பாராட்டிய புலவர் மாங்குடி கிழார், ஆலங் கானத்தே, அவனை வந்தெதிர்த்த வேந்தர், பகைவர் பார்த்த அளவிலேயே பயந்து பின்னிடுமாறு கொண்டுவந்து நிறுத்திய படைப் பெருமையினையும், அப் படையையும், அப் படைக்குரியாரையும் அழித்து, அவர் தம் போர் முரசுகொண்ட செழியன் பேராண்மையினையும் பாராட்டியுள்ளார் :

ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமர்உழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறல்உயர் புகழ்வேந்தே."
(மதுரைக்காஞ்சி : கஉஎ—க.0)

தலையாலங்கானத்தே தாம் பெற்ற வெற்றி குறித்து வீரர்கள் எழுப்பிய ஆரவாரப் பேரொலி கேட்டு மகிழ்ந்த புலவர் கல்லாடனார், அவ்வெற்றிக்குரியோனாய செழியனைச் சென்றுகாணல் விருப்பொடு பாண்டி நாடு நோக்கி வருவுழி, இடை வழியில், பாண்டிப் படையைச் சேர்ந்த யானைகள் படிந்து கலக்கியதால் பாழுற்ற பகைவர் நாட்டு நீர்நிலைகளையும், அவன் படைவீரர், தாம் கொள்ளலாம் அளவு கொண்ட பின்னரும், குவிந்து கிடக்கும் பொருள்கள், பகைவர்க்குப் பயன்படாமை கருதிப் பாழ் செய்துவிட்ட விளைநிலங்களையும், வீரர் பலர் கூடிக், கூரிய கோடாலி கொண்டு வெட்டி வீழ்த்தினமையான் பாழான பகைவர் நாட்டுக் காவற்காடுகளையும், ஊர்தோறும் உள்ள மனை

களில் எல்லாம், உணவு குறித்து எடுக்கும் எரிக்குப் பதிலாகப் பகைவர் எழுப்பிய தீ கொழுந்துவிட்டு எரியும் கொடுமைகளையும் கண்டு வந்து, செழியனைக் கண்டு, "செழிய! நான் வருங்கால், நின்னால் பாழான பகைவர் நாட்டுள் புகுந்து வந்தேன்; அம்மம்ம! ஆண்டு யான் கண்ட காட்சிகள் கொடிது! கொடிது!" என்று கூறத் தொடங்கி, ஆங்குத் தாம் கண்ட காட்சிகள் அனைத்தையும் அவன் கண்முன் கொணர்ந்து காட்டுவார்போல் விளங்கக் கூறினார் :

"எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்,
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத்து ஆர்ப்பினும் பெரிதே." (அகம்: உ0க)

"வெளிறில் நோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறு படிந்து உண்டெனக் கலங்கிய துறையும்,
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் அன்பின் கொடுவில் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பதம் ஒழிய வீசிய புலனும்,
வடிநவில் நவியம் பாய்தலின், ஊர்தொறும்
கடிமரம் துளங்கிய காவும், நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வரி இனைப்பக்
கனைஎரி உரறிய மருங்கும் நோக்கி,
.............................................
ஆலங் கானத்து அமர்கடந் தட்ட
கால முன்பநிற் கண்டெனன் வருவல்." (புறம்: உங)

களம் நோக்கிச் செல்லும் செழியன் காட்சியைக் கண்டு களித்த புலவர் இடைக்குன்றூர் கிழார், அவன் களம் வென்று தேர் ஊர்ந்து வரும் காட்சியைக் காணும் பேறும் உடையராயினார். வென்று வரும் தேரையும் அதில் வீற்றிருக்கும் செழியனையும் கண்ட புலவர்க்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று; அப்போதைய அவன் தோற்றம்

அவருக்குப் பெரியதோர் ஐயத்தையும் உண்டாக்கிவிட்டது; தேர்த்தட்டில் இருப்பவன் செழியன்தானே என்றும் எண்ணத் தொடங்கினர்; நெடுஞ் செழியன் கடிதிளைய னல்லனே? இளமையில் அவன் தாய் தந்தையர் அணிவித்த கிண்கிணியினை நீக்கிவிட்டு வீரக்கழல் புனைந்ததும் இன்றே யன்றோ? முன் மயிர் கழித்த தலையில் வேம்பின் தளிரும், உழிஞைக் கொடியும் அணிசெய்ய, கையில் வளை களைந்து, வில்லேந்தி வரும் இவ்வீரனே இளைய நெடுஞ் செழியன்! அவன் மார்பில் மாலை விளங்குகிறது எனினும், தீதுநீங்க என்று அவன் பெற்றோர், அவன் பிள்ளைப் பருவத்தே கட்டிய ஐம்படைத்தாலி இன்னமும் அவன் நீக்கினனல்லன்? பாலுணவு மறந்து சோற்றுணவு உட்கொள்ளத் தொடங்கியதும் இன்றே யன்றோ? அவனே இவன்? தேர்த்தட்டில் இதோ நிற்கும் இவ்வீரன், தன்மேற் பகைத்து வரிசை வரிசையாக வரும் புதிய வீரர்களின் ஆற்றல் கண்டு அதிசயிப்பதோ, அவர் ஆற்றாமை கண்டு பழிப்பதோ செய்யானாய், அவர்களை வெல்வது ஒன்றே குறிக்கோளாய், ஒருசேர வளைத்து, ஆரவாரம் செய்து, ஒருவரும் எஞ்சாவாறு அழித்து வெற்றி கொண்டும், தன் வெற்றி கண்டு மகிழ்ச்சியோ, செருக்கோ கொண்டிலனே? என்னே இவன் போர் அறிவு? இத்துணைப் போர் அறிவு, இளையனாய இவனுக்கு எப்படி உண்டாயிற்று? அதை இவன் எப்போது பெற்றான்? பெறுதற்காம் பருவமும் அன்றே இவன் பருவம்!" என்றெல்லாம் வியந்து பாராட்டி நின்றார்:

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்,
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்,
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி,
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல்? வாழ்க அவன் கண்ணி! தார்பூண்டு,
தாலி களைந்தன்றும் இலனே? பால்விட்டு
அயினியும் இன்று அயின்றனனே! வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும், இழிந்தன்றும் இலனே! அவரை

அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்துநிலம் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே!"

(புறம்: எஎ)

செழியன் பெற்ற வெற்றியும், அவ் வெற்றி பெற்ற அவன் பெருந் தகைமையும் புலவர்க்கு அந்த அளவோடு அமைதி தந்தில; "செழியன் இளையன் என்பது மட்டு மன்றே! இவனுக்குத் துணையாக வந்தாரும் ஒருவரும் இலரே! மேற்சென்று தாக்குமளவு பெரும்படையுடை யானுமல்லனே! அதற்கு வேண்டும் காலமும் இவனுக்கு இல்லையே? இவன் நிலையோ இது; வந்த பகைவர்களின் பெருமையோ, வாய்விட்டுக் கூறுதற்கியலாது; வந்த பகை வர் எழுபெரும் அரசராவர்! அவ்வேழரசர்களின் எழு பெரும் படைகளும் ஒன்று கூடியன்றோ இவனை எதிர்த் தன; மேலும், பகைவரோ, களம் பல கண்டு போர் அறிவு பெருக வாய்க்கப் பெற்றவராவர்; பகைவன் நாட்டுட் புக்குத் தாக்குமளவு பேராற்றல் பெற்றவர்; அத் தகையார் வந்து தாக்கினர் இவனை; இவ்வொருவனை எதிர்க்க ஏழரசர்கள் வந்தனர் என்பதே இவன் பெருமைக் கோர் எடுத்துக் காட்டாம் என்றால், அவ்வாறு கூடி எதிர்த்த ஏழரசர்களையும், இவன் ஒருவனாகவே நின்று எதிர்த்துப் போரிட்டு வெற்றியும் பெற்றான் எனின், இவன் பேராண்மையினை என்னென்பது? இஃது எங்கும் நிகழாத நிகழ்ச்சியன்றோ? காணுதன கண்டன எம் கண்கள்! ஒருவனை ஒருவன் தாக்குவதும், ஒருவனை ஒருவன் வெற்றி கொள்வதும் உலகியல்; அஃது எங்கும் நிகழக் கூடியது; அஃது உலகிற்கும் புதியதன்று; ஆனால், ஏழரசர் கூடி, ஒருவனை எதிர்ப்பதும், அவ் வொரு வன், அவ் வேழரசர்களையும் வென்று அழிப்பதும் அம்மம்ம! அரிது அரிது! அதிசயம் அதிசயம்!! இது போலும் நிகழ்ச்சி நிகழ்ந்ததாக யாம் இதுவரை கண்ட தும் இல்லை; கேட்டதும் இல்லை என்று வாய்விட்டுக் கூறி வியந்து பாராட்டினார்:

"ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்
புதுவ தன்று; இவ்வுலகத் தியற்கை;
இன்றின் ஊங்கோ கேளலம்;
.....................................
நாடுகெழு திருவின் பசும்பூண் செழியன்,
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒரு தானாகிப் பொருது களத்து அடலே." (புறம்: எசு)

நெடுஞ்செழியன் பெற்ற வெற்றிச் சிறப்புக்களை இவ்வாறு விளங்கப் பாராட்டிய புலவர், இடைக்குன்றூர் கிழார், செழியன் அவர்களைக் கூடற் பறந்தலையினின்றும் துரத்தியதோடு அமையாளாய், அவர்களை, அவர்கள் நாடு வரை துரத்திச்சென்று, ஆங்கே, அவர்கள் மனைவிமார், தங்கள் கணவன்மார் தோற்றுப் பின்னிட்டு அழிவுறு தலைக் கண்டு நாணித் தலைகவிழ்ந்து இறக்கும்வண்ணம் அவர்தம் ஊர் அருகிலேயே அழித்து மீண்டான் என்ற செய்தி கேட்டு மேலும், மேலும் வியந்து பாராட்டுவா ராயினர்; "அந்தோ! அப் பகைவர் வந்த பெருமிதநிலை என்னே! அவர்க்கு வந்துற்ற இழிநிலை எத்தகைத்து! 'எவ்வாற்றானும் சிறந்தோர் நாம்; பெரியதோர் படையும் நம்பால் உளது; செழியனோ மிகவும் இளையன்; போர் அறியாப் பிள்ளைப் பருவத்தன்; இவனை வென்று பெறும் பொருளோ, அது பெரும்பொருள் எனக் கூறலாமே யல்லால், இவ்வளவு என எண்ணி மதிக்கவொண்ணாப் பெருமையுடையது' என்று உன்னி இறுமாந்தன்றோ வந்தனர்? அவ்வாறு வந்தாரைப் புறமுதுகு காட்டச் செய்த செழியன், அவர்களை ஈண்டேயே அழித்திருக்க லாகாதா! அந்தோ! அவர்களை, அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணில், அவர்கள் மனைவிமார் கண்முன்னர், ஆண்டு வரை துரத்திச்சென்று அங்கேயா அழிப்பது! கொடுமை! கொடுமை!" எனப் பகைவர்க்குப் பரிந்து பேசுவார்போல் செழியன் சிறப்பினைச் சிறக்கப் பாராட்டினார்:

"விழுமியம் ; பெரியம் யாமே நம்மில்
பொருநனும் இளையன் ; கொண்டியும் பெரிதுஎன
எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர,
ஈண்டு அவர் அடுதலும் ஒல்லான் ; ஆண்டு அவர்
மாணிழை மகளிர் நாணினர் அழியத்
தந்தை தம்மூ ராங்கண்
தெண்கிணை கறங்கச் சென்று ஆண்டு அட்டனனே."
(புறம்: எஅ)

செழியன் அவையில் இருந்து, அறிவுரை வழங்கும் ஆன்றோராய குடபுலவியனார், "பாண்டியன் படையை எதிர்த்துச் சேர, சோழராகிய இருபெரு வேந்தர் படைகளும், குறுநில மன்னர் ஐவர் படைகளும் ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்றமையான், தமிழ்நாடே ஒன்றுகூடி நின்றாற் போலும் காட்சி யளித்தது அக் களம்; அத்தகைய பெரிய களத்தே, உயிர்ப்பன்மை அனைத்தையும், ஒருவனாகவே நின்று அழிக்கும் கூற்றுவனைப்போல், பகைவர் படைகள் அனைத்தையும் தான் ஒருவனாகவே நின்று அழித்தான் நெடுஞ்செழியன்," என, அவன் ஆலங்கானப் போரை அழகாகப் பாராட்டியுள்ளார் :

"இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய !"
(புறம்: கக)

"இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்தம், மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து," என்ற குறள்நெறி யுணர்ந்தவன் செழியன் ; ஆகவே, புலவர் பல்லோர் கூடி நின்று தன் வெற்றிச சிறப்பினை வியந்துபாராட்ட மகிழ்ந்து நிற்கும் அந் நிலையிலும், அவர் புகழுரையால் அறிவு மயங்கித் தன் கடமையை மறந்துவிட்டா னல்லன் ; கூடி எதிர்த்த ஏழரசருள் தன்னால் சிறைபிடிக்கப்பெற்ற சேர வேந்தன் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை,

எவ்வாறோ சிறைபிழைத்துச் சென்றுவிட்டான் என்பதை உணர்ந்தான்; அடியுண்ட புலி அடங்கியிராது; அடித்தாரை அழித்தொழிக்க ஆவன புரியும் என்பதை அறிவான் ஆகவே, சிறை தப்பிய சேரனைப் பிழைத்து வாழ விடல் பெரும் பிழையாம் என முடிவுசெய்தான்; உடனே பெரும் படையுடன் சேரநாடு நோக்கிச்சென்று, சுள்ளி, பேரியாறு முதலாம் பேராறுகளின் பாய்ச்சலால் பெருவளம் பெற்றும், யவனர் முதலாம் புறநாட்டு வணிகர்கள், கறிகொண்டு செல்லும் தம் கலம் நிறையப் பொன் கொணர்ந்து குவிப்பதால் பெற்ற செல்வத்தில் சிறந்தும் விளங்கும் முசிறி நகரை முற்றி வளைத்து, சேரர்தம் சிறந்த யானைப்படை அழியவும், போர்வீரர் பலர் புண்ணுற்றுப் புத்தேள் உலகு புகவும் பெரும் போராற்றிக் களம் வென்றதோடு, அவ் வெற்றி விளங்க, சேர நாட்டிற்குச் சிறப்பளித்து விளங்கிய பொற்பாவை யொன்றைக் கவர்ந்து மீண்டான்:

"கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,
முதுநீர் முன்துறை முசிறி முற்றிக்
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநர்." (அகம்: ருள)

"சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்."
(அகம்: கசக)

"பல்குட்டுவர் வெல்கோவே."
(மதுரைக்: கOரு)

சேரநாடு சென்று, செருவென்ற செழியன், கொங்கர் என்பார் தமிழரசர் அனைவர்க்கும் தொல்லை விளைக்கும் வல்வில் வாழ்வினராதல் அறிந்து, அவரை அறவே

அழிக்க எண்ணினான்; உடனே கொங்கரை அழிக்கும் பணியினைத் தன் படைத்தலைவருள் ஒருவனாய அதிகன் என்பான்பால் ஒப்புவித்தான்; அதிகனும், தன் மலையில் காத்துக்கிடக்கும் பாண்டியனுக்குரிய யானைப்படையோடும் சென்று, வாகைப்பறந்தலையிடத்தே கொங்கரை எதிர்த்துக் கடும்போரிட்டான்; ஆயினும், போரில் அவன் யானைப்படை அழிந்துவிட்டது; அவனும் இறந்தான்; இவ்வாறு பெற்ற வெற்றியால், கொங்கர் அடைந்த மகிழ்ச்சி அடங்குமுன்னரே செழியன் களம் சென்று, கொங்கரை வென்று, அவரை அவர் நாட்டினின்றும் துரத்தியதோடு, அவர்க்குரிய நாடு பலவற்றையும் கைப்பற்றிக் கொண்டான்:

" வாய்மொழி
நல்லிசை தருஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப் பறியாக் கழல்தொடி அதிகன்,
கோளற வறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
களிறுஅணி வெல்கொடி." (அகம்: கசுஉ)

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே."
(குறுந்: நகந)

"கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்." (அகம்: உருந)

பேரரசர் இருவரையும் பழிகொண்ட நெடுஞ்செழியன், அவர்க்குத் துணைபுரிந்த தமிழ்நாட்டுச் சிற்றரசர் தம் செருக்கினையும் அடக்க முற்பட்டான்; முதற்கண், பெருமக்கள் பெருகவாழும் பேறுடையதும், இசை வளர்க்கும் எழில் நிறைந்ததுமாய நீடூர்க்கண் இருந்து, மிழலைக் கூற்றம் எனப் பெயருடைய தொரு சிறுநாட்டை

ஆண்டுவந்த எவ்வி எனும் வள்ளல் ஒருவன், தனக்குப் பணியாமை அறிந்து, படைகொண்டு தாக்கி வென்றான்; வெற்றிக்களிப்பால், அவ் வெற்றிதரப் போர்புரிந்த தன் படைவீரர்க்கு, அரிமணவாயிலை அடுத்த உரத்தூரில் பெருஞ்சோறளித்துப் பெருமை செய்தான்; எவ்வியின் மிழலைக் கூற்றம் இவன் ஆட்சிக்கீழ் வந்துற்றது; அவ்வள வோடு நில்லாது, எவ்விககு வந்துற்ற கேடு பொறாது வந்து அவனுக்கு உதவிய, ஏனைய வேளிர்க்கு உரிய முத்தூற்றுக் கூற்றம் எனும் நெல்வளம் மிக்க நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான்.

> "யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்,
> வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
> நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்,
> அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
> கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
> கவ்வை ஆகின்றால் பெரிதே." (அகம்: உகசு)

> "தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய
> ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
> புனலம் புதவின் மிழலையொடு, கழனிக்
> கயலார் நாரை போர்விற் சேக்கும்
> பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
> குப்பை நெல்லின் முத்தூறு தந்த
> கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழியன்."
> (புறம்: உ௪)

இவ்வாறு, சேரர், சோழர் ஆய இருபெரு வேந்தர்களையும், அவர்க்குத் துணைவந்த குறுநிலத் தலைவர் ஐவரையும், எவ்வியையும், அவனுக்குத் துணைவந்த வேளிர்களையும், கொங்கரையும் வென்று வீறெய்தியதோடு, தென்னாட்டு வாழ்வினராய பரதவர் என்பாரையும் வெற்றி கொண்டான் செழியன்; பரதவர், தம்மைப் பகைத்தவர் நாட்டகத்தே, அவர் அச்சம் மிகக்கொள்ளுமாறு, அழிவு பலசெய்து தங்கும் ஆற்றல் உடையவர்; பகைவரைக் கொன்று கொன்று புலால் நாறும் அம்பும், வில்லும் ஆயுத

மாக் கொண்டவர்; ஊன் கலந்த சோறும், கூவைக் கிழங்கும் அவர் உணவு; வஞ்சினம் பொய்க்கா வன்மையுடையார்; கூடிவாழும் குடியிருப்புடையார் எனப் பரதவர் தம் பண்பெல்லாம் கூறுவர் மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி கிழார். மேகம் சூழ மலைகள் நிற்பதேபோல், கடல்நீர் சூழக் கலங்கள்பல நிற்கும் கடற்கரையினையும், கடல்போல் ஆழ்ந்த அகழியினையும் உடையதும், உயர்வகை நெல்வினை வால் உயர் புகழ் உடையதுமாய நெல்லூர் எனும் பெயருடையதொரு பேரூரையும் கைப்பற்றி ஆண்டான் செழியன் எனக் கூறுகிறார் மாங்குடி கிழார் :

செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்,
கோழூஉன் குறைக் கொழுவல்சிப்,
புலவுவில், (ப)பாலிகூவை,
ஒன்றுமொழி, ஒலிஇருப்பின்
தென்பரதவர் போரேறே"

(மதுரைக் காஞ்சி: கநகூ-சச)

'ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடல் குண்டகழிச்
சீர்சான்ற உயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ!"

(மதுரைக் காஞ்சி: அந-அஅ)

வெற்றிப் புகழ் மிக்க வேந்தனாய நெடுஞ்செழியன் தன் படை வீரர்பால் பேரன்பும் உடையனவன்; அவன், தன் படைவீரர்பால் காட்டும் அன்புடைமையினை ஆசிரியர் நக்கீரர், நெடுஞ்செழியனைப் பாராட்டத் தாம் பாடிய நெடுநல் வாடையில் நன்கெடுத்துக் காட்டியுள்ளார்; பகைவர் யானைப்படைகளை, அவற்றின் வலிய பெரிய கைகளை வெட்டி வீழ்த்திக் கொன்று அழித்த போரில், தன் வீரருட்பலர் வாட்புண் பெற்றுவிட்டனர் என்பதை அறிந்தான் நெடுஞ்செழியன்; அறிந்த நேரமோ, இரவின் நடுயாமம்; குளிர்ந்த

வாடைக் காற்று வீசிக்கொண்டிருக்கும் குளிர் காலம். மழைத் துளிகள் மாறாது வீழ்ந்து கொண்டிருக்கும் மழைக் காலம்; எனினும், அவன் காலத்தின் அருமையினை எண் ணினானல்லன்; புண்பட்ட வீரரைக் கண்டு, ஆறுதல் உரைத்து, அன்பு காட்டிவர வேண்டும் என்ற ஆசை, அக் காலத்தின் கொடுமையை மறக்கச் செய்தது; மேலும், பகற் காலமெல்லாம் போர்க்கள நிகழ்ச்சியில் கழிந்துவிடுகிறது. ஆகவே, இரவில் காண விரும்பினான்; வாடை வீசுவதால், தெற்கே சாய்ந்து விளங்கும் அழல்களைக் கொண்ட பெரிய பாண்டில் விளக்குகளை ஏந்திப் பலர் முன்னே சென்றனர்; தலையில் வேப்பந் தாரும், கையில் நெடிய வேலும் கொண்ட படைத்தலைவன், அரசன் முன்னே செல்கிறான்; மழைத் துளி மன்னன்மீது விழாமை குறித்து வெண் கொற்றக் குடை யேந்திய ஒருவன் பின்னே வருகிறான்; நெடுஞ் செழியன், காற்றால் அலைப்புண்டு, கீழே விழும் தன் மேலாடையினை இடக் கையாற் பற்றிக் கொண்டு, தோளில் தொங்கும் வாள்மீது வைத்த வலக்கையனாய், வழியில் வரிசையாக நிற்கும் குதிரைகள் உதறிய அவற்றின் உடல் நீர் தன்மேல் தெறித்து விழச், சேறு நிறைந்த தெருவிலே நடந்து சென்று, புண் பெற்ற வீரர்களையும், அவர்கள் பெற்ற புண்களின் நிலையினையும் படைத்தலைவன் காட்டிக் கொண்டே முன் செல்ல, பின்னே, அவ் வீரர்களுக்கு அன் புரை வழங்கிக் கொண்டே செல்கிறான் நெடுஞ் செழியன் எனக் கூறும் நக்கீரர் சொற்களால், பேயும் உறங்கும் நடு யாமத்திலும், உறக்கம் ஒழித்துப் போர்மேல் சென்ற எண் ணமும் சூழ்ச்சியும் உடையனாய் வாழும் நெடுஞ் செழிய னின் பாசறைவாழ்க்கை படம் பிடித்துக் காட்டப்பட் டுளது காண்க :

"மின்னவிர்,
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரள,
களிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்

தெற்கேர்பு இறைஞ்சிய தலைய, நற்பல
பாண்டில் விளக்கின் பருஉச்சுடர் அழல,
வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப், பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமம் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ,
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை அமைத்த கையன், முகன்அமர்ந்து,
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்று அசைஇத் தாதுளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."
(நெடுநல்வாடை : கஅுஅ-கஅஅ)

நாடெலாம் வென்று நலம் மிகப் பெற்ற நெடுஞ்செழியன், நாளோலக்கத்திருந்து, பகைவர் ஓட்டிப் பல்புகழ் பெறுதற்குப் பெருந்துணை புரிந்த தன் படை வீரர்க்குச் செய்யும் சிறப்பு பாராட்டற்குரியதாம். செய்யக் கடவ கடன் முடித்த செழியன், சிறந்த ஆடை அணி உடையனாய், ஆன்றோரும், ஆற்றல் மறவரும் சூழ அரியணையில் அமர்ந்து, தன் அருகே அமர்ந்துள்ள தன் படைத்தலைவனை, கரைகளை அழித்துப் பெருகி ஓடிவரும் வெள்ளத்தை இடை நின்று தடுக்கும் கல்லணைபோல், தம் படையை அழித்து, ஆற்றல் கொண்டு மேல்வரும் மாற்றார் படையை இடை நின்று தடுத்து அழித்தல் வல்ல தன் படைத்தலைவனை நோக்கி, "முற்றவளைந்த வில்லினின்றும் புறப்பட்டு விசை கொண்டு வரும் அம்பைத் தாங்கவல்ல அகன்ற மார்பினையும், குதிரைகளைக் காற்றெனக் கடிது செலுத்தவும், அவ்வாறு செல்லும் அவற்றை வேண்டும் போது, வேண்டும் இடத்தே இழுத்து நிறுத்தவும்வல்ல பருத்த தோளினையும் உடைய வீரர்கள் வருக! கல்லை இடித்து இயற்றிய இடங்களைக் கொண்ட பகைவர் தம்

பேரெயில் மேல் நின்று, ஆரமர் ஆற்றிய ஆற்றல் மறவர் வருக! செந்தீ யெனச் சினந்து வரும் பகைவர் படை நடுவே, போர்ப்பறை முழங்கப் புகுந்து, அவர் தம யானைப் படைகளை அழித்து, அரும்போர் ஆற்றிப் பெரும்புண் பெற்ற படைத்தலைவர் வருக! பகைவர் முற்றியிருக்க, அரணகத்தே ஆற்றல் அழிந்து இருந்த நம் நண்பர்க்குத் துணை செய்தற்பொருட்டு நம்மால் ஏவப்பெற்று, பகைவர்தம் அம்பும் வேலும் அளவற்றன வந்து தைக்கப்பெற்றமையான், கவசமும் உடலும் ஒருங்கு அழிய, ஆரக்கால் தைக்கப்பெற்ற குடம்போலும் மார்பினராய மாவீரர் வருக! மாலை சூடி, சந்தனம் பூசி, போர்க்களம் புக்குப் பகைவர் தம் பெரிய யானைப்படையினைக் கைப்பற்றி மீண்ட பேராண்மை மிக்க பெரியோர் வருக! மற்றும் உள்ள மாவீரர் அனைவரும் வருக!" என வீரர்களை அவரவர் ஆற்றிய அரும்பணிக் கேற்ப, முன்னும், பின்னும் முறையே அழைத்து, வரிசையான் பரிசுநல்கிப் பெருமை செய்த பின்னர், "புலவர் வருக! பொருநர் வருக! வருக பாணர்! வருக விறலியர்! வருக கூத்தர்! வாயிற்கண் நிற்பார் யாவரும வருக!" என அழைத்து, அவ்வாறு வந்தார்க்கும், வந்தார்தம் சுற்றத்தார்க்கும் களிறும், தேரும் கணக்கற்றன கொடுத்து நிற்கும் காட்சி கண்டு மகிழ்தற்குரியதாம்:

'முருகியன் றன்ன உருவினை யாகி,
வருபுனல் கற்சிறை கடுப்ப, இடையறுத்து
ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர்,
வாள்வலம் புணர்ந்தநின் தாள்வலம் வாழ்த்த,
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங்கு எறுழ்த்தோள் மறவர்த் தம்மின்!
கல்லிடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கின்
நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின்!
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம் ஓவில கறங்க,
எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்
பெருநல் யானை போர்க்களத்து ஒழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்! .

புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யார் என்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண்டு எஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை அரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன ஊன்சாய் மார்பின்
உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்!
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியல்
பெருஞ்செய் ஆடவர்த் தம்மின்! பிறரும்
யாவரும் வருக! ஏனோரும் தம்மென;
வரையா வாயில் செறாஅ திருந்து
பாணர் வருக! பாட்டியர் வருக!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக! என,
இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி."

(மதுரைக் காஞ்சி: எ௨௪-எ௫௨)

அரசுகட்டில் ஏறிய அந்நிலையிலேயே, தான் நனி இளையன் என்பதையும் நோக்காது, தமிழ்நாடே ஒன்று கூடித் தன்னை எதிர்ப்பக் கண்டான். ஆகவே, நெடுஞ்செழியன், அத்தமிழ் நாட்டில், தனக்குப் பணியாது வாழ்வார் எவரையும் வாழவிடல் கூடாது என்ற வயிரவுள்ளம் உடையனாகி, எப்போதும் போர் போர் போரென ஓயாப் பெரும்போர் மேற்கொண்ட வாழ்வினனாய் விளங்கினானேனும், அவன்பாலும், பாராட்டத் தக்க பெருங்குணங்கள் பல பொருந்தி யிருந்தன.

உள்ள அரசர் அனைவரையும் பகைத்துக் கொள்வார் அரசு, அமைதி உடையதாகாது; எப்போதும், பகைவர்க்கு அஞ்சியே வாழ வேண்டி வரும்; ஆகவே, அரசராவார், பகைத்துப் பாழ் விளைக்கும் அரசுகளை அழித்தொழிப்பதைக் கடமையா மேற்கொள்வதைப் போன்றே, தமக்கு ஊறு வந்துழி உறுதுணையாகும் உயர்பெரும் நட்புடையார் பலரைப் பெற்றிருத்தல் வேண்டும்; தம் வாழ்வினும்

அவர் நல்வாழ்வில் நாட்டமுடையராதல் வேண்டும் ; பகைவரான் தன்குடிக்கு உண்டாம் தளர்ச்சியைப் போக்க விரைவதினும், பகைவரான் தன் நண்பர்க்கு உண்டாம் தளர்ச்சியைப் போக்குவதிலேயே மிக்க விரைவு காட்டுதல் வேண்டும்; இவ்வுண்மையை மக்களினும், நாடாளும் அரசராவார் நன்கு அறிதல் வேண்டும் ; நெடுஞ்செழியன் இந்நல்லறிவு நன்கு வாய்க்கப் பெற்றவன் ; அவ்வறிவு அறிந்ததோடு, அது காட்டிய வழியில் நின்று கடமையாற்றியும் உள்ளான் ; அவன்பால் தாம் கண்ட இப் பண்பினைப் புலவர் மாங்குடி கிழார், பிறர்க்கும் புலனாகுமாறு எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார் :

"நட்டவர் குடி உயர்க் குவை
செற்றவர் அரசு பெயர்க்கு வை."
(மதுரைக் : கங-உ)

ஆண்மகனாய்ப் பிறந்தார்மாட்டு ஆண்மை நிலைபெறல் வேண்டும் ; ஆண்மையைப்பற்றிக் கூறுவார், "இசையாது எனினும் இயற்றி ஓராற்றால், அசையாது நிற்பதாம் ஆண்மை," என்ப ; ஆண் மக்களாவார், பெறற்கரியன இவை எனப் பெறும் ஊக்கம் அற்று எதையும் ஒழித்து விடாது, எவ்வாற்றானும் முயன்று பெறுதல் வேண்டும் ; அவ்வாறு அரியனவற்றை அடைதலோடு, அவற்றை அரிய முயற்சியானன்றி, எளிய முயற்சியான் அடைந்தாரே ஆண்மையாளராவர். அத்தகைய ஆண்மை செழியன்பால் சிறக்க இருந்தது ; நிற்க. அவ்வாறு பெற்ற அரும்பொருளால், ஆய பயனைத் தானே நுகர்தல் வேண்டும் என்ற எண்ணம், அவ்வாண்மைக்கு இழுக்குத் தரும் ; அவர்பால் அன்பின்மையினையும் உறுவிக்கும் ; அன்பிலா வாழ்வு, வாழ்வெனப்படாது ; ஆகவே, அன்புடையராதலும் வேண்டும்; அன்புடையார் தம் என்பையும் பிறர்க்கு ஈவர் என்ப; நெடுஞ்செழியன், இத்தகைய தலையாய அன்புடையனாவன்; தான் பெற்ற அரும் பொருளுள், தனக்கென ஒன்றையும் வரைந்துவைத்துக் கொள்ளாது, அத்தனை பொருளையும், வருவார்க்கே வழங்கும் வள்ளலாய் விளங்கினான் :

"அரிய வெல்லாம் எளிதினிற் கொண்டு
உரிய வெல்லாம் ஓம்பாது வீசி."
(மதுரைக் : கசங-சு)

அரியனவும், பெரியனவும் ஈட்ட வேண்டும் என்ற எண்ணம் வந்துற்ற விடத்தும், அவற்றைப் பெறப் பொய் கூறல் முதலாம் பழியொடு மிடைந்த செயலைப் புரியான் நெடுஞ் செழியன்; "உலகங்களுள் உயர்ந்தது எனப் போற்றப்படும் தேவர் உலகமும், அத் தேவர்க்கு உணவாம் உயிர் காக்கும் அமிழ்தமும் ஒரு பொய் கூறின் வரும்; தென்திசை மலைகள் எல்லாம் நிறையுமாறு வாணன் என்பான் சேர்த்துவைத்துள்ள பெரும் பொருளும் தின்னதாம், அப் பொய் போலும் பழியுடைச் செயல் ஒன்று செய்யின்" என்பார் உளராயின், அவற்றின்மீது ஆசை கொண்டு பொய் முதலாம் பழிபுரியாது, வாய்மை வழங்கி, அவற்றை இழக்கவே விரும்புவன் :

"உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே."
(மதுரைக் : ககூஎ - அ)

"தென்புல மருங்கின விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழி நமக்கு எழுக என்னாய்." (மதுரைக்: உ0உ-சு)

கூறிய இப் பண்புகளோடு, பகைவர் கூறும் பழிச்சொல் பொறுமை; குடிபழி தூற்றும் கொடுங்கோல் மன்னனை மதியா மாண்பு; புலவர் பாடும் புகழுடையோர், விசும்பில் வலவன் ஏவா வானவூர்தி எய்துவர் என்பதறிந்த, அப் புலவர் பாடலைப் போற்றிப் பெறும் பேருள்ளம்; இரப்போர்க்கு ஒன்று ஈயாமை இழிவு; இரந்தானுக்கு ஈயேன் என்றல், ஈ என இரத்தலினும் இழிந்தது என அறிந்த உள்ளத்தனாகி, ஈகைக்குடையனாதல் ஆய, இப் பண்புகளையும் பெற்றவன் நெடுஞ்செழியன் என்பது அவன் பாடிய வஞ்சினப் பாடலால் இனிது விளங்கும்.

நெடுஞ்செழியன், பெருவீரனாதலோடு, பெரும் புலவனாகவும் விளங்கினமையால், அவன் புலவர் பல்லோரின்

பாராட்டைப் பெற்றிருந்தான். சங்ககால அரசர் எவரும், இவனைப்போல் இத்துணைப் புலவரின் பாராட்டைப் பெற்றாரல்லர்; பத்தொன்பது புலவர்கள் இவனைப் பாராட்டியுள்ளனர் எனின், இவன் பெருமைதான் என்னே! இவனைப் பாடிய புலவர்கள்; அள்ளூர் நன்முல்லையார், ஆலங்குடி வங்கனார், ஆலம்பேரி சாத்தனார், இடைக்குன்றூர் கிழார், ஈழத்துப் பூதன்தேவன், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், கல்லாடனார், குடபுலவியனார், குறுங்கோழியூர் கிழார், தத்தங்கண்ணனார், நக்கீரர், பரணர், பேராலவாயர், பொதும்பில் கிழார் மகனார், மதுரைக் கணக்காயனார், மருதன் இளநாகனார், மாங்குடி கிழார், முதுகூத்தனார், விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் என்போராவர்.

தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இவ்வாறு, தன்னேரில்லாத் தலைவனாதல் அறிந்த குடபுலவியனார் என்ற புலவர், அவன் நெடிது வாழவேண்டும்; நன்று வாழவேண்டும் என்ற எண்ணம் உடையராயினார்; நல்லாட்சி நிலவும் நாட்டின்பால், உலகமக்கள் அனைவரும் ஆசை கொள்வதும், அவ்வரசின்கீழ்த் தாமும் இருந்து வாழ விரும்புவதும் இயல்பு; ஆகவே, உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் வைத்து ஆள எண்ணுவார், நாற்படைத் துணையினும், நல்லாட்சித் துணையினையே நாடுதல் வேண்டும்; நாடாண்டு மாண்ட பின்னரும், மன்னர்க்கு மங்காப் புகழ் தருவது அந் நல்லாட்சியே; ஆகவே, அரசர் நல்லாட்சியுடையராதல் இன்றியமையாததாம்; குடிமக்கள் தம் நல்வாழ்வே, நல்லாட்சியாம்; பசியும், பிணியும், பகையும் இன்றிய வாழ்வே பெருவாழ்வு எனப்படும்; அவ்வாழ்விற்கு உணவுக்குறை யுண்டாதல் கூடாது; உணவு, நன்னிலமும், நிறைநீரும் உண்டாய வழியே உண்டு; நீர் அற்ற வழி, நிலம் இருந்தும் பயன் இன்று; ஆகவே, நீர் நிலைத்து நிறையக் கிடைக்குமாறு நீர்நிலை பலவற்றை ஆங்காங்கே ஆக்கித்தரல், உணவு பெறுதற்கு உறுதுணை புரிவதாகும்; ஆகவே, நிலைத்த வாழ்வும், நீடிய புகழும் வேண்டுவார், நீர்நிலை பல காணல் வேண்டும்; இவ்வரிய அறிவுரையினை

அவனுக்கு அளித்தார் புலவர்; நெடுஞ்செழியனும், புலவர் கூறிய பொருளுரையினைப் பொன்னுரை யெனப் போற்றிப் புகழ்நிறை வாழ்வினனாயினன்.

"செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ யாகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும், நிலனும் புணரியோர், ஈண்டு
உடம்பும், உயிரும் படைத்திசி னோரே;
வித்தி வானோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே,
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே." (புறம்: ௧௮)

# ௪௫. நம்பி நெடுஞ்செழியன்

நம்பி நெடுஞ்செழியன் ஒரு குறுநிலத் தலைவனாவன்; முடியுடை மூவேந்தர்க்கு அறிவானும், ஆற்றலானும் துணை புரிந்தார், அம்மூவேந்தர்க்குரிய பெயர்களைத் தாமும் கொண்டு சிறப்புறுதலும் உண்டு; அவ்வாறு பாண்டியருள் சிறந்தோனாகிய நெடுஞ்செழியனுக்குத் துணைபுரிந்து சிறப்புற்றமையால், இத் தலைவனும், நெடுஞ்செழியன் எனப் பெயர் பெற்றான் என்ப. ஆடவருட் சிறந்தாரை நம்பி என்றலும், பெண்டிருட் சிறந்தாரை நங்கை என்றலும் பண்டையோர் வழக்கு. இக்குறுநிலத் தலைவன், அக்கால ஆடவரும் போற்றும் அருங்குணம் உடையனாதலின், நம்பி நெடுஞ்செழியன் எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளான். நெடுஞ்செழியன், நம்பி என நலம் பாராட்டற் கேற்ற பண்புகள் பலவற்றையும் ஒருங்கே கொண்ட உயர்ந்தோனாவன்.

நம்பி நெடுஞ்செழியன், அழகிய மனைவியை மணந்து, அவளாற் பெறும் இன்பமும் நுகர்ந்தான்; காவற்காட்டு மலர் சூடியும், கடிமணம் நாறும் சந்தனம் பூசியும் காண்பார் களிக்கும் கவின் பெற்றான்; பகைவர் குடியைப் பாழ் செய்தான்; நண்பர் புகழை நாவாரப் பாராட்டினான்; என்னினும் வலியர் என் பகைவர் எனப் பயந்து பணிவதோ, என்னினும் எளியர் இவர் என இகழ்வதோ அவன்பால் இல்லை; பிறர்பாற் சென்று பொருள் வேண்டி இரத்தலோ, தன்பால் வந்து இரந்து நிற்பார்க்கு மறுத்தலோ செய்தறியான் அவன்; அரசர் கூடிய அவைக்களத்தே, தன் ஆற்றலும், அறிவும் தோன்றக் காட்டிப் புகழ்பெற்றான்; தன்னைத் தாக்கிய பகைவர் படையினைத் தடுத்துநிறுத்தி வெற்றி கண்டான்; தோற்றுப் புறங்காட்டும் பகைவரைப் பார்த்து நிற்றலன்றி, அவர் புறத்தே படைதொடாது நின்று பேராண்மையுற்றான்; பாய்ந்து செல்லும் பரிபல ஊர்ந்தான்; தேர் பல ஏறித் தெருவில் உலாவந்தான்; கருமதக் களிறுகள் காலடிக்கீழ்ப் பணியுமாறு ஏவல்கொண்

டான்; பாணர் பசிபோகப் பலப்பல வழங்கினான்; காய்தல் உவத்தல் அகற்றி, ஆய்ந்து அறம் உரைத்தான்; சுருங்கக் கூறின், நல்லோர்பால் காணலாம் நற்பண்புகள் எல்லாம் நம்பி நெடுஞ்செழியன்பால் நின்று நடம்புரிந்தன.

இவ்வாறு, 'நம்பி' 'நல்லவன்' என்று நாட்டாரால் போற்றப்படும் புகழ் நிறைந்த நெடுஞ்செழியன் இறந்து விட்டான்; அவன் இறந்து விட்டான் என்பதை அறிந்த பேரெயில் முறுவலார் எனும் புலவர்ப் பெருந்தகையார், அவன் பிரிவு கண்டு ஒருபால் பெருந்துயர் கொண்டார் எனினும், செழியன், செய்வன எல்லாம் சிறக்கச் செய்து, சீரிய வாழ்வுடையனாயினன் என்பது கொண்டு, ஓரளவு மன அமைதியும் கொண்டார்; அந்நிலையில், "நம்பி நெடுஞ்செழியன் அறம், பொருள், இன்பம் ஆய முத்துறையின் முடிவுகண்ட மூதறிவாளனாவன்; நம்பி நெடுஞ்செழியன் வாழ்வாங்கு வாழ்ந்த வண்மையனாவன்; ஆகவே, அவன் உடலை வாள்கொண்டு வெட்டிப் புதைப்பதால் புகழோ, அவ்வாறின்றிச் சுட்டுச் சாம்பலாக்குவதால் பழியோ, அவனுக்கு வந்துறாது; அவன்புகழால் நிறைந்து விட்டான்; ஆதலின் அவன் உடலை இடுவதோ, சுடுவதோ எதை வேண்டுமாயினும் செய்க" என்று கூறித் தன் ஆற்றாமையினைக் காட்டினார்.

நாட்டில் நல்லவராய் நெடிதுவாழ விரும்புவார், நம்பி நெடுஞ்செழியன்பால் காணலாம் நல்லியல் பேற்று நடந்து உயர்வார்களாக!

"தொடி யுடைய தோள்மணந்தனன்;
கடிகாவின் பூச்சூடினன்;
தண்கமழும் சாந்துநீவினன்;
செற்றோரை வழிதபுத்தனன்;
நட்டோரை உயர்புகூறினன்;
வலியர்என வழிமொழியலன்;
மெலியர்என மீக்கூறலன்;
பிறரைத்தான் இரப்பறியலன்;
இரந்தோர்க்கு மறுப்பறியலன்;

வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்;
வருபடை எதிர்தாங்கினன்;
பெயர்படை புறங்கண்டனன்;
கடும்பரிய மாக்கடவினன்;
நெடுந்தெருவில் தேர்வழங்கினன்;
ஓங்குஇயல களிறுஊர்ந்தனன்;
தீஞ்செறிதசும்பு தொலைச்சினன்;
பாண்உவப்பப் பசிதீர்த்தனன்;
மயக்குடைய மொழிவிடுத்தனன்; ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன்; ஆகலின்,
இடுக ஒன்றோ; சுடுக ஒன்றோ;
படுவழிப் படுக! இப்புகழ் வெய்யோன் தலையே.”

(புறம்: உஙக)

## ௯௱. நல்வழுதி

நல்வழுதி, வழுதி என்ற பெயருடைமையால், பாண்டியர் குடிவந்தவராவர் என்பது பெறப்படும்; இவர் வரலாறு குறித்து ஒன்றும் அறிதற்கு இயலவில்லை. 'ஓங்கு பரிபாடல்' என உயர்ந்தோரான் உயர்த்திக் கூறப் பெறும் பரிபாடலைப் பாடிய நல்லிசைப் புலவர்களுள் நல் வழுதியும் ஒருவனாவன். வையை ஆறு குறித்து வந்த பரிபாடல்கள் எட்டனுள், நல்வழுதியார் பாடிய பரிபாடலும் ஒன்று; ஆற்றில் புதுப்புனல் வருங்கால், பண்டைத் தமிழ்மக்கள், விரும்பி மேற்கொள்ளும் புனல்விழா நன்கு விளக்கப்பட்டுளது அப்பாட்டில்.

மேற்கு மலையில் மழை பொழியப் புனல் மிகுந்து, மலைச்சாரல் மலர்களை யெல்லாம் வாரிக்கொண்டு, 'புனல் யாறு அன்று பூம்புனல்யாறு' எனக் கூறுமாறு காட்சி தந்து, கரையில் உள்ள அகில் முதலாம் மரங்களை வீழ்த்தி அடித்துக்கொண்டு பொங்கிவரும் கடலேபோல் பெருக்கெடுத்தோடிற்று வையை.

வையையில் புதுப்புனல் வரவுகேட்ட மதுரைமாநகர் மக்கள், அழகிய ஆடையும் அணியும் அணிந்து, யோசனை தூரம் கமழும் வாசனை உடையராய்ப், புனல்விழாவிற்கு வேண்டும் பொருள் எலாம் உடன்கொண்டு, குதிரைமீதும், யானைமீதும், தேர்மீதும் இவர்ந்து வையைக்கரை சேர்ந்தனர்.

வையைக்கரையில், குழல், முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி முதலாம் பல்வேறு இசைக் கருவிகளினின்றும் எழும் இன்னிசைகட்கிடையே, ஒன்றையொன்று ஒவ்வாத நிலையில், மக்கள் வழங்கும் பல்வேறு உரையாடல்களின் ஒலியும் ஒலிக்கும், விழாக்காண வந்தோர் தம் கண்களை களிகொள்ளும் காட்சிகள் பலவும் ஆங்குண்டு.

இவற்றையெல்லாம் இனிது விளங்க எடுத்துக் காட்டும் நல்வழுதி, ஒருதலைவி, புனல்விழாக்காணத் தன்னோடு வந்திருக்கும் தன் கணவனை வேறு ஒருத்தி நோக்கினாள் என்பதைக் கொண்டு, 'அவள் நோக்குமளவு பிழையுடையான் போலும் இவன்' என்று எண்ணி, அவன்மீது சினம் கொண்டு, தன் மலர்மாலையால் புடைத்தும், முத்துவடத்தால் கைகளைப் பிணைத்தும் அவனை ஒறுத்தாளாக, அவள் அவ்வாறு தன்னை ஒறுத்தற்குத் தான் செய்த தவறு யாது என அறியமாட்டாது கலங்கும் கணவனைக் காட்டிக் "கற்பெனப்படுவது பிறர் நெஞ்சுபுகாமை! ஆடவர்க்கும் அஃது உண்டு" என உரையாது உணர்த்தும் வழுதி வரைந்த ஓவியம், இன்றைய ஆண் உலகிற்கு அறிவூட்டும் வழிகாட்டி யாகுக!

"அமிர்தன நோக்கத்து அணங்கு ஒருத்தி பார்ப்பக்,
கமழ்கோதை கோலாப் புடைத்துத், தன் மார்பில்
இழையினைக் கையாத்து, இறுகிறுக்கி வாங்கிப்
'பிழையினை' என்னப், பிழையொன்றும் காணான்,
தொழுது பிழைகேட்கும் தூயவன்."

(பரிபாடல் : கஉ : ருஎ - சுக)

விழாவும், வளமும் விளங்கத் துணைபுரியும் வையைச் சிறப்புணர்ந்த வழுதி, "வையையே! மதுரைவாழ் மக்கட்கு நின்னால் உண்டாம் அழகும், இன்பமும் அளவிறந்தனவாம்; ஆகவே, நின்புகழ் அகன்ற உலகத்தானும் அடக்கலாகாப் பெருமையுடைத்து; அத்துணைப் பெரும் புகழ் உடையாய் நீ வாழி!" என வாழ்த்துதல், நாட்டின் நல்வாழ்வில் அவர்க்கு உண்டாம் உள்ளத் தூய்மையினை உணர்த்துவதாமன்றோ!

"இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்,
நன்பல; நன்பல; நன்பல; வையை!
நின்புகழ் கொள்ளாது இம்மலர்தலை உலகே!"

(பரிபாடல்: கஉ : க00 - க0உ)

# கள. நிலந்தரு திருவின் நெடியோன்

பாண்டியன் மாகீர்த்தி எனவும், பாண்டியன் பன்னாடு தந்தான் எனவும், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும் அழைக்கப் பெற்றோன் நிலந்தரு திருவின் நெடியோனே என்பது, தொல்காப்பியப் பாயிரம், மதுரைக் காஞ்சி, இவற்றின் உரைகள் ஆகியவற்றான் தெளிவாம்:

> "நிலந்தந்த பேருதவிப்
> பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்."

"நாட்டிலிருக்கின்ற அரசர் நிலங்களை யெல்லாம் கொண்ட பெரிய உதவியையும், பொன்னாற் செய்த தாரை யணிந்த மார்பினையுமுடைய வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வழியில் வந்தோனே."

(மதுரைக்காஞ்சி: கூ0 - கூக; உரை)

> "நிலந்தரு திருவின் பாண்டியன் அவை."

"மாற்றாரது நிலத்தினைத் தன்கீழ் வாழ்வார்க்குக் கொண்டு கொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி அவை."

(தொல்: பாயிரம்; இளம்பூரணர் உரை)

இந்நெடியோன், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் முற்பட்டோனுவன்; இஃது உண்மையாதல், இவ்விருவர்க்கும் முன்னோன் இவன் என, முறையே நெட்டிமையாரும், மாங்குடி கிழாரும் கூறும் கூற்றுக்களான் பெறப்படும்; நெட்டிமையார், முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்துங்கால், நெடியோனுக்குரிய பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தியிருத்தலை நோக்குக!

> "எங்கோ, வாழிய குடுமி! தங்கோச்,
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

(புறம்: க)

இவன் காலத்தே நிகழ்ந்த கடல்கோளால், பாண்டி நாட்டின் பெரும் பகுதியாய பஃறுளியாறும், பன்மலையடுக் காகிய குமரிக்கோடும் அழிந்து போகவே, அவ்வாறு அழிந்த தன் நாட்டிற்கு அளவான நாட்டை, வட பகுதியில் வென்று ஆண்டான் இப் பாண்டியன்; அவ்வாறு இவன் வென்று ஆண்ட நாடு, இமயமும், கங்கையுமாம் என்ப இளங்கோவடிகள்; சோணாட்டு முத்தூர்க் கூற்றமும், சேரநாட்டுக் குண்டூர்க் கூற்றமும் ஆம் என்பர், சோழன் நல்லுருத்திரனும், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும், இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி."

(சிலம்பு, கக : கக - உஉ)

"மலிதிரை ஊர்ந்துதன் மண்,கடல் வௌவலின்,
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை,
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்."

(கலித்தொகை : க0௪ : க - ௪)

"அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும், சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக வாண்ட தென்னவன்."

(சிலம்பு: கஎ - உஉ : உரை)

இக் கடல்கோள் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, தன் நாட்டு எல்லையை அரசர்க்கு உணர்த்த விரும்பிய நெடியோன், கடலைத் தன் காலால் மிதித்து உணர்த்தினமையாலும், அக்கடல்நீர் சுவற வேல் எறிந்தமையாலும் வெகுண்ட கடல், அவன் நாட்டை அழித்தது; அதனால் சினங்கொண்ட செழியன், அவ்வாறு அழிக்கக் கடற்கு ஆணைதந்த இந்திரன் முடிமீது வளை

வீசினான்; அவன் ஆரத்தைக் கைப்பற்றிக்கொண்டான்; அவன் ஆணைக்கு அடங்கிய மேகங்களைத் தான் பணி கொண்டான் எனத் தமக்குத் தோன்றியவாறெல்லாம் கதை கூறுவாரும் உளர்:

"அடியிற் றன்னளவு அரசர்க்கு உணர்த்தி,
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது,
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி!
திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல்விளங்கு ஆரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி!
முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை எய்தாது ஏகப்
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க!"

(சிலம்பு: கக: கஎ - உக)

தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றது, இப்பாண்டியன் பேரவையின் கண்ணேதான்; நற்றிணையைத் தொகுப்பித்தோனும் இவனே என்ப; பாண்டியன் பன்னாடு தந்தான் என்ற இவன் பெயரால், குறுந்தொகைக்கண் ஒரு பாட்டுள்ளது; ஆக இவற்றை யெல்லாம் ஒருங்குவைத்து நோக்கியவழி, நிலந்தரு திருவின் நெடியோன், இரண்டாம் ஊழிக் காலத்தே வாழ்ந்த உரவோன்; தமிழை வளர்த்தவன்; தமிழ் வளரத் துணைபுரிந்தவன் என்பன தெளிவாம்.

## கஅ. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

"குடுமி" (புறம் : சு, கூ, கஉ), "குடுமிக் கோமான்" (புறம் : சுச), "பல்சாலை முதுகுடுமி" (மதுரைக்காஞ்சி : எருகூ), "பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி" (வேள்விக் குடிச் செப்பேடு) என்றெல்லாம் அழைக்கப்பெறும் இப் பாண்டியன் இயற்பெயர் குடுமி என்பதாம்; இவன், வேள்வி பல ஆற்றிய விழுச் சிறப்பும், விளங்கிய பெருமையும் உடையானாதல் அறிந்த ஆன்றோர், இவனைப் பல் யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என அழைப்பாராயினர்;

> "எங்கோ வாழிய குடுமி! தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."
>
> (புறம் : கூ)

இவ் வாழ்த்து, முதுகுடுமிப் பெருவழுதியைப் பாராட்டிய புலவர்களுள் ஒருவராய நெட்டிமையார், அவனை வாழ்த்திய வாழ்த்து; இதில், முந்நீர் விழவின் நெடியோனுக்குரிய பஃறுளி ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினமையால், முதுகுடுமி, முந்நீர் விழவின் நெடியோனை நிலந்தரு திருவிற் பாண்டியன் வழிவந்தவனாவன்; "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்" வதற்கு முற்பட்டதாய மிகப் பழைய காலத்தே வாழ்ந்தவனாவன் என்பன விளங்கித் தோன்றும். நிற்க. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டிய புலவர் மாங்குடிமருதனார், மதுரைக்காஞ்சியில், நெடுஞ்செழியன், பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியின் வழிவந்த சிறப்புடையோனாவன் எனக் கூறிப் பாராட்டியுள்ளமையான், முதுகுடுமி, அந் நெடுஞ்செழியனுக்கு முற்பட்ட முதுமையுடையோனாவன் என்பதும் விளங்கித் தோன்றும்: "பல்சாலை முதுகுடுமியின் நல்வேள்வித் துறைபோகிய" (மதுரைக்: எருகூ-சுo).

முதுகுடுமி, வேதநெறி நின்று வேள்விபல இயற்றியவன் ஆவன்; புலவர் நெட்டிமையார், "வேந்தே! பகைவர் தேயம் பாழ்படச் செய்யும் நின் பேராற்றலை அறிந்தும், கூரிய படைக்கலம் பல கொண்ட நின் தூசிப்படையினை அழித்துப் பெறும் வெற்றியில் ஆசையுடையவராய் வந்து, அவ்வாசை நிறைவேறப் பெறுமல் அழிந்து, மானம் இழந்து வாழும் நின் பகைவர்களின் எண்ணிக்கை அதிகமோ? அல்லது, அறநூல் கூறியவாறு, வேதநெறி நின்று, சமிதையும், பொரியும், நெய்யை மிகப் பெற்றமையால் எழுந்த புகை மேன்மேலும் கிளர்ந்து எழுமாறு, பல்லாற்ருனும் சிறந்த வேள்விகளை முடித்து, நாட்டிய வேள்வித் தூண்களின் எண்ணிக்கை அதிகமோ? இவற்றுள் எதுவோ அதிகம்? எனக் கேட்டுப் பாராட்டுவதால் இது விளங்கும்.

"ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர், நசைபிறக்கு ஒழிய,
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்
நற்பனுவல், நால் வேதத்து,
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப், பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்?
யாபல கொல்லோ? பெரும!" (புறம்: கரு)

கி. பி. 765 முதல் 790 வரை அரசாண்ட நெடுஞ்சடைய பராந்தக பாண்டியனுல் பிறப்பிக்கப்பட்ட வேள்விக் குடிச் செப்பேடுகள், பாகனூர்க் கூற்றம் எனும் வளங்கொழிக்கும் நாட்டினூராய நால்வேத நெறியறிந்தார்பால் ஓதி உணர்ந்தோனுய, கொற்கையைச் சார்ந்த நற்கொற்றன் என்பான் எடுத்த வேள்விக்களம் போந்த முதுகுடுமிப் பெருவழுதி, அவ் வேள்வி நிகழ்ந்த ஊரை, வேள்விக்குடி எனப் பெயரிட்டு, அவனுக்குரிமையாக்கித் தந்தான் எனச் செப்புகின்றது.

"கொல்யானை பலஓட்டிக் கூடாமன்னர்க் குழாம் தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதிராஜன்
நாகமா மலர்ச்சோலை நளிர்சினை மிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கடக்கை நீர்நாட்டுச்
சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத
கொற்கைக்கிழான் நற்கொற்றன், கொண்டவேள்வி முற்றுவிக்க
கேள்வி அந்தணாளர்முன்பு, கேட்க என்றெடுத் துரைத்து
வேள்விச்சாலை முன்புநின்று, வேள்விக்குடி என்றபதியைச்
சீரோடு திருவளரச் செய்தார் வேந்தன் அப்பொழுதே
நீரோட்டிக் கொடுத்தமையான்."

(வேள்விக்குடிச் செப்பேடு)

முதுகுடுமிப் பெருவழுதி போராற்றல் வாய்ந்தவனாவன்; அவனால் அழிவுற்ற நாடுகள் பலவாம். விரைந்து செல்லும் குதிரை பூண்ட தேர்பல ஓடிக் குழித்த, பகைவர் நாட்டுப் பேரூர்த் தெருக்களை, வெண்ணிற வாயுடைக் கழுதைகள் பூட்டிய ஏர் பல ஓட்டி உழுது பாழ் செய்வன்; புள்ளினம் ஒலிக்க, விளைந்து பயன் தரும் நெல் முதலாம் உண் பொருள் விளையும் நன்செய் நிலங்களைத் தன் குதிரைகள் குளம்படியிட்டு மிதித்துப் பாழ்செய்யுமாறு தேர் பல செலுத்துவன்; காவல் அமைந்த உண்ணுநீர்க் குளங்களைத் தன் களிறுகள் படியும் குட்டைகளாக்கிப் பாழ்செய்வன் எனப் புலவர் நெட்டிமையார் கூறுவர்:

"கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனைஅவர் நனந்தலை நல்லெயில்';
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்,
வெள்ளுளைக் கலிமான் கலிகுளம்பு உகளத்
தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்
துளங்கியலால், பனையெருத்தின்,
பாவடியால், செறல் நோக்கின்,
ஒளிறு மருப்பின் களிறு, அவர
காப்புடைய கயம்படியினை;
அன்ன சீற்றத்து அனையை." (புறம்: 15)

குடுமி, இவ்வாறு, போர் வெறிகொண்டு, பகைவர் நாடுகளைப் பாழ்செய்வதெல்லாம், ஆங்குக் கைக்கொண்ட பொருள்களால், தன் வாழ்வை வளமாக்கிக் கோடற்கன்று; தன்னைப் பாடி வரும் பாணர்க்கும், புலவர்க்கும் பொருள் பல அளித்துப் புரத்தற்காகவே, அவன் அதை மேற்கொள்வன்; இவ்வுண்மை, அவனைப் பாடிய புலவர் நெட்டிமையார், "வேந்தே! நின்னொடு பகைத்த மன்னர், நெடுந்துயருறுமாறு, அவர் நாடுகளைக் கவர்ந்தும், நின்னைப் பாடிய பாணரும், புலவரும் மகிழுமாறு, அவர்க்குப் பொற்றாமரைப் பூவையும், யானையொடு தேரையும் முறையே அளித்தும், இவ்வாறு ஒருவர்க்குத் துன்பமும், ஒருவர்க்கு இன்பமும் அளித்தல் அறநெறி நிற்கும் நின்னொத்த அரசர்க்கு அறமாமோ?" என்றும், அவனை இகழ்வார்போலும் கூற்றுக்களான் புகழ்ந்து பாடியுள்ளமையாலும், அவனைப் பாடிய மற்றொரு புலவராய காரிகிழார், "கடல் போலும் நின் பெரும்படையினை, பகைவர் நாட்டகத்தே செலுத்தி, யானைகளை ஏவி, விளை நிலம் மிக்கு வளம் செறிந்து விளங்கும் அவர் அரண் பலவற்றையும் அழித்து, ஆங்குக் கைக்கொண்ட அரிய அணிகள் அனைத்தையும், பாணர் முதலாம் பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கும் வள்ளியோய்!" எனப் புகழ்வதாலும் உறுதியாதல் அறிக.

"பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்,
அறனோ! மற்றிது; விறன் மாண்குடுமி!
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு,
இனிய செய்தி நின்ஆர்வலர் முகத்தே." (புறம்: கஉ)

"செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி அடர்ப்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்,
பாசவற் படப்பை ஆரெயில் பலதந்து
அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கி." (புறம்: சு)

முதுகுடுமிப் பெருவழுதி, இவ்வாறு, போர் கண்டு பூரிக்கும் தோளுடையனேனும், போர்மேற் கொண்டு

போகும் காலத்தும் அறம்பிழைக்கும் அறிவிலியாகான்; மறன் இழுக்கா மானம் உடையவன் முதுகுடுமி; அற நெறி பிழையா மறம் உடையவன் முதுகுடுமிப்பெருவழுதி.

போர் நிகழ் இடம் இது; அது நிகழா இடம் இது என்ற இடவரையறையோ, என்று, எப்போது போர் தொடங்கப் பெறும் என்ற காலவரையறையோ, போர் தொடங்குவார் யாவர்? யாவர் மீது போர் என்ற மக்கள் வரையறையோ இல்லாமல், தாம் விரும்பிய இடங்களிலெல்லாம், தாம் விரும்பிய போதெல்லாம் குண்டுகளை மழையெனப் பொழிந்து, போர்வீரர்களையேயன்றி, போர்க்களத்தைப் பார்த்தும் அறியாப் பசிளங் குழந்தைகள், பாவையர், தளர்நடைப் பெரியோர் ஆகியோரையும், வாயில்லா உயிர்களாம் அஃறிணைப் பொருள்களையும் ஒருங்கே கொன்று குவிக்கும் கொடுமை நிறைந்ததன்று பழங்காலப் போர். பண்டைத் தமிழரசர்கள், தாம் எந்த நாட்டின்மீது போர்தொடுக்கப் போகின்றனரோ, அந் நாட்டு மக்கட்குப், "போர்தொடுக்கப் போகும் நாள் இது; அதற்குள் போர்க்களம் போதற்கியலா அனைவரும் போக்கிடம் தேடிப் போய் விடுங்கள்;" என முன் கூட்டியே அறிவிப்பர்; போரில் அழித்தலாகா உயிர்களாக, ஆக்களையும், அவ் ஆக்களின் இயல்பினராய அந்தணரையும், பெண்களையும், பிணியுற்றாரையும், ஆண்மக்கட்பேறு வாய்க்கப் பெறாதார், களம் புகுந்து அழிந்துவிடின், அவர் குடிவழி அற்றுப்போம் ஆதலின், அவ்வாறு ஆண்மக்கட் பேறில்லா ஆடவர்களையும் கருதினர் அக்கால அரசர்கள். இவர்களுள், ஆக்கள் ஒழிந்த ஏனையோர், அரசர் அறிவிப்பன அறிந்து அகன்று வாழ்வர்; ஆக்கள், அவ்வாறு அகன்று வாழும் அறிவுடையன ஆகா என அறிந்து, அவற்றைத் தம் வீரரை விட்டு வளைத்துக் கொணர்ந்து காப்பமைந்த இடத்தே இருத்திக் காப்பர். அக்கால அரசர்களிடையே காணப்பட்ட இப்போர்ப் பண்பு, முதுகுடுமிப் பெருவழுதி பாலும் பொருந்தி யிருந்தது என்பதை, அவனைப் பாராட்டிய நெட்டிமையார் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்:

"ஆவும், ஆன்இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும்; நும்அரண் சேர்மின்; என
அறத்தாறு நுவலும் பூட்கை." (புறம்: ௯)

பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இவ்வாறு நாட்டவர் போற்றும் நல்லவனாதல் அறிந்த புலவர் காரி கிழார், அவன் அறம் முதலாம் நாற்பயனும் பெற்று நெடிது வாழ்தலை விரும்பினார்; உடனே, அவர் அவனை அடைந்து, "அரசே! அறநூல் அறிந்த ஆன்றோராய அந்தணர் நின்னை வாழ்த்துங்கால், அவரைப் பணிந்து அறமுடையோனாகுக! பகைவர் நாடுகளை எரியூட்டுங்கால், நின் தலைமாலை வாடி அழிவது கண்டு அஞ்சாது அழித்து, அவர் வாழ்வும் வளமும் கொண்டு பொருள் உடையோனாகுக! நாடு காவல்கருதி எப்போதும் பிரிந்தே வாழ்வதால் நின்பால் ஊடிநிற்கும் நின் மனைவியின் ஊடல் தணித்து, அன்புரை வழங்கி இன்பம் உடையோனாகுக! முழுமுதற் கடவுள் முக்கட்செல்வன் பெருங்கோயிலை, குடைதாழ்த்தி வலம் வந்து வணங்கி வாழ்த்தி, வீடுபெற்று வாழ்க!" என்று வாழ்த்தினார்:

"பணியிய ரத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே!
இறைஞ்சுக பெரும! நின் சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!
வாடுக, இறைவ! நின்கண்ணி, ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே!
செலிய ரத்தை நின்வெகுளி, வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே!" (புறம்: ௬)

இவ்வாறு நாட்டவர் போற்றும் நல்லாட்சி மேற்கொண்ட முதுகுடுமிப் பெருவழுதி வடக்கே, பனிபடு நெடுவரையாம் இமயம்; தெற்கே, குமரியாறு; குணக்கே கடல்; குடக்கே கடல் ஆகிய இந்நான் கெல்லைக்குட்பட்ட நனி மிகப் பெரிய நாடாண்ட நல்லோனவன்.

# கக. பொற்கைப் பாண்டியன்

பொற்கைப் பாண்டியன் என்ற இப் பெயர், மக்கள், இவ்வரசனுக்கு இட்ட காரணப் பெயராம்; இப் பாண்டியன் இயற்பெயர் யாது என்பது வெளிப்படவில்லை; கோவலற்குத் தவறிழைத்துக் கொடுங்கோலனாயினமை பொறாது உயிர் கொடுத்துப் புகழ் கொண்ட ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியற்கு முற்பட்டவன் இப் பொற்கைப் பாண்டியன். மதுரை மாநகரை எரியூட்டிய பின்னரும் மாறாச் சினத்தளாய்த் திரியும் கண்ணகி முன்வந்து தோன்றிய மதுராபதி யெனும் அந் நகர்த் தெய்வம், நெடுஞ் செழியன் தவறு செய்தவனல்லன்; அவன் முன்னோரும் தவறு செய்தவரல்லர் என்பதை எடுத்துக்கூறுவாள், அதை நிலைநாட்ட, நீதி தவறாது நிலனாண்ட அவன் முன்னோர் செயல் சிலவற்றைக் கூறுங்கால், இப் பாண்டியன் வரலாறும் உரைக்கப் பட்டுளது.

இப் பாண்டியன் நாடாண்டிருந்த காலத்தே, மதுரை நகரில் கீரந்தை என்பானொரு அந்தணன் இருந்தான்; அவன், தன்பால் வந்து இரப்பார்க்கு வழங்கித் துணை புரிந்து வாழும் பயனுடை வாழ்வைப் பெறமாட்டா வறியனாதலறிந்து வருந்தினான். அவ் வாழ்விலிருந்து வாழ விரும்பா அவன், தன் வறுமை போக்கும், வளம் தேடிக் கொணர விரும்பினான். அவனை யன்றி வேறு துணையில்லா அவன் மனைவி, அவனைப் பிரிந்து தனித்து வாழ வருந்தினாள்; மேலும் அவர்கள் வீடு வாயிற் கதவும் பெறமாட்டா வறுமை யுடையது; அவ் வீட்டு வாழ்வு, ஊர்ப்பொது விடத்து வாழ்வினும் காப்பற்றது; அத்தகைய வீட்டில் தனித்து வாழ் வாழ்க்கையால் வரும் ஏதம் கண்டு அஞ்சினாள்; அவள் அஞ்சுகிறாள் என்பதறிந்த அந்தணன், "நாட்டு மக்கட்கு அரணாவான் அரசன் ஒருவனே; அவன் காவலுக்கு முன், பிற காவல்கள் பயனற்றனவாம்; நம் நாட்டு அரசன், நாட்டு மக்கட்காம் நலிவு காணப் பொறுப் பானல்லன்; அவன் ஆளும் நாட்டிற்கு வேறு காவல் வேண்டுவதின்று; ஆகவே கவலையற்று இருக்க," என்க்

கூறிச் சென்றிருந்தான். கணவன் மனைவியர்க்கிடையே நிகழ்ந்த இச் சொல்லாடலைக் கேட்டிருந்தான் பாண்டியன்; ஆகவே, நாள்தோறும், நள்ளிரவில் நகர்க்காவல் செல்வான், அவட்கு யாதொரு கேடும் நிகழாவண்ணம் நின்று காத்து வந்தான்; அரசன் செயலை அவள் அறியாள்.

நாள் பல சென்றன; பொருள் ஈட்டிக் கொண்டு அந்தணன் வந்து சேர்ந்தான்: அதை அரசன் அறியான்; அன்று இரவு, அம் மனைக் காவல் சென்றிருந்த அரசன், அவ் வீட்டுள் ஆண் குரல் ஒலிக்கக் கேட்டான்; அரசற்கு, அவள் கணவனோ அல்லது யாவனோ என்ற ஐயம் உண்டாக, அது தெளிதற் பொருட்டு, அவ் வீட்டு வாயில் முன்னிடத்தைத் தன் கையாற்புடைத்து ஒலி செய்தான்; அவ்வொலி கேட்ட அந்தணன் வாயிலைப் புடைத்தோன் யாவன் என வெகுண்டெழுந்தான்; யாவனோ ஒருவன், தான் இல்லாக் காலத்தே தன் மனை வந்து செல்லும் வழக்குடையான் போலும் என்று எண்ணினான்; அவ்வாறு அவன் எண்ணுகின்றான் என்பதறிந்த அந்தணன் மனைவி செய்வதறியாது திகைத்தாள்; தான் பிழையிலாள் என்பதைத் தெளிவிக்கும் வகையறியாது தவித்தாள். "அந்தோ! அரசன் காப்பன் என அன்று கூறினரே; அவ்வரசன் இன்று வந்து எனக்குண்டாய இவ் இழிவு ஒழித்துக் காவானோ," எனக் கூறிக் கதறினாள்.

நிலையுணர்ந்த அரசன் நெஞ்சம் துணுக்குற்றது. "என் செயலால் அவட்குப் பழியுண்டாகி விட்டதே! அவள் ஒழுக்கத்திலன்றோ ஐயம் கொள்கின்றனன் அந்தணன்! அந்தோ என் செய்வேன்!" எனத் திகைத்தான்; சிந்தனையில் ஒரு தெளிவு உண்டாக, உடனே, அத்தெருவில் உள்ள எல்லா மனையினும், கதவுகளைப் புடைத்து ஒலி எழுப்பிக் கொண்டே ஓடி அரண்மனை புகுந்தான்.

பொழுது புலர்ந்தது; ஊர் மக்கள் ஒன்று கூடினர்; இரவு யாவனோ ஒரு கள்வன், தம் தெருவுட் புகுந்து விட்டான் என எண்ணினர்; பொற்கைப் பாண்டியன் நாட்டிலும் களவு நிகழ்வதா எனக் கழன்றனர்; உடனே அனை

வரும் அரண்மனை அடைந்து அரசன் முன் நின்று நிகழ்ந்தன கூறி முறை வேண்டினர்; அந்தணன் மனைவிக்குண்டாய பழி நீங்கப்பெற்றமை கண்டு ஒருபால் மகிழ்ச்சி கொண்டான் எனினும், தன் செயல் நாட்டு மக்கள் நடுக்கத்திற்குக் காரணமாயது அறிந்து வருந்தினான்; அமைச்சரை அழைத்து, "இப்பிழை புரிந்தார்க்கு உரிய தண்டனை யாது" எனக் கேட்டான்; அக் குற்றம் புரிந்தான் கையை வெட்டி எறிதலே அதற்குத் தண்டமாம் என அறிவித்தனர்; உடனே, அரசன் தன் உடைவாளை எடுத்து, அக் குற்றம் புரிந்த தன் கையைத் தானே வெட்டி எறிந்தான்; ஆனால், வெட்டுண்ட அவன் கை, அந்நிலையிலேயே பொற்கையாய்ப் பொலிவுடன் வளர்ந்து விட்டது; அரசன் செயலையும், அதன் பின்விளைவையும் கண்டு வியந்து நின்றனர் மக்களும், மந்திரிமாரும்; அவர்க்கு அரசன் நிகழ்ந்தன கூறினான்; மன்னவன் செயலறிந்த மக்கள் அவனை நீடு வாழ வாழ்த்தி வணங்கிப் போயினர் :

"உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்
அரைச வேலி அல்லது, யாவதும்
புரைதீர் வேலி இல்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீர் அவ்வழி ;
இன்று அவ் வேலி காவாதோ எனச்
செவிச்சூட் டாணியிற் புகைஅழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்,
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்."

(சிலம்பு: உ௩: ௬௨—௫௩)

"புகழ்நடுதல் வேண்டித்தன்
ஆடுமழைத் தடக்கை அறுத்து முறைசெய்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கையம் பெருந்துறை."

(தொல். களவு. க. இளம் : மேற்)

# ௨௦. மதிவாணன்

பாண்டியன் முடத்திருமாறனால் தோற்றுவிக்கப் பெற்று, அவன் முதலாக, உக்கிரப்பெருவழுதி ஈறாக உள்ள பாண்டிய அரசர் நாற்பத்தொன்பதின்மரால் புரக்கப் பெற்ற கடைச்சங்கத்தைப் புரந்த அவ்வரசர்களுள் ஒருவனாவன் மதிவாணன்; மதிவாணன், அச் சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியர் மூவருள் ஒருவனும், ஒப்புயர்வற்ற உறுபுகழும் உடையனாவன்; மதிவாணன், மன்னனாய் மாநிலம் ஆண்ட புகழினும், முத்தமிழுள் ஒன்றாம் நாடகத் தமிழ் வளரத் துணைபுரிந்த இறவாப் புகழே பெரிதாம் ஆகவே, அவனைப் புலவனாகவே அறிதல் நம் கடனாயிற்று; மதிவாணன் இயற்றிய நூல் நாடகத் தமிழின் நலங்குறித்து வந்தது; மதிவாணன் நாடகத் தமிழ்நூல் என்றே அந்நூல் பெயர் பெறும்; சூத்திரப் பாவாலும், வெண்பாவாலும் இயற்றப்பெற்ற அந்நூல், முதல்நூலில் உள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தின் இலக்கணம் உணர்த்தும் சிறப்புடைத்து என்ப. இந் நாளில், அந்நூல் முழுதும் கிடைக்கப் பெற்றிலது; சிலப்பதிகார உரையில், அடியார்க்கு நல்லார் எடுத்தாளும் சிற்சில சூத்திரங்களை மட்டுமே நாம் அறிதல்கூடும். அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரத்திற்குத் தாம் எழுதும் உரைக்கு மேற்கோளாகக் கொண்ட இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்ச மரபு, பரத சேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்ற ஐந்து இசைநூல்களுள் இதுவும் ஒன்று: மதிவாணனார் பற்றி நாம் அறியத் தக்கன இத் துணையவே; இவன், முடத்திருமாறனுக்கும், உக்கிரப்பெருவழுதிக்கும் இடைப்பட்ட காலத்தே இருந்தவனாதல் வேண்டும்:

“கடைச் சங்கம் இரீஇய பாண்டியருள், கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த, முதல் நூல்களில் உள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் என இவ்வைந்தும், இந் நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும், ஒரு புடை யொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரை எனக் கொள்க.”

(சிலம்பு, உரைச்சிறப்புப் பாயிரம்: அடியார்க்கு நல்லார் உரை.)

## உகூ. மாலை மாறன்

மாலை மாறன் என்ற இவர் பெயர்க்கண் வந்துள்ள மாறன் என்ற சொற் கொண்டு, இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவராவர் என அறிதலல்லது, இவர் பாண்டியர் என்பதை அறிவிக்கும் வேறு நல்ல சான்று எதையும் நம்மால் காணற்கு இயலாது. இவர் அரசர் குடியில் வந்தவர் என்பதற் கேற்ப, கடற்கரையினும், கழிக்கரையினும், வாளரம் போலும் விளிம்புகளையுடைய மடல்களைக்கொண்ட தாழை மரங்கள் வரிசை வரிசையாக வளர்ந்து நிற்கும் காட்சிக்குப், பாசறையைச் சூழ, வேலியாக, வேற்படைகளை நாட்டி வைக்கும், அரசர் அறிந்த காட்சி யொன்றை உவமை காட்டியுள்ளார்.

தலைவன் பிரிவால் தன்நலன் இழந்த கொடுமையினும், அத்தலைவன் செய்த கொடுமை கண்டு, ஊரார் தூற்றும் அலரால் உண்டாம் கொடுமையே மிகமிகப் பெரிதாம் எனக் கூறினாள் ஒரு பெண், எனப் பாடித் தன் துயர் காணுமையும், தகைசான்ற சொற்காத்தலும் தமிழ்க்குல மகளிர்க்குத் தனிச்சிறப்பளிக்கும் பெரும் பண்புகளாம் என்பது புலப்படுத்தியுள்ளார் :

"கடலம் கானல் ஆயம் ஆய்ந்த என்
நலம்இழந் ததனினும் நனியின் னாதே;
வாள்போல் வாய கொழுமடல் தாழை
மாலைவேல் நாட்டு வேலி யாகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே."

(குறுந் : உசரு)

## ௨௨. மாறன் வழுதி

செழியன் என்ற சொல்லைப்போலவே, மாறன், வழுதி என்ற இரு சொற்களும், பாண்டியரைக் குறிக்க வழங்கும் சொற்களாம்; அவ்விரு பெயர்களையும் ஒருங்கு இணைத்து ஒருபெயராக்கித் தன் இயற்பெயராகக் கொண்டவன் இப் பாண்டியன்; மாறன் வழுதியின் அரசியல்நிலை அறிவிக்கும் அகப்புறச் சான்றுகள் கிடைத்தில; அதனால், அவனை அரசனாய்க்காண்டற்கு இயலவில்லை; மாறன் வழுதி மன்னனாய் மாண்புற்றதோடு, புலவனாய்ப் பெருமை கொண்டோனும் ஆவன்; அவன், தான் பாடிய பாக்கள் இரண்டினும், அக்கால மகளிர்தம் மாண்புகளை, மாண்புற எடுத்துக்காட்டியுள்ளான்.

மலைகளில் நின்று தழைக்கும் குறிஞ்சி மரங்களின் பொன்னிற மலர்போலும் மேனியும், சுனையில் மலர்ந்த மைந்நிறக் குவளை மலர்கள் இரண்டினை எதிர்எதிர் வைத்துப் பிணைத்தாற்போலும் பெரிய கண்களும், மயிலை ஒத்த சாயலும், கிளியின் மொழிபோலும் மெல்லிய இனிய சொல்லும், பருத்த தோளும், கொல்லிப்பாவை போலும் பேரழகும் உடையார் பண்டைத் தமிழ் மகளிர் என, அவர் தம் புற அழகின் பெருமையினைப் பாராட்டுவது அறிக.

"நீண்மலைக் கலித்த பெருங்கோற் குறிஞ்சி
நாண்மலர் புரையும் மேனிப், பெருஞ்சுனை
மலர்பிணைத் தன்ன மாயிதழ் மழைக்கண்,
மயிலோ ரன்ன சாயல், செந்தார்க்
கிளியோ ரன்ன கிளவிப், பணைத்தோள்,
பாவை யன்ன வனப்பினள் இவள்" (நற் : ௩௦௧)

# ௨௫. முடத்திருமாறன்

தமிழ்ச்சங்கம் மூன்றனுள், இடைச்சங்கத்தின் இறுதியைக் கண்டு, கடைச்சங்கத்தைத் தோற்றுவித்த தனிச்சிறப்புடையவன் முடத்திருமாறன். குமரிநாடு, கடல்கோளால் அழிவுறுதற்கு முன்னர், குமரியாற்றிற்கும், தாம்பிரபாணி யாற்றிற்கும் இடைப்பட்ட அக் குமரி நாட்டைக், கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பாண்டிய அரசர்களுள் முடத்திருமாறனும் ஒருவன். கபாடபுரத்தே இருந்த இடைச்சங்கத்தைப் போற்றிப் பேணிய பாண்டிய அரசர்கள் ஐம்பத்தொன்பதின்மருள் இறுதியில் வாழ்ந்தோனும் இவனே; இவன் காலத்தே நிகழ்ந்த ஒரு பெருங்கடல்கோளால், பாண்டிநாட்டின் பெருநிலப்பரப்பும், அதன் தலைநகராய கபாடபுரமும் அழிந்தொழிந்தன; இக் கடல்கோளால் அழிவுறாது பிழைத்திருந்த முடத்திருமாறனும், தமிழ்ப்புலவர்களும் சிறிது வடக்கே சென்று, மணலூர் என்னும் சிற்றூர் ஒன்றில் சின்னாள் வாழ்ந்து, பின்னர்க் கூடன்மா நகரடைந்து வாழ்ந்தனர்; ஆங்கே, கடைச்சங்கத்தை அமைத்துச் செந்தமிழ் வளரத் துணைபுரிந்தான். தமிழ் மொழிக்கு நேர இருந்த பெருங் கேட்டை நீக்கி, அது வளரத் துணைபுரிந்த பெருமையுடையான், இம் முடத் திருமாறன்.

"அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழி யன் முதலாக, முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன் பதின்மர் என்ப; அவருட் கவியரங்கேறினார், ஐவர் பாண்டியர் என்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப; அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது."

"அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக, உக்கிரப் பெருவழுதி ஈறாக, நாற்பத்தொன்பதின்பர் என்ப

அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டியர் என்ப; அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது உத்தர மதுரை என்ப."
—களவியல் உரை:

முடத்திருமாறன், சங்கம் அமைத்துத் தமிழ் வளரத் துணைபுரிந்ததோடு, தானே ஒரு புலவனாய்ப் பாக்கள் பாடித் தமிழை வளர்த்த பெருமையும் உடையனாவன்; அவன் பாடிய பாக்களாக, இப்போது நமக்குக் கிடைத்துள்ளன இரண்டே; அவை இரண்டும், நற்றிணைப் பாக்கள் வரிசையில் இடம்பெற்றுள்ளன.

அவற்றுள் ஒன்றில், குட்டுவனுக்குரிய குடமலையினையும், அம் மலையில் மலிந்துகிடக்கும் சுனைகளையும், அச் சுனைகளில் மலர்ந்து கிடக்கும் குவளை மலர்களையும், வண்டுகள் மொய்க்கும் அம் மலர்களின் மணத்தினையும் பாராட்டியுள்ளார்:

"குட்டுவன், குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை
வண்டுபடு வான்போது கமழும்." (நற்: ௧0௫)

மின்னல், இருளை இரண்டாகப் பிளந்துகொண்டு தோன்றிப் பேரொளி செய்ய, இடி, பலகாலும் இடித்துப் பேரொலி செய்ய எழும் கார்மேகம், தன் கடனும் பெருமழை பெய்யும் மாரிக்காலத்து நள்ளிருள், கண்ணொளியும் மறையுமாறு படர்ந்த பேரிருள் உடைத்து என, மாரிக் காலத்து நள்ளிருள்நிலையினை நன்கெடுத்துக் காட்டும் முடத்திருமாறன் புலமை நலத்தைப் போற்றுவோமாக.

"மின்னு வசிபு
அதிர்குரல் எழிலி முதிர்கடன் தீரக்
கண்ஞார்பு விரிந்த கனையிருள் நடுநாள்." (நற்: உ௨அ)

## ௨௬. வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி

பண்டைத் தமிழகத்தில், ஆண்டவனும், அரசனும் இருந்து ஆட்சி செலுத்தும் பேரவைகள் பல, ஆங்காங்கே யிருந்தன; அவை, கூத்தம்பலம், பேரம்பலம் எனத் தொழிலானும், தகுதியானும், பொன்னம்பலம், வெள்ளி யம்பலம் என அவை ஆக்கத் துணைபுரியும் பொருள்களா னும் பெயர் பெற்றுள்ளன. அரசர்கள், இத்தகைய அம்பல வாழ்வைப் பெரிதும் விரும்பி மேற்கொள்வ ராதலின், அவருட் சிலர், அவ்விடங்களிலேயே இறந்து போதலும் உண்டு; அவ்வாறு வெள்ளியம்பலம் ஒன்றில் இருந்து உயிர்நீத்தமையான், இப் பெருவழுதி, வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி எனப் பெயர் பெற் றுளான்.

ஏனைப் பாண்டிய வேந்தர்மாட்டுக் காணலாகா இரு பெருஞ் சிறப்பு, வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி பால் இருக்கக் காண்கிறோம்; இவன் பிறந்த பாண்டியர் குடிக்குப் பகைவராலோ, அல்லது பிற காரணங்களாலோ பெருங்கேடு வந்துற்றது; பாண்டியர்குடி பெருமை குன்றிப் பாழ்நிலை உற்றுவிட்டது; வீரன் என விழுச் சிறப்புடையாற்கு ஆண்மையாவது, அவன் பிறந்த குடிக்குப் பெருமை தேடித் தருதலேயாம் என்பதை உணர்ந்த இப் பெருவழுதி, பல திசையினும், பெருங்கிளை களைப் பரப்பி, பெருநிழல் செய்து நிற்கும் பேரால மரம் ஒன்றின் அடி ஆண்டு முதிர்வாலோ, அல்லது வேறு காரணத்தாலோ, தன் ஆற்றலற்றுப் போயவழி, அம்மரத்தி னின்று தோன்றி நிற்கும் விழுதுகள், அம்மரத்தை அழிய விடாமல் நின்று தாங்கினாற்போல், தளர்ந்த தன் குடியின் தளர்ச்சி போக்கிப் பேணிப் பெருமையுடையதாக்கிய உரவோன் நம் பெருவழுதி; அவன்பால் அமைந்து கிடந்த அருங்குணங்களுள் இஃது ஒன்று:

"முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொடுகிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினும் கிளையரா எறியும்
அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே." (புறம்: ௫௮)

நெல்வளமும், நீர்வளமும் உலக அரசர் எல்லோர்க்கும் உண்டு; அவை எந்நாட்டிற்கும் பொது; எல்லோர்க்கும் உள்ள பெருமையைத் தாமும் உடையாராதல் பேரரசர் ஆவார்க்குப் பெருமையாகாது; இக் கருத்துடையனாய பெருவழுதி, அவற்றாற் பெருமைகொள்ள எண்ணாது, மலைபடு பொருளாம் சந்தனத்தாலும், கடற்படு பொருளாம் முத்தாலும், வீரம், நியாயம், தியாகம் முதலாயின குறித்து எடுக்கும் மும்முரசுகளாலும் பெருமை கொள்வதையே பெறற்கரும் பேறாகக் கருதினான்; அவ்வாறே பெற்றும் பெருமையுற்றான்; இஃது அவன்பால் அமைந்து கிடந்த அரும் பண்புகளுள் இரண்டாவது:

"நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியவென
வரைய சாந்தமும், திரைய முத்தமும்,
இமிழ்குரல் முரசும் மூன்றுடன் ஆளுந்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே."
(புறம்: ௫௮)

இவை அனைத்தினும் மேலாக, புலவரும் பாராட்டும் பெருங்குணம் ஒன்றும் அவன்பால் பொருந்தி யிருந்தது; தமிழகம், தான் பெற்றிருந்த பெருநிலை இழந்து, இன்று தாழ்ந்து கிடப்பதற்குக் காரணம், தமிழ் வேந்தர்கள், தம்முள் ஒற்றுமை இலராய், ஒருவரோடொருவர் பகை கொண்டு, ஒருவரையொருவர் கொன்றும், ஒருவர் நாட்டை ஒருவர் அழித்தும் வாழ்ந்த அறிவிழந்த வாழ்க்கையினாலேயே யாம்; இவ் வுண்மையை யுணர்ந்தவன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி; ஆகவே,

அவன், பக்க நாடுகளோடு பகைகொண்டு வாழ்வதே வழக்கமாகக் கொண்ட தன் முன்னோரைப் போலாது, அந் நாடுகளோடு அன்புகொண்டு வாழும் அறிவுடைய னாயினான்: வழுதி, தன் காலத்தே, சோணாட்டரசனாய் விளங்கிய, குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனு டன், பிரித்தலறியாப் பெருநட்புடையனாயினன். வேந் தர்கள், வேற்றுமை ஒழித்து, ஒற்றுமைகொண்டு உலகாள மாட்டாரா என ஏங்கிக் கிடந்த புலவர்கட்கு, இவ் ஒற்று மைக் காட்சி, பெரு மகிழ்ச்சி அளித்தது; அவர்கள் எப் போதும், இவ்வாறே ஒற்றுமை உடையராயின், அவ ரையோ, அவர் நாட்டையோ அழிப்பார் எவரும் இரார்; அதற்கு மாறாக, இவர் எண்ணிய நாட்டில், இவர் அரசு நடைபெறும் என்பதை உணர்ந்த புலவர்கள் இவ்விருவர் தம் ஒற்றுமையை உறுதுணையாக் கொண்டு, தமிழகத்திற் குப் புறத்தே உள்ள நாடுகளில் எல்லாம், தமிழ்க்கொடி பறத்தலைப் பார்த்து மகிழப் பேருள்ளம் கொண்டனர்; அம் மகிழ்ச்சிக்கிடையே ஒரு பேரச்சமும் அவர் உளத்தே எழுந்தது; தமிழ்வேந்தர்கள், தம்முள் ஒற்றுமைகொண்டு விடுவாராயின், தமிழகம் தழைக்கும்; தமிழரசு வாழும்; தமக்குக் கேடு உண்டாம்; இவ் வெண்ணம் உடையராய பகைவர், அவ் வேந்தர்களிடையே ஒற்றுமை குலைந்து பகைவளர வழிசெய்யவும் செய்வர்; அதற்கு அவர்கள், அவ் வேந்தர்களிடையே, அவர்க்கு நண்பரைப் போலவும், நல்லன தேடுவார் போலவும், முன்னோர் நெறிமுறையினை முன்னின்று உரைப்பார் போலவும், பழகிப் பாழ்தரும் உரைகளைப் பக்குவமாகக் கூறித் தம் எண்ணத்தை ஈடேற்றிக்கொள்வர் என்பதை அப் புலவர்கள் அறிவர்; ஆகவே, இவ்விருவர்தம் ஒற்றுமை கண்டு உவத்தலோடு நில்லாது அவர்க்கு, அவர் கூடியிருத்தலால் அவர்க்கும், அவர்தம் நாடாம் தமிழகத்திற்கும் உண்டாம் ஆக்கங்களை எடுத்துக் கூறுவதோடு, "அவ்வொற்றுமை கெடுக்கப் பகைவர் முன்வருவர்; அவர்கள் நண்பரைப் போலவும், நன்னெறி காட்டுவார் போலவும், முன்னோர் வழிச் செல்ல முன் வருவார் போலவும் தமிழரசர்க்குக் கேடும்

தமக்கு ஆக்கமும் உண்டாம் உள்ளத்தராய் உரைப்பர்; அவரிடத்தே விழிப்பாயிருத்தல் வேந்தர்க்குக் கடனும்" என, அறிவுரை கூறவும் முன்வந்தனர்; அவ்வாறு உறுதி யளிக்கும் உயர்மொழி அளித்த புலவருள், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறிய நல்லுரைகளைச் சோழர் தலைநகர் சென்று, தங்கியிருந்த வெள்ளியம்பலத் துத் துஞ்சிய பெருவழுதியும் விரும்பிக் கேட்டுப் பொன்னே போல் போற்றினான்: அன்று அவன் கேட்ட நல்லுரை இது:

"பானிற உருவிற் பனைக்கொடி யோனும்,
நீனிற உருவின் நேமி யோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடன்நின் றாஅங்கு
உருகெழு தோற்றமொ டுட்குவர விளங்கி,
இன்னீ ராகலின், இனியவும் உளவோ?
இன்னும் கேண்மின், நும் இசைவா ழியவே;
ஒருவீர், ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவரும்
உடனிலை திரியீ ராயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்த இப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே;
அதனால், நல்ல போலவும், நயவ போலவும்,
தொல்லோர் சென்ற நெறிய போலவும்,
காதல் நெஞ்சினும் இடைபுகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது,
இன்றே போல்க நும் புணர்ச்சி; வென்று, வென்று
அடுகளத்து உயர்க நும்வேலே; கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாக, பிறர் குன்றுகெழு நாடே." (புறம்: 58)

# உரு. வெற்றிவேற் செழியன்

வெற்றிவேற் செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் மகனாவன்; இளஞ் செழியன் எனவும் அழைக்கப் பெறுவன்; பாண்டிய நாட்டின் தென்பகுதித் தலைநகராய கொற்கையிலிருந்து, தந்தைக்குப் பதிலாகத் தரணியாண்டிருந்த இவன், தந்தை கோவலற்குக் குற்றம் இழைத்துக் கோல்கோடியமை கொண்டு உயிர்விட்டான் என்பதறிந்து, கொற்கையின் நீங்கி, மதுரை போந்து, மணிமுடிசூடி மாநிலம் காத்து வந்தான். இவ்வாறு, மதுரையில் இவன் அரசுகட்டில் ஏறிய காலம், சேரன் செங்குட்டுவன், கண்ணகிச் சிலைக்காய கல் கொணர்வான் வேண்டி, வடநாடு நோக்கிச் சென்றிருந்த காலமாகும். இவன், கடல் சூழ்ந்த இலங்கையில் கயவாகு வேந்தனும், சோணாட்டு உறையூர்க்கண் பெருங்கிள்ளியும், சேரநாட்டில் செங்குட்டுவனும் அரசோச்சியிருந்த அக்காலத்தே, அவரோடொப்ப ஆண்டிருந்தவனாவன்.

இவன் ஆட்சிக் காலத்தில், பாண்டிய நாடு மழைவளம் இழந்து வறுமையுற்றிருந்தது; அவ் வறுமை நீங்கிக், குடிகள் இன்புற்று வாழுமாறு, கண்ணகிக்கு விழாவொன்று எடுத்து, பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று வேள்வி செய்தான்; இதனால் கண்ணகி சினம் தணிய, நாடு மழை பெற்று, பசியும், பிணியும் நீங்கி, வசியும், வளனும் பெற்று வாழ்ந்தது. வெற்றிவேற் செழியன் வரலாறாக நம்மால் அறியத் தக்கன இத்துணையவே.

"கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழில் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி,
உரைசெல வெறுத்த மதுரை மூதூர்
அரைசு கெடுத்து அலம்வரும் அல்லற்காலைத்
தென்புல மருங்கில் தீதுதீர் சிறப்பின்

மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
நிரைமணிப் புரவி ஓர்ஏழ் பூண்ட
ஒருதனி ஆழிக் கடவுள் தேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள் ஏறினன்என
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்
ஊழிதோ றூழி உலகம் காத்து
வாழ்க எங்கோ! வாழிய பெரிது!"

(சிலம்பு: உஎ: கஉஎ - கசO)

"அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழை வறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்புநோயும், குருவும் தொடரக், கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன், நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து, நோயும் துன்பமும் நீங்கியது."

(சிலம்பு: உரைபெறு கட்டுரை)